# அரசியல் அமைப்புகள்

(அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, ஜப்பான், ஆஸ்திரேலியா.)

J. இராமசந்திரன், M.A.A.M., (CHICAGO)

என்சிபிஎச் பிரைவேட் லிமிடெட்
சென்னை-2

# அரசியல் அமைப்புகள்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை-1

# அரசியல் அமைப்புகள்

(அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, ஜப்பான், ஆஸ்திரேலியா.)

J. இராமசந்திரன், M.A., A. M. (Chicago.)
பேராசிரியர் :
அரசியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

என்சிபிஎச் பிரைவேட் லிமிடெட்
சென்னை-2

முதற்பதிப்பு 1962
உரிமைப் பதிவு

(C) தமிழ் வெளியீட்டுக் கழகம்
சென்னை-9.

விலை ரூ. 4-62

வெளியிடுபவர் :
**என்சிபிஎச் பிரைவேட் லிமிட்டெட்**
6, நல்ல தம்பி செட்டித் தெரு, சென்னை-2

அச்சிட்டவர் :
குமுதம் அச்சகம்,
76, எல்லீஸ் ரோடு,
சென்னை-2

# பதிப்புரை

தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்து மாணவர்கள் தங்கள் பாடங்களைத் தமிழிலேயே கற்றுவரும் இந்நேரத்தில் தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்காக **'அரசியல் அமைப்புகள்'** எனும் இந்நூல் எமது முதல் வெளியீடாக வருவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

கல்லூரியில் இளங்கலைஞர் வகுப்பில் 'நவீன அரசாங்கத்தை'ப் பாடமாக எடுத்துப்பயிலும் மாணவர்களுக்கென, சென்னை மாநிலக் கல்லூரி அரசியல் துறைத் தலைமைப் பேராசிரியர் திரு. J. இராமசந்திரன், M.A., A.M. (Chicago) அவர்கள் எழுதியதைத் தமிழ் வெளியீட்டுக் கழகம் வாயிலாக நாங்கள் வெளியிட வாய்ப்புப் பெற்றமைக்கு எமது நன்றி இந்நூலாசிரியருக்கும் தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கும் உரியது.

—பதிப்பகத்தார்

# அணிந்துரை

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழி ஆக்கி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாண வர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வரு கின்றார்கள். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்,' என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பலதுறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன் வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவை காரணமாக இத்திட்டம் நம்மிடையே திருத்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில், அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளார்கள். இவற்றுள் ஒன்றான 'அரசியல் அமைப்புகள்' எனும் இந்நூலை அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் இது வரை வரலாறு, அரசி யல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளிலும் 37 நூல் கள் வெளி வந்துள்ளன.

இத்துறையை இன்னும் விரிவுபடுத்தச் சென்னை அரசினர், தமிழ் வெளியீட்டுக் கழகம் ஒன்றை நிறுவியுள்ளனர். அதன் மூலம் இன் னும் வேறு பல நூல்கள் தமிழில் வெளி வர இருக்கின்றன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! 'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ ?' இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம்.

தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளு மாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பல வகை உதவிகளுக்கும், ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்,

*தமிழக நிதி, கல்வியமைச்சர்.*

# முன்னுரை

இப்புத்தகம் இளங்கலைஞர் வகுப்பில் 'நவீன அரசாங்கத்தை'ப் பாடமாக எடுத்துக்கொண்டு கல்லூரி நிலையில் தமிழ் வாயிலாகக் கல்வி பயிலும் மாணவர்களுக்கென, சென்னைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தையொட்டி எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள அரசாங்கங்களின் அடிப்படைக் கருத்துகள், அவை இயங்கும் முறைகள் பற்றி மட்டுமே விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுமெனக் கருதப்படுகிறது. இப்புத்தகம் என் உடன் ஆசிரியர்களான திரு. சோ. சுப்பிரமணியன், திரு. அ. ஜலாலுத்தீன் பாஷா ஆகியோருடைய முழு ஒத்துழைப்பாலும் முயற்சியாலும் இயற்றப்பட்டது. அவர்களுக்கு என் நன்றி உரியது. மேலும், இப்புத்தகத்தை எழுதுமாறு செய்து இயன்ற உதவிகளை அவ்வப்போது நல்கிய தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கும் என் நன்றியுரியதாகும்.

சென்னை-5.
14—6—'62.

ஆசிரியர்

# பொருளடக்கம்

பொருள் | பக்கம்

## 1. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

1. அரசியலமைப்பின் முன்னுரை ... 1
2. அரசியலமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் ... 4
3. அரசியலமைப்பின் அமிசங்கள் ... 8
4. அரசியலமைப்பை மாற்றுமுறை ... 14
5. அரசியலமைப்பு வளர்ந்த வரலாறு ... 17
   (பழக்கங்கள், வழக்காறு, நீதி விளக்கங்கள் முதலியன)
6. அதிகாரப் பங்கீடு ... 21
7. ஜனாதிபதி ... 24
8. உதவி ஜனாதிபதி ... 32
9. அமைச்சவை ... 34
10. ஆட்சித்துறைகளும், அவற்றின் வேலைகளும் ... 38
11. பொதுப்பணித்துறைகளில் பணி புரிவோரைத் தெரிந்தெடுத்தலும், கட்டுப்படுத்தலும் ... 41
12. மத்திய சட்ட மன்றம் ... 44
13. மேற்சபை ... 49
14. இரு சபைகளுக்கும் பொதுவான அதிகாரங்கள் 56
15. சட்டமியற்றல் ... 60
16. நீதி பரிபாலனமும், நீதி மன்றங்களும் ... 68
17. அரசியற்கட்சிகள் ... 76
18. இந்நூலாக்கத்திற்கு உதவிய நூல்களின் பட்டியல் 80

## 2. கானடா

1. கானடாக் கூட்டாட்சியின் வரலாறு ... 83
2. கானடாவின் கூட்டாட்சித் தத்துவம் ... 87
3. அரசியலமைப்பும் அதன் அமிசங்களும் ... 92
4. நிருவாகம், அரசு, கவர்னர்-ஜெனரல் ... 95

**பொருள்** **பக்கம்**


| | | | |
|---|---|---|---|
| 5. | அமைச்சவை, பிரிவி கவுன்சில் | ... | 99 |
| 6. | பிரதம மந்திரியார் | ... | 102 |
| 7. | டொமினியன் பாராளுமன்றம் மேற்சபை | ... | 106 |
| 8. | பொதுமக்கள் சபை | ... | 113 |
| 9. | நீதியும் நீதிமன்றங்களும் | ... | 120 |
| 10. | நீதி மன்றங்களின் அமைப்பும் அவற்றின் அதிகார வரம்பும் | ... | 122 |
| 11. | அரசியற்கட்சிகளின் தோற்றமும் வளர்ச்சியும் | | 125 |
| 12. | இந்நூலாக்கத்திற்கு உதவிய நூல்களின் பட்டியல் | | 129 |

## 3. ஜப்பான்

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசியல் திட்டத்தை மாற்றும் விதம் | ... | 133 |
| 2. | அடிப்படை உரிமைகள் | ... | 135 |
| 3. | பேரரசர் | ... | 140 |
| 4. | அமைச்சரவை | ... | 145 |
| 5. | தேசிய டையட்டு | ... | 149 |
| 6. | டையட்டின் செயல் முறை | ... | 154 |
| 7. | தேர்தல் முறை | ... | 159 |
| 8. | அரசியற்கட்சிகள் | ... | 162 |
| 9. | செல்வாக்குக் குழுக்கள் | ... | 168 |
| 10. | நீதித்துறை | ... | 172 |
| 11. | நிருவாகத்துறை | ... | 176 |
| 12. | இந்நூலாக்கத்திற்கு உதவிய நூல்களின் பட்டியல் | | 182 |

## 4. ஆஸ்திரேலியா

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆஸ்திரேலியக் கூட்டாட்சி முறை | ... | 185 |
| 2. | அரசியலமைப்புத் திட்டத்தை மாற்றும் விதம் | | 195 |
| 3. | அடிப்படை உரிமைகள் | ... | 200 |
| 4. | கவர்னர் ஜெனரல் | ... | 202 |

| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| 5. | அமைச்சரவை | ... | 207 |
| 6. | பாராளுமன்றம்—மக்கள் சபை | ... | 213 |
| 7. | பாராளுமன்றம்—மேற்சபை | ... | 218 |
| 8. | தேர்தல் முறை | ... | 223 |
| 9. | அரசியற்கட்சிகள் | ... | 227 |
| 10. | செல்வாக்குக் குழுக்கள் | ... | 234 |
| 11. | நிர்வாகத் துறை | ... | 238 |
| 12. | நீதித்துறை | ... | 240 |
| 13. | இந்நூலாக்கத்திற்கு உதவிய நூல்களின் பட்டியல் | | 244 |
| 14. | கலைச் சொற்களின் அகராதி | ... | 245 |

முதற் பிரிவு

# அமெரிக்க ஐக்கிய நாடுகள்

# அத்தியாயம்—1

## அமெரிக்க ஐக்கிய நாடுகள் — அரசியலமைப்பு

**தோற்றுவாய்:** புதுக் கண்டம் என்று வழங்கப்படும் அமெரிக்கா நவீன கால ஆரம்பத்திலேதான் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் அக்கண்டத்தில் ஐரோப்பிய நாட்டவர் பலரும் குடியேறி நாளடைவில் பல நாடுகளை அங்கு ஏற்படுத்தினர். அந்நாடுகளுள் கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இலத்தீன் குழு நாடுகள் என்பன குறிப்பிடத் தக்கனவாம். இவ்வாறு அங்கு மக்கள் குடியேறவும் நாடுகள் அமைக்கவும், அரசியல் மதக் கருத்து வேறுபாடுகளும் பொருளாதார ஏற்றத் தாழ்வுமே காரணம் என்பது அறிஞர்கள் கூற்று. அவற்றைப் பற்றி இங்கு நாம் ஆராயப் புகுவோமானுல் பெருகும் என்ற காரணத்தால், அமெரிக்க ஐக்கிய நாடுகள் தோன்றக் காரணமாயிருந்த சந்தர்ப்பங்கள், அவை சுதந்தரம் பெற்றுத் தமக்கென அரசியலமைப்பை ஏற்படுத்திக்கொண்ட வரலாறு பற்றி மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

பதினேழாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்து நாட்டு மக்களுள் பலர் பலவேறு காலங்களில் இப்போது வடஅமெரிக்கா என்று வழங்கப்படும் அக்கண்டத்தில் அட்லாண்டிக் கடற்கரையையொட்டிய பகுதிகளில் குடியேறினர். அவர்களுள் **முதலாம் ஜேம்ஸ்** மன்னர் காலத்தில் '**மே பிளவர்**' (May Flower) என்னும் மரக்கலத்தில் வந்து கி. பி. 1620ல் குடியேறிய 'பியூரித்தானியர்' (Puritans) என்பவரும் ஒரு பிரிவினராவர். இவ்வாறு குடியேறிய பிரிவினர் பலரும் நியூபிளிமவுத், மசாசுசெட்சு, பென்சில்வேனியா, நியூ இங்கிலாந்து முதலான பதின்மூன்று நாடுகளை நாளடைவில் ஏற்படுத்தினர். இவைகளே பின்னர்க் **குடியேற்ற நாடுகள்** (Colonies) என்று வழங்கப்பட்டன.

இந்நாடுகள், ஆங்கில அரசாங்கம் கடைப்பிடித்து வந்த மத, அரசியல் முறைகளை வெறுத்து வெளியேறிய மக்களால் நிறுவப்பட்

டன என்றாலும், அவர்களுக்கு ஆங்கில முடியின் (Crown) மீது எவ்வித வெறுப்பும் இல்லையென்பதும், ஆங்கிலப் பழக்க வழக்கங்களையே பின்பற்றி வந்தனர் என்பதும் அறியற்பாலன. ஆகையால், அந்நாடுகள் இங்கிலாந்து நாட்டு அரசரின் முத்திரை பெற்று, பல்லாண்டுகள் சுயாட்சியுடையவைகளாய் இருந்தன. பின்னர் முன்பு நிலவிய கருத்து வேற்றுமைகள் கொள்கை வேறுபாடுகள் காலப் போக்கினாலோ புதியனவாய் ஏற்பட்ட அரசாங்கங்கள் கடைப் பிடித்து வந்த கொள்கை மாறுதலினாலோ ஒழிய, பிரான்ஸ் போன்ற வேறு பல நாடுகளும் தங்கள் குடியேற்ற நாடுகளை அமைத்ததால் ஏற்பட்ட பயத்தாலும் தங்கள் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் கருதியதாலும் இங்கிலாந்து அரசாங்கத்தின் நேரடி மேற்பார்வையை ஒப்புக்கொண்டன; அதோடு வரியும் மூலப்பொருள்களும் கொடுத்துத் தாய்நாட்டைப் போற்றி வந்தன. இவ்வாறு இவை ஆங்கில ஆட்சியின் கீழிருந்தாலும், தங்கள் உடன் பிறப்பான சுதந்தரம், மொழி, பண்பாடு ஆகியவற்றை எக்காரணத்தாலும் கைவிடாமல் முன்னிலும் பன்மடங்கு போற்றிப் பேணிவந்தன; அல்லாமலும், அமெரிக்க நாட்டின் தட்ப வெப்பம் முதலிய சூழ்நிலைக்கும் தங்கள் சத்திக்கும் ஏற்பவும் அவற்றை மாற்றிக்கொண்டன. இங்கிலாந்தினரைத் தவிர ஏனைய ஐரோப்பியரும் அங்கு இருந்தனர். அவர்களுடன், பெரும்பான்மையினரான இங்கிலாந்தினர் கூடி வாழும் அவசியம் ஏற்பட்டபோது இவர்கள் யாவருக்கும் தெளிவாக முன்கூட்டியே உணர முடியாதவாறு ஒரு புது நாகரிகமும், பண்பாடும், மொழியும் உண்டாயின. இவற்றையே பிற்காலத்தில் அறிஞர்கள் அமெரிக்கப் பண்பாடென்றும், அமெரிக்க மொழியென்றும் கூறலானார்கள்.

இதற்கிடையில் ஐரோப்பிய நாடுகளிடையே நாடு பிடிக்கும் கொள்கையையொட்டிப் பொறாமைத் தீயும் சந்தேகப் பேயும் தாண்டவமாடின. அதனால், போட்டியதிகமாயிற்று; போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது. உதாரணமாக, இங்கிலாந்தும் பிரான்ஸும் மோதிக்கொண்டன. இம்மோதல் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்காகவோ, அல்லது குறிப்பிட்ட இடத்திலோ மட்டும் நடைபெறவில்லை. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் வடஅமெரிக்காவிலும் போர்கள் நடந்தன. இவ்வாறு ஏற்பட்ட போர்களுள் **ஏழாண்டுப் போரும்** (Seven Years War) ஒன்று. இந்தப் போரின் முடிவில் கி. பி. 1763ல் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி பிரான்ஸ் கனடாவைவிட்டு வெளியேறியது. இங்கிலாந்து அதன் மேற்பார்வையைப் பெற்றது. இது அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்பத்தை ஏற்படுத்தியது எனலாம். பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த போரில் இங்கிலாந்து தேசம் மிகப் பெரிய அளவில் சேதமடைந்திருந்தது. தன் பொருளாதாரத்தைச் சீர்படுத்த இங்கி

லாந்து அரசாங்கம் புதுச் சட்டங்கள் மூலம் குடியேற்ற நாடுகளிலிருந்து வரியும் மூலப் பொருள்களும் அதிகமாகப் பெறத் தீர்மானித்தது; அத்துடன் இங்கிலாந்து நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களையே அமெரிக்கர்கள் வாங்கவேண்டுமெனவும் விதித்தது. இதற்கு இங்கிலாந்து அரசாங்கம் கூறிய காரணம், குடியேற்ற நாடுகளின் பாதுகாப்பிற்காக ஆங்கில அரசாங்கம் மிக அதிகமாகச் செலவு செய்யவேண்டியிருக்கிறது என்பதேயாகும். ஆனால், இவ் விசித்திர வாதத்தை அமெரிக்கர்கள் ஒப்புக்கொள்ளாததோடு தங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத ஆங்கிலச் சட்ட மன்றத்தால் விதிக்கப்படும் எந்த வரியையும் தாங்கள் ஏற்பதற்கில்லையென்றும் கூறினார்கள்.

ஆனால், ஆங்கில அரசாங்கமோ, தன் ஆதிக்கத்தைப் பல வழிகளிலும் அதிகப்படுத்தியதோடல்லாமல், அடக்குமுறைகளையும் அவிழ்த்துவிட்டது. இதனால் அமெரிக்க மக்கள் கொதித்தெழுந்து தங்கள் முழுச் சத்தியையும் திரட்டினார்கள். நாட்டுப் பற்றால் பிணைக்கப்பட்ட இம்மக்கள் ஒன்று கூடி உறுதியுடனும் விடாமுயற்சியுடனும் போராடவேண்டுமெனத் தீர்மானித்து, அதற்கு முதற்படியாகக் கி. பி. 1776-ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 4-ஆந் தேதி ஒரு '**சுதந்தரப் பிரகடனத்தை**' (Declaration of Independence) வெளியிட்டார்கள். அந்தச் சுதந்தரப் பிரகடனம், குடியேற்ற நாடுகள் தனித்தனி சுதந்தரப் பிரதேசங்களென்றும், பொது மக்களின் சம்மதமே அரசாங்கத்திற்கு ஆதாரமானதென்றும், கட்டுப்பாடுள்ள அரசாங்கம் இன்றியமையாததென்றும், கொடுங்கோலாட்சியை எதிர்த்துப் புரட்சி செய்தல் பிறப்புரிமை என்றும் உரைத்தது.

இதனால், தாய் நாட்டிற்கும் குடியேற்ற நாடுகளுக்கும் போர் மூண்டு, சுமார் ஆறு ஆண்டுகள் நடந்த பின், கி. பி. 1781-ஆம் வருஷம், அக்டோபர் மாதம், 19-ஆம் தேதி முடிவுற்றது. ஆங்கில அரசாங்கம் குடியேற்ற நாடுகளின் சுதந்தரத்தை ஒப்புக்கொண்டு கி. பி. 1783ல் ஓர் உடன்படிக்கையையும் செய்துகொண்டது.

இங்ஙனம் குடியேற்ற நாடுகள் ஆங்கில அரசாங்கத்தின் கட்டுப்பாடின்றிச் சுயாட்சி நாடுகளாக மலர்வதற்குக் காரணம், கானடாவும் ஆங்கில ஆட்சியின்கீழ் வந்ததேயெனலாம். பிரான்ஸ் தொடர்ந்து அங்கிருந்திருக்குமானால், அதனிடம் உள்ள பயம் காரணமாகக் குடியேற்ற நாடுகள் தாய் நாட்டுடன் போர் தொடுத்திருக்கமாட்டா. இன்னும் பல காரணங்களும் உண்டு. அவற்றை நீங்கள் வரலாற்றில் படித்துத் தெரிந்துகொள்ளலாம். இனி அந் நாடுகள் ஒன்று சேர்ந்து எவ்வாறு தங்களுக்கென ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்திக்கொண்டன என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## அத்தியாயம்—2

# அரசியலமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும்

**இனநாடுகளின் தொகுதியும் காங்கிரசும்:** (The Confederation and the Congress): குடியேற்ற நாடுகள் ஆரம்பத்தில் தனித்தனியாய் இருந்தன. ஒவ்வொரு நாடும் தனித்தனியாகத் தாய் நாட்டோடு சண்டை செய்தால் வெற்றி கிட்டுவது துர்லபமே. எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்தாற்கூட, பலம் மிக்க ஆங்கில அரசாங்கத்தைச் சுலபமாகத் தோற்கடித்துவிட முடியாது. எனவே, அப்போது மிக இன்றியமையாதனவாய் இருந்தவை உறுதியான பொதுக்கொள்கை, விடா முயற்சி, இயற்கை-செயற்கை வளங்களின் திரட்சி, பொது இராணுவம், எல்லாவற்றிற்கும் மேலாக ஒற்றுமை ஆகியவையாகும். ஆகையால், குடியேற்ற நாடுகள் தங்கள் சுதந்தரம் இம்மியளவும் பாதிக்கப்படாத வகையில் ஒரு கூட்டமைப்பு அமைக்கத் திட்டமிட்டன. அதன்படி அந்நாடுகளின் காங்கிரசு (Congress) ஒரு குழுவை நியமித்து, அதை இன நாடுகளின் தொகுதி ஏற்படுத்தவும் அதற்குத் தகுந்த ஓர் அரசியலமைப்பைத் தயாரிக்கவும் திட்டமொன்று சமர்ப்பிக்கப் பணித்தது. அக்குழு, தீர ஆலோசித்து, கி. பி. 1777-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஓர் அரசியலமைப்பை வெளியிட்டது. இவ்வரசியலமைப்பு, கி. பி. 1781-ஆம் ஆண்டு எல்லா நாடுகளாலும் ஆமோதிக்கப்பட்டு அமுலுக்கு வந்தது. இவ்வமைப்பின்படி **இனநாடுகளின் தொகுதியும்** (Confederation) அவற்றின் பிரதிநிதிகளடங்கிய **சட்டமன்றமும்** (Congress) ஏற்பட்டன. இது பின்னல் ஏற்பட்ட **கூட்டாச்சிக்கு** ஒரு தொடக்கமாய் அமைந்தது எனலாம்.

**இனநாடுகளின் அதிகார வரம்பு:** இவ்வரசியலமைப்பு இனநாடுகளின் தொகுதிக்குப் பாதுகாப்பு, பொது நன்மை, உரிமைப் பாதுகாப்பு ஆகியவற்றில் அதிகாரம் அளித்தது. ஒவ்வோர் ஆண்டும் இனநாடுகளின் தொகுதிச் சட்ட மன்றம் கூடிப் பொதுவான முக்கிய

மான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து முடிவு செய்யும். இந்தச் சட்டமன்றத்திற்கு உறுப்பு நாடு ஒவ்வொன்றும், தன் பரப்பளவிற்கும் மக்கள் தொகைக்கும் ஏற்ப, இரண்டு பேர் முதல் ஏழு பேர் வரை பிரதிநிதிகளை அனுப்பும். எக்காரணத்தைக்கொண்டும் பிரதிநிதித்துவம் இரண்டுக்குக் கீழோ அல்லது ஏழுக்கு மேலோ இருக்க முடியாது. இதில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டுவதென்ன வென்றால், ஏதாவதொரு பிரச்சினையின்மேல் வாக்கெடுக்கப்பட்டால், ஒவ்வோர் உறுப்பு நாட்டிற்கும் ஒவ்வோர் ஓட்டுதான் உண்டு என்பது. போர் அறிவிப்பு, அமைதி நிலைநாட்டல், நாணயம் வெளியிடுதல், கப்பற்படை ஏற்படுத்துதல், தபால் போக்கு வரத்திற்கு வசதி செய்தல் ஆகியவற்றில் இந்தச் சட்ட மன்றத்திற்கு அதிகாரம் இருந்தது. ஆனால், வரி விதிக்கவும், வர்த்தகத்தைத் தன்னிஷ்டம் போலக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் இல்லை. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், வசதிகளைச் செய்து தரத் திட்டம் வகுக்கவும், செய்யவும் அதிகாரம் தரப்பட்டிருந்ததேயல்லாமல், அவற்றிற்கு ஆதாரமான நிதி திரட்டும் அதிகாரம் கொடுக்கப்படவில்லையென்று கூறவேண்டும். நிதியுதவி ஒவ்வொரு நாட்டையும் பொறுத்த விஷயமாகவே இருந்தது. அல்லாமலும், ‘சட்ட மன்றத்தின் முடிவுகள் சரியானவைதாமா? அவை பின்பற்றப்படுகின்றனவா? அல்லாவிட்டால் அதற்கு என்ன செய்வது?’ என்பன போன்ற இன்னோரன்ன பல முக்கியமான விஷயங்களைக் கவனிக்க எவ்வித ஏற்பாடும் காணப்படவில்லை. அதனால், இன நாடுகளின் தொகுதியும் அரசியலமைப்பும் அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. இந்நிலை தவிர்க்கப்படாவிட்டால் இனநாடுகளினிடையே வேற்றுமை வித்துகள் ஊன்றப்படுவதுடன், அவை தங்களை ஆண்டுகொள்ளும் தகுதியும் திறமையும் உடையனவல்ல என்பதையும் நிரூபித்துவிட்டன என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக வேண்டியிருந்திருக்கும். எனவே, **ஜார்ஜ் வாஷிங்குடன்** (George Washington) **ஹாமில்டன்** (Hamilton) போன்றவர்கள் ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் பரஸ்பர உதவியையும் தோற்றுவிக்கப் பெரிதும் முயன்று, இறுதியில் பல நாடுகளின் சம்மதத்துடன் முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்யக் கி. பி. 1787-ஆம் ஆண்டு, மேத்திங்கள், பிலடெல்பியா (Philadelphia) நகரில் ஒரு மாநாடு (Convention) கூட்டுமளவுக்கு வெற்றியும் பெற்றார்கள்.

**வெற்றி அல்லது விழ்ச்சி** (Succeed or perish for ever): அமெரிக்க சமுதாயத்தின் வளர்ச்சியும் பண்பாட்டின் கீர்த்தியும் இந்த மாநாட்டின் முடிவையே பெரிதும் பொறுத்திருந்தன. மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளின் (Delegates) முழு எண்ணமும் ‘அடைந்தால் வெற்றி, அல்லது வீழ்ச்சி’ என்பதிலேதான் இருந்தது. மிகு

பெரும்பான்மையோர் அமெரிக்கா ஒரு சிறந்த நாடாக வேண்டு மென்று விரும்பினர். அதற்குச் சாதகமாகப் பலமிக்க—அதாவது அதிகாரங்கள் மிகவுடைய-ஒரு மத்திய அரசாங்கம் ஏற்பட விரும்பி னர். இது இன நாடுகள் ஒரு கூட்டாட்சி (Federation) யின் கீழ் வரவும் சிறந்த அரசியலமைப்பை வகுத்துக்கொள்ளவும் சம்மதித் தால்தான் முடியும். எனவே, பிரதிநிதிகளுள் பலரும் பல விதமான கருத்துகளை வெளியிட்டனர்; கலந்து பேசினர். கடைசியாக நான்கு மாதங்கள் கழித்து அதாவது கி. பி. 1787-ஆம் வருஷம், செப்டெம்பர் மாதம், 17-ஆம் தேதி பெரும்பாலாருக்குச் சம்மதமான ஓர் அரசிய லமைப்புத் தயாரிக்கப்பட்டது. மொத்தமுள்ள பதின்மூன்று நாடு களில் ஒன்பது நாடுகளின் ஆமோதிப்புப் பெற்றதும் இவ்வரசிய லமைப்புச் செயலாற்றத் தொடங்குமென்னும் முடிவுக்கு வரப் பட்டது.

**உரிமைச் சாசனம்** (Bill of Rights): அதன் பின்னரும் கூட் டாட்சி அரசாங்கத்திற்கு ஒதுக்கப்படும் அதிகாரங்கள், அங்கநாடு களின் (Federated States) சுதந்தரம், இறைமை (Sovereinty) இவை பற்றிச் சர்ச்சைகள் ஒய்ந்தபாடில்லே. மேலும், பொருளாதார முன்னேற்றத்தில் பின் தங்கிய நாடுகள், வேளாண்மையைப் பிரதான மாக உடைய நாடுகள், அளவில் சிறியனவாய் இருந்த நாடுகள் எல்லாம், முன்னேற்றத்திலும், தொழில் துறையிலும், அளவிலும் பெரியனவாய் இருந்த நாடுகளால் தங்கள் முன்னேற்றம் பாதிக் கப்பட்டுவிடுமோ என்று அஞ்சின. இவற்றையெல்லாம் அறிந்த பலம் பொருந்திய கூட்டாட்சியை ஆதரித்தவர் மற்றவர்களுடன் சமரசம் செய்துகொண்டு சில சலுகைகளைத் தரவும் சம்மதித்தனர். இதன்படி முதலில் எழுதப்பட்ட அரசியலமைப்பிற்குப் பத்து மாற் றங்கள் செய்யப்பட்டன. இந்தப் பத்து மாற்றங்களையும் சேர்த்துத் தான் அமெரிக்கர்கள் '**உரிமைகள் மசோதா**' (Bill of Rights) என்று கூறிப் பூரிப்படைகிறார்கள். இவ்வாறு கூட்டாட்சி அரசிய லமைப்பு (Constitution of the Federation) கி. பி. 1788-ஆம் வருஷம், ஜூன் மாதம், 21-ஆம் தேதி ஒப்புக்கொள்ளப்பட்டது. பிலடெல் பியா மாநாட்டின் முடிவுப்படி அமெரிக்கக் கூட்டாட்சி (American Federation) பதின்மூன்று நாடுகளை அங்கமாகக் கொண்டு கி. பி. 1789-ஆம் வருஷம், மார்ச்சு மாதம், நாலாந்தேதி தொடங்கிற்று. இதற்கிடையில், மேற்சட்டமன்றத்திற்கும், பிரதிநிதிகள் சட்ட மன்றத்திற்கும் (கீழ்ச்சபை) உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் ஜனதிபதியாகத் **திரு. ஜார்ஜ் வாஷிங்குடன்** (George Washing- ton) என்பவர் ஏகமனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பதின்மூன்று நாடுகளாகத் தொடங்கிய அமெரிக்கக் கூட்டாட்சி யில் அண்மையில் சேர்ந்த அலாஸ்கா, ஹவாய்த் தீவுகளையும் சேர்த்து இப்போது ஐம்பது நாடுகள் (States) இருக்கின்றன. இந்

நாடு சுமார் *30,22,387* சதுர மைல்களும், *1955*-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி (Census) *16,58,59,123* மக்களும் உடை யது. கிட்டத்தட்ட இந்நாட்டின் மூன்றிலிரண்டு பங்கு மக்கள் நகரங் களிலும் ஏனையோர் கிராமப் புறங்களிலும் வாழ்கின்றனர் என்று கூறப்படுகிறது. இந்நாட்டின் தலைநகரம் **வாஷிங்குடன்.** இங்கேதான் கூட்டாட்சி அரசாங்கம் இயங்குகிறது.

# அத்தியாயம்—3

**அரசியலமைப்பின் அமிசங்கள்** (Characteristics of the Constitution): எழுதப்பட்ட அரசியலமைப்புகளுள் அமெரிக்கக் கூட்டாட்சியின் அரசியலமைப்புத் தொன்மை வாய்ந்தது. இதனுல், இதற்கு முன் அரசியலமைப்பு இருந்ததில்லையென்பது பொருளன்று; இந்த அரசியலமைப்பு மாதிரி எல்லா விஷயங்களும் எழுதப்பட்டது இல்லை என்பதே கருத்து. இவ்வமைப்பு, தெளிவும் சொல்லாழமும் உடையது; நாலாயிரம் சொற்களால் சுருக்கமாக வடித்தெடுக்கப்பட்டது. இதை எவரும் அரை மணி நேரத்தில் படித்துவிடலாம். சுதந்தரச் சாசனத்தில் காணப்பட்ட உறுதிப்பாடு பெற்ற குடிமக்கள் உரிமைகளும், கொள்கைகளும், இதர அமிசங்களும் இதில் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படையிலேதான் கூட்டாட்சி அரசாங்கம் அமைந்து செயற்படுகிறது. இந்த அரசியலமைப்பு ஆரம்பத்தில் எவ்வாறு எழுதப்பட்டிருந்ததோ, அவ்வாறேதான் இன்றும் இருக்கிறது. மேலும் பன்னிரண்டு மாற்றங்களே (Amendments) செய்யப்பட்டிருக்கின்றன. இது உயிருள்ள அரசியலமைப்பு (Living Constitution) என்று அறிஞர்கள் கூறுமளவிற்கு அழியாப் புகழ் பெற்றுத் திகழ்கிறது. இதற்குக் காரணம், மக்கள் இதை மனமாரப் போற்றிப் பூசித்து வருவதுதான். இவ்வமைப்பின் படியொன்று 1952 வரை சட்டமன்றத்தின் நூல் நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது. இன்று மனிதனுலும், இயற்கையின் திருவிளையாடல்களாலுங்கூட அசைக்க முடியாத பாதுகாப்பையுடைய 'நாஷனல் ஆர்ச்சிவ்ஸ்' (National Archives) என்னுமிடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**மக்களிறைமையும் அரசியலமைப்பும்** (Popular Sovereignty and the Constitution): அமெரிக்க அரசியலமைப்பில் மக்கள் - இறைமைக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது. மக்கள் விருப்பமே மாநில ஆட்சியின் இயக்கம். அவர்கள் விரும்பினுல், அரசாங்கம் அமைக்கலாம், மாற்றலாம், கைவிடலாம். இந்த உரிமை மக்களின் பிரிக்க முடியாத உரிமை. ஆண்டவனுல் ஆட்டி வைக்கப்படும் ஆழி சூழ்

ஞாலம் போல, ஒரு நாட்டின் அரசாங்கமும் அந்நாட்டுக் குடிமக்களால் ஆட்டிவைக்கப்படுகிறது என்னும் பொருள்பட **டி டாக்குவில்லி** (De Tocqueville) என்ற பிரெஞ்சு அரசியல் அறிஞர் ஒருவர் எழுதுகிறார். இந்த மக்கள் இறைமைக் கோட்பாடு எதேச்சாதிகாரக் கொடுங்கோலாட்சிக்குப் பதில், உரிமைகளை மதித்து நடக்கும் ஒரு சட்ட பூர்வமான ஆட்சியை வலியுறுத்துகிறது. இக்கொள்கையடிப்படையில் அமையும் ஆட்சியைத்தான் **திரு. ஆபிரகாம் லிங்கன்** என்னும் அமெரிக்க மேதை, 'மக்களால் மக்களுக்காக ஏற்படும் மக்களரசாங்கம்' (Government of the people by the people for the people) என்று கூறியுள்ளார். இதை **மாடிசன்** (Madison) என்ற மற்றொரு பேரறிஞரும் வலியுறுத்தியுள்ளார்.

**வரம்புக்குட்பட்ட அரசாங்கம்** (Limited Government): மக்கள் இறைமையின் உடன்பிறப்பொத்தது வரம்பிற்குட்பட்ட அரசாங்கம் என்னும் கொள்கை. இக்கொள்கை அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கிறது. வரம்பற்ற ஆட்சி குடியாட்சியேயானாலும், சட்டபூர்வமானதேயானாலும், சில காரணங்களால் இறுதியில் கொடுங்கோலாட்சியாக மாறக்கூடும். எனவே, வரம்புக்குட்பட்ட ஆட்சியை ஆதரித்த அமெரிக்க மக்கள், அதை அரசியலமைப்பிலேயே எழுதிக்கொள்ளவும் துணிந்தார்கள். இம்முறை அரசாங்கம், தான் மக்களை ஆளுவதுடன் தன்னைத் தானே அடக்கியாளும் திறமையையும் பெற்றிருக்குமென்றும் நம்பினார்கள். இதன் உண்மை, மக்களாட்சியின் தீமைகளைப் பற்றி எழுதும்போது **ஹாமில்டன்** என்பவர், 'எல்லா அதிகாரங்களையும் பலரிடம் கொடுத்தால் அவர்கள் சிலரையும், சிலரிடம் கொடுத்தால் பலரையும் நசுக்குவார்கள்,'* என்று தம் கருத்தை வெளியிட்டிருப்பதிலிருந்து பெறப்படும்.

ஆகையால், ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் வண்ணம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அமெரிக்க அரசியலமைப்போவெனில், இதைக் காட்டிலும் ஒரு படி குறைவான ஆட்சி முறையையே ஏற்படுத்துகிறதெனலாம். இவ்வகையின் மிகச் சிறந்த அமிசம் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் முறையில் அமைந்துள்ளது; அதாவது, ஜனாதிபதியாட்சித் தத்துவம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

**இரு அரசாங்க முறை** (Dual form of Government): அரசியலில் ஒரு நூதனமான—இதற்கு முன் எவரும் கண்டோ விண்டோ இராத—அதிசயமாகும் இம்முறை. ஒரு புறம் மத்திய அரசாங்கம் (Union); மறுபுறம் மாகாண அரசாங்கங்கள் (States). மக்கள் ஒரு

---

*Give all the power to many and they will oppress the few. Give all the power to the few and they will oppress the many. Both ought, therefore, to have the power that each may defend itself against the other.

முறைப்படி மத்திய அரசாங்கத்தின் குடிகள் (Citizens); மற்ெருரு முறைப்படி மாகாணங்களின் குடிகள். மத்திய அரசாங்கம் தன்னுடைய சட்ட மூலமும், நீதிமன்றங்கள் மூலமும் மக்கள்மேல் நேரடியாக அதிகாரஞ் செலுத்துகிறது. அத்தகையனவே ராஜ்ய அரசாங்கங்களும். ராஜ்ய அரசாங்கங்களின் அதிகாரம் அவற்றுக்கே ஆரம்ப முதல் இருந்தவை. ஆனால், மத்திய அரசாங்கத்தின் அதிகாரமோவெனில், ராஜ்யங்களால் தரப்பட்டது.

இந்த இருஅரசாங்க முறையை **பிரைசு** (Bryce)என்பார் பின்வருமாறு விளக்கியுள்ளார்: "அங்க நாடுகள் யூனியனுக்குட்பட்டவை; அடக்கமானவை; எனினும், யூனியன் நாடுகளின் திரட்சி என்னும் நிலையைவிட அதிகமானவை. அங்ஙனமே, நாடுகளும் (States) யூனியனின் உறுப்புகள் என்னும் நிலையினும் மேலானவை." (The American States are now all inside the union and have all become subordinate to it. Yet the Union is more than an aggregate of States and the States are more than parts of the Union.)

இவ்வாறு அங்கு இரு அரசாங்க முறை காணப்படுவதன்றி, இரு இறை விசுவாசமும் (Loyalty) இருக்கின்றன. மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் அவ்வவற்றின் எல்லைக்குள் இறைமையுடையவை. அவற்றின் சம்மதமில்லாமல் இவ்விறைமையை மாற்ற வேறு யாருக்கும் உரிமையோ அதிகாரமோ இல்லை.

**அதிகாரப் பிரிவினை** (Separation of Powers): வரம்பிற்குட்பட்ட அரசாங்கம் என்பதிலிருந்து பெறப்படும் மற்றோர் அமிசந்தான் அதிகாரப் பிரிவினைக் கொள்கை. சட்டம், நிருவாகம், நீதி என்ற மூவகை அரசாங்க வேலைகளும் தனித்தனி பிரிவுகளிடம் ஒப்படைக்கப்பட்டு, ஒன்று மற்றொன்றின் அதிகார எல்லைக்குள் தலையிடாமல் தன் வேலையைக் கவனிக்குமாறு ஏற்பாடு செய்வதுதான் இதன் பொருள். இம்முறை அரசாங்கத்திடம் காணப்படும் எதேச்சாதிகாரத்தைத் தடுத்து நிறுத்த ஒரு சாதனம் என்றெண்ணப்படுகிறது, இதை ஒப்புக்கொண்ட அமெரிக்கர்கள், அரசியலமைப்பை எழுதும் போதே, முதல் மூன்று விதிகளிலேயே, "சட்டமியற்றும் அதிகாரம் சட்ட மன்றத்திடமும், நிருவாக அதிகாரங்கள் ஜனாதிபதியிடமும், நீதி சம்பந்தப்பட்ட அதிகாரம் தலைமை நீதி மன்றத்தினிடமும், சட்டமன்றத்தால் அமைக்கப்பட்டுத் தலைமை நீதி மன்றத்தின்கீழ் இயங்கும் சிறு நீதி மன்றங்களிடமும் இருக்கும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்பொன்று, "மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியே வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை ஒன்று சேர்த்து ஏதாவதொரு பிரிவிடமோ அல்லது ஏதாவதொன்றின் அதிகாரத்தை மற்றொன்றிடமோ கொடுக்க முடியாது," என்று கூறுகிறது. இவ்வாறு அதிகாரப் பிரிவினை அரசியலமைப்பில் முதல் மூன்று விதி

களில் கூறப்பட்டு அது கடைப்பிடிக்கப்படவேண்டிய நெறி தலைமை நீதி மன்றத்தால் விளக்கப்பட்டிருந்தாலும், 'அதிகாரப் பிரிவினை' என்னும் சொல் தொடர் அரசியலமைப்பின் எப்பகுதியிலும் காணப் படவில்லை என்பதையும் கருத்திலிருத்த வேண்டும்.

இக்கொள்கையை **மாண்டெஸ்கியூ** (Montesquieu) என்னும் பிரான்ஸ் நாட்டுப் பேரறிஞர், 'சட்டங்களின் உள் நோக்கம்' (Spirit of Laws) என்னும் தம் நூலில் விளக்கியுள்ளார். இவர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் அரசியலமைப்புகளையும் அறிந் தவர். இவர், இங்கிலாந்து நாட்டில் தனியுரிமை பாதுகாக்கப்படுவ தையும், மற்ற ஐரோப்பிய நாடுகளில் அது பறிக்கப்படுவதையும் கண்டார். தனியுரிமையும், குடிகள் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமானால், மேற்குறிப்பிட்ட அரசாங்கத்தின் மூன்று உறுப்பு களும் தனித்தனியாகவும், வெவ்வேறு மக்களிடமும் இருக்கவேண்டு மென்று எழுதினர். வரம்பிற்குட்பட்ட ஆட்சியமைக்க விரும்பிய அமெரிக்கர்களுக்கு இக்கொள்கை வரப்பிரசாதம்போல இனித்ததும் ஒரு விந்தையாமோ!

**சமநிலைத் தடையீடுகள்** (Checks and Balances) : அதிகாரப் பிரி வினைக் கொள்கையையொட்டிச் சமநிலைத் தலையீடுகள் என்னும் மற் றொரு கொள்கையும் எழுகிறது. அரசாங்கத்தின் மூன்று அங்கங் களும் முற்றிலும் தனித்து நின்று செயற்படுவதனால் நன்மைகளை விடத் தீமைகளே அதிகமாகும். அதிலும், இக்காலத்தில், பொது நல னைப் (welfare) பேணும் அரசாங்கங்களே உலகம் முழுவதும் காணப் படுகின்றன. பொதுநல ராஜ்யங்களில் நிருவாக, சட்டப் பகுதிகள் தனித்து நின்று செயலாற்றினாலும், சில சமயங்களில் ஒன்றை யொன்று தழுவி நின்று பணியாற்றுவதும் அவசியமாகிறது. இந்த அடிப்படையிலேதான் சமநிலைத் தலையீடுகள் என்னும் கொள்கை அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறதெனலாம். சம நிலைத் தடையீடுகள் என்பது என்ன என்றறிய வேண்டுவதும் இன்றி யமையாதது. சட்டமன்றம், நிருவாகத் துறைக்குத் தடையாகவும், இவ்விரண்டிற்குந் தடையாகத் தலைமை நீதி மன்றமும் இருக்குமாறு செய்வதே சமநிலைத் தடைமுறையாகும். இவ்வாறு ஒன்று மற்றொன் றின் தடையாயிருப்பதால், தன்னெல்லை தாண்டி எந்த ஓர் அங்க மும் தன்னிச்சையாக எக்காரியத்தையும் செய்யமுடியாது. இதனால் ஒவ்வோர் உறுப்பும் தன் வேலையைச் செய்வதோடு மற்றவர்களின் வேலைகளையும் கண்காணித்து வருவதால் மூன்றிற்குமிடையே சமநிலை ஏற்படுகிறது. இம்முறை அரசாங்க உறுப்புகளிடையே ஒற்றுமையை வளர்த்து, ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்ததென்னும் உயர்வு மனப்பான்மையில்லாமல் தன் கடன் செய்ய ஏதுவாகிறது. இது எந்த அளவிற்கு உண்மை என்பது அமெரிக்கக் கூட்டாட்சி இயங்கும் முறையைக் கவனித்தால் விளங்கும்.

அமெரிக்க அரசியலமைப்பு நெகிழா வகையைச் சேர்ந்தது. பொதுவாக அரசியலமைப்புகளையெல்லாம் நெகிழும் வகை, நெகிழா வகை என்று பிரிப்பது அறிஞர்கள் இயல்பு. எழுதப்பட்ட அரசியலமைப்புகள், ஒரு சிலவற்றைத் தவிர, பெரும்பாலும் நெகிழாத் தன்மையன என்று கூறுவர். இக்கூற்றின் உண்மையைப் பின்னர் விளக்குவோம். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு நெகிழா வகையது 'எனப் பலரும் கூறுவர். இவ்வாறு பகுத்துரைப்பதன் அடிப்படையை இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

நெகிழும் வகை அரசியலமைப்பில், சாதாரணச் சட்டங்களைச் செய்யுமுரிமையுடைய பாராளுமன்றமே, மாற்றங்களையும் செய்யலாம். அந்த மாற்றங்கள் சாதாரணச் சட்டங்கள் எந்த முறையை அனுசரித்துச் செய்யப்படுகின்றனவோ, அந்த முறையையொட்டியே செய்யப்படலாம். ஆனால், நெகிழா அரசியலமைப்பை மாற்ற மேற்கூறப்பட்ட முறை பின்பற்றப்படாமல், அதினின்றும் மாறுபட்ட அரசியலமைப்பிலேயே கூறப்படும் தனிமுறையொன்று பின்பற்றப்படுகிறது. அந்த முறையைப் பின்பற்றியே மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் பின்பற்ற வேண்டிய முறையைப் பார்ப்போம்: அரசியல் சட்டத் திருத்த மசோதா நிறைவேறுவதற்குச் சட்ட சபையில் (காங்கிரசில்) மொத்தமுள்ள அங்கத்தினரில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் இருக்கவேண்டும். மேலும், நான்கில் மூன்று பங்கு (முக்கால் வாசி) மாகாணங்களின் சட்டசபைகள் அல்லது மக்களால் கூட்டப்படும் அரசியல் சட்டத் திருத்த மாநாடுகள் அதை ஆமோதிக்க வேண்டும். இம்மாதிரி முறைகள் விதிக்கப்பட்டால், அவை அடிப்படையிலேயே அரசியலமைப்பை மாற்றவியலும்.

எழுதப்பட்டிருப்பதனாலேயே ஓர் அரசியலமைப்பு நெகிழா வகையைச் சேர்ந்ததாகுமா என்பதை இப்போது நாம் ஆராய்வோம்: "நெகிழும் அரசியலமைப்பா அல்லது நெகிழா அரசியலமைப்பா?" என்னுமிந்தப் பாகுபாடு, ஓர் அரசியலமைப்பு எழுதப்பட்டிருப்பதனாலோ, அல்லது எழுதப்படாமலிருப்பதனாலோ ஏற்படுவதன்று என்பதே அறிஞர்கள் ஒரு மனமாகக் கூறுவதாகும். இந்த உண்மை எழுதப்படாததும் நெகிழும் வகையைச் சேர்ந்ததுமென்று கருதப்படும் இங்கிலாந்து அரசியலமைப்பையும், எழுதப்பட்டதும் நெகிழா வகையைச் சார்ந்ததென்று கருதப்படுவதுமான அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியலமைப்பையும் ஒப்பு நோக்கிப் பார்த்தால் தெளிவாகத் தெரியும். இங்கிலாந்து அரசியலமைப்பு, பதின்மூன்றும் நூற்றாண்டில் வேரூன்றி வளர்ந்து, இன்று நிலைத்து நிற்கிறது. இந்தச் சுமார் எண்ணூறு ஆண்டுகளில் அதில் ஏற்பட்ட மாறுதல்கள் சிலவே. அல்லாமலும், அவைகள் எல்லாம் மிக நீண்ட இடைவேளைகளிலேதான் ஏற்பட்டன. உதாரணமாக, பத்தொன்பதாம் நூற்

ருண்டு முழுவதிலுமே மிக முக்கியமான மாறுதல் ஒன்றேயொன்று தான் ஏற்பட்டதெனலாம். அது 1867-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஓட்டுரிமை விஸ்தரிப்புச் சட்டமாகும். ஆனல், 20-ஆம் நூற்ருண்டில் பல மாறுதல்கள் குறிப்பாக 1911-ஆம் ஆண்டிலும், 1947-ஆம் ஆண்டிலும், 1949-ஆம் ஆண்டிலும் ஏற்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் சற்றேறக்குறைய இம்மாதிரியே மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 1804 முதல் கிட்டத்தட்ட ஒரு நூற்ருண்டுக்கு அதிகமான காலத்தில் மூன்று அரசியமைப்புத் திருத்தச் சட்டங்களே செய்யப்பட்டன. ஆனல், எட்டு ஆண்டுகளில்-அதாவது, 1913 முதல் 1920 வரையில்—மடமடவென நான்கு மாற்றங்கள் ஏற்பட்டமை, ஏதோ ஒரு மாயாஜால வித்தை போன்று தோன்றுகிறதன்ருே ! மேற்குறிப்பிட்ட சான்றுகளிலிருந்து அமெரிக்க அரசியலமைப்பு எழுதப்பட்ட நெகிழா வகையைச் சேர்ந்ததென்ருலும், எளிதில் மாற்ற முடியாத வகையைச் சேர்ந்த தென்று சொல்லிவிட முடியாது. அரசியலமைப்பில் மாற்றுவதற்கெனக் கூறப்பட்டிருக்கும் தனி முறை, மாற்றங்கள் ஏற்படுத்தத் தடையாய் இருக்கிறதென்றும் கொள்ள முடியாது. ஒன்றின் நெகிழும் தன்மையும் மற்ருென்றின் நெகிழாத் தன்மையும் மாற்றுவதற்கெனக் கூறப்பட்டிருக்கும் முறையோடுகூட மற்றக் காரணங்களேயும் பொறுத்திருக்கின்றன எனலாம்.

**நீதிப்புனராய்வு** (Jndicial Review): அதிகாரப் பிரிவினே வரம்புக்குட்பட்ட அரசாங்கம் என்னும் கோட்பாடுகளேப் போன்று நீதிப் புனராய்வு என்ற கோட்பாடும் மக்களாட்சி அரசாங்கத்திற்கொரு மேற்காப்பாய் விளங்குகிறது. இக்கோட்பாட்டின்படி, நீதி மன்றங்கள் சட்ட மன்றங்கள் செய்யும் சட்டங்கள், நிர்வாகத் துறையினர் பிறப்பிக்கும் ஆட்சித் துறை உத்தரவுகள் ஆகியவற்றை, அரசியலமைப்பை ஆதாரமாகக் கொண்டு, அவை அரசியலமைப்பில் காணப்படும் விதிகளுக்கும் நோக்கத்திற்கும் புறம்பானவையாய் இருக்கின்றன என்று கருதினல், அவற்றைச் செல்லத்தக்கன அல்ல என்று கூறலாம். இந்த நீதிப் புனராய்வதிகாரம், நீதி மன்றங்களுக்கு, மக்கள் அடிப்படை உரிமைகளேப் பாதுகாக்கும் பொறுப்பையளிப்பது மாத்திரமல்லாமல், அரசாங்கத்தையும் அதனெல்லேக்குள் இயங்குமாறு செய்யும் அதிகாரத்தையும் கொடுக்கிறது.

# அத்தியாயம்—4

**அரசியலமைப்பை மாற்றும் முறை** (The Process of Amending the Constitution) :

அரசியலமைப்பை மாற்றும் முறை பற்றி அரசியலமைப்பின் ஐந்தாவது விதி கூறுகிறது. அதன்படி இரு முறைகள் மாற்றங்கள் பிரேரிக்கவும், இருமுறைகள் ஆமோதிக்கவும் இருக்கின்றன. முதல் முறைப்படி, சட்ட மன்றம் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை ஓட்டுகளால் மாற்றம் கொணர்ந்து அதை ஆமோதிக்கலாம். அதன் பின் அந்த மாற்றம் நான்கில் மூன்று பங்கு ராஜ்யங்களின் சட்டசபைகளினுலோ, அல்லது நான்கில் மூன்று பங்கு ராஜ்யங்களின் மாநாடு (Convention)களினுலோ ஆமோதிக்கப்பட வேண்டும். இரண்டாவது முறை மூன்றிலிரண்டு பகுதி ராஜ்யச் சட்ட சபைகள் ஒரு மாற்றம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டால் மத்திய சட்டமன்றம் அரசியலமைப்பு மாநாடொன்றைக் கூட்டும். அந்த மாநாடும் அதை ஒப்புக்கொண்டால், அந்த மாற்றம் மூன்றிலிரு பகுதி ராஜ்யச் சட்டசபைகளினுலோ, அல்லது நான்கில் மூன்று பகுதி ராஜ்யங்களின் மாநாடுகளினுலோ ஆமோதிக்கப்படவேண்டும்.

இதிலிருந்து அரசியலமைப்பை மாற்ற இரண்டு முறைகள் உள்ளன என்பது தெளிவாகிறது. ஆனுல், பொதுவாக ஒரேயொரு முறையைத்தான் அமெரிக்கா பின் பற்றுகிறது. அதாவது, மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் மாற்றம் சட்டமன்றத்தால் (Congress) பிரேரேபிக்கப்படும். அதை மூன்றிலிரு பகுதி ராஜ்யச் சட்டசபைகள் ஆமோதிக்கும்.

இந்த முறையில் சில முக்கிய விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும். முதலில் அரசியலமைப்பு விதி சட்டமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாலும் அந்த மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை சட்டமன்றத்திலுள்ள மொத்தமுள்ள உறுப்பினர்களின் தொகையிலா, அல்லது கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கும் அங்கத்தினர்களின் மொத்தத்

தொகையிலா என்பது ஐயமறக் கூறப்படவில்லை. ஆனுல், இப்போது நடைமுறையிலுள்ளது, கூட்டத்திற் கலந்துகொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களின் மொத்தத் தொகையில் மூன்றிலிரண்டு பங்கு என்ற அடிப்படையிலேதான். இரண்டாவதாக, சட்டமன்றம் இயற்றும் அரசியலமைப்பு மாற்ற மசோதா ஜனுதிபதியின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமா என்பதும் அரசியலமைப்பில் கூறப்படவில்லை. ஆனுல், தலைமை நீதி மன்றம், மாற்ற மசோதா ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுமுன் ஜனுதிபதியாலும், அது ஆமோதிக்கப்பட்ட பின் சம்பந்தப்பட்ட ராஜ்யத் தலைவர் (Governors) களாலும் கையொப்பம் இடப்பட வேண்டுமென்ற அவசியமில்லை என்று கூறியிருக்கிறது. மூன்ருவதாக, ஒருமுறை ஒப்புக்கொள்ளப்பட்ட மாற்றமொன்றைப் பிறகு ஒப்புக்கொள்ள முடியாது என்று முன் செய்த தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள ராஜ்யங்களுக்கு உரிமையுண்டா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனுல், சட்டமன்றம் (Congress) அம்மாதிரி பிறகு மறுக்கும் உரிமை ராஜ்யங்களுக்கு இல்லை என்று கூறுகிறது. முதலில் மாற்ற மசோதாவை ஒப்புக்கொள்ள மறுத்த எந்த ராஜ்யமும் பிறகு அதை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கலாம். நான்காவதாக, மாற்றங்களை ஆமோதிக்கக் குறிப்பிட்ட ஒரு கால வரையறை அரசியலமைப்பில் காணப்படாவிட்டாலும், மத்திய சட்டமன்றம், மாற்றங்கள் ஏழாண்டு காலத்திற்குள் ஒப்புக்கொள்ளப்படவேண்டுமெனக் கூறுகிறது. கடைசியாக, பிரேரேபிக்கப்பட்ட ஒரு மாற்றத்தை ராஜ்யங்கள் மக்களின் கருத்தறியச் சமர்ப்பிக்கலாமா என்பதும் தெரியவில்லை.

**திருத்த முறை பற்றி ஆய்வு** (Criticism of the Amending Process) :

அரசியல் அமைப்பை மாற்றுவதற்குக் கூறப்பட்டுள்ள முறை மூக்கை நேராகப் பிடிப்பதற்குப் பதிலாக, தலையைச் சுற்றிப் பிடிப்பதாக அமைந்துள்ளது. இதனுல், 1791-ஆம் ஆண்டிலேயே ஏற்பட்ட பத்து மாற்றங்களைச் சேர்க்காமல் பன்னிரண்டு மாற்றங்களே இதுகாறும் சாத்தியமாகியிருக்கின்றன. அப்படிச் செய்யப்பட்ட மாற்றங்களும் அதிதீவிர மாறுதல்களைச் செய்துவிடவுமில்லை. இந்த முறையால் ஏற்படும் இக்கட்டுகளை அகற்ற மத்திய சட்டமன்றத்தில் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்படும் மாற்றங்கள் மூன்றிலிரண்டு பங்கு ராஜ்யங்களின் ஆமோதிப்புப் பெற்ருல் போதுமென்று செய்யப்பட்டு வரும் இயக்கம் இன்னும் போதுமான ஆதரவைப் பெறவில்லை. அடுத்தபடியாக மாற்றத்தை ஆமோதிக்க மக்கள் தொகை அடிப்படைக்குப் பதில் ராஜ்ய அடிப்படை கொள்ளப்பட்டிருப்பதால், எவையேனும் பதின்மூன்று ராஜ்யங்கள்—அவை மக்கள் தொகையிலும் அள

விலும் சிறியனவாய் இருந்தாலும்—ஒரு மாற்றம் ஏற்படாமலே முடிவைச் செய்துவிடலாம். இது பெரும்பான்மையினரின் சிறு பான்மையோர் ‘மறுப்பாணை’ (Veto) செய்வது போலிருக்கிறது. இது மக்களாட்சி முறைக்கு மாறுனதென்பது சிலருடைய வாதம். கடைசியாக, சட்டமன்றம் (Congress) குறிப்பிட்டாலல்லது எந்த மாற்றமும் காலவரையறையின்றி அமுலாவதை ராஜ்யங்கள் தள்ளி வைக்கலாம். இதனுல், எதற்காக மாற்றம் கொண்டுவரப் பட்டதோ, அந்த அவசியம் இல்லாமலும் போய்விடலாம். உதாரணமாக, மத்திய சட்டமன்றத்தால் 1924ல் ஆமோதிக்கப்படவேண்டிய காலவரையறை எதுவும் குறிப்பிடாமல் நிறைவேற்றப்பட்ட ‘சிறுவர் வேலை நேரம்’ பற்றிய மாற்றம், 1950-ஆம் ஆண்டு வரை இருபத்தெட்டு ராஜ்யங்களின் சம்மதத்தையே பெற முடிந்தது. முதலில் சேர்க்கப்பட்ட பத்து மாற்றங்கள் 1939லேதான் **கனெக்டிகட்டு, ஜார்ஜியா, மசாசுசெட்சு** ராஜ்யங்களால் ஆமோதிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

# அத்தியாயம்—5

## அரசியலமைப்பு வளர்ந்த வரலாறு

(Customs, Usages, Judicial interpretations etc.)

அமெரிக்க அரசியலமைப்பு, எழுதப்பட்ட அரசியலமைப்பு களுள் மிகச் சிறியதென்பதை இதற்குமுன் குறிப்பிட்டிருந்தோம். ஆரம்பத்தில் அது எட்டு விதிகளையும், உரிமைகள் மசோதா என்று கூறப்படும் பத்து மாற்றங்களையும் உடையதாய் இருந்தது; இன்றோ, மேலும் பன்னிரண்டு மாற்றங்கள் அதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவையல்லாமல், நடைமுறைகளாலும், வழக்குகளாலும் (Usages) நீதி மன்றங்களின் விளக்கங்களாலும், தீர்ப்புகளாலும் இவ்வரசிய லமைப்பு மேலும் வளர்ந்திருக்கிறது. இதன் காரணம், எந்த ஓர் அரசியலமைப்பும் எல்லா அமிசங்களையும்—ஒவ்வொரு சிறு விஷயத் தையும் பற்றி—எடுத்துக் கூறுவதாயிருக்க முடியாது என்பதே. அல்லா மலும், அரசியலமைப்பு, காலத்திற்கும் அவசியத்திற்கும் ஏற்றவாறு மாறுதல்களை ஏற்க வல்லதாய் இருந்தால்தான் அழியாமல் இருக்கும். அமெரிக்க அரசியலமைப்பு மிகச் சிறியதாய்ப் பரந்த அடிப்படைகளை மட்டுமே கொண்டதாய் இருந்ததால், பின்னர் அதைச் சந்தர்ப்பத் திற்கும் தேவைக்குந்தக விளக்கம் செய்துகொள்ள முடிந்தது. சுருங்கக் கூறின், அமெரிக்க அரசியலமைப்பு, **பிலடெல்பியாவில்** அமெரிக்க ராஜதந்திரிகள் பெற்றெடுத்த கைக்குழந்தையாகவே இல்லாமல், சட்டங்கள், நீதி மன்றத்தின் தீர்ப்புகள், நிருவாகத் துறை உத்தரவுகள் என்ற உணவால் உரம் பெற்று வளர்ந்து, வழக்கு, நடைமுறையெனப்படும் ஆடையணிகளால் அலங்கரிக்கப் பட்ட பருவ மங்கையென விளங்குகிறதெனலாம். இவ்வாறு அது வளர்ந்த வரலாற்றைச் சுருக்கமாக இங்குக் காண்போம்:

**சட்டங்களும் அரசியலமைப்பின் வளர்ச்சியும்:** அரசியலமைப்பு நீதித் துறையைப் பற்றிக் குறிப்பிடும்போது "நீதித்துறை, தலைமை

நீதி மன்றத்திடமும், சட்டமன்றத்தின் சட்டங்களால் ஏற்படும் மற்றக் கீழ் நீதி மன்றங்களிடமும் இருக்கும்,'' என்றே கூறு கிறது. 1789ல் சட்டமன்றமியற்றிய சட்டப்படிதான் நீதித்துறை அமைப்பும் அதன் வேலை முறைகளுமிருக்கின்றன. அவ்வாறேதான் தலைமை நீதி மன்றத்திலிருக்கவேண்டிய நீதிபதிகளின் எண்ணிக்கை, ஊதியம், தலைமை நீதி மன்றத்தின் அமைப்பு ஆகிய இதர வேலை களும் நிர்ணயிக்கப்பட்டன. இச்சட்டம் பல சமயங்களில் மாற்றப் பட்டிருக்கிறது. நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டோ, அல்லது குறைக்கப்பட்டோ இருக்கிறது. இதைப் போலவே ஜனாதிபதி வாரிசு முறைச் சட்டமும் (The Presidential Succession Act) தலைவர் பதவி காலியானால் உதவித் தலைவர் அப்பதவியையும், உதவித் தலைவர் பதவி காலியானால் அப்பதவியை வகிக்க வேண்டிய வர் யார் என்பதையும் தீர்மானிப்பது சட்டமன்றத்தின் சட்டமே. மக்கள் பிரதிநிதிகள் மன்ற உறுப்பினர்கள் ஒற்றை-உறுப்பினர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவதும், சட்டமன்றத்தின் சட்டங் களாலேதான். சட்டமன்றத்தின் அதிகாரங்களைப் பற்றி அரசிய லமைப்பு எடுத்துக் கூறினாலும், அதன் பணியை நிறைவேற்றத் தேவைப்படும் சட்டங்களை இயற்றவும் அதிகாரம் கொடுத்திருக்கிறது. இம்முறையில் சட்டமன்றமியற்றும் பல சட்டங்கள் அரசியலமைப் புச் சட்டத்தைப் போலவே வலிமையுடையனவாகும்.

**செயற்குழுவும் அரசியலமைப்பும்:** அரசியலமைப்பில் காணப் படாவிட்டாலும், செயற்குழுவினர்—குறிப்பாக அமெரிக்க நாட்டு ஜனாதிபதிகள்—சில அதிகாரங்களை மேற்கொண்டு, அரசியல் அமைப்பை வளர்த்திருக்கின்றனர். சான்றாக, மற்ற நாடுகளுடன் போர்ப் பிரகடனம் செய்யும் உரிமை சட்டமன்றத்திற்கேயுண்டு. ஆனால், தலைவர் சிலர்—சிறப்பாக **வில்சனும் ரூஸ்வெல்ட்டும்**— தலைவர்க்குரிய அதிகாரங்களைக் கொண்டே பல முக்கியப் பிரதே சங்களுக்குப் போர்ப்படைகளை அனுப்பவும், போர் அவசியமானது மான நிலைமையைச் சிருஷ்டித்துள்ளனர். மேலும், அரசியலமைப்பு அமைச்சவை பற்றி வெளிப்படையாகக் கூறாமலிருக்கும் போது, ஒன்றைத் தோற்றுவித்து, அதைக் கலந்தாலோசிக்கும் வழக்கத்தை முதலில் கடைப்பிடித்தவர் ஜனாதிபதி **வாஷிங்குடன்** என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் அது வளர்ந்து, இன்று அரசாங்கத்தின் இன்றியமையாத ஒரு நிறுவனமாய் விளங்குகிறது. அங்ஙனமே, ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், செனட்டுச் சபையால் ஆமோதிக்கப்பட வேண்டியிருந்ததால், அவற்றிற்குப் பதிலாக, 'செயற்குழுச் சம்மத' (Executive agreements) ஏற்பாடுகளைச் செய்துகொண்டனர். இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத் தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டு எண்ணற்ற அதிகாரங்களை, 'தானைத் தலைவர்' என்ற முறையில் செலுத்தினார். இவ்வாறு தலைவர்களுள்

நிருவாகத்திற்குப் பொறுப்பானவர் என்ற முறையில் செய்த; செய்து வருகின்ற சில காரியங்கள், அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றன என்று கூறுவது மிகையாகாது.

**விளக்கங்கள் அரசியலமைப்பை வளர்த்த விந்தை :** அமெரிக்க நாட்டுத் தலைமை நீதிபதி ஹ்யூஸ், 'நாம் அரசியலமைப்பின்கீழ் இருக்கிறோம். ஆனால், அந்த அரசியலமைப்போ, நீதிபதிகள் எப்படி இருக்கிறதென்று சொல்லுகிறார்களோ அப்படித்தானிருக்கிறது,' என்றொரு சமயம் கூறினார். நீதிபதிகளின் விளக்கத்தையும் அவர்கள்கூறும் பொருளையுமொத்து அரசியலமைப்பின் எல்லாப் பிரிவுகளும் இன்று அந்நாட்டில் பெருமாறுதல்களை அடைந்திருக்கின்றன. நீதி மன்றங்கள் கூறும் தீர்ப்பே முடிவானது. அதையொட்டியே மற்றத்துறைகள் செயலாற்றுகின்றன. உதாரணமாக, 'சட்ட மன்றத்திற்கு வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் உண்டு,' என்று அரசியலமைப்புக் கூறுகிறது. 'வர்த்தகம் என்ற சொல்லின் பொருளென்ன ? அதில் என்னென்ன அடங்கியிருக்கின்றன ?' என்பது கூறப்படாததால், தலைமை நீதி மன்றம், அவை சம்பந்தமாகக் கூறுபவைகளைத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது. தலைமை நீதி மன்றமோ எனில், புதுப்புது நிலைமைகளைச் சமாளிக்கத்தக்கவாறு, புதுப்புது அர்த்தங்களைக் கூறியிருக்கிறது. எனவே, சட்ட மன்றமியற்றும் சட்டங்களைத் தலைமை நீதிமன்றம் ஆமோதித்துவிட்டால், மற்றவர்கள் கருத்துப்படி அவை அரசியலமைப்பிற்கு விரோதமானவையாய் இருந்தாலும், செல்லத்தக்கனவேயாகும். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டுவதென்னவென்றால், "தலைமை நீதி மன்றம் அளித்த தீர்ப்பு அதற்குத் தோன்றியவாறெல்லாம் எப்போது வேண்டுமானாலும் அதனாலேயே மாற்றப்படலாம். ஒரே மாதிரியான இரு வழக்குகளில் வெவ்வேறு மாதிரியான தீர்ப்புச் செய்யத் தலைமை நீதிமன்றத்திற்கு உரிமையிருக்கிறது. கடைசியாக அது கூறிய தீர்ப்பே முடிவானது. இம்முறையிலும் அரசியலமைப்புப் பல மாறுதல்களைப் பெறுகிறது," என்பதே.

**வழக்காற்றால் வளர்ந்தவாறு :** பழக்கவழக்கங்கள் எவ்வாறு மக்களின் அன்றாடச் சமூக வாழ்க்கையில் இடம் பெற்று எளிதில் மாற்ற முடியாதபடி நிலைத்துவிடுகின்றனவோ, அவ்வாறே நாட்டின் இயக்கத்திலும் அரசியல் துறையில் பல்வேறு பழக்க வழக்கங்கள் புகுந்து எளிதில் மாற்ற முடியாதனவாகிவிடுகின்றன. இப்பழக்க வழக்கங்களுக்கு ஆதாரம் சக சட்டங்களிலோ அல்லது நீதி மன்றங்களின் தீர்ப்புகளிலோ இல்லை. ஆனால், அவற்றை எளிதில் புறக்கணிக்க முடியாது. இவை நெகிழா முறை அரசியலமைப்புகளைச் சமன் செய்வன போல அமைந்து, அரசாங்கமும் மக்களும் இயல்பாகச்செயலாற்ற உதவுகின்றன. அரசியற்கட்சிகளைப் பற்றி அரசியலமைப்பில் இம்மியளவும் கூறப்படவில்லை. ஆனால், அவைகளின்றி மத்திய அல்லது மாகாண அரசாங்கங்கள் சரிவரச்

செயலாற்ற முடியுமா என்பது சந்தேகமே. அரசியற்கட்சிகளே செயற்குழுவும் சட்ட மன்றமும் ஒன்று மற்றொன்றிற்குப் போட்டி நிறுவனமாக இல்லாமல் இணைந்து ஒற்றுமையுடன் பணியாற்ற உதவி புரிகின்றன. அத்தகையனவே, சட்டக்குழுக்களும் (Legislative Committees). இவை பற்றி அரசியலமைப்பில் ஏதும் காணப்படா விட்டாலும், பழக்கம் காரணமாக இவை நிலை பெற்றுவிட்டன. மேலும், அமைச்சவை, பிரதிநிதிகளின் குடியிருப்புத் தகுதி, தலைவர் பதவிக்கு அபேட்சகர்கள் நியமிக்கும் அரசியற்கட்சிகளின் மாநாடு கள் முதலியனவுமாகும். இவையல்லாமல் அரசியலமைப்பு மாற்றங் களும், அரசியலமைப்பை வளர்த்திருக்கின்றன.

# அத்தியாயம்—6

## அதிகாரப் பங்கீடு

(Scheme of distribution of powers)

அமெரிக்க அரசியலமைப்பு, மத்திய-ராஜ்ய அரசாங்கங்கள் செலுத்தக்கூடிய அதிகாரத்தை நான்கு பிரிவுகளில் பங்கீடு செய்கிறது. அவைகளாவன :

1. மத்திய அரசாங்கத்திற்கெனக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள்.

2. மத்திய அரசாங்கம் அதிகாரம் செலுத்த முடியாதவாறு தடுக்கப்பட்ட சில துறைகள்.

3. ராஜ்ய அரசாங்கங்கள் அதிகாரஞ் செலுத்த முடியாதபடி தடுக்கப்பட்ட துறைகள்.

4. மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டனவும் ராஜ்ய அரசாங்கங்கள் செலுத்தமுடியாதபடி தடுக்கப்பட்டனவுமான அதிகாரங்கள் போக, எஞ்சியவை-ராஜ்யங்களாலோ அல்லது மக்களாலோ செலுத்தப்படக்கூடிய அதிகாரங்கள்.

இனி, "இவ்வதிகாரங்கள் என்னென்ன? இவை எவ்வாறு செலுத்தப்படுகின்றன?" என்பவற்றைப் பார்ப்போம்.

முதற்பிரிவின்படி, சில அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டோம். இங்கு, மத்திய அரசாங்கத்திற்கேயுரிய சுய அதிகாரமெதுவும் இல்லை. அது பெற்றிருக்கும் அதிகாரங்கள் ராஜ்யங்களால் கொடுக்கப்பட்டவைகளாகும். அதனுல், அவைகளில் மட்டுமே சட்டம் செய்ய மத்திய சட்டமன்றத்திற்கு உரிமையுண்டு. இதன் காரணமென்னவென்முல், ராஜ்யங்களே ஆரம்ப முதல் இயங்கிவருபவை. அவற்றின் கருவிதான் மத்திய அரசாங்கம்.

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள், போர்ப் பிரகடனம் செய்தல், இராணுவம் அமைத்தல், நாணயங்கள் அடித்தல், வெளி நாட்டுடன் நடக்கும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தல் என்பவைகளா

கும். இவைகளில் மத்திய சட்டமன்றம் ஏகபோகமாகச் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருக்கிறது.

இரண்டாவதாக, (அ) ராஜ்யங்களிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களின்மீது வரி விதித்தல், (ஆ) வர்த்தக அதிகாரத்தின் ஆதாரத்தில் தான் விரும்பும் ராஜ்யங்களுக்கு மத்திய அரசாங்கம் பிரத்தியேகமான சலுகைகள் காட்டுதல் போன்றவை மத்திய அரசாங்கம் அதிகாரஞ் செலுத்தமுடியாதபடி தடுக்கப்பட்ட துறைகளாகும்.

மூன்றாவதாக, யூனியன் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படாத அதிகாரங்கள் ராஜ்யங்களால் செலுத்தப்படலாமென்றாலும், குறிப்பிட்ட சில துறைகளில் அவற்றுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. உதாரணமாக, (அ) நாணயம் அடித்தல், நாணயச் செலாவணி, (ஆ) வரி விதித்தல், அதாவது, தன் நிருவாகச் செலவுக்குத் தேவையான அளவிற்குமேல் துறைமுகங்கள் மூலமாகவோ மற்ற வழிகள் மூலமாகவோ ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள்மீது வரிவிதித்தல், (இ) அயல் நாடுகளுடன் அரசியல் உடன்படிக்கைகள் செய்துகொள்ளல், ஒருராஜ்யம் மற்றொரு ராஜ்யத்துடன் கூட்டாட்சிக்கு விரோதமாகக் கூட்டுச் சேருதல், மத்திய சட்டமன்றத்தின் அனுமதியில்லாமல் இதர உடன்படிக்கை, ஒப்பந்தம் (அவை அரசியல் சம்பந்தப்பட்டன அல்லவென்றாலும்) பிற நாடுகளோடு செய்துகொள்ளுதல் ஆகியவற்றில் அதிகாரம் இல்லை.

கடைசியாக, ராஜ்யங்களின் அதிகாரங்கள், மத்திய அரசாங்க விஷயத்தில் செய்தது போல, இன்னின்னவை என்று எடுத்துரைக்கப்படவில்லை. அரசியலமைப்பால், அவற்றுக்குத் தடுக்கப்படாமலும் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படாமலும் இருக்கும் எஞ்சிய அதிகாரங்களில் ராஜ்யங்கள் சட்டம் செய்யலாம். அவற்றைத் தங்களது ஆட்சித்துறை உத்தரவுகள், நீதிமன்றங்கள் மூலமாக அமுலாக்கலாம். இதற்கொன்றும் தடை இல்லை.

இவற்றைத் தவிர, இதர நாடுகளிலுள்ளது போல, அமெரிக்க அரசியலமைப்பில் மத்திய அரசாங்கத்திற்கும் ராஜ்ய அரசாங்கத்திற்கும், சட்டஞ்செய்யும் விஷயத்தில் பொதுத் துறை ஒன்றும் இல்லை. (There is no concurrent legislative list in the American Constitution) அசியலமைப்பின் பதினெட்டாவது மாற்றம் இது உண்டென்று கூறியதானாலும், தலைமை நீதி மன்றம், ராஜ்ய அரசாங்கங்கள், மத்திய அரசாங்கத்தின் சட்டமில்லாதவரையிலும், அப்படிச் சட்டங்களை அது இயற்றியிருக்குமானால் அச்சட்டங்களைப் பாதிக்காமல் இருக்கும் வகையிலும், சட்டங்களியற்றலாம் என்று கூறியுள்ளது.

அரசியலமைப்பின் முதலாம் விதி எட்டாம் பிரிவின்படி மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் தொகுத்துக் கூறப்பட்டிருந்தாலும், " அவற்றில் சில அதிகாரங்கள் பொது அதிகாரத்தில் அடங்

கும்,'' என்பது நீதிமன்றம் கூறிய விளக்கங்களிலிருந்து அறியப்படு கிறது. மத்திய சட்ட மன்றத்திற்கே உரியவை என்று தெளிவாகக் கூறப்பட்டவை போக எஞ்சியவை எல்லாம், 'பொது அதிகாரத் துறையைச் சேர்ந்தவை' என்பதே அது. நாட்டில் ஒருமைப்பாடு நிலவுவதற்காகக் கூட்டாட்சி அரசாங்கம் சட்டமியற்றலாம் என்று கூறப்பட்ட துறைகள் அதற்கே உரியவை. மற்றவற்றில் ராஜ்யங் களும் சட்டமியற்றலாமாளுலும், மத்திய சட்டமன்றம் இயற்றுஞ் சட்டங்களை மீறுவதாக அவை இருக்க முடியாது. இதனால், 'பொது அதிகாரம்' ராஜ்யங்களுக்கு இருக்கின்றன என்று சொல்வதைவிட, மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்ட (அல்லது கீழ்) அதிகாரமிருக்கிறதென்று கொள்வதே பொருத்தமாகும். இந்த விளக்கத்தின் அடிப்படையில் சட்டஞ்செய்யக்கூடிய துறைகள், (அ) உணவு, மருந்துப் பொருள்களை ஒழுங்குபடுத்தல், (ஆ) மின்சார ஆவி சத்திகளை ஒழுங்குபடுத்தல், (இ) பொதுநல இன்ஷியூரன்ஸ், (ஈ) காப்பிரைட்டு, பேட்டன்டுகள், (உ) ஜனகணிதப் புள்ளிவிவரங் கள், (ஊ) எடைகளும் அளவுகளும், (எ) பொதுமக்கள் நன்மைக் காக இருக்கும் நிறுவனங்கள் என்பன.

கடைசியாக இவ்வதிகாரப் பங்கீட்டு முறையைப் பற்றி நாம் கவனிக்க வேண்டுவதென்னவென்றால், ராஜ்ய அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் பொதுமக்களின் நன்மைக்காகவே இருக்கின் றன. இவர்களின் நன்மையை உத்தேசித்துத்தான் மத்திய ராஜ் யங்களுக்கிடையே அதிகாரப் பிரிவு செய்யப்பட்டிருக்கிறது. கூட் டாட்சி முறை அரசாங்க அமைப்பில் மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களின் பிரதிநிதியாக, பொதுவான உள் நாட்டு வேலை களைக் கவனித்து வருவதுடன், வெளி நாட்டு அலுவல்களையும் கவ னித்து வருகிறது. மத்திய அரசாங்கம் போட்டி அரசாங்கமன்று. அதனால் ராஜ்யங்கள் சில துறைகளில் பணிந்து, விட்டுக்கொடுக்க வேண்டுவதாகத்தான் இருக்கிறது. அங்ஙனமே, மத்திய அரசாங்க மும் ராஜ்யங்களின் வளர்ச்சியையும் ஒற்றுமையையும் கருதிப் பார பட்சம் காட்டாமல் நடந்துகொள்ளவேண்டியிருக்கிறது. இந்த உண்மைகள் மீறப்படாமல் இருக்கவே சில அதிகாரங்கள் கொடுக் கப்பட்டும், சில கொடுக்கப்படாமலும் இருப்பதோடு அரசியலமைப் பிலும் அவை எழுதப்பட்டுள்ளன.

# அத்தியாயம்—7

# ஜனாதிபதி

## (President)

அதிகாரப் பிரிவினையைப் பற்றி எழுதும்போது நிருவாகத் துறை ஜனாதிபதியின் அதிகார வரம்பில் இருக்கும் என்று அரசியலமைப்புக் கூறுவதாகக் கண்டோம். இதனால், ஜனாதிபதியே நாட்டின் பொது நிருவாகத்திற்குப் பொறுப்பாளர் என்பதும், இந்த அதிகாரம் வேறு துறைகளால் செலுத்த முடியாததென்பதும் புலனாகும். இவ்வத்தியா யத்தில் ஜனாதிபதியாவதற்கு ஒருவருக்கு இருக்கவேண்டிய தகுதிகள், அவர் தெரிந்தெடுக்கப்படும் முறை, அவருக்குரிய அதிகாரங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பார்ப்போம்:

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுபவர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளை அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது. அதன்படி அவர் அமெரிக்காவிலேயே பிறந்து குடியுரிமை பெற்றிருக்க வேண டும்; முப்பத்தைந்து வயது முற்றுப்பெற்றிருக்கவேண்டும்; குறைந்தது பதினான்கு ஆண்டு வரை அமெரிக்காவிலிருந்திருக்க வேண்டும். ஆனால், தேர்தலுக்கு முன்பாகவும் தொடர்ச்சியாகவும் பதினான்கு ஆண்டுகள் இருந்திருக்கவேண்டுமா என்பது மட்டும் இன்னும் திட்ட வட்டமாகக் கூற இயலவில்லை.

ஜனாதிபதியின் சம்பளம் சட்டமன்றத்தால் (Congress) நிர்ண யிக்கப்படுகிறது. இப்போது அமெரிக்க ஜனாதிபதியின் ஆண்டுச் சம்பளம் 15,000 டாலர்களாகும். இதைத்தவிர, பிரயாணப்படி, அரசாங்கச் சார்பில் நடத்தப்படும் விருந்துகளினால் உண்டாகும் செலவு, ஜனாதிபதியின் அதிகாரபூர்வமான **'வெள்ளை மாளிகை'** (White House) நிருவாகச் செலவு முதலியவைகளும் ஆண்டுதோறும் சட்டமன்றம் தன் வரவு செலவு மசோதாவில் சேர்த்து நிறைவேற்று கிறது. ஜனாதிபதியின் ஊதியத்தைத் தன் விருப்பம்போலச் சட்ட மன்றம் புதுச்சட்டமொன்றின் மூலம் மாற்றலாம். அவ்வாறு செய் யப்படும் மாறுதல் அப்போது பதவியிலிருப்பவரின் பதவிக்

காலம் முடியு முன்னரே அமுலாக்க முடியாது. அடுத்த பதவிக் காலத்திலிருந்துதான் அதைச் செயற்படுத்தவியலும். மற்றப்படி ஜனாதிபதியைக் கைது செய்யவோ, நீதி மன்றங்களில் அவர் மேல் வழக்குத் தொடரவோ முடியாது. ஜனாதிபதி அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடு பட்டால் இராஜத் துரோகக் குற்றம் (Impeachment) சாட்டப்பட லாம்; குற்றம் நிரூபிக்கப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படலாம்; பின்னர்க்கைது செய்து வழக்குத் தொடர்ந்து தண்டனை விதிக்கலாம்.

பதவிக் காலம் முடியு முன்பே ஜனாதிபதி பதவி காலியானால், உதவி ஜனாதிபதியே ஜனாதிபதியாவார். இரண்டு பதவிகளுமே காலி யானால், அப்பதவிகளை யார் வகிக்க வேண்டுமென்பதைச் சட்ட மன்றம் தீர்மானிக்கும். சட்டமன்றம் 1886-ஆம் ஆண்டு நிறை வேற்றிய ஒரு சட்டப்படி வெளிவிவகாரம், போர், நீதி, தபால்துறை, கடற்படைத் துறை, உள் நாட்டுப் பதவிகளை வகிக்கும் மந்திரிகள் முறையே ஜனாதிபதி, உதவி ஜனாதிபதியின் பொறுப்புகளை வகிப்பார் கள். ஆனால், இம்முறையில் அரசியலமைப்பு இருபதாவது மாற்றச் சட்டப்படி சில மாறுதல்கள் செய்யப்பட்டன. அதன்படி ஒரு பதவிக் காலத்தின் ஆரம்பத்தில் எக்காரணம் பற்றியாயினும் ஜனாதிபதி பதவி பூர்த்திசெய்யப்படாவிட்டால், புதியவர் ஒருவர் தேர்ந்தெடுக் கப்படும் வரை உதவி ஜனாதிபதியே அப்பதவியை வகிப்பார். இரு பதவிகளுமே, அவற்றுக்கெனத் தீர்மானிக்கப்பட்ட முறைகளின்படி பூர்த்தியாகாமல் இருந்தால், அப்பதவிகளைப் புதியவர் இருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை யார் வகிக்கவேண்டுமென்பதைச் சட்ட மன்றம் தீர்மானிக்கும். 1947-ஆம் ஆண்டுச் சட்டமன்றச் சட்டப்படி இவ்விரு பதவிகளையும் சட்டமன்றத்தின் கீழ்ச்சபைத் தலைவரும், மேற்சபைத் தலைவரும் தாற்காலிகமாக வகிக்கலாம்.

ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒருவர் நான்கு ஆண்டு கள் பதவியிலிருக்கலாம். ஒருவர் இரு முறைகளே ஜனாதிபதியாய் இருக்க முடியும். இவ்வழக்கு முதன்முதலில் ஜனாதிபதியாய் இருந்த **ஜார்ஜ் வாஷிங்குடன்** என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், ஜனாதிபதி **பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டு** நான்கு முறை ஜனாதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இம்மாதிரி எதிர்காலத்தில் ஏற்ப டாமல் இருக்க 1951-ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி எவரும் இரு முறைக்கு மேல் எக்கார ணத்தாலும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. இதில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டுவதென்னவென்றால், ஜனாதிபதி பதவி காலியானதால் உதவி ஜனாதிபதி அப்பதவியை ஏற்றிருந்து அந்தச் சொச்சக் காலம் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாய் இல்லா திருக்குமானால், அவரும் மூன்றாவது முறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்பது. ஆனால், இந்த மாற்றம்,

தலைவராய் இருந்த ரூஸ்வெல்ட்டு இறந்ததால், ஜனாதிபதியான திரு. ட்ரூமனைக் கட்டுப்படுத்தாது என்பதும் தெளிவாக்கப்பட்டது. ஆனால், திரு. ட்ரூமன் மூன்றாவது முறை தேர்தலுக்கு நிற்கவில்லை என்பது இங்கு அறியத்தக்கது.

**தேர்தல் முறை:** அரசியலமைப்பின்படி ஜனாதிபதி மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதாவது, ஒவ்வோர் அங்க நாடும் தான் சட்டமன்றத்தில் (Congress) எத்தனை அங்கத்தினர்களைப்பெற்றிருக்கிறதோ, அதற்குச் சமமான எண்ணிக்கைப் பிரதிநிதிகளை ஜனாதிபதி தேர்தல் மன்றத்திற்கு (Electroral College) தேர்ந்தெடுக்கும். அம்மன்ற உறுப்பினர்கள் பின்பு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பார்கள். இது அரசியலமைப்புக் கூறும்முறை. ஆனால், ஜனாதிபதி இப்போது ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்று சொல்லுமளவுக்கு வளர்ந்துவிட்டது. இதற்குக் காரணம், தேர்தல் மன்றம் கூடி ஜனாதிபதியையும் உதவி ஜனாதிபதியையும் தேர்ந்தெடுப்பதற்கு முன்னமே யார் யார் அப்பதவிகளுக்கு வருவார்கள் என்பது திட்டவட்டவாகக் கூறமுடிகிறது. இது எவ்வாறெனில், அரசியற்கட்சிகள் ஜனாதிபதி பதவித் தேர்தலுக்கு நாள் குறிப்பிடு முன்பாகவே தங்கள் வருடாந்தரக் கூட்டத்தில் இரு பதவிகளுக்குமான தங்கள் கட்சி அபேட்சகர்களைக் குறிப்பிட்டுவிடுகின்றன. தேர்தல் காலத்தில் வாக்காளர்கள், ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி பதவிகளுக்கெனப் போட்டியிடும் அபேட்சகர்களின் தகுதி செல்வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்தல் மன்றத்திற்கான பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கின்றனர். எந்தக் கட்சி அதிக இடங்களைத் தேர்தல் மன்றத்தில் பெற்றிருக்கிறதோ, அந்தக் கட்சியின் அபேட்சகர்களே முறைப்படி ஜனாதிபதியாகவும் உதவி ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பது திண்ணம். தேர்தல் மன்றம் மக்கள் விருப்பத்திற்கெதிராக வேறெவரையும் தேர்ந்தெடுக்க முடியாது என்பதும் வெளிப்படை.

**ஜனாதிபதியின் அதிகாரங்கள்:** ஜனாதிபதியின் அதிகாரங்கள் நிருவாகம், சட்டம், இராணுவம், அரசியல் என்று பல திறப்பட்டனவாகும்.

**நிருவாக அதிகாரம்:** ஜனாதிபதி நாட்டின் பொது நிருவாகத்திற்குப் பொறுப்பாளர். நாட்டின் அரசியலமைப்பு, சட்டம் ஆகியவற்றின் பாதுகாப்பும் அழுலும் ஜனாதிபதியால் கவனிக்கப்படும். அமெரிக்கா சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள் கௌரவிக்கப்படும்படி ஜனாதிபதியே பார்த்துக்கொள்வார். கூட்டாட்சி நீதிமன்றத்தின் தீர்ப்புகள் சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் அவரே கவனிக்கிறார். தம் கீழ்ப் பணியாற்றும் பலருக்கும் அவர் அவசியமான உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார். ராஜ்யங்களில் பணியாற்றும் கூட்டாட்சி அரசின் அதிகாரிகளையும் மேற்சட்டமன்றத்

தின் ஒப்புதலின் பேரிலேதான் நியமிக்கிறார். குறிப்பாக, சம்பந்தப் பட்ட ராஜ்ய மேற்சபை உறுப்பினர்களைக் கலந்த பின்னரே அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். இம்மாதிரி கலந்து யோசித்து நியமனம் செய்யப்படும் முறையைத்தான் 'செனட்டர்கள் மரியாதை' (Senatorial Courtesy) என்று கூறுகிறார்கள். கூட்டாட்சியின் மேல்அதிகாரிகள் அத்தனை பேரும் செனட்டுச் சம்மதத்தின் பேரிலேதான் நியமிக்கப்படுகிறார்கள். கூட்டாட்சி நீதி மன்றத்தின் நீதிபதிகளை ஜனாதிபதி நியமிக்கிறார். அங்ஙனமே, அவருக்குத் தலைமை நீதி மன்ற நீதிபதிகளைத் தவிர மற்றவர்களை நீக்கவும் அதிகாரமுண்டு.

**சட்ட சம்பந்தமான அதிகாரங்கள்:** ஜனாதிபதி சட்டமன்ற உறுப்பினரல்லர். எனவே, சட்டமன்றம் மசோதாக்கள் பற்றி விவாதிக்குங்கால் அதில் கலந்துகொண்டு தம் கருத்துகளை வெளியிட அவருக்கு உரிமை இல்லை; இன்னின்ன சட்டங்கள் செய்ய வேண்டுமென்று கட்டளையும் இடமுடியாது. ஆனால், அரசியலமைப்பின் விதிகளின்படி மண்டலாதிபதி சட்டமன்றம் கூடும்போது, 'செய்தி' (Message) அனுப்பலாம். இதையொட்டித் தலைவர் 'ஸ்டேட் ஆப் யூனியன் மெசேஜ்' (State of Union Message) அனுப்புகிறார். இச்'செய்தி' மத்திய அரசாங்கத்தின் நிருவாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களும், இயற்றப்படவேண்டிய சட்டங்களில் கடைப்பிடிக்கவேண்டிய அடிப்படைக் கொள்கைகளும் அடங்கியதாகவே பெரும்பாலும் அமைந்திருக்கும். சட்டமன்றம், மசோதாக்கள் தயாரிக்கும் போது இவற்றைக் கருத்திலிருத்தி இதற்குத்தகச் செயலாற்றும். ஒவ்வொரு சமயத்தில் தலைவர் கருத்துகளை ஏற்காமல் அதனிஷ்டம் போலச் சட்டங்களியற்றவும் முனையும். ஜனாதிபதியொருவர், அவரிஷ்டம் போலச் சட்டங்கள் இருக்கவேண்டுமென்று கருதினால்—ஏற்படக்கூடிய சந்தேகங்களையோ, மனக் கசப்பையோ அகற்றிச்—சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த, சட்டமன்றத்தில் தாமே நேரில் 'செய்தி'யை அளிக்கலாம். இதனால் எதிர்ப்பாளர்கள் கூட ஆதரவாளர்களாக மாறவும் கூடும். ஜனாதிபதியின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் மசோதாக்கள் தடைகளதிகமில்லாமல் எளிதிலும் விரைவாகவும் நிறைவேற வாய்ப்பும் உண்டு. இந்த முறையைத் தலைவர்கள் வில்சனும் ரூஸ்வெல்ட்டும் மிக்க திறமையுடனும், புத்தி சாதுரியத்துடனும் பலன் தரத்தக்கவாறு கடைப்பிடித்திருக்கிறார்கள்.

**மறுப்பாணை** (Veto): மண்டலாதிபதி மறுப்பாணையென்னும் மிகச் சிறந்த சத்தி வாய்ந்த அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். இவ்வதிகாரம் அரசியலமைப்பால் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மறுப்பாணை அதிகாரத்தால், சட்டமன்றமியற்றும் எந்தச் சட்டத்தையும் அவர் நிராகரிக்கலாம். அதாவது, சட்டமன்றத்தின் சட்டத்திற்கு அரசியலமைப்பில் ஆதாரம் இல்லையென்று அவர் கருதினாலோ, நாட்டின் பொதுநலனுக்குக் குந்தகம் விளையுமென்று நினைத்

தாலோ, அவர் தம் கையொப்பமிட மறுக்கலாம். அரசியலமைப் பைத் திருத்த அல்லது மாற்றக் கோரும் மசோதாக்கள் தவிர, மற் றெல்லாவற்றிற்கும் அவை சட்டமாவதற்கு ஜனுதிபதியின் கையொப்பம் அவசியம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஜனுதி பதியின் கையொப்பத்திற்காகச் சட்டமன்றத்தால் அனுப்பப்படும் மசோதா எதுவும் அனுப்பப்பட்ட பத்துத் தினங்களுக்குள், ஆட்சே பணை எதுவுமில்லாவிட்டால், அவர் கையெழுத்துப் பெற்றுச் சட்ட மாகும். அவர் கையொப்பமிட நிராகரித்துத் திருப்பிவிட்டால், அது **'தாற்காலிக மறுப்பாணை'** (Suspensive Veto) ஆகும். ஏனெனில், அந்தப்பத்துத் தினங்களுக்குள் சட்டமன்றத்தின் கூட்டம் முடிவுருமல் இருக்குமாகையால், நிராகரிக்கப்பட்ட மசோதாவைச் சட்ட மன்றம் மீண்டும் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறை வேற்றலாம். அப்படி மறுமுறையும் நிறைவேற்றப்படும் மசோதாவை ஒப்புக்கொண்டு கையெழுத்திடுவதைத் தவிர வேறு வழியெதுவும் ஜனுதிபதிக்கு இல்லை.

கையெழுத்திற்காக அனுப்பப்படும் எந்த மசோதாவையாவது ஜனுதிபதி விரும்பாவிட்டால், குறிப்பிட்ட அந்தப் பத்து நாட் களுக்குள் தம் கருத்தைத் தெரிவிக்காமலோ, கையெழுத்திடாமலோ இருக்கலாம். இந்தச் சூழ்நிலையில் அந்தப் பத்துத் தினங்களுக்குள் சட்டமன்றத்தின் கூட்டம் முடிந்திருக்குமானுல், அனுப்பப்பட்ட மசோதா சட்டமாக முடியாது. இது மற்ருெரு விதமான மறுப்பாணை (Pocket Veto) யாகும். கடைசியாக, மண்டலாதிபதிக்குச் சட்டமன் றத்தைச் சாதாரண சமயங்களில் கூட்ட அதிகாரம் இல்லை. எந்தக் காரணத்தைக்கொண்டும் அதைக் கலைக்கவும் முடியாது.

**இராணுவ அதிகாரங்கள்:** ஜனுதிபதி தேசத்தின் இராணுவத் திற்குத் தலைவர். அதனுல், தேசத்தின் பாதுகாப்பும் அவர்பொறுப்பு. தேசத்தின் பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர் என்ற காரணத்தால், பிற நாடுகளுடன் போர்ப்பிரகடனம் செய்ய அதிகாரம் இல்லை. அது சட்டமன்றம் பெற்றிருக்கும் அதிகாரமாகும். எனினும், போர்க் காலச் சூழ்நிலைகளை உண்டாக்கிப் போரிலிறங்குவதைத் தவிர்க்க முடியாததாகச் செய்யலாம். போர் நடக்கும் காலத்தில் அவருக் கிருக்கும் அதிகாரத்தைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. காரணம் ஜனுதிபதியின் திறமைக்குத் தக்கவாறு அவ்வதிகாரம் பெருக அல்லது குறையக்கூடும். அடுத்து, உள் நாட்டில் கலகமோ, அமைதி யின்மையோ ஏற்பட்டால், இராணுவத்தின் உதவி கொண்டு அவற்றை அடக்குவதன்றி, கூட்டாட்சி அரசாங்கத்தின் சட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரமும் அவருக்குண்டு. நாட்டுக்கதிபர் என்ற முறையிலும், தேசத்தின் பொது நிருவாகத்திற்குப் பொறுப்புடைய வர் என்ற முறையிலும் மற்ற நாடுகளுடன் சுமுகமான உறவு ஏற் படுத்திக்கொள்ளலாம். செனட்டின் நல்லெண்ணத்துடன் பிற நாடு

களுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளலாம். அங்ஙனமே உடன்படிக்கைகளை முறித்துக்கொள்ளவும் அதிகாரமுண்டு.

**நீதியதிகாரம்:** இராஜத் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களைத் தவிர, மற்றவர்களின் தண்டனைக் காலத்தைத் தம்மிஷ்டம் போலக் குறைக்கவோ, நீக்கவோ' அவருக்கு அதிகாரமுண்டு. மேலும், ஒரு வழக்கு நீதி மன்றத்தால் விசாரிக்கப்படும்போதுகூட அதில் தலையிட்டுக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுவிக்கலாம். பின்னதாகக் கூறப்பட்ட அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதிக்கே சிறப்பாக உடையதென்பதும், இதர நாடுகளின் தலைவருக்கு இல்லை என்பதும் அறியத்தக்கன.

சட்டமன்ற உறுப்பினர்களைப் போலவோ, அல்லது மற்ற நாட்டுத் தலைவர்களைப் போலவோ, குறிப்பிட்ட தொகுதிகளினாலோ அல்லது சில வாக்காளர்களாலோ இவர் தேர்ந்தெடுக்கப்படாமல், தேசம் முழுவதனாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதாவது, நாடு முழுதும் இவர் தொகுதியாகும். நாட்டின் நன்மை தீமை, ஏற்றத் தாழ்வு எல்லாவற்றிற்கும் இவரே பொறுப்பாளர். இவர் பேச்சு, செயல் எல்லாம் ஒவ்வோர் அமெரிக்கராலும் கவனித்துவரப்படுகின்றன. எனவே, இவர் தம் சொந்தக் குடும்பக் காரியமானாலும் சரி, பொதுக்காரியமானாலுஞ்சரி, பொதுமக்களின் கவனத்தினின்றுந் தப்ப முடியாது. இதனினும் மேலானதென்னவென்றால், இவருக்கு உலகம் முழுவதும் இன்று இருக்கும் செல்வாக்கே. அமெரிக்கா இயற்கை வளம் கொழிக்கும் நாடு; அத்துடன் தொழில் வளத்தாலும் சிறப்புற்றிருக்கிறது. அதனுடைய உதவி எந்த ஒரு வகையிலாவது மற்ற நாடுகளுக்குத் தேவைப்படுகிறது. அல்லாமலும், அமைதி நிலைநாட்டுவதானாலும் போர் செய்வதானாலும் அதன் உதவி மிகப் பெரியதொரு மாறுதலை நிச்சயம் செய்யும். எனவே, இச்சிறப்புகளையெல்லாம் உடைய ஒரு நாட்டின் தலைவர் என்ன கூறுகிறார் செய்கிறார் என்று அறிந்துகொள்ளுவதற்கு மற்ற நாடுகளும் விரும்புவது இயற்கையேயாகும். உதாரணமாக, நம்மையே எடுத்துக்கொள்ளுவோமே! அமெரிக்கா எங்கோ நெடுந்தூரத்திலிருக்கிறது. இருந்தாலும், 'அங்கு என்ன நடக்கிறது? யார் ஜனாதிபதியாய் இருக்கிறார்?' என்றெல்லாம் அறிய விரும்புகிறோம். 1960-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் **திரு. நிக்சன்** வருவாரா அல்லது **திரு. கென்னடி** வருவாரா என்பதே மூலை முடுக்குகளிலெல்லாம் பேச்சாய் இருந்தது. ஏன்? இந்தியா பொருளாதாரத் துறையில் இன்னும் முன்னணிக்கு வரவில்லை. முன்னணிக்கு வர அமெரிக்காவின் உதவியும் மிக முக்கியம். எனவே, இவர்களிருவரில் இந்தியாவிற்கு அதிக நன்மையைச் செய்யக் கூடியவர் வருவாரா மாட்டாரா என்னும் கருத்தில் அவ்வளவு ஊக்கம் இங்குக் காட்டப்பட்டது. ஒரு துறையில் இல்லாவிட்டால் மற்றொரு துறையில் அமெரிக்காவின் தொடர்பு அவசியமா

யிருப்பதால், அமெரிக்க ஜனாதிபதியின் செல்வாக்கு மற்ற நாடுகளி லும் அதிகமாய் இருக்கிறது.

அமெரிக்க நாட்டு அதிபர் எந்த அரசியற்கட்சியையும் சேராத வராய், நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் பணி செய்யவேண்டு மென்பதே அரசியலமைப்பின் நோக்கமாகும். இந்த அடிப்படை யிலேதான் ஜனாதிபதி வாஷிங்குடன் செயலாற்றி வந்தார். ஆனால், அவருக்குப் பின் வந்த ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவே இருந்தனர். அதனால், ஒரு பக்கம் கட்சித்தலைவர், மறு பக்கம் தேசத்தின் தலைவர் என்னும் இவ்விரு நிலையும் இன்று ஜனாதிபதியின் புகழ் பரப்பி நிற்கின்றன.

இந்தத் தலைவர் வழி அரசாங்கம் (Presidential system of govern ment.) வேறு எந்த நாட்டிலுமில்லாததொரு புதுமை. இது அமெரிக்க மண்ணுக்கே சொந்தமான ஒரு நிறுவனம். அமெரிக்க ஜனாதிபதி யோடு ஒப்பிட்டுக் கூறக்கூடிய பொதுச் சிறப்புடைய பதவி வேறு எங்கும் இல்லையென்றே கூறிவிடலாம். ஏனென்றால், இங்கிலாந்து நாட்டு அரசியாருக்கிருக்கும் அந்தஸ்து முழுவதும் இருக்கிறது. அந்நாட்டுப் பிரதம மந்திரியாருக்கிருக்கும் அதிகாரங்கள் அத்தனையு மிருக்கின்றன. இன்னும் சொல்லவேண்டுமானால், அவர்களுக்கில்லாத வேறு பல சிறப்புகளும் அதிகாரங்களும் இவருக்கு இருக்கின்றன. இதனாலேதான் **லாஸ்கி** என்னும் பேரறிஞர், "இவர் இங்கிலாந்து நாட்டு அரசியாரும் பிரதம மந்திரியாரும் பெற்றிருக்கும் சிறப்பு களையும் அதிகாரங்களையும் ஒருங்கே பெற்றிருக்கிறார்," என்று கூறு கிறார். மேலும், அவர் (லாஸ்கி), "நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஜனாதிபதி பதவியைப் பற்றி ஆராய்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அப்பதவியின் தனிச்சிறப்புத் தோன்றும்," என்றும் கூறியுள்ளார். மற்றோர் அறிஞர், "அமெரிக்க ஜனாதிபதி உலகத்தையே ஆட்சி செய் பவர்," என்னும் பொருள்படப் புகன்றுள்ளார்.

மேற்கூறியவாறு அமெரிக்க ஜனாதிபதி அவ்வளவு பெருமையும் அதிகாரமுமுடையவரானாலும், தமக்குப் பொது மக்களிடமுள்ள செல் வாக்கு, சட்ட மன்றத்தின் அமைப்பு, அதன் நோக்கம், இவை யாவற் றையும்விடத் தலைமை நீதி மன்றம் இவற்றையெல்லாம் அடிக்கடி மனத்தில் இருத்தியே எச்செயலிலும் இறங்க வேண்டும். உதாரண மாக, அமெரிக்க மக்களிடையே ஜனாதிபதிக்கு அளவற்ற மதிப்பு இருக்கும் வரையில், சட்டமன்றம் அவர் கூறுவனவற்றைப் போற்றும்; செல்வாக்குக் குறைந்துவிட்டது என்பது தெரிந்தால், தன் விருப் பத்தை ஜனாதிபதி ஏற்கும்படி செய்ய முயலும். குறிப்பாக, சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சி பெரும்பான்மையாய் இருந்தால், எப் போதுமே ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும். சட்ட மன்றத் தில் ஆதரவு இருக்கும்வரை ஜனாதிபதி கவலைப்பட வேண்டுவதில்லை. ஆதரவு குறைந்து எதிர்ப்பு அதிகமானால், பிறகு ஜனாதிபதியின்

நிலைமை, திசையும் ஆழமும் காணாத திரை கடலில் எங்குப் போகிறோம் என்று தெரிந்துகொள்ள முடியாத மாலுமியின் கதைதான். இதை ஏன் கூறுகிறோமென்றால், சட்ட மன்றத்தின் ஒத்துழைப்பு இருந்தால், ஜனாதிபதியின் அதிகாரங்களும் விரிவடைகின்றன; அரசாங்கத்தின் குறிக்கோளும் தடையில்லாமல் துரிதமாக நிறைவேறுகிறது என்பதை எடுத்துக்காட்டவே. சட்டமன்றம் ஏகமனமாக எதிர்த்தாற்கூட ஜனாதிபதியை நான்கு ஆண்டு பதவிக்காலம் முடிவிற்குள் நீக்க முடியாது. இந்த விஷயத்தில் ஜனாதிபதி பாராளுமன்ற முறை நாடுகளிலுள்ள பிரதம மந்திரியாரைக்காட்டிலும் சிறப்புற்றவர்.

# அத்தியாயம்—8

## உதவி ஜனாதிபதி

(Vice President)

ஜனாதிபதிக்கு அடுத்தபடியாக உதவி ஜனாதிபதியும் உண்டு. ஜனாதிபதிக்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று பார்த்தோமோ, அத்தகுதிகள் இவருக்கும் வேண்டும். தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் முறையே இவரைத்தேர்ந்தெடுப்பதிலும் பின்பற்றப்படுகிறது. ஜனாதிபதியும் உதவி ஜனாதிபதியும் ஒரே காலத்தில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

**பணிகள் :** சட்ட மன்றத்தின் (Congress) மேற்சபைக்கு உதவி ஜனாதிபதி தலைமை தாங்குகிறார். ஆனால், இவர் அச்சபையின் உறுப்பினர் அல்லர். அதனால், ஏதாவதொரு பிரச்சினைமேல் வாக்கெடுக்கப் பட்டால்—அதில் எத்தரப்பிற்கும் பெரும்பான்மை இல்லாமற் போனால், அப்பொழுதுதான் இவர் வாக்குரிமையை அளிக்கலாம். ஆனால், இவர் அளித்த வாக்கு எத்தரப்பிற்கும் வெற்றியையோ, தோல்வியையோ தருவதாக இருத்தல் கூடாது என்பது நோக்கத் தக்கது.

அடுத்தபடியாக, இவர் நாட்டு நிருவாக நிலைமையைக் கவனித்து, ஜனாதிபதிக்குத் தம்மாலியன்றவாறெல்லாம் உதவி செய்கின்றார். ஜனாதிபதி அமைச்சவை கூடும்போதெல்லாம், இவரும் அதில் கலந்து கொள்கிறார். இதைத் தவிர, இவர் ஜனாதிபதியின் சம்மதம் பெற்று, அல்லது அவர் விரும்பினால், அயல் நாடுகளுக்குச் சென்று, அமெரிக்காவைப்பற்றி அந்நாடுகளில் நிலவும் கருத்து, அந்நாடுகளின் முன்னேற்றம் ஆகிய பல விஷயங்களையும் நேரிற்கண்டு, ஜனாதிபதிக்கு அவற்றை அறிவிப்பதோடு, தமக்குத்தோன்றும் யோசனைகளையும் கூறலாம். உதவி ஜனாதிபதி நிக்சன் என்பார் இம்முறையில் ஜனாதிபதி **ஐசனோவருக்குப்** பேருதவி புரிந்தார் என்பதை நாமறிவோம். இவர் இந்தியா, பாக்கிஸ்தான், ருஷ்யாப்போன்ற பல நாடுகளுக்கும் சென்று வந்தவர் என்பதையும் இங்கு நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது போல ஜனதிபதி பதவீ எக்காரணம் பற்றியேனும் காலியானல், இவரே அப்பதவியை ஏற்று நிருவாகத்தைக் கவனிக்கிருர். ஜனதிபதி இல்லாவிட்டாலோ, அல்லது வேறு காரணங்களால் வரமுடியாவிட்டாலோ, உதவி ஜனதிபதியே அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கிருர். இவருக்கு இத்தகைய காரியங்களில் இப்போதெல்லாம் அதிகப் பங்கு கொடுக்கப்படுவதன் நோக்கம், ஜனதிபதியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டால் தேச நிருவாகம் திறமையோடு சிறப்பாக நடத்தப்பட இப்போதே பயிற்சி அளிக்க வேண்டுமென்பதே யாகும்.

# அத்தியாயம்—9

**அமைச்சவை** (The Cabinet) : அரசியலமைப்பில் அமைச்சவை பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஏனெனில், அங்கு அமைச்சவை ஆட்சிக்குப் பதில் தலைவராட்சியே இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அம்முறையே அமுலிலும் இருந்து வருகிறது. அரசியலமைப்பு இயற்றப்பட்டபோது தலைவரே ஆட்சித்துறைப் பொறுப்புகளையெல்லாம் கவனிக்க முடியும் என்றும், அவருக்கு ஆலோசனை கூற ஒரு சபை வேண்டுமென்றும் யாரும் கருதவில்லை. ஆனால், அவசியம் என நினைத்தால், "ஆட்சித் துறைத் தலைவர்களின் கருத்தைத் தலைவர் கேட்டறியலாம்," என்று மட்டும் கூறப்பட்டுள்ளது. இதையொட்டிப் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனமே 'அமைச்சவை' என்று வழங்கப்படலாயிற்று. இந்த அமைச்சவை ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலை ஒரு வேடிக்கையான கதை.

முதன்முதலில் தலைவராய் இருந்த திரு. வாஷிங்குடன், "சமன் செய்து சீர்தூக்குங்கோல்போல்" அமைந்து, அரசாங்கத்தை அறநெறிகளின்படி நடத்திய பெரியார். அவர் எக்கருமத்தையும் எண்ணித் துணிபவர். அதனால், அவர், சட்ட மன்றத்தின் மேற்சபையையும், உயர்நீதி மன்றத்தையும், சில விஷயங்கள் பற்றி ஆலோசனை கூறும்படி கேட்டுக்கொண்ட போது, சட்ட மன்றம் அவரைக் கிண்டல் செய்தது; நீதிமன்றம், ஜனாதிபதியே தம் கருத்துப் போலச் செய்துகொள்ள வேண்டுபவை அவை என்று மறுத்தது. இதனால், ஜனாதிபதிக்கு ஆட்சித்துறைத் தலைவர்களையும், தம் நெருங்கிய நண்பர்களையும் கலந்தாலோசித்து முடிவுக்கு வருவதைத் தவிர வேறு வழியில்லாமற் போயிற்று. இவ்வாறு ஆலோசனை கூறிய ஆட்சித்துறைத் தலைவர்களையே திரு. வாஷிங்குடன், 'ஆலோசகர்கள்' என்று கூறினார். 'அமைச்சவை' என்னும் பெயர் 1793-லேதான் அதற்கு அமைந்தது. இவ்வாறு அவர் தொடங்கி வைத்த முறை அவருக்குப்பின் தலைவர்களாய் வந்தவர்களாலும் பின் பற்றப்பட்டு வந்தது. இன்று அது அரசாங்கத்தின் இன்றியமையாத அமிசமாய் விளங்குகிறது.

இந்த அமைச்சவை பாராளுமன்ற நாடுகளிலுள்ளது போன்ற தன்று. இரண்டிற்குமிடையே பல வித்தியாசங்களிருக்கின்றன. இந்த அமைச்சர் அனைவரும் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்; சட்ட மன்றத்தின் உறுப்பினரும் அல்லர். அதனால், இவர்கள் ஜனாதிபதிக்கே பொறுப்புடையவர்கள். ஜனாதிபதி விரும்பினால் இவர்களைப் பதவியில் அமர்த்தியதுபோல, விலக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. காரணம் எதுவும் கூறப்பட வேண்டுவதில்லை. இவர்கள் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருக்கும் வரையிலேதான் பதவி வகிக்க முடியும். பெரும்பாலும் இவர்கள் ஜனாதிபதி பதவிக்கு வரும்போது வருகிறார்கள்; அவர் பதவிக்காலம் முடியும்போது, இவர்களும் பதவியிலிருந்து விலகுகிறார்கள். ஒருமந்திரியார் பதவியிலிருந்து விலகினால், அல்லது விலக்கப்பட்டால், மற்றவர்களும் அவரைப் பின் பற்ற வேண்டுமென்பது அவசியமன்று. காரணம், கூட்டுப் பொறுப்பு இங்கு இல்லை. அடுத்தபடியாக, ஜனாதிபதி இவர்கள் எல்லோரையும் சேர்த்தோ அல்லது தனித்தனியாகவோ ஆலோசனை கேட்க அழைக்கலாம். இவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளுவதும், ஏற்றுக்கொள்ளாததும் ஜனாதிபதியின் விருப்பத்தைப் பொறுத்தது. இதில் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டுவதென்னவென்றால், தனிப்பட்ட மந்திரிகள் தலைவரின் சம்மதத்தின் பேரில் கொள்கைகள் வகுக்கலாம்; திட்டங்கள் நிறைவேற்றலாம்; அதனால் வரும் பெயரையும் புகழையும் பெறலாம்; ஆனால், ஜனாதிபதி அனுமதிக்காவிட்டால் எதையுமே செய்ய முடியாது.

அமெரிக்க அமைச்சவை தலைவரின் குடும்பம் போன்றது. **திரு. மன்றோ** என்பார் தலைவராய் இருந்தபோது, தாம் ஓர் உயர்ந்த பிறவி என்றும் மேதை என்றும் எண்ணாமல், தாம் அந்தக் குடும்பத்தில் ஓர் அங்கமென்றே கருதினார். இங்கிலாந்து நாட்டில் பெரும்பான்மைக் கட்சித் தலைவர், மந்திரிசபை அமைக்கும்போது தம் விருப்பம்போல யாருக்கு வேண்டுமானாலும் பதவி வழங்கலாமென்றாலும், கட்சியில் முன்னணியிலுள்ளவர், அறிவாற்றல் படைத்தவரல்லரானாலும், அவர்களை அடியோடு புறக்கணித்து வேறு யாருக்கும் வழங்க முடியாது. அப்படி வழங்கினால் அவர் என்ன ஆவார் என்பது நமக்கெல்லாம் தெரிந்த உண்மையே. ஆனால், அமெரிக்காவிலோ, கட்சிக் கட்டுப்பாடில்லாமல், தெரிந்தவராய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மந்திரி சபையில் இடங்கொடுக்க ஜனாதிபதிக்கு உரிமையுண்டு. உதாரணமாக, ஜனாதிபதி வில்சன் தமக்கு முன்பின் தெரியாத **திரு. L. காரிசன்** (L. Garrison) என்பவரை மந்திரியாராக நியமித்தார். இப்போது ஜனாதிபதியாய் இருக்கும் **திரு. ஜான் கென்னடி** என்பார், **டக்ளாஸ் டில்லான்** (Douglas Dillon) என்பவரை நிதிமந்திரியாராக நியமித்துள்ளார். ஆனாலும், பொதுவாகக் கட்சியின் நலன், நாட்டின் அமைதி, ஒற்றுமை கருதி, மந்திரிகள், அனுபவம் திறமை,

கட்சிக்குச் செய்திருக்கும் தொண்டு, பூகோளரீதி அடிப்படையிலே நியமிக்கப்படுகின்றுர்கள் எனலாம். ஒவ்வோர் இடத்தில் பொது விதி மீறப்படுவதில் தவறில்லை.

மந்திரி சபையின் அமைப்பு எப்படியிருந்தாலும் அதன் முக்கியத் துவம் அளவற்றது. மந்திரி சபை 'வாரத்திற்கொரு முறை கூடுகிறது. ஜனுதிபதி குறிப்பிடும் விஷயங்கள் பற்றி ஆலோசனை நடக்கும். ஆலோசனை முடிவில் வாக்கெடுக்கப்படுவதில்லை. அதேபோல, சட்டச் சம்பிரதாய முறைப்படி விவாதிக்கப்பட்ட விஷயங்கள் பற்றிக் குறிப் புகளும் எடுக்கப்படுவதில்லை. பெரும்பான்மை முடிவுப்படிதான் காரி யங்கள் செய்யப்படவேண்டும் என்பதுமில்லை. ஏனென்ருல், நாட்டின் பொது நிருவாகத்திற்கு ஜனுதிபதியொருவரேதான் பொறுப்பாளர். என்ன நடந்தாலும் அவரே பதில் சொல்லக் கடமைப்பட்டவர்; மந்திரிமாரல்லர். பெரும்பான்மையோர் ஒரு விஷயத்தை எதிர்த்து, சிலரே, அல்லது ஒருவரே அதை ஆதரித்தாலும், ஒருவர் ஆதரித்த தையே ஜனுதிபதி ஏற்று அதன்படி நடக்கலாம். அப்படியே மந்திரி சபையினர் கூறும் முடிவு சரியானதென்று ஜனுதிபதிக்குப் படாவிட் டாலும், விவாதிக்கும்போது பல விஷயங்களும் கூறப்படுவதால், அவற்றினின்று தாமே ஒரு முடிவுக்கு வர அவை உதவலாம். அடுத்த தாக, அரசாங்கம் என்ருல், அது பல ஆட்சித் துறைகள் கொண்டது என்பதையும் நினைவுபடுத்திப் பார்த்தால் அவை செயலாற்றும்போது பல கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம் என்பது விளங்கும். அக் கருத்து வேற்றுமைகளை அகற்ற மந்திரிசபையின் கூட்டங்கள் உதவும். அவைகளை ஜனுதிபதியே போக்கவும் கூடும். அதனுல், சந்தேகங்கள் நீக்கப்பட்டு, சுமுகமான நிலையில் அவை கூட்டாகப் பணியாற்றும். இவ்வாறு பல முக்கியமான பணிகளை அமைச்சவை செய்கின்றது. இதுவரையில் அமைச்சவை தோன்றிய விதம், அதன் தன்மை, பணி கள் பற்றிக் கூறினேம்.

அடுத்து நாம் அறியவேண்டுவது, இப்போது அமெரிக்காவில் வெளி விவகாரம், நிதி, பாதுகாப்பு, உள்துறை, விவசாயம், நீதி, அஞ்சல் துறை, வர்த்தகம், தொழில், சுகாதாரம், கல்வி, பொதுநலம் என்று பிரிக்கப்பட்டுள்ள பத்து ஆட்சித் துறைகள் இருக்கின்றன என்பதே. இவற்றுள் ஒவ்வொன்றும், ஜனுதிபதியால் நியமிக்கப்படும் மந்திரியின் தலைமையில் இயங்குகின்றது. அதாவது, இங்கிலாந்தில் மந்திரிகளுக்கும் கீழே சிவில் பணியாளர் துறைத் தலைவர்களாய் இருக்கும் முறை இங்கு இல்லை. இத்துறைகளின் தலைவர்களடங் கியதே ஜனுதிபதியின் அமைச்சவை என்பது.

மந்திரிசபை ஓர் ஆலோசனை சபையே. அது ஜனுதிபதிக்கு உதவி செய்வதற்காகத்தான் இருக்கிறது என்பதை நினைவிலிறுத்தி, அமைச் சர்கள் உண்மையாகவும், விசுவாசத்துடனும். ஊக்கத்துடனும் பணி

யாற்றுவார்களேயாஞல், அமைச்சவையின் புகழ் உயர்வடைவதன்றி, அதன் பயனேயும் மக்கள் உணர்ந்து போற்றுவார்கள். இவ்வாறு, அமைச்சவை செயலாற்றுகிறதா-செயலாற்றுமா-என்பதைக் காலந் தான் கூற முடியும்.

# அத்தியாயம்—10

# ஆட்சித் துறைகளும் அவற்றின் வேலைகளும்

## (Administrative departments and their functions)

முதல் அத்தியாயத்தில் அமைச்சவையைப் பற்றி எழுதும்போது அமெரிக்காவில் பத்து ஆட்சித் துறைகள் இருப்பதாகப் பார்த்தோம்; அவற்றுக்கு அமைச்சர்களே தலைவர்கள் என்பதையும் அறிந்தோம். அந்த ஆட்சித் துறைகள் சட்டமன்றத்தால் ஏற்படுத்தப்பட்டவை என்பதை நாம் இங்கு முதலில் அறியவேண்டும். அந்தப் பத்து ஆட்சித் துறைகளோடு இன்னும் பல நிறுவனங்களும் அங்கு இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் பொதுவாக நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, (1) போஸ்டு மாஸ்டர் ஜெனரல், அட்டர்னி ஜெனரல் என்னும் இருவரின்கீழ் உள்ள அஞ்சல் துறை நீதித் துறைகளையல்லாது, மந்திரிகளின் மேற்பார்வையிலுள்ள ஆட்சித் துறைகள், (2) ஆட்சித் துறைகளின் கட்டுப்பாட்டில் இல்லாமல் தனித்தியங்கும் ஏஜென்சிகள், (3) போர்டுகளும் கமிஷன்களும், (4) அரசாங்கக் கார்ப்பொரேஷன்கள் என்பன.

ஒவ்வோர் ஆட்சித் துறையும் ஒவ்வொரு மந்திரியாரின் தலைமையில் இருக்கிறது. அவருக்கு உதவியாக உதவி மந்திரிகள், துணை மந்திரிகள், இதர அலுவலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாரும், மற்ற நாடுகளிலுள்ளது போலப் பணியாளர் பொறுக்கும் குழுவால் நியமிக்கப்படாமல் ஜனாதிபதியாலேயே நியமிக்கப்படுகிறார்கள். கட்சிக்குச் செய்த தொண்டு, பொருள் உதவி, கட்சி முன்னேற்றம் இவற்றின் அடிப்படையிலேதான் இவர்கள் பெரும்பாலும் நியமிக்கப்படுகிறார்கள் என்னலாம்.

**ஆட்சித் துறைத் தலைவர்களின் அதிகாரங்கள் :** இவர்களின் அதிகாரங்களுக்கு ஆதாரம், அரசியலமைப்பும் சட்டங்களுமே யாகும். இவர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுவதோடு, அவர் பிறப்பிக்கும் கட்டளைகளைத் தங்கள் கீழ்ப் பணியாற்றும் சகாக்கள்,

ஊழியர்களின் துணைகொண்டு நின்றவேற்றுகிறார்கள். இத்தலைவர்கள் பெரும்பாலும் ஆட்சியிலிருக்கும் கட்சியைச் சேர்ந்தவர்களாதலால், கட்சியின் கொள்கைகள், தீர்மானங்கள், திட்டங்கள் முதலியவற்றை ஜனாதிபதி மறந்துவிட்டால் அவருக்கு ஞாபகமூட்டும் கடமையையும் செய்கிறார்கள்.

அடுத்ததாக, இவர்கள் தத்தம் துறைகளின் வேலைக்குப் பொறுப்புடையவர்கள் என்ற முறையில், தங்கள் கீழ்ப் பணியாற்றும் ஊழியர்களுக்கு அவரவர் செய்யவேண்டிய பணிகளைப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். கொடுக்கப்பட்ட வேலைகளைத் திறமையாகவும் குறித்த காலத்திலும் செய்கிறார்களா என்று பார்த்தறிவதுடன், தேவைப்பட்டால், கண்டித்தும், தட்டிக் கொடுத்தும், வழி முறைகள் சொல்லிக்கொடுத்தும் வருகிறார்கள். அதோடு பணி புரிவோரின் நடத்தை பற்றிய ஒழுங்கு முறை விதிகளையும் பிறப்பிக்கிறார்கள். பணியாளர்களின் வேலை உயர்வு இவர்களாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

இவையெல்லாவற்றையும்விட இவர்கள் செய்யும் மிகச் சிறந்த வேலை சட்ட சம்பந்தமானதேயாகும். உதாரணமாக, சட்டமன்றம் கொள்கைகள் அடிப்படையில் முக்கிய அமிசங்களைத்தான் சட்டத்தின் உருவத்தில் தரமுடியும். அவற்றின் இதர மிகச் சாதாரண அமிசங்களை விரிவாக உருவாக்கும் பொறுப்பு இவர்களுடையது. அல்லாமலும், சட்டத்தின் பல அமிசங்களை இவர்கள் விளக்குவதோடு அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் பொறுப்பும் இவர்களைச் சார்ந்ததேயாகும்., அடுத்தது, சட்ட ஆக்கத்தில் இவர்கள் ஆற்றும் உதவியாகும். சட்டமன்றமொன்றே சட்டமியற்றும் உரிமையுடையது. ஆனால், அது ஜனாதிபதி, ஆட்சித் துறைத் தலைவர்களின் உதவியில்லாமல் அதைச் சிறப்பாகவும் திறமையாகவும் செய்யமுடியாது. இங்கிலாந்து முதலிய நாடுகளில் மசோதாக்கள் நிருவாகத் துறையால் மந்திரிகளின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன என்பது நினைக்கத்தக்கது. ஆனால், இங்கோ, ஆட்சித் துறைத் தலைவர்கள் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் அல்லர். ஆகையால், அவர்கள் சட்டமன்றத்தில் நேராகக் கலந்துகொண்டு மசோதாக்களைப் பிரேரேபிக்கவும், அவைகளை விளக்கவும் முடியாது. ஆகையால், அவர்களைச் சட்டமன்றத்தின் பல்வேறு குழுக்களும் தங்கள் முன்தோன்றிக் கருத்தைத் தெரிவிக்குமாறு கோருகின்றன. இவைகளை ஆதாரமாகக் கொண்டு மசோதாக்கள் தயாரிக்கப்படுவது ஒரு முறை. ஆட்சித் துறைத் தலைவர்கள், ஜனாதிபதி கட்சியைச் சேர்ந்த சட்டமன்றத்தின் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விருப்பப்படி சில சட்டங்களை இயற்ற முயற்சிகள் செய்யுமாறு கேட்டுக்கொண்டு கடிதங்கள் எழுதலாம். அல்லது ஜனாதிபதியின் 'செய்தி' யில் அடங்கியிருக்கும் கொள்கைகள் அடிப்படையில் சட்டமியற்ற வேண்டுவதன் அவசியம் பற்றி நேரில் தனிப்பட்ட முறையில் உறுப்பி

னர்களோடு பேசலாம். இவற்றின் அடிப்படையில் சட்டங்களியற்றுதல் மற்றொரு முறை. இவையல்லாமல், கட்சிக்குள்ளும், பொது மக்களிடையேயும் நிலவும் சாதகபாதகமான கருத்துகளை அறிந்து ஜனாதிபதிக்கு இவர்கள் சொல்வதோடு, அதிகமாக எதிர்ப்பிருக்கும் சிலவற்றைக் கைவிடவும் ஆலோசனை கூறுவார்கள். சில சமயங்களில் மசோதாக்களையும் தயாரித்துச் சட்டமன்றத்திற்கு இவர்கள்அனுப்பி விடுவதுமுண்டு. இங்ஙனம் இவர்கள் சட்டமன்றத்திற்குச் சட்டமியற்றுவதில் உதவி புரிவதுடன், தங்கள் கருத்தை ஏற்கும்படி செய்யவும் முடிகிறது.

கடைசியாக, இவர்கள் தங்கள் கீழ்ப் பணியாற்றும் ஊழியர்களின் குறையைக் கேட்டறிந்து, அதற்கு ஏற்ற பரிகாரங்களும் செய்கிறார்கள். பொதுமக்களிடமிருந்து அதிகாரிகளைப் பற்றி வரும் புகார்களைக் கேட்டு, குற்றம் புரிந்தோருக்குத் தண்டனையும் விதிக்கிறார்கள்; இது போன்ற இன்னும் பல வேலைகளையும் கவனித்து, அரசாங்கம் சரிவர அதன் கடமையை மக்களுக்குச் செய்யுமாறு உதவுகிறார்கள்.

இந்த ஆட்சித் துறைகளைத் தவிர, மற்ற மூன்று வகை நிறுவனங்கள், சுதந்தரமாகவும், குறிப்பிட்ட பணிகளைத் திறம்படச் செய்யவும் இருக்கின்றன. இவற்றுள் உள்துறை ராஜ்ய வணிகக் கழகம், கூட்டாட்சி செய்தித் துறைக் கழகம், தேசியத் தொழிலாளர் உறவுக் கழகம், அமெரிக்க ஐக்கிய நாடுகள் வரிப் பாதுகாப்புக் கழகம் என்பவை முக்கியமானவை என்னலாம்.

## அத்தியாயம்—11

# பொதுப்பணித் துறைகளில் பணி புரிவோரைத் தெரிந்தெடுத்தலும் கட்டுப்படுத்தலும்

ஆட்சித் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகை ஊழியர்கள், அரசியற்காரணங்களை முன்னிட்டு நியமிக்கப்படும் அரசியற்பணியாளர்கள். மற்ருெரு வகைப் பணியாளர், பொறுக்கும் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊழியம் புரிவோர்.

இவ்விரு வகைப் பணியாளர்களைப் பொறுத்த வரையிலுள்ள வேற்றுமைகள் அவர்கள் நியமிக்கப்படும் முறையிலிருந்தே தெரிய வரும். முதல் வகையினர் நாட்டின் தலைவரால், சட்ட மன்றத்தின் சம்மதம் பெற்ருே, பெருமலோ நியமிக்கப்படுகின்றனர். இவர்களது தகுதி, இவர்கள் கட்சிக்குச் செய்த தொண்டு, கட்சியிலும் நாட்டு மக்களிடையும் இருக்கும் செல்வாக்கு, ஜனுதிபதி அவர்களை எந்த அளவிற்கு நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம் என்பதே. இவர்கள் சாதாரணக் கீழ்த்தர ஊழியர்களல்லர்; ஆட்சித்துறைகளில் தலைவர்களாகவோ, உதவி, துணைத் தலைவர்களாகவோ இருப்பவர்களாவார்கள். இவர்களைத் தவிர, தனித்துத் தம் விருப்பப்படி இயங்கும் கழகங்கள், குழுக்கள் முதலியவற்றின் தலைவர்களும் உறுப்பினர்களும் இவ்வகையில் அடங்குவார்கள். இதர அமிசங்களைப்பற்றி முன் அத்தியாயத்திலேயே விரிவாகக் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம். இங்ஙனம் தலைவரால் நியமிக்கப்படும் முதல் வகையினர், நாட்டின் மொத்த ஊழியர்களுள் இருபத்தைந்து சதவிகிதத்தினரே. இம்முறை நியமனம் அரசியற்கட்சிகளின் அவசியத்தை ஒட்டி எழுந்ததாகும். மக்களாட்சிமுறை அரசாங்கங்களில் இது தவிர்க்க முடியாதது. இம்முறை நியமனத்தால், நாட்டின் பொதுப்பணித் துறைகளில் கவனக் குறைவு, அசட்டையாய் இருத்தல், வேலைத் திறமையின்மை இவற்

ருல் கேடு ஏற்படாமலிருக்கும் வரை தீதொன்றும் இல்லை. இது அரசியற்கட்சிகள் பொது மக்களுக்குக் கொடுத்த உறுதிகளை நிறை வேற்ற உதவும் பெருஞ்சாதனம் என்று கூடச் சொல்லலாம். உதா ரணமாக, ஆட்சித் துறைத் தலைவர்களின் பணியைப்பற்றிச் சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்ட போது, அவர்கள் அடிக்கடி தலைவருக் குக் கட்சியின் கொள்கைகள் வேலைத் திட்டங்கள் பற்றி நினைவு படுத் துகிறார்கள் என்று எழுதியது நினைவிருக்கலாம்.

இவ்வாறு வேண்டியவர்களுக்கு அதிகாரம் கொடுக்கும் முறை யைத்தான் **'ஸ்பாயில்ஸ் முறை'** (Spoils System) என்று கூறுகிறோம். இம்முறை, **திரு. செபர்சன்** ஜனாதிபதியாய் இருந்த போதுதான் முதன்முதலில் அமெரிக்காவில் தோன்றியதென்னலாம். பின்பு இது சட்ட மன்றம் 1810-ல் இயற்றிய சட்டத்தினால் மேலும் வளர்ந்தது. **திரு. ஆண்ட்ரூ ஜாக்ஸன்** தலைவராய் இருந்தபோது மிகு உச்ச நிலை யைப் பெற்றது. ஆனால், முதல் ஜனாதிபதியான ஜார்ஜ் வாஷிங் குடன் 'தகுதி, திறமை' அடிப்படையிலேதான் ஆட்சித் துறைக்கு அலுவலாளர்களை நியமித்தார்.

இந்த முறையைப் பின்பற்றியதற்குத் திரு. செபர்சன் கூறிய காரணங்கள் பின் வருமாறு: "ஆட்சித்துறைகளுக்கு ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் மிகுந்த சக்தி வாய்ந்தது. அரசியற்கட்சியைச் சேர்ந்தவர்களைக் குறிப்பிட்ட சில முக்கியமான பதவிகளுக்கு நியமிப் பதனால் அவர்கள் நன்றியுடன் செயலாற்றுவார்கள். அதனால், நிரு வாகமும் நல்ல முறையில் நடைபெறும். இவ்வாறல்லாமல், பணி யாளர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டால், ஏற்படும் காலி இடங் கள், இறப்பதால் ஏற்படுபவை, மிகக் குறைவு. ராஜிநாமா செய்பவர் களே இல்லை.

"ஆகவே, வேண்டியவர்களுக்குப் பதவி கொடுப்பதும், அவர்கள் பிறகு விலகுவதும் நன்மை பயக்கும்."

இங்கு நாம், ஆட்சித்துறைத் தலைவர்கள், அவருடைய முக்கிய உதவியாளர்கள் எல்லாம் ஆட்சி மாறும்போது, அதாவது ஒரு ஜனாதி பதியின் பதவிக்காலம் முடிந்து, வேறு ஜனாதிபதி பதவியேற்கும் போது, மாறுகிறார்கள் என்பதை அறிந்துகொண்டால், செபர்சன் கூறிய உண்மை புலப்படும். உதாரணமாக, **திரு. கென்னடி** ஜனாதி பதியாகப் பதவியேற்ற போது, அதற்கு முன் **திரு. ஐசனோவர்** காலத் தில் இருந்தவர்கள் விலகிக்கொண்டார்கள். திரு. கென்னடி புது நியமனங்கள் செய்தார்.

ஆனால், ஸ்பாயில்ஸ் முறையே ஆட்சித்துறை அலுவலாளர் அத்தனை பேருக்கும் அனுஷ்டிக்கப்படுகிறதென்று சொல்லிவிட முடி யாது. அது அவசியமுமில்லை. உதாரணமாக, கீழ்த்தர உத்தியோகஸ் தர்கள் கொள்கைகளை உருவாக்குவதில் ஈடுபடுவதில்லை. அவர்கள்

செய்வதெல்லாம் தங்களுக்குத் தரப்பட்ட வேலைகளைச் செய்வதே. ஆகையால், அவர்களெல்லாரும் மேற்கூறிய முறைப்படி நியமிக்கப் படாமல், பொதுப்பணியாளர் பொறுக்குக் குழுவால் நியமிக்கப்படு கின்றார்கள். இந்தப் பொதுப்பணியாளர் பொறுக்கும் குழு, வேலைக் காக மனுச் செய்பவர்களுக்குத் தேர்வு நடத்தி, அதில் அவர்கள் பெற்ற தகுதிகள் திறமைகள் அடிப்படையில் வேலை கொடுக்கும்.

1883-ஆம் ஆண்டில் சட்டமன்றம் **பெண்டில்டன் சட்டம்** எனப் படும் கூட்டாட்சிப் பணியாளர் சட்டத்தை இயற்றியது. இதன்படி அமெரிக்காவில் சிவில் சர்வீசுக் குழு ஒன்று மூன்று அங்கத்தினர்களைக் கொண்டதாய் அமைக்கப்பட்டது. கூட்டாட்சி அரசாங்கத்தின் பணி யாளர்கள் (1) பிரிக்கப்படாத துறைப்பணி, (2) பிரிக்கப்பட்ட துறைப்பணி என்ற இரு வகைப் பணிகளுக்கு நியமிக்கப்படுவார்கள் என்பது தீர்மானிக்கப்பட்டது. பிரிக்கப்படாத துறைப்பணிகளுக்கு ஜனாதிபதியும், பிரிக்கப்பட்ட துறைப்பணிகளுக்குப் 'பணியாளரைப் பொறுக்கும் குழு'வும் (Civil Service Commission) அலுவலாளர் களை நியமிக்க வேண்டுமென்பதும் தீர்மானிக்கப்பட்டது. 'பிரிக்கப் பட்ட துறைப்பணி'யில் ஊழியம் செய்பவர்கள் அரசியலில் தீவிரப் பங்கு கொண்டவர்களாய் இருக்கக்கூடாது என்பதும் விதிக்கப் பட்டது. பணியாளர் பொறுக்குக் குழு தேர்ந்தெடுக்கும் ஊழியர் களே 'பிரிக்கப்பட்ட துறைப்பணி'க்கு நியமிக்கப்பட்டாலும், அதில் உயர்ந்த பதவிகளுக்கு, அக்குழுக் கொடுக்கும் பட்டியலிலிருந்து, ஜனாதிபதி அவர் விருப்பம் போல நியமனம் செய்யலாம் என்பதும் அச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

# அத்தியாயம்—12

## மத்தியச் சட்ட மன்றம்

(Congress)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொது நிருவாகத்திற்கும் ஆட்சித் துறைக்கும் ஜனாதிபதி பொறுப்பு வகிப்பது போல, நாடு முழுதும், அமுல் செய்யக்கூடிய சட்டங்களை இயற்றுவது காங்கிரசையே சார்ந்தது. இச்சட்டங்கள் அரசியலமைப்பின் விதிகளுக்கும் நோக்கங்களுக்கும் உட்பட்டே செய்யப்பட வேண்டும். இவைகள் ஜனாதிபதியாலும், அவருக்குக் கீழ் உள்ள இதர பல உத்தியோகஸ்தர்களாலும் அமுலாக்கப்படுகின்றன. சட்டமியற்றல், மிக மேலான அதிகாரமாகும். வரம்பிற்குட்பட்ட குடியாட்சிக் கொள்கையடிப்படையில் இவ்வதிகாரம் காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்பு விதிகளை மீறுவனவாகவோ, புறக்கணிப்பனவாகவோ இருப்பின், அவற்றைச் செல்லத்தக்கன அல்ல என்று தள்ளக்கூடிய அதிகாரம், தலைமை நீதி மன்றத்திற்கும், இதரக் கூட்டாட்சி நீதி மன்றங்களுக்குமே உரியதாகும்.

**காங்கிரஸ்** இரு சட்ட மன்றக் கொள்கைப்படி, **மக்கள் பிரதிநிதிகள் சபை** (House of Representatives), **மேற்சபை** (Senate) என்னும் இரு பிரிவுகளையுடையது. மக்கள் பிரதிநிதிகள் சபை ஜனத்தொகை அடிப்படையிலும், மேற்சபை கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்கர்கள், பொதுவாகக் குடியாட்சி முறையைப் பின்பற்ற விரும்பினரேயானுலும், தங்களுக்கேயுரிய சில நன்மைகளையும் சலுகைகளையும் விட விரும்பவில்லை. ஆகையாலேதான் மக்களைப் பிரதிபலிப்பதாக ஒரு மன்றத்தை அமைத்துக்கொண்டு, மற்றதை ராஜ்யங்களைப் பிரதிபலிப்பதாக ஏற்படுத்தினர். இந்த ஏற்பாடு பொருளாதாரச் சமத்துவமும், தன்னம்பிக்கையும், முன்னேற்றமும் ஏற்பட உதவி செய்தது. அதாவது, பொருளாதாரத்திலும், தொழில் துறையிலும்

முன்னேற்றமடைந்த நாடுகள் (States) மற்றவைகளை நசுக்கிவிடாம லும், வேளாண்மையையே நம்பியிருப்பவைகள் மென்மேலும் வளர வும், அதே சமயத்தில் மற்றவைகளின் முன்னேற்றத்திற்கு அவை முட்டுக்கட்டையாக இல்லாத வகையிலும் மேற்சபைக்கு ஒவ்வொரு ராஜ்யமும் இரண்டு அங்கத்தினர்களை அனுப்ப வேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட்டது. இவ்வேற்பாடு, ராஜ்யங்களின் சமத்துவத்தை யும் அங்கீகரிக்கிறது என்று சொல்லுதல் மிகையாகாது.

**மக்கள் பிரதிநிதிகள் சபை (House of Representatives) அமைப்பு:** நாம் முதலில் குறிப்பிட்டவாறு குடியாட்சிக் கொள்கை முறையை அனுசரித்து இம்மன்றத்தின் உறுப்பினர்கள் மக்கள் தொகை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். முப்பதாயிரம் மக்க ளுக்கு ஒருவர் வீதம் இப்போது 435 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்: ஆனால், முப்பதாயிரத்திற்கும் குறைவாக ஜனத்தொகையுள்ள ராஜ் யங்களுள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உறுப்பினராவது இருக்க வேண்டுமென்பது அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கிறது. இம்மன் றத்திற்குத் தேர்தல் இரண்டாண்டுக்கொருமுறை நடைபெறுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் இத்தேர்தல் ஒத்திப் போடப்படுதல் கூடாது. போர் நடக்குங் காலங்களிற்கூடத் தேர்தல் நடைபெற்றே தீரும். தேர்தல் நடத்தப்பட வேண்டிய முறை, நேரம், அங்கத்தினர் களின் தகுதி இவற்றைச் சட்ட மன்றமே நிர்ணயித்துக்கொள்ளும்.

**அங்கத்தினர்களுக்கிருக்க வேண்டிய தகுதி:** அமெரிக்கக் குடியு ரிமை பெற்றவராய், ஏழாண்டுகட்குக் குறையாத காலத்திற்கு அமெரிக்காவிலேயே வாழ்ந்தவராய், இருபத்தைந்து வயதிற்குக் கீழ்ப் படாதவராய் உள்ள எவரும் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட லாம். இவை தவிர, கிரிமினல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட வரோ, அரசாங்கத்தில் வேலை பார்த்து ஊதியம் பெறுபவரோ, அல்லது சித்த சுவாதீனமில்லாதவரோ தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றவ ராவார். மக்கள் பிரதிநிதிகள் மன்றத்திற்குப் போட்டியிட விரும்பும் ஒவ்வொருவரும், எத்தொகுதிச் சார்பில் நிற்கிறாரோ, அத்தொகுதி யில் குடியிருப்பவராகவுமிருக்க வேண்டும் என்பது மற்றொரு விதி.

**பிரதிநிதி மன்றத்தின் கூட்டம்:** ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்றும் ஆண்டுவரை பிரதிநிதிகள் மன்றத்திற்கான தேர் தல் நவம்பர் மாதத்திலேயே நடைபெற்றாலும், அடுத்துவரும் மார்ச்சு மாதந்தான் அம்மன்றம் முதன்முதலாகக் கூடியது. அது வரை பழைய மன்றமே சட்டஞ்செய்யுமுரிமை பெற்றிருந்தது. இம்முறை பல தீமைகளைப் பயந்த காரணத்தால், இப்போது, அவ்வாண்டுக்குப் பிறகு ஜனவரி மாதம் முதல் வாரத்திலேயே புது மன்றம் கூடிச் சட்ட மியற்றுகிறது. இது அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட இருபதாம் மாற்றத்தினால் சாத்தியமாகிறது. இம்மன்றத்தைக் கூட்டும் அதி காரம் சாதாரணமாக ஜனாதிபதிக்கு இல்லையென்றாலும், சில அவசிய

மான காலங்களில் விசேஷக் கூட்டமொன்றைக் கூட்ட அதி காரமுண்டு. இம்முறையை அனுஷ்டித்து மேல் மன்றம் சில சமயங் களில் ஜனாதிபதியால் கூட்டப்படுகிறது. ஆனால், ஜனாதிபதிக்குச் சட்டமன்றத்தின் கூட்டத்தை ஒத்திப்போடவோ, கலைக்கவோ அதி காரம் இல்லை. சபை தன் வேலை முறை விதிகளின்படி கூடிக் கலை கிறது. அவசியமானால், சட்ட மன்றம் தன்னிஷ்டம் போல ஆண்டு முழுவதும் வேண்டுமானாலும் கலையாமல் இருக்கலாம். இங்கு, 1941-ஆம் ஆண்டில் 365 நாட்களும், 1942-ஆம் ஆண்டில் 366 நாட்களும், சபை கலையாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. இரு மன்றங்களும் ஏக காலத்தில் ஒத்திப்போடப்படலாம். முக்கியமான காலங்களில் ஒவ் வொரு சபையும் தனக்குச் சரியென்று தோன்றிய வகையில் நடந்து கொள்ளும். ஒத்திவைப்புப் பற்றி எந்த விதமான திட்ட வட்டமான முறையோ அல்லது விதியோ இல்லாததே இதற்குக் காரணம்.

**இம்மன்றத்தின் அதிகாரங்கள் :** இம்மன்றம் பொது மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதால், '**மக்கட்பிரதிநிதிகள் மன்றம்**' என்று வழங்கப்படுகிறது. மற்ற நாடுகளிலுள்ள பொது மக்கள் சபைகளைப் போல இதனுடைய அதிகாரங்கள், மேலெழுந்தவாரியாகப் பார்க் கும் போது, செனட்டைவிட (மேற்சபை) அதிகமானவை என்பது தோன்றும். இதற்கு முக்கியமான ஒரு காரணம், நிதி மசோதா முதலில் இந்தச் சபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுவதே யாகும். அல்லாமலும், முக்கியமான இதர மசோதாக்களுங்கூட முதலில் இங்குச் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டுப் பரிசீலனை முடிந்து மேற்சபைக்கு அனுப்பப்படுவதும் காரணமாகும். நிதி மசோதாவை முதற்பரிசீலனை செய்யும் உரிமை இருப்பதால் மட்டும் இதன் அதிகாரம் மேம்பட்டதாகி (சிறந்ததாகி) விடாது. ஏனெனில், மக்கள் சபையிலிருந்து நிதி மசோதா செனட்டிற்குச் சென்றவுடன், மசோதாவின் எந்தப் பாகத்தையும் திருத்தவோ, மாற்றவோ, புதி யனவாகச் சில அமிசங்களைச் சேர்க்கவோ செனட்டிற்கு உள்ள அதி காரம் மக்கள் சபையின் அதிகாரத்திற்கு எந்தவகையிலும் குறைந்த தன்று. செனட்டு, இந்த அதிகாரத்தை மிகச் சிறந்த முறையில் உப யோகித்து, தன் செல்வாக்கை மேன்மேலும் உயர்த்திக்கொள்கிற தென்றே சொல்லலாம். இதனால், மக்கள் பிரதிநிதிகள் சபை, செனட்டைவிடச் சிறப்புடையதன்று என்பது தெளிவாகிறதன்றோ !

**பிரதிநிதி சபையின் உள்ளமைப்பு :** இந்தச் சபைக்குத் தலைவர் ஒருவர் உண்டு. அவரே சபாநாயகர். பெரும்பாலும் பெரும் பான்மைக்கட்சியின் அபேட்சகரே சபா நாயகராகத் தேர்ந்தெடுக் கப்படுவது வழக்கம். சபாநாயகர் தேர்தலைப் பொறுத்த மட்டில் இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்படும் முறை பின் பற்றப்படுவதில்லை. சபாநாயகர், இங்கு நடுவு நிலையில் நின்று சபை நடவடிக்கைகளை நடத்த வேண்டுவதில்லை, ஏனென்றால், சபாநாயகர் சபையிலுள்ள

பெரும்பான்மைக் கட்சியின் தலைவராகக் கருதப்படுகிறார். அம்முறையில் அவர் கட்சியின் கொள்கைகளும், அவற்றினடிப்படையில் வரும் மசோதாக்களும் நிறைவேற ஒத்துழைக்க வேண்டும். இதனால் சில சமயங்களில் சபாநாயகர், எதிர்க் கட்சிகள் விவாதங்களிற் பங்கெடுத்துக்கொண்டு பேச முடியாதபடி விவாதங்களை முடித்துவிடுவதும் உண்டு. தம் கட்சி உறுப்பினர்கள் தாம் சொல்வதைக் கேட்கமாட்டார்கள் என்று தோன்றினாற்கூட, அவர்களையும் பேச முடியாதபடி செய்யக்கூடும். இவ்வாறு ஆரம்பத்தில் ஒரு சாதாரணத் தலைவர் என்ற முறையில் இருந்த சபா நாயகர், இன்று ஒரு சர்வாதிகாரியாய் விளங்குகிறார். உதாரணமாக, சபையின் பல்வேறு குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் அவர் தம் விருப்பம் போலத்தான் நடப்பார்.

1910—11-ஆம் ஆண்டுகளில் சபாநாயகரின் இவ்வெதேச்சாதிகார அதிகாரங்களை எதிர்த்துக் குடியரசு, ஜன நாயகக் கட்சிகளால் நடத்தப்பட்ட புரட்சிக்குப் பிறகு, சபாநாயகர் அதிகாரம் முன்பிருந்தது போல இல்லாவிடினும், இப்போதும் சபையின் தலைவர் என்ற ஒரு சிறப்பால், அவருக்கு அதிகாரம் இருக்கத்தான் செய்கிறது. உதாரணமாக, அவருக்குக் குழுக்களின் உறுப்பினர்களைப் பொறுக்கும் அதிகாரமில்லாவிட்டாலும், சபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பது, விவாதத்தின் போது ஒழுங்கும் அமைதியும் நிலைநாட்டுவது, எல்லை கடந்த சச்சரவுகளாலும் குழப்பத்தாலும் சபையின் நடவடிக்கைகளை நடத்த முடியாத போது கூட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைப்பது, அல்லது 'அடங்காப்பிடாரிகளை' வெளியேற்ற உத்தரவிடுவது போன்ற பல அதிகாரங்கள் அவருக்கிருப்பது உணரத்தக்கது.

சபாநாயகரே, சபை நடவடிக்கைகளைப் பற்றிய விதிகளை விளக்குகிறார். சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு அவர் தரும் விளக்கத்தை மாற்றும் அதிகாரமிருந்தாலும், அது மிக அரிதாகவே நடக்கக்கூடியதாகும்.

சபையில் விவாதிக்கப்படும் எத்த விஷயத்தைப் பற்றியும் வாக்கெடுப்பு நடத்தல், சபையின் தீர்மானங்களில் கடைசியாகக் கையெழுத்திடுதல், சபைக்கு ஆலோசனைக்காக உறுப்பினர்களால் விரும்பப்படும் விஷயங்களை அறிவித்தல், சபை பிறப்பிக்கும் உத்தரவுகளை அமுல் செய்தல் ஆகியவைகளும் அவர் செய்ய வேண்டுவனவே. மற்ற உறுப்பினர்களைப் போலவே இங்குச் சபாநாயகர் விவாதங்களில் தம் கருத்துகளை எடுத்துச் சொல்லலாம்; ஆனால், குறிப்பிட்ட சமயங்களிலேதான் தம் வாக்கை அளிக்க முடியும். உதாரணமாக, எத்தரப்பிற்கும் வெற்றி தோல்வி நிர்ணயிக்க முடியாதபடி வாக்கின் முடிவு ஏற்பட்டாலோ, அல்லது குறிப்பிட்ட தீர்மானங்கள் பற்றி

வாக்குகள் பதிவு செய்யப்படும் போதோதான் அவர் வாக்களிக்க முடியும்.

சபாநாயகருக்கு உதவியாக, சபையின் அலுவல்களைக் கவனிக்க, மற்றச் சட்ட சபைகளிலுள்ளது போல இங்கும் பலர் அலுவலிருக்கின்றனர்.

# அத்தியாயம்—13

## மேற்சபை

### Senate

இங்கிலாந்தில் **'பிரபுக்கள் சபை'** என்றும், இந்தியாவில் **'ராஜ்ய சபை'** என்றும் கூறப்படும் மேற்சபை, அமெரிக்காவில் **'செனட்டு'** என்று வழங்கப்படுகிறது. இச்சபை கூட்டாட்சித் தத்துவத்தின் சின்னமாய்த் திகழ்கிறதென்றால் அது முற்றிலும் உண்மையே. இம் மன்றத்திற்கு, அமெரிக்கக் கூட்டாட்சியிலுள்ள ஒவ்வோர் அங்க நாடும் அளவில் சிறியதாய் அல்லது பெரியதாய் இருந்தாலும், சம எண்ணிக்கை உறுப்பினர்களை அனுப்பும்.

**அமைப்பு :** இப்போது அமெரிக்கக் கூட்டாட்சியில் ஐம்பது அங்க நாடுகளிருக்கின்றன. ஓர் அங்க நாட்டிற்கு இரண்டு பிரதிநிதிகள் வீதம் மொத்தம் நூறு பேர் இருக்கின்றனர். செனட்டு நிரந்தரமானது. ஆனால், செனட்டர்களில் மூன்றிலொரு பகுதியினர் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வு பெறுகின்றனர். இதனால் பெறப்படுவதுயாதெனில், 'செனட்டு எப்போதும் இருக்கின்றது. அது கலைக்கப் படுவதில்லை. ஆனால், செனட்டர்கள் புதியவர்களாக வந்துகொண்டிருப்பார்கள், 'என்பதே. ஒரு முறை பதவி வகித்தவர்கள், மீண்டும் மீண்டும் எத்தனை முறை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படலாம். இதனால், அறிவாற்றல் மிக்க செல்வாக்குள்ளவர்கள் தொடர்ச்சியாகப் பதினெட்டு அல்லது இருபத்தோராண்டுகள் கூடச் செனட்டர்களாய் இருக்க முடிகிறது. இவர்கள் சட்ட சபை அலுவல்களில் சிறந்த அறிவும் அனுபவமும் அடைகிறார்கள் ஆகையால், இவர்களது கருத்துக்குச் சிறந்த மதிப்புத் தரப்படுகிறது. இதுவுமன்றி, இவர்கள் ராஜ்யங்களின் பிரதிநிதிகள் என்பது உண்மையேயானாலும், நாட்டின் பிரதிநிதிகள் என்றே எண்ணிச் செயலாற்றுவதால் ஒற்றுமையாக நாட்டு முன்னேற்றத்திற்கு வழி கோலுகின்றார்கள்.

செனட்டு உறுப்பினர்கள் எந்த ராஜ்யத்திற்காகத் தேர்ந்தெடுக் கப்படுகிறார்களோ, அங்கேயே வாழ்பவர்களாய் இருக்க வேண்டும்; முப்பது வயதிற்குக் குறையாமலும், ஒன்பதாண்டுகள் அமெரிக்காவில் வாழ்ந்தவராகவும், குடியுரிமை பெற்றவராகவும் இருக்க வேண்டும். மற்றப்படி மக்கள் சபைப் பிரதிநிதிகளுக்குக் கூறப்பட்ட தகுதிகள், தேர்தலில் கடைப்பிடிக்கப்படும் முறையே இங்கும் பின்பற்றப் படு கின்றன.

**செனட்டர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை :** அரசியலமைப்பு விதி களின்படி, முதலில் செனட்டர்கள், ராஜ்யங்களின் சட்ட மன்றங் களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சட்ட மன்றங்களே, செனட் டர்களைத் தேர்ந்தெடுத்தால், தகுதியும் திறமையும் உடையவர்களே செனட்டர்களாக முடியும் என்பதும், சம்பந்தப்பட்ட ராஜ்ய அரசாங் கங்கள், மத்திய அரசாங்கத்திடம் தாங்கள் ஆரம்பத்தில் காட்டிவந்த நம்பிக்கையின்மையொழிந்து, ஒற்றுமை ஏற்பட வழியுண்டாகும் என்பதுமே அவ்விதிகள் கொள்ளப்பட்டதன் காரணங்களாகும். எதிர்பார்த்த இந்த உயர்ந்த நோக்கங்களுக்குத் தீமையே பரிசாகக் கிடைத்தது. காரணம், அரசியற்கட்சிகளும், தனி மனிதர்களும் தங்கள் சொந்த இலாபத்திற்காகவோ, செல்வாக்கிற்காகவோ இந்த முறையைக் கையாண்டார்கள். சட்ட மன்றங்களில் உறுப்பினர்கள் குறைவாகவே இருப்பார்கள். அரசியற்கட்சிகள், கட்சிக் கட்டுப்பாடு களைப் பயன்படுத்திக்கொண்டு, தங்களால் பொறுக்கப்பட்டவர் களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்றன. தனி மனிதர்கள் செல்வந் தர்களானால், தங்கள் பணப் பலத்தால் செனட்டர்களானார்கள். இவ் வாறு ஏற்பட்ட பல சூழ்நிலைகளால் சில ராஜ்யங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட முடியாமல், அவற்றின் இடங்கள் செனட்டில் காலியாய்க்கூட இருக்க நேரிட்டது. 1890-ஆம் ஆண்டு முதல் 1912-ஆம் ஆண்டுவரையில் கிட்டத்தட்டப்பதினொருராஜ்யங்களுக்கு முழுப் பிரதிநிதித்துவம் செனட்டில் இல்லை. 1901-ஆம் ஆண்டு, **டெலாவேர்** (Delaware) ராஜ்யத்தால் ஒரு பிரதிநிதியைக்கூட அனுப்ப இயல வில்லையென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இக்கொடிய முறை, 1913-ஆம் ஆண்டில் அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட 17-ஆம் மாற்றப்படி ஒழிக்கப்பட்டது. இம்மாற்றத்தின்படி செனட் டர் இருவரும் மக்களாலேயே ஆறு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டனர். கீழ்ச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கத் தகுதி பெற்ற வாக்காளர்களே செனட்டர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டு மென்பது விதிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணங்களால் இடைக்காலத்தில் செனட்டில் ஏற்படும் காலியிடங்களுக்குப் புதியவர்களை மக்கள் தேர்ந்தெடுக்கும் வரை, சம்பந்தப்பட்ட ராஜ்ய கவர்னர்களே நியமிக்கலாம் என்றும் வழி செய்யப்பட்டது.

**செனட்டுத் தலைவர் :** உதவி ஜனாதிபதி செனட்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். அவர் செனட்டின் உறுப்பினரல்லர்; செனட்டில் பெரும்பான்மையாயுள்ள அரசியற்கட்சியைச் சேர்ந்தவராய் இருப்பார் என்பதும் நிச்சயமில்லை. மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாய் இருந்தாலும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர் உதவி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரே செனட்டிற்குத் தலைமை வகித்துக் கூட்டங்களை நடத்துவார். இதனால், அவர் செனட்டின் தலைவர் அல்லர் என்பது தெளிவு. அவர் செனட்டுக் கமிட்டிகளுக்கு உறுப்பினர்களை நியமிக்க இயலாது. அவர் வாக்கெடுப்பினல் எத்தரப்பினருக்கும் வெற்றி தோல்வி கிடைக்காத வாறு இருக்கும் சமயங்களிலேதான் தம் வாக்கையளிக்கலாம். சபை நடவடிக்கைகளில் அவர் நடுவுநிலைமை பிறழாது நடந்துகொள்ள வேண்டுவது முறை. அவர் செனட்டின் தலைவர் என்று கருதப்படுவதில்லை. ஜனாதிபதி பதவி காலியாகும்போது உதவி ஜனாதிபதியே ஜனாதிபதியாவார். அப்போது, செனட்டர்கள் தங்களுள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். இத்தாற்காலிகத் தலைவர், செனட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் கட்சியைச் சேர்ந்தவராய் இருப்பாராதலால், இவர் மிகவும் சக்திவாய்ந்தவராய் இருப்பார். இவருக்கு எல்லாப் பிரச்சினைகளிலும் ஓட்டளிக்கும் உரிமையுண்டு.

செனட்டிற்கும் மக்கள் சபைக்கும் ஒரு வித்தியாசமுண்டு. ஓர் உறுப்பினர், செனட்டில், எந்த ஒரு பொருள் பற்றியும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். மக்கள் சபையில் அது முடியாது. அங்கு உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் பேச்சை முடித்துவிடவேண்டும். இம்மாதிரி பேசும் நேரம்பற்றிச் செனட்டில் தடையில்லாததால் சிலருக்குப் பிடிக்காத மசோதாக்கள் பற்றிய ஆலோசனையை உறுப்பினர்கள் பேசியே தீர்த்துவிட முடிகிறது. உதாரணமாக, 1953-ஆம் ஆண்டில் செனட்டர் **வெயின் மோர்ஸ்** (Wayne Morse) என்பவர் சுமார் 22 மணி நேரம் தொடர்ச்சியாகப் பேசினர். இம்முறை, மசோதாக்கள் நிறைவேற்றத்தைத் தடைப்படுத்துவதை உணர்ந்து, செனட்டு, புதுவிதியொன்றை ஏற்படுத்தியது. அதன்படி மூன்றிலிரண்டு பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலின் பேரில் ஒரு செனட்டர் உயர்ந்தபட்சம் ஒருமணி நேரந்தான் பேசலாம். அது முதல் 'காலங்கடத்தும்' இம்முறை ஓர் அரிய நிகழ்ச்சியாகத்தான் பின்பற்றப்படுகிறது.

**செனட்டின் சிறப்பு அதிகாரங்கள் :** சட்ட ஆக்கம் காங்கிரசைப் பொறுத்தது என்பதை முன்பே குறிப்பிட்டோம். சாதாரண மசோதாக்களைப் பொறுத்த வரையில் இரு சபைகளுக்கும் மற்ற நாடுகளிலுள்ளதைப் போன்றே இங்கும் சம அதிகாரங்கள் உண்டு. நிதி மசோதாக்களிற்கூடச் செனட்டு உலகத்து மற்ற மேற்சபைகளைக்

காட்டிலும் சிறப்பதிகாரங்களைப் பெற்றிருக்கிறதெனலாம். இதனுல், இம்மன்றத்தின் செல்வாக்கு ஈடு இணையற்றதாகும். அப்படி என்ன சிறப்பதிகாரங்கள் இச்சபைக்கிருக்கின்றன என்பதைப் பார்ப்போம்:

சாதாரண மசோதாக்கள் அல்லாத நிதி மசோதாக்கள் முதலில் செனட்டில் பிரேரேபிக்கப்பட முடியாது. மக்கள் சபைக்கே அந்த உரிமையுண்டு. ஆனுல், நிதி மசோதாவை, தன் விருப்பப்படி மாற்றவோ, திருத்தவோ இதற்கு அதிகாரமிருக்கிறது. இதன்படி, நிதி மசோதாவைத் தன் கருத்திற்கு ஏற்ப மாற்றி மக்கள் சபைக்கு அனுப்புவதால், இதன் சிறப்பு மேன்மேலும் வளருகிறது. இதை வலியுறுத்திக் கூறுவது போல அமைந்துள்ளது **பேராசிரியர் பைனர்** (Prof. Finer) என்பார் கூறியிருப்பது! "நிதி மசோதாக்கள் முதலில் மக்கள் சபையிலேயே சமர்ப்பிக்கப்பட்டாலும், மேற்சபையின் ஆலோசனைக்கு அவை வரும்போது, அவற்றின் எந்த அமிசத்தையும் மாற்றும் உரிமை மேற்சபைக்குண்டு. தன் கருத்தைக் கீழ்ச்சபை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும் என்ற நிலைக்கு இந்த அதிகாரத்தைச் செனட்டுப் பயன்படுத்திக்கொள்வதால், கீழ்ச்சபையைவிட அதிக அதிகாரம் உடையதாய் விளங்குகிறது," என்று அவர் கூறுகிருர். இங்ஙனம் சிறப்பு அதிகாரமுடைய மேற்சபை அமெரிக்கா ஒன்றினைத் தவிர, இந்தியாவிலோ, இங்கிலாந்திலோ, அல்லது வேறு எந்த நாட்டிலோ காண முடியாத ஒரு விந்தையேயாகும்.

இரண்டாவது, செனட்டின் சம்மதமில்லாமல் ஜனுதிபதி சில காரியங்களைச் செய்ய முடியாதென்பது. உதாரணமாக, உயர்ந்த பதவிகளுக்கு—குறிப்பாகத் தூதுவர்கள், மந்திரிகள் முதலியோரை நியமிக்கும் முன் செனட்டின் சம்மதம் பெற்றே செய்ய வேண்டும். முன் கூட்டிச் செனட்டின் சம்மதம் பெற முடியாவிட்டால், பிறகாவது செனட்டின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். இப்போதெல்லாம் செனட்டின் சம்மதம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் ஜனுதிபதி நியமனம் செய்துவிடுவார். பிறகு செனட்டு அதை ஆமோதிக்கும். உதாரணமாக, ஜனுதிபதி **கென்னடி** சமீபத்தில் பேராசிரியர் **கால்பிரெய்த்** என்பவரை அமெரிக்கத் தூதராக இந்தியாவில் நியமித்தார். அவருடைய நியமனத்தைச் செனட்டின் வெளி விவகாரக் குழு பிறகே ஊர்ஜிதம் செய்தது. இங்ஙனமே, ராஜ்யங்களில் பணியாற்றவேண்டிய கூட்டாட்சிப் பணியாளர்களை நியமிப்பதற்குமுன், சம்பந்தப்பட்ட ராஜ்யங்களைச் சேர்ந்த செனட்டர்களைக் கலந்து ஆலோசித்து ஜனுதிபதி நியமனம் செய்கிருர். அல்லாவிட்டால், ஜனுதிபதி செய்த நியமனமொன்றை, செனட்டு, தனக்கு விருப்பமில்லாவிட்டால் நிராகரித்துவிடும் அபாயமுண்டு. உதாரணமாக, இம்முறையை விரும்பாத ஜனுதிபதி **ரூஸ்வெல்டு** 1938ல் வர்ஜீனியா ராஜ்யத்தின் பெடரல் நீதி மன்றத்திற்குச் சம்பந்தப்பட்ட செனட்டர்களைக் கலந்தாலோசியாமலே ஒருவரை நியமனம் செய்தார்.

இதை விரும்பாத **கார்ட்டர் கிளாசு** (Carter Glass) என்னும் செனட்டர், தம் சகாக்களின் உதவிகொண்டு, செனட்டு அந்த நியமனத்தை ஆமோதிக்காதபடி செய்துவிட்டார். இதில் கவனிக்க வேண்டுவது என்னவென்றால், ஆறு செனட்டர்களே ஜனாதிபதியை ஆதரித்தார்கள் என்பது. செனட்டர் கார்ட்டரும் அவருடைய தோழர்களுங் கூட ஜனாதிபதியைப் போல மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே யாவார்கள் என்பதும் இங்கு நோக்கத் தக்கது.

மூன்றாவதாக, பிறநாடுகளோடு அமெரிக்காவின் சார்பாக, ஜனாதிபதி செய்துகொள்ளும் எந்த உடன்படிக்கையையும் செனட்டின் ஆலோசனை அல்லது சம்மதத்தின் பேரிலேதான் செய்துகொள்ளலாம். செனட்டின் ஒப்புதலில்லாத எந்த உடன்படிக்கை அல்லது ஒப்பந்தங்களையும் சட்டபூர்வமாக நடைமுறையில் நிறைவேற்றமுடியாது. ஜனாதிபதி செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் பெரும்பாலும் செனட்டால் நிராகரிக்கப்படுவதில்லையென்றாலும், சிற்சில சமயங்களில் ஆமோதிப்புக் கிடைக்காமலும் போகலாம். மேலும், மூன்றிரண்டு பெரும்பான்மை அதற்குச் செனட்டில் தேவைப்படுகிறது என்பதும் இங்குக் கருதத்தக்கது. செனட்டின் சம்மதம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில், முதலாம் உலகப் பெரும்போர் முடிவுற்றதும் ஜனாதிபதி **வில்ஸன்** அமெரிக்காவின் சார்பில் **வர்சேல்சு சமாதான உடன்படிக்கையையும் உலக நாடுகளின் கழக நிறுவனத்தையும்** (Covenant of League of Nations) ஒப்புக்கொண்டார். உண்மையில் வில்ஸனுடைய 14 அம்சக் கொள்கைப்படிதான் 'உலக நாடுகளின் கழகம்' (The League of Nations) தோன்றியது எனலாம். ஆனால், செனட்டு வில்ஸனின் ஒப்பந்தத்தை நிராகரித்துவிட்டது. அமெரிக்கா அதில் ஓர் உறுப்பாகச் சேர முடியவில்லை. அமெரிக்க மக்களுட் பெரும்பாலாரின் சம்மதம் 'உலக நாடுகளின் கழகத்தை' ஆதரிப்பதாகவும், ஜனாதிபதி வில்ஸனைப் பாராட்டுவதாகவுமிருந்திருக்கலாம். செனட்டு, பொது மக்கள் கருத்தையொட்டியேதான் தன் முடிவை அளிக்கவேண்டுமென்ற நியதி எதுவுமில்லாததால், செனட்டு அப்போது அவ்வாறு செய்தது. எனவே, இதனாலும் செனட்டு அதிக அதிகாரம் உடையதென்பது புலனாகிறது. **இலாஸ்கி** (Laski) என்னும் பேரறிஞர், '**அமெரிக்க ஜனாதிபதி**' என்னும் தம் அரிய நூலில், செனட்டின் இவ்வதிகாரத்தைப் பற்றி எழுதும்போது, "அமெரிக்க செனட்டு வெளிவிவகாரங்களில் பெற்றுள்ள இவ்வளவு அதிகாரங்களும் செல்வாக்கும் உலகத்தில் வேறு எந்தச் சட்டசபையும் பெற்றில்லை" என்று குறிப்பிடுகிறார்.

கடைசியாக, தேசத் துரோக நடவடிக்கைகளின்கீழ் வரும் வழக்குகளை (Cases under Impeachment) விசாரித்துத் தீர்ப்புச் சொல்லும் நீதிமன்றமாகவும் செனட்டு விளங்குகிறது. அரசியலமைப்புச் சட்டப்படி, ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, மற்ற உயர் அதிகாரிகள்மீது

கொண்டுவரப்படும் தேசத் துரோக, இலஞ்ச ஊழல் வழக்குகளை மக்கள் பிரதிநிதிகள் சபையின் முன் கொண்டு வரும்போது அது விசாரணை செய்து குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர்களைப் பதவியிலிருந்து விலக்கும். ஜனாதிபதிமேல் இதுமாதிரி வழக்குகள் கொண்டு வரப்பட்டால், தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதியே செனட்டிற்குத் தலைமை வகிப்பார்.

மேற்கூறப்பட்ட தேசத் துரோகக் (Impeachment) குற்றச்சாட்டு மிகச்சாதாரணமானதன்று. ஏனென்றால், 'இம்முறை நூறுடன்எடையுள்ள துப்பாக்கியொன்றைப் போன்றது. இதை நிலைக்குக் கொண்டு வர மிகச் சிக்கலான சில கருவிகள் தேவைப்படும். இது மாத்திரமல்லாமல், இதை இயக்குவதற்கு மிக அதிகமான மருந்தும், சுடுவதற்கு மிகப் பெரிய குறியும் தேவைப்படும்," என்று **பிரைசு** (Bryce) என்னும் அறிஞர் கூறியுள்ளார். இம்மாதிரி வழக்குகளில் பன்னிரண்டு தடவைகளில் செனட்டு நீதிமன்றமாகப் பணியாற்றியிருக்கிறது; நான்கு வழக்குகளில் குற்றம் செய்யப்பட்டதாகத் தீர்ப்பளித்திருக்கிறது. இவ்வழக்குகளில் மிகவும் பிரசித்தி பெற்றது, ஜனாதிபதி **ஆண்ட்ரூ ஜான்ஸன்**மேல் 1868-ஆம் ஆண்டில் நடைபெற்றதாகும். ஆனால், அவர் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டார் என்பது மிகையாகாது, ஒரு வாக்குப் பெரும்பான்மையுடன், அவர்மேல் எழுந்த வழக்கைக் குற்றம் நிரூபிக்கப்படவில்லையென்று செனட்டுத் தள்ளியது.

**இதர காரணங்கள்:** சிறியவை என்று கூறக்கூடிய உலகத்திலுள்ள மேற்சபைகளுள் இதுவுமொன்று. நூறு உறுப்பினரே இதிலுள்ளனர் என்பதை நாம் முன்னரே கண்டோம். இது இங்கிலாந்தின் பிரபுக்கள் சபையைவிடப் பன்மடங்கு சிறியது. அங்கு நடைபெறுவது போல அல்லாமல், இங்குச் சபை நடவடிக்கைகளில் உறுப்பினர் பேரார்வம் காட்டுகின்றனர். குறைந்த அளவு உறுப்பினர்களேயிருப்பதால், ஒவ்வொருவருக்கும் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இவர்கள் சுறுசுறுப்பாகவும் கூட்டுறவு மனப்பான்மையுடனும் தங்கள் கடமைகளைச் செய்வதால், வேற்றுமைகள் குறைய வாய்ப்பு ஏற்படுவதுடன் பயனுடைய காரியங்களை ஆற்ற இயலுகிறது. நிருவாகத் துறை—அதிலும் சிறப்பாக ஜனாதிபதி—செனட்டுடன் சில முக்கியமான காரியங்களில் பிணைக்கப்பட்டிருப்பதாலும், மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு அதில் பங்கில்லாததாலும் செனட்டுப் பொறுப்புடையதாய் இருக்கிறது. செனட்டர்கள் திறமைசாலிகளாய் இருப்பதற்குக் காரணம், பல ஆண்டுகள் செனட்டில் அங்கம் வகிக்க வாய்ப்பிருப்பதும், பெரிய வாக்காளர் தொகுதிகளால் (ராஜ்யமே தொகுதி) தேர்ந்தெடுக்கப்படுவதால் பணம் மட்டுமன்றி, அறிவு ஆற்றலும் உடையவர்களைத் தேர்ந்தெடுக்கப்படுவதும் பிறவுமாகும். பிரதிநிதிகள் சபைக்கும் செனட்டிற்கும் எந்த ஒரு மசோதா மீதேனும் கருத்துவேற்றுமை

உண்டாகி அது தீர்க்கமுடியாதபடி பிளவு முற்றிஞல், அதற்கு வழி. வகைகள் காண இரு சபைகளாலும் நியமிக்கப்படும் குழுக்களில் செனட்டர்கள் வல்லமையுடனும் தர்க்கரீதியாகவும் பேசித் தங்கள் கொள்கைகளை நிலைநாட்டிக்கொள்வது, அதன் சிறப்பை உயர்த்திக் காட்டுவதோடன்றி, மக்கள் சபைக்கு 'வழிகாட்டி'யாகவுமிருக் கிறது. **இலூசு** (Luce) என்பாரும் தாம் எழுதியுள்ள **'சட்டசபைகள்'** (Legislative Assemblies) என்னும் நூலில் இக்கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

செனட்டின் சிறப்பைப்பற்றிக் கூறும்போது **பிரைசு** என்பார், "அரசியலமைப்பு வகுத்த மேதைகளின் சிறந்த படைப்பு இது," என் றும்; **மேரியட்டு** என்பார் " இங்கிலாந்து பெருமக்கள் சபையினும் சுவை மிக உடையது," என்றும், "இதன் ஒவ்வோர் உறுப்பும் அரசி யலமைப்பு எழுதிய அறிஞர்களின் எண்ணங்களையும் முயற்சிகளையும் பறை சாற்றும் பளிங்கென விளங்குவது," என்றும் கூறியுள்ளனர்.

## அத்தியாயம் — 14

# இரு சபைகளுக்கும் பொதுவான அதிகாரங்கள்

செனட்டும், மக்கள் பிரதிநிதிகள் சபையும் சேர்ந்து **'காங்கிரஸ்'** என்று அமெரிக்காவில் வழங்கப்படுவதையும், அவற்றுள் ஒவ்வொன்றின் அமைப்பு அதிகாரங்கள் முதலான பலவற்றையும் முன் அத்தியாயத்தில் பார்த்தோம். இவ்வத்தியாயத்தில் இவ்விரு மன்றங்களுக்கும் (Congress) பொதுவான சில அதிகாரங்களைப் பற்றிப் பார்ப்போம். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொது நிருவாகத்திற்குக் காங்கிரசு ஒன்றே சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது என்பதைக் கண்டோம். இதையன்றிக் குறிப்பதிகாரக்கொள்கை அடிப்படையில் எழுகின்ற சில அதிகாரங்களையும் இது செலுத்துகிறது. அதிகாரப் பிரிவினைக் கொள்கை முழுக்க முழுக்கக் கடைப்பிடிப்பதானால், சட்ட மன்றம் சட்டமியற்றுவதைத் தவிர வேறெந்த அதிகாரத்தையும் செலுத்த வல்லதன்று. ஆனால், சட்டமியற்றலைப் போன்ற சிறப்புடைய இதர அதிகாரங்களையும்—அதாவது சமநிலைத் தடையீட்டுக் கொள்கையடிப்படையிலே தான் செலுத்தக்கூடியவை என்று நினைக்கும் அதிகாரங்களையும் செலுத்துகின்றது. அவை பின் வருமாறு:

முதலாவது, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது அல்லது அதற்கு விளக்கந் தருவது கூறத்தக்கதாகும். அரசியலமைப்பைத் திருத்தப் பல முறைகள் கூறப்பட்டிருந்தாலும், சட்டமன்றத்தின் முறையே, அதாவது சட்டமன்றத்தால் மாற்றக்கூடிய முறையே, பின்பற்றப்படுகிறது. சட்டமன்றமியற்றும் சட்டங்களை மாற்றியமைத்துக்கொள்ளும் உரிமை அதற்கேயுண்டு. இதனால், அரசியலமைப்புச் சட்டம் உயிருள்ள அரசியற்காவியமாய் வளர்கிறது.

இரண்டாவது, ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆகியவர்கள் தேர்தலைப் பற்றியது. ஜனாதிபதியோ, உதவி ஜனாதிபதியோ அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள விதி முறைகள்படி குறித்த காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட முடியாவிட்டால்,

காங்கிரஸ் இயற்றும் சட்ட திட்டங்களுக்குட்பட்டே தான் அப்பதவிகளைப் பூர்த்தி செய்யலாம். இங்ஙனமே, காங்கிரஸ், தன் அமைப்பு எவ்வாறிருக்க வேண்டும் என்பதையும், உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய தகுதி, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய முறை, காலம் இவற்றையும், தான் இயற்றும் சட்ட மூலமாக விதிக்கவோ ஒழுங்கு படுத்தவோ முடியும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானுல், செனட்டுக்கும், மக்கள் பிரதிநிதிகள் சபைக்கும் தத்தம் அமைப்பு, உறுப்பினர்களின் யோக்கியதாமிசங்கள் பற்றி, மற்றதன் குறுக்கீடு இல்லாமல் செய்துகொள்ள உரிமையுண்டு எனலாம். உதாரணமாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை, செனட்டோ—மக்கள் பிரதிநிதிகள் சபையோ, அவர், சில விதி, நடை முறை பற்றிய தன் சட்டங்களைத் திருத்தி செய்பவராக இல்லையென்று கூறி, அவர் சபையில் உட்காராதபடி தடுத்துவிடலாம்.

மூன்ருவது, உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள், உயர் பதவிகளுக்கு நியமனம் செய்தல் பற்றியதாகும், செனட்டின் சிறப்பதிகாரங்கள் பற்றிக் கூறும்போது அதற்கு இவ்வதிகாரங்களை ஜனுதிபதியுடன் பகிர்ந்துகொள்ள உரிமையிருப்பதாகக் கூறினேம். உள்நாட்டில் பணியாற்ற வேண்டிய கூட்டாட்சிப் பணியாளர்களை நியமனம் செய்யுமுன் ஜனுதிபதி சம்பந்தப்பட்ட ராஜ்யங்களிலிருந்து வரும் செனட்டர்களைக் கலந்தாலோசித்த பிறகே செய்தல் மரபு என்பதும் கண்டோம். அங்ஙனம், ஜனுதிபதி எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ, அந்தக் கட்சியைச் சேர்ந்த செனட்டர்கள் சில ராஜ்யங்களிலிருந்து இல்லாவிட்டால், மக்கள் பிரதிநிதி சபையிலுள்ள, அந்த ராஜ்யத்துப் பிரதிநிதிகளைக் கலந்துகொண்டு செய்யும் வழக்கம் இப்போது சில சமயங்களில் பின்பற்றப்படுகிறது. சட்டமன்றம், பொதுவாக, உலக விவகாரங்களிலும், அவற்றில் அமெரிக்காவின் பங்கு என்ன என்பதிலும் அக்கறை காட்டுகிறது. இவ்வுண்மை ஜனுதிபதி சட்டமன்றத்திற்கு அனுப்பும் 'செய்தி'யில் அடங்கியிருக்கும் கருத்துகளைப் பார்த்தாலே விளங்கும். பிற நாடுகளுக்கு அமெரிக்கா செய்யும் பொருளாதார இராணுவ உதவி, அந்த நாடுகள் அமெரிக்காவுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தைப் பொறுத்துச் செய்யப்பட்டு வந்தது. இன்று சட்ட மன்றத்தின் சட்டம் இல்லாமல் அவ்வுதவிகள் செய்யப்பட முடியாது. ஜனுதிபதி கேட்டுக்கொள்ளும் உதவியின் அளவைக் குறைக்கவோ, கூட்டவோ சட்ட மன்றத்திற்கு அதிகாரமிருக்கிறது.

நான்காவது, சட்ட மன்றத்தின் ஒவ்வோர் அங்கமும், தன் உறுப்பினர்களின் நடத்தையைப் பற்றித் தானே விசாரித்துத் தண்டனை கொடுக்கலாமேயல்லாமல், வேறு யாருக்கும் அந்த உரிமை இல்லை. இதைத் தவிர, சட்ட மன்றங்களின் போக்கைக் கண்டிக்கவோ, அவற்றின்மேல் எதிர் அல்லது அவதூறு பிரசாரம் செய்

யவோ எவருக்கும் உரிமை இல்லை. அப்படிப் பேசுபவர்களைத் தம் முன் தோன்றுமாறு கட்டளையிடவும், விசாரித்துத் தக்க தண்டனை விதிக்கவும் அவற்றுக்கு அதிகாரமிருக்கிறது. சட்டமியற்றுவதற்காகவோ அல்லது வேறு விஷயங்கள் பற்றிக் கருத்தறிவதற்காகவோ, எவரையும் தம் முன் ஆஜராக வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கலாம்.

ஐந்தாவது, சட்ட மன்றம் ஆட்சித்துறைகளை ஏற்படுத்தும் அதிகாரமுடையதாதலால், அவற்றின் வேலை முறைகள், சாதனைகள் தோல்விகள் பற்றி அது அறிந்துகொள்வதோடு அவற்றில் பணியாற்றும் ஊழியர்களைக் கண்காணிக்கவும் செய்கிறது; கடைசியாக ஆட்சித்துறைகளின் வேலைகளை மேற்பார்வையிட்டு, தேவையான மாறுதல்களையும் முன்னேற்றத்திற்கான யோசனைகளையும் கூறக் குழுக்களையும் நியமிக்கிறது.

**சட்டப் பணிகள் :** சட்ட மன்றத்தின் முதன்மைப்பணி சட்டமியற்றுதல். அரசியலமைப்பு, சட்ட மன்றம் எவ்வெத்துறைகளில் சட்டமியற்றலாம், எவ்வெவற்றில் இயற்ற முடியாதென்றெல்லாம் கூறுகிறது. சட்டமன்றத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் வரம்புக்குட்பட்ட அரசாங்கக் கோட்பாட்டையொட்டியனவேயாகும். எனவே, காங்கிரஸ் அதற்கெனத் திட்டவட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள துறைகளிலும், இல்லையெனத் தெளிவாகக் கூறப்படாமல் இருக்கும் வகைகளிலும் சட்டம் செய்யலாம். காங்கிரசுக்கு இல்லையெனச் சந்தேகமறக் கூறப்படாமல் இருக்கும் துறைகளில், அது செய்யும் சட்டங்கள் குறிப்பதிகாரக் கொள்கை விளக்கத்தால் பெறப்படுபவை.

**குறிப்பதிகாரக் கொள்கை வழி அதிகாரங்கள் :** அரசியலமைப்பு, காங்கிரஸ் சட்டமியற்றக் கூடிய துறைகளைத் தொகுத்துக் கூறியதோடு, அது இயற்றும் சட்டங்களை நிறைவேற்ற அவசியமான இதர சட்டங்களையும் செய்யலாம் என்று கூறுவதைத்தான் குறிப்பதிகாரக் கொள்கை வழி எழும் அதிகாரமென்று விளக்குகின்றனர். சான்ருக, காங்கிரசுக்கு 'அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாங்கு' (The Bank of the U. S.) ஏற்படுத்த நேரிடையாக அதிகாரம் இல்லை. ஆனல், 'கடன் வாங்கவும் கொடுக்கவும் காங்கிரசுக்குள்ள அதிகாரத்தில்' இந்த பாங்கு ஏற்படுத்தக் காங்கிரசுக்கு அதிகாரமுண்டென ஜனதிபதி ஜெபர்சனும் அவர் நண்பர்களும் கூறினுர்கள். இவ்விஷயம் தலைமை நீதிமன்றத்திற்குச் சென்றபோது, தலைமை நீதிபதி மார்ஷலும் அவருடைய சகாக்களும் 'குறிப்பதிகாரக் கொள்கைப்படி' இவ்வதிகாரம் காங்கிரசுக்கு உண்டென ஆமோதித்தார்கள். அப்போது தலைமை நீதிபதி குறிப்பிட்டதாவது, "முடிவு சரியானதாகவிருக்கட்டும், அரசியலமைப்பிற்குட்பட்டதாக இருக்கட்டும், அரசியலமைப்பின் நோக்கத்திற்கு மாறுபடாமல் நற்பலன் தரக் கூடிய

காரியங்களைச் செய்ய எடுத்துக்கொள்ளும் முயற்சி எதுவானாலும் சட்டத்தின்பாற்பட்டதே," என்பது. இம்முடிவு தேசீய அரசாங்கம் எதற்காக ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறவும், கூட்டாட்சி அரசைப் பலப்படுத்தவும் உற்ற துணையாயிற்று என்று கூறுதல் மிகையாகாது.

இந்தக் குறிப்பதிகாரக் கொள்கையைப் பயன்படுத்திக்கொண்டு காங்கிரஸ் அடிக்கடி—குறிப்பாக முதல் உலகப் பெரும்போர் நடந்த போதும், 1933ல் ஏற்பட்ட பொருளாதார மந்தக் காலத்திலும், இரண்டாம் உலகப் பெரும்போர் நடைபெற்ற போதும் - 'அவசர அதிகாரங்கள்' என்று அரசியலமைப்பில் காணப்படும் தொடரை வியாக்கியானம் செய்யும் உரிமை தனக்கே உண்டு என்று சொல்லித் தனக்குத் தரப்படாத பல அதிகாரங்களை மேற்கொண்டது குறிப்பிடத் தக்கது. இவ்வதிகாரம் பெரிதளவு வளர்ந்து, காங்கிரசின் செல்வாக்கும் உயர்ந்தது. எனினும், ஆற்றல் மிக்க, மக்கள் ஆதரவுடைய ஜனாதிபதிகள் இவ்வதிகாரத்தடிப்படையில் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களை எப்படிப் புறக்கணிக்கலாம் என்ற வழிகளையும் தெரிந்துதான் வைத்திருந்தார்கள்.

காங்கிரசுக்குக் குறிப்பதிகாரத்துடன், கூட்டாட்சியரசின் வரவு செலவு கணக்குகளைச் சரிபார்த்து ஆமோதிக்கும் அதிகாரமுமிருந்தது. காங்கிரசின் அனுமதியின்றி, கூட்டாட்சி நிதியைச் செலவழிக்க யாருக்கும் உரிமை இல்லை. இந்தத்துறையில் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கிருக்கும் செல்வாக்கு, செனட்டுச்சபைக்குள்ளதைவிடக் குறைவு என்னும் உண்மையை முன்பே கூறியுள்ளோம்.

# அத்தியாயம்—15

# சட்டமியற்றல்

## Law Making

**சட்டமியற்றும்** அதிகாரம் காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை முன்பே கண்டோம். அதுவே அதனுடைய பிரதான வேலையுமாகும். காங்கிரசின் பெரும்பான்மையான வேலை, மசோதாக்கள், தீர்மானங்கள் முதலியவற்றைப் பைசல் செய்வதிலேயே முடிந்துவிடுகிறதெனலாம். மசோதாக்களுக்கும், தீர்மானங்களுக்குமுள்ள வேறுபாட்டைப் பற்றி இவ்வத்தியாயத்தின் இறுதியில் பார்ப்போம்.

பொதுவாக மசோதாக்கள், அவற்றின் தன்மை, அவற்றில் அடங்கியிருக்கும் விஷயங்கள் அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஒரு வகை மசோதாக்கள், அரசாங்கத்தின் முக்கியமான அடிப்படைக் கொள்கைகள், திட்டங்கள் பற்றியனவாய் இருக்கும். அவை நாடு முழுவதையும் தழுவுபவையாய் இருக்கும். அப்படிப்பட்ட மசோதாக்கள் **'பொது மசோதாக்கள்'** (Public Bills) எனப்படுகின்றன. மற்றொரு வகை மசோதாக்கள், நாடு முழுவதையும் பற்றியனவாய் இல்லாமல், ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைப் பற்றியனவாகவோ அல்லது நிறுவனங்களைப் பற்றியனவாகவோ, அல்லது தனி நபர்களைப் பற்றியனவாகவோ இருக்கும். அவை **'தனி மசோதாக்கள்'** (Private Bills) எனப்படுகின்றன. இவ்வகை மசோதாக்கள், இங்கிலாந்து, இந்தியா, பிரான்சு போன்ற பாராளுமன்ற முறையுடைய நாடுகளில் அமைச்சரவையைச் சேர்ந்த மந்திரிகளால் சட்டசபைகளில் தாக்கல் செய்யப்படுகின்றன. அவர்களே, அவற்றின் நிறைவேற்றத்திற்கான பல வேலைகளையும் செய்கின்றனர்கள், இங்ஙனம் மந்திரிகளால் தாக்கல் செய்யப்படும் மசோதாக்கள் **'அரசாங்க மசோதாக்கள்'** (Government Bills) எனப்படுகின்றன. மந்திரிகளல்லாத, மற்றச் சட்டசபை உறுப்பினர்களால் கொண்டு

வரப்படும் மசோதாக்கள் தனி நபர் மசோதாக்கள் (Private Members' Bills) என்று வழங்கப்படுகின்றன. ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டில் இந்தப் பாகுபாடு இல்லை. ஏனெனில், அமெரிக்க அரசாங்கம் தலைவர்முறை அரசாங்கம். இங்குத் தலைவரோ, அல்லது அவருடைய மந்திரிகளோ காங்கிரசின் உறுப்பினரல்லர். அவர்கள் மசோதாக்களைக் காங்கிரசில் தாக்கல் செய்ய முடியாது. எனவே, எல்லா மசோதாக்களும் காங்கிரசின் உறுப்பினர்களாலேயே கொண்டுவரப்படுகின்றன. இனி, அமெரிக்காவில் மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படும் முறையைக் காண்போம் :

**மசோதாக்கள் தாக்கல் செய்யப்படுதல் :—** மசோதாக்கள், பொதுவாகச் செனட்டர்கள் அல்லது பிரதிநிதிகளாலேயே தயாரிக்கப்பட்டு, தாக்கல் செய்யப்படுவதாகக் கருதப்படுகிறது. ஆனால், இது உண்மையன்று. ஒரு சில, காங்கிரஸ் உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்பட்டாலும், மிகப் பெரும்பான்மையான மசோதாக்கள் நிருவாகத்துறையாலேயே தயாரிக்கப்படுகின்றன. அதாவது, மசோதாக்கள் ஜனாதிபதியாலோ, ஆட்சித்துறைத் தலைவர்களாலோ, அல்லது தனி ஏஜென்சிகளாலோதான் உருவாக்கப்படுகின்றன. அவ்வாறு உருவாக்கப்பட்ட மசோதாக்களை உறுப்பினர்கள் தங்கள் பெயரில் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்கிறார்கள். நிதி மசோதாக்கள் தவிர மற்றவெல்லாம் எந்தச்சபையில் வேண்டுமானாலும் முதலில் பிரேரேபிக்கப்படலாம். நிதி மசோதாக்கள் விஷயத்தில் பின்பற்ற வேண்டிய முறை முன்னரே கூறப்பட்டுள்ளது. இவ்வாறு உறுப்பினர்கள் நிருவாகத்துறையினர் தயாரிக்கும் மசோதாக்களைச் சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பதால், அவர்கள், அவ்விரு நிறுவனங்களுக்குமிடையேயிருக்குந் தரகர்கள் போலாகிறார்களெனலாம்.

உறுப்பினர்கள், தங்கள் பெயரில் மசோதாக்களை, பிரதிநிதிகள் மன்றக் கிளார்க்கு அல்லது செனட்டு மன்றச் செயலாளர் பெட்டிகளில் சேர்ப்பார்கள். அம்மசோதாக்களுக்குப் பின்னர் எண் (Number) கொடுக்கப்படும். பிறகு அவை அரசாங்க அச்சக அலுவலகத்திற்கு அச்சிடுவதற்கு அனுப்பப்பட்டு, அச்சிட்டுத் திரும்பி வந்ததும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்குமாறு 'பத்திரங்கள் அறையில்' வைக்கப்படும். மசோதா ஒன்று சட்டமாவதற்கு முன் தொடங்கும் பிரயாணத்தின் முதற்கட்டம் இத்துடன் முடிகிறது.

**குழுப்பரிசீலனை** (Committee Stage) : அடுத்து மசோதா குழுவின் பரிசீலனைக்குச் செல்கிறது. ஒவ்வொரு மசோதாவும், அதற்கெனவிருக்கும் நிலைக்குழுவுக்குச் (Standing Committee) செல்லும். எந்தக் குழுவுக்கு ஒரு மசோதா செல்ல வேண்டுமென்பதை, **1911**ஆம் ஆண்டுக்கு முன்வரை சபாநாயகரே திர்மானிப்பது வழக்கமானாலும்,

அதன்பின் அவருக்கு அந்த அதிகாரந் தரப்படவில்லை. சில சமயங் களில் ஒரு மசோதா, ஒன்றிற்கும் மேற்பட்ட குழுக்களின் பரிசீலனை எல்லையில் (within the jurisdiction) வருமானல், அப்போது, அம் மசோதா செல்லவேண்டிய குழுவைச் சபாநாயகரே தீர்மானிப்பார். இவ்விஷயத்தில் சபாநாயகர் கட்சிக்கட்டுப்பாடு, குறுகிய நோக்க மெதுவுமில்லாமல், தாராளமாகவே நடந்துகொள்ளலாம். செனட் டில் ஒவ்வொரு மசோதாவும் நேராகச் சம்பந்தப்பட்ட குழுவிற்கே செல்லும். இதற்குக் காரணம், செனட்டின் தலைவர், மசோதாக்களைக் குழுக்களுக்கு அனுப்பும் அதிகாரம் பெறுமலிருப்பதே.

மசோதாக்கள் குழுக்களுக்குச் சென்றவுடன், பரிசீலனைக்குகந்த வையென்றும், ஒவ்வாதவையென்றும், அவைகளைப் பற்றிய ஒரு பூர்வாங்க ஆய்வு செய்யப்படுகிறது. பூர்வாங்க ஆய்வின் முடிவாகப் பரிசீலனைக்கேற்றவையல்ல என்று கருதப்படும் மசோதாக்கள் நிரந் தரமாக இறந்தொழிகின்றன. இவ்வாறு குழு நிலையிலேயே தள்ளப் படுகின்ற மசோதாக்கள், ஐம்பது முதல் எழுபத்தைந்து சதவிகித மாகும். பரிசீலனைக்கேற்ற மசோதாக்கள் பின்னர் விரிவாக ஆராயப் படுகின்றன. ஆராய்ச்சிக்குத் தேவையான விஷயங்கள், உத்தியோக பூர்வம் அல்லது பொதுத்துறைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. சில குறிப்பிட்ட பகுதிகளின் பரிசீலனை, துணைக்குழுக்களிடம் விடப் படலாம். இத்துணைக் குழுக்களும், நிலைக்குழுக்களைப் போன்றவையே. இவை மசோதாவின் எந்தப்பகுதியை மாற்றலாம், அல்லது திருத்த லாம், என்னென்ன புதிய அமிசங்களைச் சேர்க்கலாம் என்பன போன்ற விஷயங்களை எடுத்துக் கூறுகின்றன. **1946**-ஆம் ஆண்டு, காங்கிரஸ் இக்குழுக்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு ஒவ்வொரு குழுவுக் கும் ஆய்வாளர் வேலைக்குழாத்தை நியமித்தது.

முக்கியமான மசோதாக்களின்மீது பரிசீலனை நடக்கும் போது, அதில் அக்கறையுடையவர்கள், அக்குழுக்களின் முன் நேராகவோ அல்லது கடிதங்கள் மூலமாகவோ, மசோதாக்களை ஆதரித்தோ கண் டித்தோ, தங்கள் கருத்துகளைத் தெரியப்படுத்தலாம். சில சமயங் களில் குழுக்களின் உறுப்பினர்களே கேள்விகள் கேட்பது வாயிலாக, பொதுமக்களிடமிருந்தோ அலுவலாளர்களிடமிருந்தோ பதில்களைப் பெறலாம். நிலைக் குழுக்கள் பெரும்பாலும் வெளியாரின் தலையீட் டிற்கு இரையாகின்றன. உதாரணமாக, ஜனதிபதி நிலைக் குழுக்க ளின் முக்கியமான உறுப்பினர்களை நேரில் அழைத்துப் பேசியோ, அல்லது கடிதங்கள் எழுதுவதன் மூலமாகவோ, குறிப்பிட்ட எந்த மசோதாக்களின் முக்கியத்தையும் உணர்த்துவதோடு, அவற்றை நிறைவேற்றத் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கலாம். அங்ஙனமே ஆட்சித்துறைத் தலைவர்களும் இக்குழுக் களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, தங்கள் விருப்பப்படி மசோ

தாக்களின் ஷரத்துகளை அமைத்துக்கொள்ளலாம். அரசியற்கட்சிகளில் இருக்கும் சில முக்கியமான தலைவர்கள் கூட இக்குழுக்களின் முன் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம். உண்மையில், நடைமுறையில் இன்று நடைபெறுவதென்னவென்றால், இக்குழுக்கள் நாளுக்கு நாள் ஆட்சித் துறையை நம்பியே தங்கள் பணியையாற்றி வருகின்றன என்பதே.

இவ்வாறு குழுக்கள் பலர் கருத்துகளையும் தெரிந்துகொண்ட பிறகு திரை மறைவில் கூடி விவரித்துக் கீழ்க்காணும் முடிவுகளில் ஏதேனும் ஒன்றைச் சிபாரிசு செய்யும். முடிவு பெரும்பாலும், பெரும்பான்மை முடிவாகவே இருக்கும்.

(1) மசோதாவை அது இருக்கிறபடியே நிறைவேற்றலாம் என்று சட்ட மன்றத்திற்குத் தெரிவிக்கலாம்;

(2) மசோதாவில் மாற்றம் செய்து, செய்யப்பட்ட மாற்றங்களோடு அதை நிறைவேற்றலாம் எனலாம்;

(3) தலைப்பைத் தவிர, மசோதாவின் எல்லா அமிசங்களையும் மாற்றிப் புதியதாக ஒன்றை மூல மசோதாவிற்குப் பதிலாகச் சமர்ப்பிக்கலாம்;

(4) மசோதாவிற்குப் பாதகமாகத் தீர்ப்பளித்து நிறைவேற்ற வேண்டா என்று கூறலாம்;

(5) மசோதாவைப் பற்றிய தன் கருத்தைதையும் கூறாமல், சட்ட மன்றத்திற்குத் திரும்பவும் அனுப்பாமலிருக்கலாம்.

குழுவின் அறிக்கையை, குழுத்தலைவரோ, அல்லது அவரால் நியமிக்கப்படுபவரோ, சட்ட மன்றத்திற்கு அறிவிப்பார். முக்கியமான விஷயங்களானால், குழுவின் அறிக்கை விரிவானதாய் இருக்கும். முக்கியமற்றவைகளில் தம் சம்மதத்தை மட்டுந் தெரிவிக்கும். முக்கியமான மசோதாக்கள் பற்றிய கருத்துரைகள் காங்கிரசின் பத்திரங்களாகப் பிரசுரிக்கப்படுகின்றன. அப்பிரசுரங்களில் சிறுபான்மையோர் கருத்துகளும் அடங்கியிருக்கலாம்.

மசோதாவின் அடுத்த நிலையைப் பற்றி விவரிக்கு முன், கட்சி முறையையும், சட்டமியற்றலில் அதன் பங்கையும், இங்குக் கூற வேண்டுவது அவசியமாகிறது. காங்கிரசில், பாராளுமன்ற முறை நாடுகளில் இருப்பது போலத் தலைமை முறை இல்லை. அதாவது, மசோதாக்களின் நிறைவேற்றத்திற்குப் பொறுப்பேற்கும் அமைச்சரவை போன்ற நிறுவனமெதுவும் இல்லை. ஆதலால், மசோதாக்களின் நிறைவேற்றத்திற்கு அவசியமான சில ஏற்பாடுகளைக் காங்கிரசில் இருக்கும் கட்சிகளே செய்துகொள்கின்றன. சாதாரண மசோதாக்களின் நிறைவேற்றத்தைப் பொறுத்த வரையில், கட்சி, உறுப்

பினர்களுக்குத் தங்களிஷ்டப்படி வாக்களிக்க உரிமை கொடுக்கிறது. ஆனால், மிக முக்கியமான மசோதாக்களின்மேல் நடைபெறும் வாக்கெடுப்பு, கட்சியின் கட்டளைக்கிணங்க நடக்கிறது. அதாவது, அங்கத்தினர்கள் கட்சியின் முடிவுப் படியே, தங்களுக்கிஷ்டமில்லாவிட்டாலும் சட்ட மன்றத்தில் ஓட்டெடுப்பின் போது நடந்துகொள்ள வேண்டும். இம்முறையைச் சிறப்புற நடத்துவதற்கு, மசோதாக்களைப்பற்றிய விவாதம் காங்கிரசில் நடக்கும் முன்பாகவே, கட்சியின் கூட்டம் தனிப்பட்ட முறையில் நடக்கும். அக்கூட்டத்தில் உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம். அங்கு ஓட்டெடுக்கப் பட்டால்,எதிர்த்துக்கூட ஓட்டுச் செய்யலாம். ஆனால்,பெரும்பான்மை முடிவு, மசோதாவிற்குச் சாதகமாய் இருந்தால், எதிர்த்தவர்களும், கண்டிப்பாகக் காங்கிரசில் அந்த மசோதாவின்மேல் வாக்கெடுப்பு நடைபெறும் போது சாதகமாகவே வாக்களிக்க வேண்டும். இவ்வித முறைகள், கட்சி முடிவுகள் சரிவர உறுப்பினர்களால் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கக் கட்சியின் கூட்டம் நடை பெறும்போது, கட்சியின் சட்டமன்றத் தலைவர், நடவடிக்கைக் குழுவின் உறுப்பினர்கள், கண்காணிப்பாளர் முதலியோர் தேர்ந்தெடுக்கப்படுவர். காங்கிரசில் பெரும்பான்மையாய் உள்ள கட்சியின் பொறுப்பு, மசோதாக்கள் நிறைவேற்றத்தைப் பொறுத்த வரை மிக அதிகம்.

குழுக்கள் தங்கள் பரிசீலனையை முடித்ததும், தங்கள் சிபாரிசோடு மசோதாக்களைச் சட்டமன்றத்திற்கு அனுப்பும், சட்டமன்றத்தில் மசோதாக்கள் எல்லாம் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு, வரிசை எண் கொடுக்கப்படும். உதாரணமாக, (1) வரவு செலவினங்கள் பற்றிய பொது மசோதாக்கள், (2) வரவு செலவு பற்றியவையல்லாத இதரப் பொதுமசோதாக்கள், (3), தனி மசோதாக்களென மூவகையாகப் பிரிக்கப்பட்டு அவ்வவ்வகைகளில் வரும் மசோதா ஒவ்வொன்றிற்கும், குழுக்களிலிருந்து அவை வந்த தேதிப்படி வரிசை செய்யப்படுவதுடன்,விவாதம் நடக்கவேண்டியநாளும் குறிக்கப்படும்.

குறிப்பிட்ட தேதிகளில் மசோதாக்கள் சட்ட மன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இம்மசோதாக்களெல்லாம் 'முழு மன்றக்குழு' (Committee of the Whole House) முறையை அனுசரித்துப் பரிசீலனை செய்யப்படுகின்றன. முழு மன்றக் குழுக் கூடும்போது, சபாநாயகர் அவராசனத்தினின்றும் எழுந்து, வேறொருவரைக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்வார். குறைந்த பட்சம் நூறு பேர்களாவது இருந்தால்தான் இக்கூட்டம் நடைபெறும். 'முழுமன்றக்குழு'க் கூட்டத்தில் சட்டமன்றத்தில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைச் சட்டதிட்டங்கள், கவனிக்கப்படுவதில்லையாதலால், உறுப்பினர்கள் சுதந்தரமாக, தாராளமாக விவாதத்தில் பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்புண்டு. இக்கூட்டத்தில்

நடைமுறை பற்றிய குறிப்பெதுவும் எடுக்கப்படமாட்டாது. வாக்கெடுப்புப் பதிவு செய்யப்படுவதுமில்லை, மசோதாப் பரிசீலனை முடிந்ததும் ‘முழுமன்றக்குழு’க் கலைந்து, மன்றம் மறுபடியும் கூடும்போது சபாநாயகர் தம் ஆசனத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை நடத்துவார்.

முழுமன்றக்குழு முறை, மசோதாக்கள் துரிதமாகப் பைசல் செய்யப்பட ஏதுவாகிறது. காரணம், இங்கு மாற்றங்கள், திருத்தங்கள் அல்லது எதிர்ப்புகள் தெரிவிக்க ஒழுங்கு முறைகள் கவனிக்கப்படுவதில்லை. வாக்குகள் பதிவு செய்யப்படுவதில்லையாதலால், உறுப்பினர்கள் தைரியமாகத் தங்கள் முடிவைச் சாதகமாகவோ, பாதகமாகவோ உடனே தெரிவிக்கத் தயங்குவதில்லை. இம்முழுமன்றக்குழு முறை 1930 - ஆம் ஆண்டு வரை செனட்டில் அடிக்கடி பின்பற்றப்பட்டது. அதற்குப் பிறகு உடன்படிக்கைகள் விவாதிக்கப்படும்போது தவிர, இதர சமயங்களில் இம்முறை கைவிடப்பட்டுவிட்டது.

ஒவ்வொரு மசோதாவும், மன்றவிதிகளின்படி மூன்று முறை படிக்கப்பட வேண்டும். அதன் பிறகே தலைவரின் இசைவுக்கு அனுப்பப்படலாம். ‘மும்முறை வாசிப்பு’ (Three Readings) இங்கு எவ்வெப்போது நடைபெறுகிறதெனப் பார்ப்போம்: முதல் வாசிப்பு, மசோதா அச்சிடப்பட்டுப் பத்திரங்கள் அறைக்கு உறுப்பினர்களின் பரிசீலனைக்கு வரும்போதும், இரண்டாவது வாசிப்பு, சட்டமன்றம் மசோதாவைத் தன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்போது அல்லது மன்றம், ‘முழுமன்றக்குழு’வாகக் கூடும்போதும் நடைபெறுகின்றன. இரண்டாவது பரிசீலனையின்போதுதான் முக்கியமான திருத்தங்கள் அல்லது மாற்றங்கள், மசோதாவில் செய்யப்படுகின்றன. மசோதா விவாதிக்கப்படும்போதும், திருத்தங்கள் செய்யப்படும் போதும், மசோதாவை ஆதரிக்கும் கட்சியிலுள்ள பிரமுகர்கள் பிரதானமான பங்கெடுத்துக்கொள்கின்றார்கள். மசோதா நிறைவேறுவது அவர்களைப் பொறுத்ததேயாகும். பெரும்பான்மைக் கட்சியால் ஆதரிக்கப்படும் மசோதாவே நிறைவேறும். சிறுபான்மையினர் அதை எதிர்ப்பர். மசோதாவின்மீது செய்யப்படும் விவாத காலவரம்பும் உறுப்பினர்கள் பேசக்கூடிய காலவரையறையும் முன்கூட்டியே, கட்சிகளின் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்டுவிடும்.

மசோதாவைப்பற்றிய பரிசீலனை முடிந்ததும், சபாநாயகர் “மசோதாவின் மூன்றும் வாசிப்பு நடைபெறலாம்,” என்று அறிவிப்பார். சபாநாயகரின் அறிவிப்பு ஏற்கப்பட்டால், மூன்றும் வாசிப்பு நடைபெற்ற பிறகு, மசோதா சட்டபூர்வமாக ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்படும். பிறகு மசோதாவில் சபாநாயகர் தம் கையெழுத்

திட்டு அடுத்த சட்டமன்றத்திற்கு அனுப்புவார். அதாவது, மக்கள் சபையில் முதலில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டால், செனட்டிற்கும், செனட்டில் முதலில் நிறைவேற்றப்பட்டால் அங்கிருந்து மக்கள் சபைக்கும், சம்மதம் கோரி அனுப்பப்படும். இரு சபைகளிலும் மசோதா நிறைவேறிய பிறகு, ஜனாதிபதியின் சம்மதத்திற்காக மசோதா செல்லும். அவரது இசைவு கிட்டியதும் மசோதா சட்டமாகும். மசோதாவிற்கு ஜனாதிபதி இசைவு தரும் விஷயம் பற்றி, அவர் அனுசரிக்கும் முறைகளென்னென்ன என்பதை 'ஜனாதிபதி' என்னும் தலைப்பின்கீழ்க் காண்க.

**தீர்மானங்கள் :** இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் மசோதாக்களுக்கும் தீர்மானங்களுக்குமுள்ள வேறுபாட்டை இறுதியில் கவனிக்கலாம் என்று எழுதினோமல்லவா? மசோதாக்கள் பெரும்பாலும் மிக முக்கியமான பிரச்சினைகள் பற்றியவை; உதாரணமாக, தேசநிர்வாகம், அமைதி ஒழுங்கு பராமரிப்பு முதலியவைபற்றியவை. ஆனால், தீர்மானங்களோ, மசோதாக்கள் போலத் தேசத்தின் முன் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளைப் பற்றியவையல்ல. அவற்றின் நோக்கமும் தாற்காலிகமானதாகவே இருக்கும். மற்றப்படி அவற்றின் நிறைவேற்றத்தைப் பொறுத்த வரையில் மசோதாவிற்குப் பின்பற்றப்படும் முறையே அனுசரிக்கப்படுகிறதெனலாம்.

இரண்டாவதாக, தீர்மானங்கள் தனித்தீர்மானங்கள், கூட்டுத் தீர்மானங்களென இரு வகைப்படும். தனித்தீர்மானங்கள் ஏதேனும் ஒரு சபையில் மட்டும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுபவை. அவற்றுக்கு மற்றச் சபையின் சம்மதந்தேவையில்லை. உதாரணமாக, உறுப்பினர்களின் தகுதி, அவர்களது பதவிப் பிரமாணம் பற்றியனவெல்லாம் அந்தந்தச் சபையின் முடிவைப் பொறுத்தனவேயாகும். கூட்டுத்தீர்மானங்கள் இருசபைகளுக்கும் பொதுவான விஷயங்களைப் பற்றியவை. ஆதலால், ஒரு சபையின் சம்மதத்திற்குப் பிறகு மற்றதன் சம்மதத்திற்காக அவை அனுப்பப்பட வேண்டும்.

கடைசியாக, தீர்மானங்கள் ஜனாதிபதியின் சம்மதத்திற்கு அனுப்பப்பட வேண்டுவதில்லை. இது நாம் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டுவதொன்றாகும். தீர்மானங்கள், சட்ட முக்கியத்துவ(Legal)மில்லாவை. தீர்மானங்கள், நிருவாகத்துறைக்கு ஏதேனும் ஒன்றைச் செய்ய வேண்டும் அல்லது செய்ய வேண்டா என்று ஆலோசனை கூறுவதாக வைத்துக்கொள்வோம். அந்தத் தீர்மானத்தில் காணப்படுபவைகளை நிருவாகத்துறை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. இதிலிருந்து அவை சட்டபூர்வமானவையல்ல என்பது விளங்கும். தீர்மானங்களின் முக்கியம், அவற்றின் நிறைவேற்றமெல்லாம் அவற்றை இயற்றிய சபைகளின்

பொறுப்பே. அவற்றின் நிறைவேற்றத்திற்கு, நீதி மன்றத்தை நாடவும் முடியாது.

இவற்றிலிருந்து மசோதாக்களுக்கும் தீர்மானங்களுக்குமுள்ள வேற்றுமைகளை நாம் அறிந்துகொள்ளலாம்.

# அத்தியாயம்—16

# நீதி பரிபாலனமும் நீதி மன்றங்களும்

இப்பொழுதுள்ள கூட்டாட்சிக்கு முன் இருந்த நாடுகளின் கூட்டம் (Confederation) பல குறைகளை உடையதாய் இருந்தது. உதாரணமாக, நாடுகள் தொகுதியின் காங்கிரஸ் இயற்றிய சட்டங்கள், எல்லாவற்றாலும் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், அவை அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதை மேற்பார்வையிட எந்தவித ஏற்பாடும் இல்லை. அல்லாமலும், நாடுகளின் தொகுதிக்கெனத் தனி உயர்நீதி மன்றம் இல்லை. பொதுவான நீதி மன்றம் இல்லாததால், நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்து முடிவும் ஒற்றுமையும் ஏற்படுத்த இயலவில்லை. பொதுவான நீதி மன்றத்திற்குப் பதில், ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கத்திலுமிருந்த நீதிமன்றங்களே தொகுதியின் சட்டங்களை அமுல் நடத்தும் புண்ணியத்தையும் கவனித்து வந்தன. இவற்றின் முடிவு, ஒன்றையொன்று தழுவியதாகவோ ஒருமுகமானதாகவோ இல்லாமல், ஒரே மாதிரியான வழக்குகளில் பல வகை விசித்திரமான முடிவுகள் உண்டாயின. இம்முடிவுகள் பரஸ்பர சந்தேகத்திற்கும், ஒற்றுமையின்மைக்கும் தூபம் போட்டு வந்தனவாகையால், கூட்டாட்சி ஏற்படுத்த முயற்சிகள் நடந்தபோது கூட்டாட்சி நீதிமன்றமும் ஏற்பட வேண்டுமென்று கருதப்பட்டது. கூட்டாட்சி நீதிமன்றம் ராஜ்யங்களிடையேயோ, அல்லது கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் ராஜ்யங்களுக்கும் இடையேயோ தோன்றக்கூடிய வழக்குகளை அரசியலமைப்பு அடிப்படையில் தீர்த்துவைக்க உதவும் என்று கருதப்பட்டது. அதன்படியேதான், கூட்டாட்சி அரசியலமைப்பில், நீதிமன்றத்திற்கும் வகை செய்யப்பட்டது. கூட்டாட்சி நாடுகளில், குறிப்பாக, எழுதப்பட்ட அரசியலமைப்பை உடைய நாடுகளில், உயர்நீதி மன்றம் இருப்பதும், அது சுதந்தரமாக இயங்க வேண்டும் என்பதும் இங்கு உணரத்தக்கன. நீதிமன்றங்களின் அமைப்பையும் நடைமுறைகளையும் விவரிக்குமுன், அது சம்பந்தப்பட்ட வேறு சில அமிசங்களையும் நாம் கவனிக்க வேண்டும்.

முக்கியமாக நாடுகளை, பொதுச்சட்டத்தைப் (Common Law) பின்பற்றும் நாடுகளென்றும், பொதுச் சட்டமல்லாத ஆட்சியாளர்க்கே உரிய தன்னுரிமைச் சட்டத்தை (Prerogative)ப் பின்பற்றும்

நாடுகளென்றும் பாகுபாடு செய்வது ஒரு வழக்கமாகும். இதனுல் அறியப்படுவது யாதெனின், பொதுச் சட்டத்தைப் பின்பற்றும் நாடுகளில் நீதித்துறை மிகப்பெரிய அளவில் சுதந்தரமாகப் பணியாற்றுகின்றது. தனியொருவனது சுதந்தரமும் அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. ஆனுல், தன்னுரிமைச் சட்டத்தைப் பின்பற்றும் நாடுகளில், நிருவாகத்தினர் மேற்பார்வையில் இயங்கும் நீதிமன்றங்களும், அவற்றிற்கு ஆதரவாக ஆட்சித்துறைச் சட்டங்களும் இருக்கின்றன. இந்த நீதி மன்றங்கள் சுதந்தரமாக இயங்குபவை என்று கூற முடியாது. அதனுல், தனி மனிதன் சுதந்தரமும் பாதிக்கப் படலாம் என்று கருதப்படுகிறது.

எது எவ்வாருயினும், ஒன்றை மட்டும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் : அதாவது, நீதி மன்றங்கள் - சட்ட மன்றங்கள் - ஆட்சித் துறை இவைகளுக்கிடையே சிறிதும் சம்பந்தமில்லாதபடி, ஒரு செயற்கைத் தனித்தன்மையை ஏற்படுத்தினுல், எதிர்பார்க்கும் நன்மையைவிடத் தீமையே அதிகமாக இருக்குமென்று திட்டமாக நம்பலாம். ஏனென்ருல், எந்த ஓர் ஏற்பாடும் மக்கள் நன்மையை முன்னிட்டே செய்யப்படுவதால், அது, செயற்படுமளவிற்கே அமைக்கப்பட வேண்டும். அதிலும், அரசாங்கத்தின் பணிகள் பல துறைகளிலும் வளர்ந்துவரும் இக்காலத்தில், இம்மூன்று நிறுவனங்களுக்கிடையேயும் பூரண சுதந்தரம் இருக்க வேண்டுமென்று கூறுவது விந்தையிலும் பெரிய விந்தையே! இப்பிரிவினை காரிய சாத்தியமானதுமன்று. **இலாஸ்கி** என்னும் அறிஞர், "அதிகாரப் பிரிவினை என்பது சம அதிகாரம் என்று பொருள்படாது," என்று கூறியிருப்பதிலிருந்து இவ்வுண்மை விளங்கும். சுருக்கமாகக் கூறவேண்டுமானுல், ஒவ்வொரு துறையும் தனித்தனியாக இயங்கவேண்டுவது அவசியமானுலுங்கூட, ஒன்றையொன்று ஓரளவுக்கு ஒட்டியும் செயற்படுவது, அரசாங்கம் சீரிய வழியில் இயங்குவதற்கு இன்றியமையாதது. உதாரணமாக, அமெரிக்காவில் இம்மூன்று துறைகளும் அதிகாரப் பிரிவினைக் கொள்கைப்படி தனியே இருப்பினும், ஒன்றையொன்று சார்ந்து நிற்கும் இவற்றின் தன்மை சமநிலைத் தடையீட்டுக் கொள்கைப்படி வற்புறுத்தப்பட்டிருப்பது விளங்கும்.

அமெரிக்கா பொதுச்சட்டத்தைப் பின்பற்றி, தன் நீதித்துறையை வகுத்துள்ளது. இங்கு நீதி பரிபாலனம் சுதந்தரமாக இயங்கும் நீதி மன்றங்களின் மேற்பார்வையிலிருக்கிறது. அதாவது, சட்ட ஆட்சியே (Rule of Law) நீதித்துறையின் அடிப்படை. இங்குள்ள நீதிபரிபாலனமுறை உலக வரலாற்றில் புதிதன்ருயினும் வெளிநாட்டாரும் பின்பற்றுமாறு சிறந்தமுறையிலமைந்துள்ளது. இனி நாம் நீதி மன்றங்களின் அமைப்பு, அதிகாரங்கள், செயலாற்றும் முறைகளைப்பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்:

கூட்டாட்சியின் நீதித்துறையைப்பற்றி அரசியலமைப்பின் மூன்ருவது விதி கூறுவதாவது, "நீதி அதிகாரம் தலைமை நீதி மன்றத்திடமும், காங்கிரசால் ஏற்படுத்தப்படும் மற்றக் கீழ்த்தர நீதிமன்றங்களிடமும் இருக்கும்," என்பது. நீதி மன்றங்களின் அமைப்பு, நீதிபதிகளின் எண்ணிக்கை பற்றி ஒன்றும் அதில் காணப்படவில்லை. ஆதலால், காங்கிரசே தலைமை நீதி மன்றம், இதரக் கூட்டாட்சி நீதி மன்றங்களின் அமைப்பு, அவற்றில் இருக்க வேண்டிய நீதிபதிகளின் எண்ணிக்கை, ஊதியம் முதலான பலவற்றையும் சட்டமூலமாக நிர்ணயித்தது. எனவே, காங்கிரஸ் விரும்பினுல் நீதி மன்றங்களில் இருக்க வேண்டிய நீதிபதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவோ, கூட்டவோ இயலும்; ஆனுல், தலைமை நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து விலக்கவோ, அவர்கள் ஊதியத்தைக் குறைக்கவோ இயலாது. ஒரு முறை நீதிபதிகள் நியமிக்கப்பட்டால், அவர்கள் நெறியுடன் செயலாற்றுவார்களேயானுல், ஆயுட்காலம் வரை அப்பதவியிலிருக்கலாம். இத்தனை பாதுகாப்புகள் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டிருந்தாலும், சட்டமன்றம், வேறுபல வழிகளில், நீதிமன்றங்களின் போக்கை மாற்ற முடியும். உதாரணமாக, நீதிபதிகள் தங்கள் வேலையை ராஜிநாமா செய்வதாலோ, அல்லது இறந்துவிடுவதாலோ ஏற்படும் காலியிடங்களை நிரப்பாமல் இருக்கச் சட்டம் செய்யலாம். எழுபது வயதான நீதிபதிகள், தாங்களாகவே வேலையினின்றும் ஓய்வுபெற மறுத்தால், தனக்குச் சரியானதென்று தோன்றும் முறைப்படி, அதிகப்பட்சமாக ஆறு துணை நீதிபதிகள் வரை நியமிக்கலாம். திரு. பிராங்கிளின் ரூஸ்வெல்டு ஜனுதிபதியாய் இருந்தபோது புது நீதிபதிகளை நியமிக்கச் சட்டமன்றம் இசைந்தது இங்கு அறியத்தக்கது. ஆனுல், மற்றக் கீழ்த்தர நீதி மன்றங்களைப் பொறுத்தமட்டில், காங்கிரஸின் குறுக்கீடு அளவற்றதாகும். சில வழக்குகளில், கீழ் மன்றங்களின் தீர்ப்பை எதிர்த்துத் தலைமை நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யக் கோரும் விண்ணப்பங்களைத் தடை செய்யலாம்.

**நீதிபதிகளின் நியமனமும் பதவிக்காலமும்;** தலைமை நீதி மன்றத்தின் நீதிபதிகளை ஜனுதிபதியும் செனட்டும் கூட்டாக நியமிக்கலாமென்றும், மற்றக் கீழ்த்துறை நீதி மன்றங்களின் நீதிபதிகள் நியமனத்தைக் காங்கிரஸ், ஜனுதிபதிக்கோ, அல்லது ஆட்சித்துறைத் தலைவர்களுக்கோ கொடுக்கலாம் என்றும் அரசியலமைப்புக் கூறுகிறது. அதன்படி உயர்நீதி மன்ற நீதிபதிகள் செனட்டுச் சம்மதத்துடன் ஜனுதிபதியால் நியமிக்கப்படுகிருர்கள். மற்ற நீதி மன்றங்களின் நீதிபதிகளும் ஜனுதிபதியாலேதான் நியமிக்கப்படுகிருர்கள். அரசியலமைப்பு உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கான வயது, சட்ட அறிவு, அரசியல் கருத்துகள் பற்றி ஒன்றுங்கூறவில்லை. சட்ட அறி

விருந்தாலும் இல்லாவிட்டாலும், வயதில் குறைந்தவராக அல்லது வயது முதிர்ந்தவராக இருந்தாலும், கட்சிப் பற்றுதல் உள்ளவர்களாய் இருந்தாலும், நீதிபதிகளாக நியமனம் பெறலாம். ஆனால், பெரும்பாலும் சட்ட அறிவுடையவர்களே நீதிபதிகளாக நியமிக்கப் படுகிறார்கள். இந்த நீதிபதிகள் நன்னெறியினின்றும் வழுவாத வரையில் பதவி வகிக்கிறார்கள். இவர்கள் தேசத்துரோகக் குற்றச் சாட்டு மூலமே பதவியிலிருந்து விலக்கப்படலாம். இம்முறைப்படி இது வரை எவரும் பதவியிலிருந்து விலக்கப்படவில்லை என்பது அறியத்தக்கது.

அமெரிக்காவில் (1) கூட்டாட்சி அரசியலமைப்பு, (2) கூட்டாட்சி அரசின் சட்டங்கள், (3) ராஜ்யங்களின் அரசியலமைப்பு, (4) ராஜ்ய அரசுகளின் சட்டங்கள் என்னும் நான்குவகைச் சட்டங்களும், அவற்றையொட்டிப் பிறக்கும் அதிகாரமும் இருக்கின்றன. இந்நான்கிலும் தலையாய சிறப்புடையது கூட்டாட்சி அரசியல் அமைப்பேயாகும். அந்த அரசியலமைப்பின் அடிச்சுவட்டையொட்டியே மற்றவைகளும் இருக்க வேண்டும். எழும் வழக்குகளின் முடிவு, கூட்டாட்சி அரசியலமைப்பின் அடிப்படையிலேதான் இருக்கும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இப்போது கூட்டாட்சி நீதிமன்றங்களெனவும், ராஜ்ய நீதிமன்றங்களெனவும் இருவகை இருக்கின்றன. அவை தத்தம் துறையில் அதிகாரம் செலுத்த வல்லவை. இங்குக் கூட்டாட்சி நீதி மன்றத்தின் வகைகள், அதிகாரம், வேலை முறை பற்றிப் பார்ப்போம்:

கூட்டாட்சி நீதி மன்றங்கள் இரண்டு வகைப்படும். ஒரு வகை, அரசியலமைப்பு நீதிமன்றங்கள் (Constitutional court)எனவும், மற்றவை சட்ட நீதி மன்றங்கள் (Legislative Courts) எனவும் வழங்கப் படுகின்றன. முன்னவை, அரசியலமைப்பு விதிகளின்படி அமைக்கப்படுவதால் அப்பெயரையும், பின்னவை குறிப்பதிகாரத்தின் துணை கொண்டு காங்கிரஸ் இயற்றும் சட்டங்களால் அமைக்கப்படுவதால் இப்பெயரையும் பெற்றன.

அரசியலமைப்பு நீதிமன்றங்கள், (அ) மாவட்ட நீதிமன்றங்கள் (District Courts), (ஆ) மேல் விசாரணைக்காக வரும் வழக்குகளை விசாரிக்கும் சர்குட் நீதி மன்றங்கள் (Circuit Courts), (இ) தலைமை நீதி மன்றம் (Supreme Court) என்ற மூன்று பிரிவுகளாய் அமைக்கப் பட்டுள்ளன.

**மாவட்ட நீதி மன்றங்கள்** (District Courts): மாவட்ட நீதி மன்றங்கள் கடைசியில் உள்ள கூட்டாட்சி நீதி மன்றங்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளை 86 மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு நீதி மன்றம் அமைத்திருக்கின்றனர்.

ஒவ்வொரு மாவட்ட நீதி மன்றத்திற்கும் ஒவ்வொரு நீதிபதியாவது இருப்பார். சிலவற்றில் ஒருவருக்கு மேற்பட்டவர்களும் இருப்பார்கள். தலைமை மன்றத்திற்கே நேரிடையாகச் செல்லும் வழக்குகளையும், சட்ட நீதி மன்றங்களுக்குச் (Legislative Courts) செல்லும் வழக்குகளையும் தவிர, மற்ற எல்லாச் சிவில், கிரிமினல் வழக்குகளும் மாவட்ட நீதி மன்றங்களுக்குத்தான் முதலில் போகவேண்டும். ராஜ்ய நீதி மன்றங்களிலிருந்து மாற்றப்படும் சில வழக்குகளைத் தவிர, மற்ற வழக்குகள் இங்கு நேரே வருபவையாகும். சாதாரண வழக்குகளைப் பெரும்பாலும் ஒரே நீதிபதிதான் விசாரிப்பார். ஆனால், கூட்டாட்சி அரசின் சட்டங்கள் சட்டரீதியானவைதாமா என்ற சிக்கல்பற்றி விசாரிக்கும்போது குறைந்த அளவு மூன்று நீதிபதிகளாவது இருக்கவேண்டும். இம்மன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்புச் சரியன்று என்று கருதப்பட்டால், தலைமை நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ளலாம். அல்லாவிட்டால், உடனடியாக மேலேயுள்ள நீதி மன்றத்திற்கே அவை செல்லும்.

**சர்குட் நீதி மன்றங்கள்** (Circuit or Federal Courts of Appeal): இவை மாவட்ட நீதி மன்றங்களுக்கு மேல் இருக்கும் நீதி மன்றங்கள். கொலம்பியா மாவட்டத்தில் உள்ள ஒன்றும் சேர்ந்து 12 சர்குட் நீதி மன்றங்களிருக்கின்றன. இவை 1891ல் ஏற்பட்டவைகளே. தலைமை நீதி மன்றத்தின் வேலைப்பளுவைக் குறைப்பதற்கு இவை ஏற்படுத்தப்பட்டன. கொலம்பியா மாவட்ட நீதி மன்றம் அமெரிக்கத்தலைமை நீதிபதியின் மேற்பார்வையிலும், மற்றச் சர்குட் நீதி மன்றங்களுள் ஒவ்வொன்றும், உயர்நீதி மன்றத் துணை நீதிபதிகளின் மேற்பார்வையிலும் இருக்கும். இந்த நீதி மன்றங்களில் குறைந்த பட்சம் மூன்று நீதிபதிகள் இருப்பார்கள். வழக்கு விசாரணையின் போது குறைந்த பட்சம் இரண்டு நீதிபதிகளாவது வந்திருந்தால், விசாரிக்க முடியும். இந்தச் சர்குட் நீதி மன்றங்கள், கீழ் நீதி மன்றங்களிலிருந்து வரும் வழக்குகளை விசாரித்து, அமுல் நடத்தும். பெரும்பாலான வழக்குகளில் சர்குட் நீதிமன்றங்களின் தீர்ப்பே முடிவானது. ஆனால், சில முக்கியமான வழக்குகள் தலைமை நீதி மன்றத்திற்கு அப்பீல் மூலமாகச் செல்கின்றன. கீழ்க்கோர்ட்டுகளின் தீர்ப்புகளையும், அவற்றின் வேலை முறைகளையும், தலைமை நீதி மன்றம் மேற்பார்வையிடலாம்; தக்க கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

**தலைமை நீதி மன்றம்** (Supreme Court): தலைமை நீதி மன்றம் 1789-ஆம் ஆண்டில் தலைமை நீதிபதி ஒருவரையும், துணை நீதிபதிகள் ஐவரையும், உடையதாய்த் தொடங்கியது. இப்போது அதில் தலைமை நீதிபதியும் சேர்ந்து ஒன்பது பேர்கள் இருக்கிறார்கள். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 1937ல் இம்மன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையை, எழுபது வயதாகியும் ஓய்வு பெறாமல் இருக்கும்

ஒவ்வொரு நீதிபதிக்கும், ஒரு துணை நீதிபதி நியமிக்கப்படுவதன் மூலமாக உயர்த்த விரும்பினார். இதற்குக் காரணம், அவருடைய சமூக, பொருளாதார முற்போக்குச் சட்டங்களைத் (New Deal Legislation) தலைமை நீதி மன்றம் நிராகரித்ததேயாகும். தலைமை நீதி மன்றம் இப்போது வாஷிங்டன் மாநகரில் நிரந்தரமாய் இயங்கு கிறது.

இம்மன்றத்தின் நீதிபதிகள் நியமிக்கப்படும் முறை, பதவிக்காலம் பற்றி முன்னமே கூறியுள்ளோம். தலைமை நீதிபதி 25,500 டாலர் களும், மற்றத் துணை நீதிபதிகள் 25,000 டாலர்களும் ஆண்டுச் சம்பளமாகப் பெறுகின்றார்கள். நீதிபதிகளின் சம்பளம் அவர்கள் பதவிகாலத்தில் குறைக்கப்படலாகாது ; ஆனால், உயர்த்தப்படலாம்.

தலைமை நீதி மன்றம், அப்பீல் மூலமாகவும், நேரிடையாகவும் வரும் வழக்குகளை விசாரிக்கும். நேரே தலைமை நீதி மன்றத்திற்கு வரும் வழக்குகள் மிகவும் சொற்பம். தலைமை நீதி மன்றம், தூதுவர் கள், மந்திரிகள், கான்சல்கள் போன்றவர்களின்மேல் தொடரப்படும் வழக்குகளையும், ராஜ்யங்களே வாதி பிரதிவாதிகளாய் இருக்கும் வழக்குகளையும் நேரிடையாக விசாரித்துத் தீர்ப்பு வழங்கும். மற்ற எல்லாவழக்குகளும் அப்பீல்மூலமாக வருபவைகளேயாகும். மாவட்ட நீதி மன்றங்களிலிருந்து சில வழக்குகள், தலைமை நீதி மன்றத்திற்கு, அப்பீல் மூலமாக, சர்குட் நீதி மன்றத்திற்குப் போகாமலே வரலாம் என்பதை முன்பே கூறினோம். அப்படித் தலைமை நீதி மன்றத்திற்கு வரும் வழக்குகள் அரசியலமைப்பைப் பற்றியனவாய் இருக்கவேண் டும். அல்லாமலும், கீழ் நீதி மன்றம் சான்றிதழ் கொடுத்தால்தான் அவற்றைத் தலைமை நீதி மன்றம் எடுத்துக்கொள்ளும்.

தலைமை நீதி மன்றத்தால் அளிக்கப்படும் எந்தத் தீர்ப்பிற்கும் ஐந்து நீதிபதிகளின் சம்மதமாவது அவசியம். நீதி மன்றத்தின் தீர்ப் பைத் தலைமை நீதிபதியின் அனுமதி பெற்று மற்ற நீதிபதிகளுள் எவரும் தயாரிக்கலாம். ஆனால், தலைமை நீதிபதிதான் கோர்ட்டின் தீர்ப்பை வாசிப்பார். பெரும்பான்மையோரின் முடிவு சரியன்று என்று கருதும் எவரும் (நீதிபதி) தம் கருத்தைச் சொல்லுவதற்கு உரிமையுண்டு.

தலைமை நீதி மன்றம், அரசியலமைப்பை அடிக்கடி விளக்கியும், தனி மனிதன் உரிமைகளைப் பாதுகாத்தும் வந்திருக்கிறது. அதனு டைய பெயரும்புகழும் திக்கெட்டும் பரவியிருக்கின்றன. அம்மன்றத் தின் இன்றைய புகழுக்கும் சிறப்புக்கும் வித்திட்டவர் தலைமை நீதி பதி மார்ஷல் (Chief Justice Marshall) என்பது மிகையாகாது.

**நீதிப்புனராய்வு** (Judicial Review): அமெரிக்கத் தலைமை நீதி மன்றம் அரசியலமைப்பை விளக்கிக் கூறவும், மத்திய, ராஜ்ய அரசு

களின் சட்டங்களையும் நிருவாக உத்தரவுகளையும் அதன் அடிப்படையில் ஆராய்ந்து, செல்லத்தக்கவை இவை, செல்லத்தகாதவை இவை என்று கூறவும் அதிகாரம் பெற்றிருப்பதால், மிகவும் சத்தி வாய்ந்ததாய் இருக்கின்றது. தலைமை நீதிமன்றம் செல்லாது என்று அறிவித்த எதையும், அமுலாக்க முடியாது. தலைமை நீதி மன்றத்தின் இந்த அதிகாரத்தைத்தான் **'நீதிப்புனராய்வு'** என்கிறார்கள். இவ்வதிகாரம் அரசியலமைப்பில் இருக்கிறதா இல்லையா என்று பலரும் ஆராய்ச்சி செய்து, அதற்குத் தகுந்தாற்போல ஆதரித்தும் எதிர்த்தும் வந்திருக்கின்றனர். ஆனால், இவ்வதிகாரம் இன்று நடைமுறையில் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. இந்த அதிகாரம் முதன்முதலில் **மார்பரிக்**கும், **மாடிசனு**க்கும் நடந்த வழக்கில் தலைமை நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது. அவ்வழக்கை விசாரித்துத் தீர்ப்புச் செய்த தலைமை நீதிபதி **மார்ஷல்** என்பவர் நீதிப்புனராய்வின் அமிசங்களைப் பின் வருமாறு கூறியுள்ளார்:

1. அரசியலமைப்பு எழுதப்பட்டது. அது அரசாங்கத்தின் அதிகாரத்தைத் தொகுத்துக் கூறுவதோடு, செய்யத்தகாதவற்றையும் தெளிவாகக் கூறுகிறது.
2. அரசியலமைப்பு அடிப்படைச் சட்டமாகும். அதனால், அது காங்கிரஸ், ராஜ்ய சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களினும் மேலானது.
3. அரசியலமைப்புக்குப் புறம்பாக அல்லது மீறிச் செய்யப்பட்ட சட்டங்கள் செல்லத்தக்கனவல்ல. அவை நீதி மன்றங்களைத் தங்கள் கடமைகளைச் செய்வதினின்றும் கட்டுப்படுத்த முடியாது.
4. நீதிபதிகள், அரசியலமைப்பின் விதிகளுக்கிணங்க, பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வதாலும், அவர்கள் அரசியலமைப்பைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருப்பதாலும், அரசியலமைப்பின் நோக்கத்திற்கும் வாசகத்திற்கும் விரோதமாக இருப்பவைகளை, செல்லாதவை என்று கூறத்தான் வேண்டும். அது அவர்களது இன்றியமையாத பணி.

தலைமை நீதிபதி மார்ஷலின் இந்த முடிவு பலருக்குப் பிடிக்கவில்லையென்றாலும், இதை அடியோடு புறக்கணிக்கவும் இயலவில்லை. நாளடைவில் இவ்வதிகாரம் அமெரிக்க நீதித்துறையின் சிறந்த அமிசங்களில் ஒன்றாக நிலைபெற்றுவிட்டது. இந்த அதிகாரத்தைத் தலைமை நீதி மன்றம் இப்போது செலுத்துகிறது. நீதிப்புனராய்வு அதிகாரம் இதரக் கூட்டாட்சி மன்றங்களுக்கு உண்டென்றாலும், அவற்றின் முடிவு தலைமை நீதி மன்றத்தின் முடிவுக்கு உட்பட்டதே; அதாவது, தலைமை நீதிமன்றத்தின் முடிவே இறுதியானது. மக்களின்

விருப்பு வெறுப்புகளுக்கேற்ப, தலைமை நீதி மன்றம் இவ்வதிகாரத்தைச் செலுத்துமென்றும் எதிர்பார்க்க இயலாது. மக்களால் பெரிதும் விரும்பப்படும் சட்டமொன்றை, உயர்நீதி மன்றம் தள்ளிவிடலாம்.

## அத்தியாயம்—17

# அரசியற்கட்சிகள்

அரசாங்கம் நாட்டிற்கு எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு முக்கியமானது அரசியற்கட்சி எனலாம். இக்காலத்தில் அனேகமாக எல்லா நாடுகளும் மக்களாட்சிமுறை அரசாங்கத்தை உடையவை. இம்முறையரசாங்கம் சிறப்புற்றோங்க வேண்டுமானால், சிறந்த கொள்கைகள், திட்டங்கள், அவை நிறைவேற மக்கள் ஆதரவுடைய சிறந்த தலைவர்களால் நடத்தப்படும் அரசாங்கம் வேண்டும். இதற்கு முக்கியத்தேவை மக்களின் ஒற்றுமை. மக்களின் ஒற்றுமையும் அதனால் விளையும் சத்தியும் அரசியற்கட்சிகளாலேதான் சாத்தியமாகும். காரணம், அரசியற்கட்சிகள் தங்களுக்கெனக் கொள்கைகளையும் திட்டங்களையும் அமைத்துக்கொண்டு அவற்றிற்கு மக்களின் ஆதரவைத் திரட்டுகின்றன. கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுங்கு முறைகளை மதித்து நடக்கும் கட்சிகள் நாட்டிற்கு நன்மை தேடித்தரக் கூடியவை. அவைகளில் மக்கள் சேருவார்கள். அக்கட்சி அரசாங்கம் அமைத்தால், நாட்டின் முன்னேற்றம் பெருகும். இன்னொரு முக்கியமான அமிசம் என்னவென்றால், எந்த நாட்டிலும் இரு பெரிய கட்சிகள் இருக்கவேண்டும். ஒன்று மற்றொன்றின் நடவடிக்கைகளைக் கவனித்து, எதேச்சாதிகாரப் போக்கு உண்டாகாமல் தடுக்க உதவும். பலகட்சிகள் இருக்குமானால், நன்மைகளைவிடத் தீமைகளே பெருகும். இதற்குச் சிறந்த உதாரணம் பிரான்ஸ் நாட்டிலுள்ள கட்சிகள். இங்கிலாந்து நாட்டில் இரு கட்சி முறை இருக்கிறது. ஆனால், இந்தியாவில் காங்கிரசுக் கட்சியைத் தவிர உருப்படியான எதிர்க்கட்சி இல்லை. ஆகையால், நாட்டின் எதிர்காலம், இக்கட்சியின் போக்கையே பொறுத்திருக்கிறது. அமெரிக்காவில் இவ்விரு கட்சி முறை ஆல விழுதுபோலத் தழைத்து வளர்ந்து நற்பணி புரிந்து வருகிறது. உதாரணமாக, இப்போது அந்தநாட்டில் குடியரசுக்கட்சியும் (Republican Party), ஜனநாயகக்கட்சியும் (Democratic Party) நாடு முழுதும் மக்கள் ஆதரவு பெற்ற கட்சிகளாய் இருக்கின்றன எனலாம்.

ஆனால், இந்த இரு கட்சிகளும் இப்போதிருக்கின்ற மாதிரியே முன்பும் இருந்தனவா என்பது சந்தேகமே. இவற்றின் கொள்கைகள்,

பெயர்கள் எல்லாம் ஐம்பதாண்டுகளுக்கு முன்பிருந்ததுபோல இப்போது இல்லை. இவ்விரு கட்சிகளும் காலத்திற்கேற்ற கோலம் பூண்டன என்பதே உண்மை. இம்மாதிரி இவை தம் பெயரையும், கொள்கைகளையும் அடிக்கடி மாற்றிக்கொண்டு வந்ததற்குக் காரணம் மக்களே என்று துணிந்து சொல்லலாம். அமெரிக்க மக்கள் ஆரம்பம் முதல் இன்று வரை இருகட்சி முறையையே விரும்பிவந்திருக்கின்றார்கள். அதனால், மூன்றாவது கட்சி ஏதேனும் தோன்றினால், அதை ஏற்றுக்கொண்டு, முதலிலிருந்த கட்சிக்கு முழுக்குப் போட்டிருப்பார்கள்; அல்லது புதிதாகத் தோன்றிய கட்சியைத் தேர்தல் காலத்தில் அடியோடு தோற்கடிப்பதன் மூலமாக ஒழித்திருப்பார்கள். மற்றொரு காரணம், அங்கு ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படு முறையிலுமிருக்கலாம். பல கட்சிகள் இருந்தால், அவை அத்தனையும் ஜனாதிபதி பதவிக்கான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்களுள் எவருமே தேவையான வாக்குகளை 'ஜனாதிபதி தேர்வு மன்றத்தில்' பெற முடியாமற்போனால், அந்த அதிகாரம் மக்கள் கையை விட்டு, பிரதிநிதிகள் சட்டமன்றத்திற்குப் போய்விடும். சட்டமன்றம் சில சமயம் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்துவிடக்கூடும். இம்மாதிரி அவலநிலை ஏற்படாமல் தடுக்க மக்கள் எவையேனும் இரு கட்சிகளைத்தான் ஆதரித்து வருகிறார்கள்.

அரசியலமைப்பு அரசியற் கட்சிகளைப்பற்றி மௌனம் சாதிக்கிறது. இதற்குக் காரணம், அரசியலமைப்பை இயற்றிய பெரியோர்கள், அரசாங்கம், கட்சியடிப்படையில் இல்லாததாக, மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டுமென்று விரும்பியதே. இதன்படியே முதன்முதலில் ஜனாதிபதியாய் இருந்த ஜார்ஜ் வாஷிங்குடன் கூட நினைத்து நடந்தார். ஆனால், அவர் கண் முன்னாலேயே அரசியற்கட்சிகள் தோன்றிவிட்டன. அவற்றுள் முக்கியமானவை **ஜான் ஆடம்ஸ்** என்பவராலும், **ஜெபர்சன்** என்பவராலும் தோற்றுவிக்கப்பட்ட கட்சிகளாகும். இக்கட்சிகள் வளர்ந்து 1800ல் உறுதி பெற்றன. எவ்வளவுதான் வாஷிங்குடன், கட்சிகளினால் விளையக்கூடிய தீமைகளை எடுத்துக் கூறினாரானாலும், அவை வளர்ந்தே வந்தன. ஆனால், வாஷிங்குடன், அமெரிக்காவின் வருங்காலத்தை உணர்ந்துதான் அரசியற்கட்சிகள் கூடா என்று சொன்னதாக நாம் நினைக்க முடியாது. அவருக்கிருந்த செல்வாக்கு மற்றவர்களுக்கு இல்லாமற் போகக்கூடும் என்று அவர் கருதியிருப்பாரானால், அரசியற்கட்சிகளின் அவசியத்தை அவரே வலியுறுத்தியிருக்கக்கூடும்.

இப்போது அமெரிக்காவில் ஜனநாயகக்கட்சி, குடியரசுக்கட்சி என்று இரு மாபெருங்கட்சிகள் இருக்கின்றன. முதலில் ஜனநாயகக் கட்சியின் வரலாற்றைச் சுருக்கமாகப்பார்ப்போம்: இக்கட்சி சுமார் 150 வருடங்களுக்கு முன் ஜெபர்சன் என்பவரைத் தலைவராகக்

கொண்டு தோன்றியது. இது, கூட்டாட்சி எதிர்ப்பாளர், குடியரசினர், ஜனநாயகக் குடியரசினர் என்ற பல பெயர்களில் வழங்கப் பட்டு, இப்போது, ஜனநாயகக் கட்சியாய் மிளிர்கிறது. இதில் ஆரம்பத்தில் குடியானவர்களும் நிலச்சுவான்தார்களுமே அதிகமாய் இருந்தார்கள். எனினும், இப்போது இதில் தொழிலாளிகளும், தொழிலதிபர்களும் இருக்கிறார்கள். இது ஆரம்பத்தில் முற்போக்குக் கொள்கைகளை அனுசரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, வெளி நாடுகளுக்கு உதவி செய்வதிலும், அவற்றோடு சுமுகமான உறவு ஏற்படுத்திக்கொள்வதிலும், இது அவ்வளவு ஊக்கங் காட்டவில்லை. இக்கட்சி *1816* வரை செல்வாக்குடன் விளங்கியதானாலும், இதன் செல்வாக்குப் பின்னர்க் குறைந்தும், பிறகு வளர்ந்தும் வந்தது. ஜாக்ஸன், கிளீவ்லாந்து, பிராங்கிளின் ரூஸ்வெல்டு போன்றவர்கள் இக்கட்சியைச்சேர்ந்த ஜனாதிபதிகள். இப்போது ஜனாதிபதியாய் இருக்கும் திரு. கென்னடியும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரே.

குடியரசுக்கட்சி **ஹாமில்டன்** (Hamiltan) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட கூட்டாட்சிக் கட்சியினுடைய வாரிசென்றே சொல்லலாம். இது **1854-**ஆம் ஆண்டில் நன்றாக அமைக்கப்பட்டது. இது "தேசீயக் குடியரசினர்", "விக்" என்ற பெயர்களையும் பெற்றிருந்தது. இக்கட்சி ஆரம்பமுதலே பரந்த நோக்கமும், பிற நாடுகளின் நேசத்தை நாடி நல்ல காரியங்களைச் செய்தலும் அனுசரித்து வந்திருக்கிறது. இக்கட்சி நீகிரோக்களுக்கு வாக்குரிமை கொடுக்கவேண்டுமென்று வாதாடி அக்கட்சியைச் சேர்ந்த ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாய் இருந்த போது வெற்றியடைந்தது. இக்கட்சியில் பெருஞ் செல்வந்தர் முதல் தொழிலாளர்வரை பலரும் உறுப்பினராயிருக்கின்றனர். இக்கட்சி *1860* முதல் *1913* வரை கிளீவ்லாந்து ஜனாதிபதியாய் இருந்த அந்த எட்டாண்டுகள் தவிர, மற்ற ஆண்டுகளில் நிருவாகத்துறையில் பொறுப்பு வகித்திருக்கிறது. இந்தக் கட்சியிலும் இடையிடையே பல இடையூறுகள் ஏற்பட்டு, கட்சியே அழிந்துவிடக் கூடிய அபாயத்திலிருந்தது. உதாரணமாக, கிரான்டு (Grant) என்பவர் ஜனாதிபதியாய் இருந்தபோது ஆட்சித்துறையில் இலஞ்சம் தலைவிரித்தாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஏற்பட்ட பலவீனம் கட்சியைப் பாதித்தாலும், மீண்டும் புனர்ஜன்மம் பெற்றது. சமீபத்தில் ஜனாதிபதியாய் இருந்த **திரு. ஐசனோவர்** *(1952-56; 56-60)* குடியரசுக் கட்சியைச்சேர்ந்தவர் என்பது நோக்கத்தக்கது.

ஆனால், இப்போது இந்த இரு கட்சிகளிடையேயும் அடிப் படைக் கொள்கைகளைப் பொறுத்த அளவிற்கூட ஆழமான கருத்து வேறுபாடுகள் இல்லை என்பது உணரத்தக்கது. இதற்குக்காரணம்,

இவை உலகத்தின் வரலாற்றிலேயே பல முக்கியமான திருப்பங்களை ஏற்படுத்தவல்ல நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்க முடியாது. அல்லாமலும், அமெரிக்க ஐக்கியநாட்டையே, உலகத்திலுள்ள பல ஜனநாயக நாடுகளும் தங்கள் ஜனநாயக முறையைப் பாதுகாத்துக்கொள்ளவும், கம்யூனிசக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளின் பலாத்காரத்தினின்றும் தப்பித்துக்கொள்ளவும் அவசியமான உதவிகளைப் பெற எதிர்நோக்கியிருக்கின்றன.

## படித்தற்குரிய சில நூல்கள்


| | ஆசிரியர் பெயர் | நூற்பெயர் |
|---|---|---|
| 1. | ஆக் இரே (Ogg Ray) | அமெரிக்க அரசாங்கத்திற்கு முன்னுரை<br>Introduction to American Government |
| 2; | புரோகன்<br>Brogan | அமெரிக்க ஐக்கிய நாடுகள்<br>The U. S. A. |
| 3. | ஹெரால்டு லாஸ்கி<br>H. J. Laski | அமெரிக்க ஜனாதிபதி<br>American Presidency |
| 4. | ஜே. ஸ்டோரி<br>J. Story | அமெரிக்க அரசியல் சட்டத்தின் கருத்து விளக்கம்<br>Commentaries in the Constitution of United States of America. |
| 5. | ஹெச். பைனர்<br>Herman Finer | தியரியும் நடைமுறையும்<br>Theory and Practice of Modern Government |

## இரண்டாம் பிரிவு

# கா னடா

## அத்தியாயம்—1

# கானடாக் கூட்டாட்சியின் வரலாறு

**தோற்றுவாய்:** மக்கள் சமுதாயத்திலுள்ள தனி நபரைப் போலவே, அரசாங்கங்களும் பரம்பரைச் (Heridity) சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு அமைகின்றன. இதற்குச் சிறந்த உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளையும், (U. S. A.) கானடாவையுங் கூறலாம். அவ்வாறமையும் நாடுகள், தாய் நாட்டு நிறுவனங்களின் சிறப்புகளை அறிந்திருப்பதால், அவற்றைத் தங்கள் அமைப்பில், தேவைக்கேற்பத் திருத்தியோ அல்லது இருந்தபடியேயோ ஏற்றுக் கொள்கின்றன. கானடாவை எடுத்துக்கொண்டால், அந்நாட்டு மக்கள் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து குடியேறியவர்கள். அவர்களுட்பெரும்பான்மையோர், இங்கிலாந்திலிருந்தும், பிரான்ஸிலிருந்தும் வந்தவர். அதனால், அவர்கள் இனத்தாலும், மொழியாலும், பழக்க வழக்கங்களாலும் மாறுபட்டிருந்ததோடன்றி, அரசியற்பழக்கங்களிலும் நடைமுறைகளிலும் வேறுபட்டிருந்தார்கள். பிரெஞ்சுக் காரர்கள் தங்கள் மொழியையும் பண்பாடுகளையும் வளர்த்துக் கொள்ள விரும்பியது போலவே, ஆங்கிலேயரும் தங்கள் மொழி, பண்பாடு, அரசியல் நிறுவனங்களைச் சிறிதும் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. எனவே, இவ்விரு பேரினங்களும் ஒன்று சேர்ந்து கானடா, டொமினியனை ஏற்படுத்த விரும்பியபோது, டொமினியன் அரசாங்கத்தின் அமைப்பு, இவ்விரண்டு இனங்களின் இயற்கையான சிறப்பு அமிசங்களையுமுடையதாக ஏற்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் சட்டமும், மரபும், அறிவு வளமும் இடம் பெற்றதோடல்லாமல், கானடாவின் முன்னோடியாய் இருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளின் செயல்முறையில் வெளிப்பட்ட சில முக்கிய உண்மைகளும் அரசாங்கம் அமைக்கும்போது கருத்தில் கொள்ளப்பட்டன என்பதையும் நாம் இங்கு அறிதலவசியம். இனி, கானடாக் கூட்டாட்சி ஏற்பட்ட விதத்தைச் சுருக்கமாகக்கண்டு, அதன் அரசியலமைப்பை விவரிப்போம்.

பிரிட்டிஷ் வட அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் ஒற்றுமையுணர்வு, அமெரிக்கக் குடியேற்றநாடுகள் (U. S. A.) சுதந்தரம்

பெற்ற போதே தோன்றியதெனலாம். எனினும், நாம் இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, இன, மத, பொருளாதார, பிராந்திய (Regional) வேற்றுமைகள் இடையே குறுக்கிட்டதால், ஒற்றுமையுணர்ச்சி வலுப்பெறவில்லை. ஆகையால், டொமினியன் அந்தஸ்துடைய கானடாக் கூட்டாட்சி ஏற்படுவதில் காலதாமதமேற்பட்டது. குடியேற்ற நாடுகளின் சேர்க்கை (Union) யை ஆதரித்த, **டர்ஹாம் பிரபு** பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்த தமது அறிக்கையில், "பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இன அடிப்படையில் நடக்கும் சச்சரவுகள் நீங்கும் வரையில், எவ்விதமான முன்னேற்றமும் பயன் தாராது," என்று குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் பெரும்பாலாராய் இல்லாத இதர பிரதேசங்களிலுங்கூட இவ்வடிப்படையில் பூசல்களும் பிணக்குகளும் இருந்தன.

இந்த இனப்பூசலொழிய டர்ஹாம் பிரபு தமது அறிக்கையில் இரு சிபாரிசுகள் செய்திருந்தார். முதலாவதாக மேல், கீழ்க் கானடாப் பிரதேசங்கள் ஒன்றுசேர்க்கப்பட வேண்டும். இரண்டாவதாக, பொறுப்புள்ள அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதே அவரது திட்டம். ஆனால், இச்சீர்திருத்தங்கள் எதிர்பார்த்த பலனைத் தாராமல் முன்னிலுமதிகமாக, மனக்குறையேற்படவே உதவியது. கீழ்க்கானடாவில் குறைவான எண்ணிக்கையுடையவராய் இருந்த பிரெஞ்சுக்காரர்கள், தங்களது கலாசாரத்தை அழிக்கச் செய்யப்பட்ட அநீதியெனக் கருதியதே இதற்குக் காரணமாகும். இதினின்றும் தப்பித் தனிச் சமுதாயமாக வாழ, கூட்டாட்சி அமைப்பே ஏற்றதென்பதை அவர்கள் வற்புறுத்தினார்கள். இக்கருத்து மற்றக் குடியேற்ற நாடுகளுக்கும் ஒத்ததாய் இருந்தது. காரணம், அவைகள், குடியேற்ற நாடுகளென்று வழங்கப்படும் தங்கள் நிலைமையொழிய விரும்பினதேயாம்.

இதைத் துரிதப்படுத்துவது போல அமைந்தன அமெரிக்க ஐக்கியநாடுகள் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கையும், அமெரிக்கத்தலைவர்கள் பழிவாங்கும் மனப்பான்மையுடன் பேசி வந்த பேச்சுகளும். அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் செய்துகொண்டிருந்த வர்த்தக உடன்படிக்கை காலாவதியாகிவிட்டதால், கனடியப் பொருள்களை விற்பனை செய்ய முடியாமற்போனதுடன் நஷ்டமும் ஏற்படும்போன்றிருந்தது. அல்லாமலும், அமெரிக்காவின் இராணுவ பலமும், அங்கு ஏற்பட்டிருந்த உள் நாட்டுப் போரும் கானடாவைப் பயமுறுத்தி ஒற்றுமையின் வன்மையை வலியுறுத்தின.

கடைசியாகத் தொழிற்றுறை நுணுக்கங்களிலும் வேலை முறையிலும் ஏற்பட்ட மாறுதல்களும், இயற்கை வளங்கள் குறைவாய் இருந்த கானடாவைத் திணறவைத்தன. **பேராசிரியர் இரேட்டன் (Pro. Creighton)** என்பவர், "நீர்ச்சத்திக்குப்பதில் நீராவிச் சத்தி

தோன்றியது; மரத்திற்குப் பதில் இரும்பு உபயோகத்திற்கு வந்தது; இந்த மாற்றங்கள் மாகாணங்களின் பொருளாதாரத்தைச் சீர் குலைக்குந் தன்மையன; இவ்வபாயத்தினின்றும் தப்புவதற்கான வழி, ஒன்றேடொன்று தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள ஒற்றுமையுடன் தங்களைத் தயார் செய்துகொள்வதே,'' என்று கூறினர்.

இக்காரணங்கள் கூட்டாட்சியின் முக்கியத்தைப் பெரிதும் வற்புறுத்தின. இதற்கிடையில் 1864-ஆம் ஆண்டாரம்பத்தில், நோவாஸ்கோஷியாவின் பிரதம மந்திரியார் **டாக்டர் சார்ல்ஸ் தப்பர்** (Dr. Charles Tupper) அந்நாட்டின் சட்டசபையில், நியூபிரன்ஸ்விக்கு, பிரின்ஸ் எட்வர்டு ஐலண்டு நாடுகளின் பிரதிநிதிகளுடன், இம்மூன்றின் கூட்டுக்குப் பேச்சு வார்த்தை நடத்தப் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைப் பிரேரேபித்து, அதனுடைய ஏகமனமான ஒப்புதலையும் பெற்ருர். மேற்சொன்ன இரண்டு இதர நாடுகளும் சம்மதிக்கவே, 1864-ஆம் வருஷம், செப்டெம்பர் மாதம், முதல் தேதி சார்லொட்டி டவுனில் (Charlotte Town) அவற்றின் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. இதையறிந்த கானடா அரசாங்கம், அந்த மூன்று நாடுகளின் சம்மதம் பெற்றுத் தன்னுடைய பிரதிநிதிகளையும் அனுப்பியது.

அந்த மாநாடு, குறிப்பிட்ட நாளில் தொடங்கிற்று. கானடாப் பிரதிநிதிகள் தங்கள் பிரேரணைகளைச் சமர்ப்பித்தார்கள். ஆனல், அந்த மூன்று நாடுகளும் தங்களது நிகழ்ச்சி நிரலையே முதலில் விவாதித்தன. விவாதத்தின் முடிவில் அவை தங்களது கூட்டு, பலனெதுவும் தாராதென்பதையும், கானடாவும் சேர்ந்த கூட்டாட்சியே சாலச் சிறந்ததென்பதையும் உணர்ந்தன. ஆகையால், கானடா உட்பட எல்லா நாடுகளும் சேர்ந்து, கூட்டாட்சி நிறுவனத்திற்கான பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த அக்டோபர் மாதத்தில் கியூபெக்கில் மறுபடியும் கூட வேண்டுமெனத் தீர்மானித்தன.

சார்லொட்டி டவுன் மாநாட்டின் முடிவிற்கேற்ப, அதே வருஷம் அக்டோபர் மாதம், 10-ஆம் தேதி, மேற்சொல்லப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய கூட்டம் கூடியது. அக்கூட்டம், "கூட்டாட்சியே ஏற்றதும் சிறந்ததுமாகும்,'' என்ற சார்லொட்டி டவுன் மாநாட்டின் முடிவை ஏற்றது. இந்த மாநாடு பதினெட்டே நாட்களில் எழுபத்திரண்டு தீர்மானங்களை இயற்றியது. இத்தீர்மானங்களே, பின்னர், பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தில் இடம் பெற்றன. இந்த மாநாட்டின் முடிவுகளைக் கானடாச் சட்டசபை ஆமோதித்ததென்ருலும், நோவாஸ்கோஷியா முதலான அந்த மூன்று நாடுகளில் இதற்கு எதிர்ப்பிருந்தது. அதனல், எல்லாத் தேசங்களின் பிரதிநிதிகளுமடங்கிய பிறிதொரு மாநாடு இலண்

டனில் நடைபெற்றது. அதன் விளைவாக, 1867-ஆம் வருஷத்திய பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம், 1867-ஆம் வருஷம், மார்ச்சு மாதம், 29-ஆம் தேதி அரசரின் இசைவைப் பெற்று, அதே ஆண்டு, மே மாதம், 22-ஆம் நாள் பிரகடனப்படுத்தப்பட்டு, ஜூலை மாதம் முதல் தேதி அமுலுக்கு வந்தது. இந்தக் **கியூபெக்கு மாநாடு,** கானடாத் தேசத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய முக்கிய சம்பவமென்பது மிகையாகாதன்றே !

பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தின் ஷரத்துகளின்படி, ஒன்டாரியோ, கியூபெக்கு, நியூ பிரன்ஸ்விக்கு, நோவாஸ்கோஷியா என்ற நான்கு மாகாணங்களைக்கொண்ட **அகண்ட கானடா** (Greater Canada) 1867-ஆம் வருஷம், ஜூலை மாதம், முதல் தேதி ஏற்பட்டது. பிரிவிகவுன்சிலின் ஆலோசனையின்பேரிலும், கானடாவின் பாராளுமன்றத்தின் வேண்டுகோளின்பேரிலும், இதரக் குடியேற்ற நாடுகள் டொமினியனில் சேர விரும்பினால், சேர்த்துக் கொள்ளலாம் என்ற அதிகாரம் அரசியாருக்குக் கொடுக்கப்பட்டது. இதனால், கானடாத் தேசத்தில், 1949-ஆம் வருஷம் சேர்ந்த நியூ பௌண்ட்லாந்தையும் சேர்த்து மொத்தம் பத்து மாகாணங்கள் இருக்கின்றன.

## அத்தியாயம் —2

## கானடாவின் கூட்டாட்சித்தத்துவம்

மாகாணங்களென்று வழங்கப்படும் பத்து அங்கங்களையுடையது கானடாத் தேசம். அவ்வங்கங்கள், கானடாக்கள் என்று கூறப்படும் ஒன்டாரியோ, கியூபெக்கு, நியூ பிரன்ஸ்விக்கு, நோவாஸ்கோஷியா, பிரின்ஸ் எட்வர்டு ஐலண்டு என்னும் கடற்கரை மாகாணங்களும், நான்கு மேற்கு மாகாணங்களான மாரிடோபா, ஆல்பர்ட்டா, சஸ்கெட்சுவான், பிரிட்டிஷ் கொலம்பியா, நியூ பௌண்ட்லாந்து என்பன.

பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டமும், பிறகு அதற்குச் செய்யப்பட்ட மாற்றச் சட்டங்களும் சேர்ந்ததே, கானடாவின் அரசியலமைப்பு. கானடாவின் அரசியலமைப்பில் கூட்டாட்சியின் அமிசங்கள் பல இருக்கின்றன. முதலாவதாக, அது டொமினியன் பாராளுமன்றத்திற்கும், மாகாணங்களின் சட்டசபைகளுக்கும் உள்ள அதிகாரங்களைப்பற்றிக் கூறுகிறது. எடுத்துக்கூறப்பட்ட சிலவிஷயங்களில், மாகாணச் சட்டசபைகள் ஏகபோகமாகச் சட்டமியற்ற வல்லவை. எடுத்துக் கூறப்படாத துறைகளில் டொமினியன் பாராளுமன்றத்திற்கே சட்டஞ் செய்யுமுரிமை தரப்பட்டிருக்கிறது. சந்தேகங்கள் ஏற்படாமலிருக்கவேண்டுமென்பதற்காக, டொமினியன் அதிகாரஞ்செலுத்தக்கூடிய துறைகள் பலவற்றையும் எடுத்துக் கூறியிருக்கிறது. இரண்டாவதாக, டொமினியன், மாகாணச் சட்டசபைகளின் சம்மதமில்லாமல், அவ்வவற்றின் அதிகாரப் பங்கீடு பற்றிய ஏற்பாட்டை மாற்ற முடியாது. அரசியலமைப்பை மாற்றும் அதிகாரம் ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. கடைசியாக, டொமினியன் அல்லது மாகாணங்கள் இயற்றிய சட்டங்களை, அவற்றிற்கென அரசியலமைப்பால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகார வரம்பையும் மீறிச் செய்யப்பட்டிருக்கின்றன என்ற காரணங்காட்டி, "செல்லத்தக்கன அல்ல," என்று கூறும் அதிகாரம், கானடாவின் நீதி மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வேற்பாடு அரசியலமைப்பின் மேன்மையை நிலை நாட்டுகிறது.

கானடாவைப் பொறுத்த மட்டில் கூட்டாட்சியே நன்மை தருமென அரசியலமைப்பியற்றிய அறிஞர்கள் கருதினூர்களென்ருலும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிலவிய கூட்டாட்சிக் கொள்கைகளையோ, அல்லது நிறுவனங்களையோ அப்படியே ஏற்றுக்கொள்ள அவர்கள் ஒப்பவில்லை. இதற்குக் காரணம், அமெரிக்காவில், உறுப்பு நாடுகளுக்கிருக்க வேண்டிய உரிமைகள் அதிகாரங்கள் பற்றி அடிக்கடி வாக்குவாதங்களும், அவற்றைத் தொடர்ந்து உள் நாட்டுப் போரும் மூண்டதேயாகும். எனவே, கியூபெக்கு மாநாட்டில் கலந்துகொண்ட பல பிரதிநிதிகளும், நாட்டில் நிலவி வந்த பல ஒற்றுமைச் சத்திகளையும் கூட்டாட்சியமைப்பில் பலப்படுத்த வேண்டுமெனத் தீர்மானித்து, அங்ஙனமே செய்தார்கள். அம்முடிவிற்கேற்ப அவர்கள், மாகாணங்கள் அதிகாரஞ் செலுத்தக்கூடிய துறைகளைத் திட்டவட்டமாகக் கூறி, மாகாணங்களுக்குத் தரப்படாத வேறு துறைகளில், டொமினியனுக்கே அதிகாரமிருக்கும்படி செய்தார்கள். இக்கருத்தை, **'சர் ஜான் மாக்டொனுல்டு'** என்பவர், "நாங்கள் பலம் பொருந்திய மத்திய அரசாங்கத்தையும், பலம் பொருந்திய மத்திய சட்டசபையையும், மற்ற முக்கியமல்லாத பிராந்திய விஷயங்களைக் கவனிப்பதற்காகப் பிராந்தியச் சட்டசபைகளையும் பெற்றிருக்கிறோம்," என்றும், "மத்திய அரசாங்கத்தைப் பலப்படுத்தி, அதற்கு முக்கியமான துறைகளில் அதிகாரந் தந்திருப்பதன் மூலமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் காணப்படும் பலவீனம் இங்கு ஏற்படாமல் செய்திருக்கிறோம்," என்றும் வற்புறுத்தியுள்ளமை நோக்கத்தக்கது. இதனுல், கூட்டாட்சிக்கும், உறுப்பாட்சிக்கும் இருக்க வேண்டிய அதிகாரப் பங்கீடு, இங்கு அமெரிக்காவிலுள்ளது போலில்லாமல், மத்திய ஆட்சியைப் பல்லாற்ருனும் வலிமை மிக்கதாகச் செய்வதாய் இருக்கிறது என்பது விளங்குகிறதன்றோ? மத்திய ஆட்சியைப் பலப்படுத்த உதவும் சில முக்கியமான வழிகள் பின் வருமாறு:

முதலாவதாக, மாகாணங்களே அதிகாரஞ் செலுத்தலாம் என்று எடுத்துக் கூறப்பட்டிருக்கும் துறையில், முக்கியமாகப் பிராந்திய விஷயங்களேயுள்ளன. அந்தப் பிராந்தியத் துறையில் வரும் கிரிமினல் சட்டம், திருமணம், திருமணரத்துப்போன்ற விஷயங்கள் டொமினியன் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் அமெரிக்கக் கூட்டாட்சியில் அங்க நாடுகளுக்கே உரியவை என்பது அறியத்தக்கது.

இரண்டாவதாக, மாகாணங்களுக்கு என்றே ஒதுக்கப்படாத வேறு துறைகள் (Residue) எல்லாம் கானடாவில் டொமினியன் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு துறைகளில் டொமினியன் அரசாங்கம் அதிகாரம் செலுத்தலாமென்றிருந்தா

லும், ஐயந்திரிபில்லாமலிருக்க, அத்துறைகளில் வரும் விஷயங்கள் பற்றிய விரிவான பட்டியலொன்றும் அரசியலமைப்பிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறது. இவையுமல்லாமல், பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தின் 91-ஆம் பிரிவு டொமினியன் பாராளுமன்றம், "மாகாணங்களுக்கே எனத் திட்டவட்டமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கும் துறை போக, வேறு எந்தத் துறைகளிலும் கானடா அரசாங்கத்தில் அமைதி, ஒழுங்கு, பொதுநன்மையை நிலைநாட்டச் சட்டஞ் செய்யலாம்," என்று கூறுவது, மாகாணங்கள் அதிகாரஞ் செலுத்தக்கூடிய துறைகளிற்கூட, டொமினியன் அரசாங்கம் ஆதிக்கஞ் செலுத்த ஏதுவாகிறது.

மூன்ருவதாக, டொமினியன் அரசாங்கம் மாகாணச் சட்டசபைகள் இயற்றிய சட்டங்களுக்கு அவை நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுகாலத்திற்குள் அனுமதிமறுக்கலாம். மாகாணக் கவர்னர்களை நியமிக்கவும் நீக்கவும் அதற்கு அதிகாரமுண்டு. மாகாணங்களியற்றிய மசோதாக்களுக்கான சம்மதம் கொடுக்க வேண்டாவென்ருே, அல்லது கவர்னர் ஜெனரலின் பரிசீலனைக்காகத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி கூறவோ, கவர்னர்களுக்கு டொமினியன் அரசாங்கம் கட்டளை பிறப்பிக்கலாம். அவசியமெனப்பட்டால், கவர்னர்-ஜெனரல் அம்மசோதாக்களுக்கும் தம் அனுமதி தர மறுக்கலாம்.

நான்காவதாக, நீதித்துறை சம்பந்தப்பட்ட எல்லா முக்கியமான நியமனங்களையும், அவைகள் மாகாண அரசாங்கங்களின் மேற்பார்வையிலிருந்தாலும், டொமினியன் அரசாங்கமே செய்கிறது.

கடைசியாக, செனட்டின் உறுப்பினர்களெல்லாம், டொமினியன் அரசாங்கத்தாலேயே நியமிக்கப்படுகிருர்கள். மாகாணங்கள் பெரியவையாய் இருந்தாலும் சிறியவையாய் இருந்தாலும், கூட்டமைப்பில், அவற்றுக்குச் சமப்பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லையென்பதும், செனட்டர்கள், மாகாண அரசாங்கங்களின் அல்லது மக்களின் பிரதிநிதிகளென்றெண்ணி, அதற்கொப்பச் செயலாற்ற வேண்டுமென்பதுமில்லையென்பதும் அறிதலவசியம்.

மேலே நாம் கூறியவைகளிலிருந்து, கானடாக் கூட்டாட்சியில் டொமினியன் அரசாங்கம் சத்திவாய்ந்ததென்பதும், மாகாணங்கள் சுதந்தரமானவை என்றிருந்தாலும் டொமினியன் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுவது இன்றியமையாததாகிறது என்பதும் வெளிப்படை. எனவே, மாகாணங்களின் அவசியமென்னவென்ற வினு எழுமானுல், அதற்குக் 'கானடாவில் நகராட்சிகள் இல்லாததால் நகராட்சிகள் செய்யக்கூடிய வேலையை மாகாணங்கள் கவனிக்கலாம்,' என்பதே விடையாகும். மாகாணச் சட்டசபைகள் "முக்கியமில்லாதவை", "கீழ்ப்பட்டவை," என்று, கியூபெக்கு

மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளால் வருணிக்கப்பட்டதனுலும் இது அறியப்படும். இக்கருத்தை விளக்குவது போலிருக்கிறது **அறிஞர் சார்லஸ் தப்பர்** (Dr. Charles Tupper) என்பார் எழுதியிருப்பது. அவர் எழுதியிருப்பதாவது, "கானடாவில் நகராட்சி மன்றங்கள் (Municipalities) இல்லாததால், பிராந்திய அரசாங்கங்களை நாங்கள் பாதுகாக்க விரும்புகிறேம்; அதே சமயத்தில் மக்களின் கருத்துக்களையோ, எண்ணங்களையோ புறக்கணித்து, அவர்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக்கொள்ளவும் விரும்பவில்லை" என்பது.

அடுத்து, டொமியன் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள 'மறுப்பாணை' (Veto) அதிகாரம், மாகாணங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கிறது. ஏனென்றல், மாகாண அரசாங்கங்களியற்றும் எந்தச் சட்டத்தையும் நிராகரிக்கும் உரிமை, டொமினியனுக்கிருப்பதால், மாகாணங்கள் தம்மிச்சைப்படி எதையும் செய்ய முடியாது. இக்காரணங்களால் கானடாவைக் கூட்டாட்சி என்று கூறமுடியாதென்கிருர் பேராசிரியர் **வியர்** (Wheare). அதே சமயத்தில் அதை ஒற்றையாட்சி அமிசங்களையும் கூட்டாட்சியமிசங்களையும் உடைய ஒரு 'போலிக் கூட்டாட்சி' (Quasi federation) எனவும் கூறுகிருர்கள். ஆனல், **திரு. கென்னடி** என்னும் மற்றேர் அறிஞர் கானடாவைக் "கூட்டாட்சியின் சாரம்" என்று கூறியுள்ளார். அதற்கு ஆதாரமாக அவர், "கானடாவின் பாராளுமன்றம், பிரிட்டன் அல்லது மாகாணங்களின் பிரதிநிதிநிறுவனமன்று. அது, தன் துறையில் இறுதியதிகாரம் செலுத்த வல்லது. அத்தகையனவே, மாகாணச் சட்டசபைகளும். அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கும் அவற்றின் அதிகாரத் துறையில், அவை டொமினியன் பாராளுமன்றத்தைப்போன்றே, முழு அதிகாரமுடையவை. அவற்றின் அதிகாரம் இறுதியானதுமாகும். பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தின் நோக்கமே, கூட்டாட்சி ஏற்படுத்துவதேயல்லாமல், மாகாணங்களின் முக்கியத்தையோ அல்லது சுதந்தரத்தையோ கட்டுப்படுத்தி, மத்திய அரசுக்கு அடிமையாக்குவதன்று," என்று கூறுகிருர்.

நீதிபதிகள் எதைக் கூறுகின்றுர்களோ, அதைப் பொறுத்தது தான், கூட்டாட்சி அரசியலமைப்பும். உதாரணமாக, அமெரிக்க ஐக்கியநாட்டை எடுத்துக்கொள்ளுவோம். தலைமை நீதி மன்ற நீதிபதிகள் கூட்டாட்சித்தத்துவத்தை நிலை நாட்டிவந்திருக்கின்றுர்கள். அவர்கள், ராஜ்யங்கள், அவைகளிடமிருந்து எடுத்து மத்திய அரசுக்குக் கொடுக்கப்படாத 'அதிகாரத் துறைகளில் 'இறைமை' யுடையவை என்று தெளிவாக்கியுள்ளனர். இதற்குக்காரணம், அங்கு அரசியலமைப்பு, சாதாரணச் சட்டமென்று எண்ணப்படவில்லை. ஆனல், கானடாவின் தலைமை நீதி மன்றமும், பிரிவிகவுன்

சிலின் நியாயக் குழுவும் அமெரிக்கத் தலைமை நீதி மன்றத்தின் உதாரணத்தைப் பின் பற்றுததோடு, அரசியலமைப்பையும் சாதாரணச் சட்டமாகக் கருதி அரசியலமைப்பு எழுதப்பட்ட சூழ்நிலை, அதை இயற்றியவர்கள் கொண்டிருந்த கருத்துகள், மாறிமாறித் தோன்றும் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சிறிதும் கவனியாமல், இலக்கிய விமரிசனம் செய்வது போல அரசியலமைப்பை விளக்கி வந்தார்கள். அதன் விளைவு பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தில் நேரிடையாகக் கூட்டாட்சியைப்பற்றிய சொற்றொடர்கள் இல்லாமற்போனதும், கானடா ஒரு கூட்டாட்சி என்று வழங்கப்பட முடியாமற்போனதுமேயாகும். இருப்பினும், கானடாவில் மாகாணங்களுக்குள்ள அதிகாரங்கள், அமெரிக்காவில் இராச்சியங்களுக்கிருக்கின்ற அதிகாரங்களைவிட அதிகமானவையேயாகும். இதற்குக் காரணம், மக்களின் பழக்கவழக்கங்களும், அவர்கள் ஆதரவு பெற்ற அரசியற்கட்சிகளும் மாகாணங்களின் நியாயமான, சட்ட ரீதியான உரிமைகளுக்குப் போராடி வருவதேயாகும். சுருங்கச் சொல்லின், கானடா ஒரு சமஷ்டி அரசாங்கமேயாகும் எனலாம்.

## அத்தியாயம்—3

# அரசியலமைப்பும் அதன் அமிசங்களும்

திரு. பால் கெரின் லஜோ (Paul Gerin Lajoie) என்பவர் கானடாத் தேசத்திற்கு அரசியலமைப்பைப்பற்றிக் கூறும் சட்டமோ, அன்றி பத்திரமோ இல்லையென்று கூறுகிறார். ஆனால், அது உண்மையன்று. ஏனென்றால், பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம் அரசியலமைப்பின் எழுதப்பட்ட பகுதியாகும். அதுவே, மூலாதாரமானதும் எழுதப்பட்டதுமான அரசியற்சட்டமாகும். ஆதியிலிருந்த நான்கு மாகாணங்களையும் ஒன்றுசேர்த்து ஒரு நிரந்தரக் கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்குக் காரணமாயிருந்ததும் அச்சட்டமேயாகும். அச்சட்டம், இனத்தாலும், மதத்தாலும், அரசியல் பழக்க வழக்கங்களாலும் வேறுபட்டிருந்த பல மக்களிடையேயும் ஒற்றுமை ஏற்படவும், "நாம் இருக்கும் நாடு நமது நாடு," என்னும் நாட்டுணர்வு ஏற்படவும் அடிகோலியது. அச்சட்டத்தில் டொமினியனுக்கும் மாகாணங்களுக்குமிடையே உள்ள அதிகாரப் பங்கீடு, அவற்றிற்கான அரசாங்க அமைப்பு முதலிய பல விஷயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இதுவே, ஆதாரச் சட்டமுமாகும். ஏனென்றால், அதனுடைய அமிசங்களுக்கு மாறாக, டொமினியனோ, மாகாணங்களோ சட்டமியற்ற முடியாது.

அந்தச் சட்டம் கானடாக் கூட்டாட்சி பற்றிய சகல விஷயங்களையும் கூறுவதெனச் சொல்ல முடியாது. உதாரணமாக, நிருவாக அதிகாரத்தைச் செலுத்தும் விதம், நிருவாகத்துறைக்கும் சட்ட சபைகளுக்குமிடையே இருக்கும் உறவு முதலிய இன்னோரன்ன பல விஷயங்கள் தெளிவாகக் கூறப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதற்குக் கூறப்படும் சமாதானம், "கானடா மாகாணங்கள், நோவாஸ் கோஷியா, நியூ பிரன்ஸ்விக்கு ஆகிய பிரதேசங்கள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சியாய் இருக்கவும், இங்கிலாந்தின் அரசியலமைப்பிற்கு இணையான ஓர் அரசியலமைப்பின் கீழ் இருக்கவும் விழைகின்றன," என்று பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்திற்கான முன்னுரையில் கூறப்பட்டிருப்பதாகும். இங்கிலாந்தின் பல நிறுவனங்களும் மரபையொட்டி எழுந்து இயங்கி வருபவை. அந்த மரபுகள் சட்டமெனும்

எலும்புக் கூட்டிற்குச் சதைப்பற்றூட்டுகின்றன. எனவே, கானடாவின் பல நிறுவனங்களும் இங்கிலாந்தின் மரபை உதாரணமாகக் கொண்டே உண்டானவையாதலால், அவற்றின் வேலை முறைகளும் தன்மையும் அங்கிருப்பதுபோன்றே கானடாவிலுமிருக்கின்றன. சான்ருக, கவர்னர்-ஜெனரலை எடுத்துக்கொள்ளுவோம்: இங்கிலாந்தின் அரசியார் எவ்வாறு தம் முடிவிற்கேற்ப எதேச்சாதிகாரமாகச் செயலாற்ற முடியாதோ, அங்ஙனமே கானடாவின் கவர்னர்-ஜெனரலும் தம்மிச்சைப்படி எதுவும் செய்யமுடியாது. கவர்னர்-ஜெனரல் மந்திரி சபையின் உட்குழுக் கூறும் ஆலோசனையின்பேரிலேதான் எதையும் செய்ய வல்லவர். இந்த மந்திரி சபையின் உட்குழுப்பற்றி பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் எதுவும் கூறவில்லை. இவ்வாறே நிருவாகத்திற்கும் சட்ட சபைக்குமுள்ள உறவும் வழக்கை அனுசரித்து இருக்கிறது.

எனவே, பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டந்தான் கானடாவின் அரசியலமைப்புச் சட்டமென்ருல், அதில் கூறப்படாத வேறு விஷயங்கள் மரபாலும் வழக்கத்தாலும் அறிந்து அதன்வழி நடத்தப்படுகின்றன. இதனுல், கானடாவின் அரசியலமைப்பு எழுதப்பட்டதும் எழுதப்படாததுமான பகுதிகளையுடையதென்பது தெளிவாகின்றது. எழுதப்படாத பகுதியில் மரபு, பழக்கவழக்கங்களன்றி, நீதி மன்றங்களால் விளக்கியுரைக்கப்பட்ட பொதுச் சட்டத்தின் கொள்கைகளும், பிரிட்டன் கானடா நாடுகளின் பாராளுமன்றங்களியற்றிய சட்டங்களுமடங்கும்.

**அரசியலமைப்பில் மாற்றஞ்செய்யும் முறை:** ஆஸ்திரேலியாக் காமன்வெல்து அரசியலமைப்புச் சட்டத்தில் இருப்பது போல, கானடாவைப்பற்றிய பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தில், அரசியலமைப்பில் மாற்றஞ்செய்யும் வழிமுறை பற்றிய விதியெதுவும் சேர்க்கப்படவில்லை. இவ்வாறு இருப்பதற்கு, "பிரிட்டிஷ் சட்டமொன்றை, மற்ருெரு பிரிட்டிஷ் சட்டம் மாற்றி அமைக்கும்," என்பது காரணமாய் இருக்கலாம். அதாவது, இங்கிலாந்தில் கடைசியாகச் செய்யப்பட்ட சட்டத்தின் ஷரத்துகள், அவை முன்னரே செய்யப்பட்ட சட்டங்களின் ஷரத்துகளுக்கு முரணுனவையாய் இருந்தாலும்; அமுல் செய்யப்படக்கூடியவை. ஆகையால், பழைய சட்டங்களின் ஷரத்துகள் செல்லாதவையாகும். இந்த முறையை அனுசரித்து, பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் எப்பகுதியையும் புதுச் சட்டமொன்று செய்வதன் மூலம் மாற்றிவிடலாம். இம்முறை சுதந்தர நாடான கானடாவின் கௌரவத்திற்குக் களங்கம் கற்பிப்பது என்று சிலர் நினைக்கக்கூடும். ஏனென்ருல், அரசியலமைப்பில் மாற்றம் செய்யச் சுதந்தர நாடுகள் உரிமையுடையவையென்பதும், அந்த உரிமை அடிப்படை உரிமை என்று கருதப்படுவதுமே அதற்குக் காரணமாகும்.

ஆனால், பிரிட்டிஷ் பாராளுமன்றம் தானாகக் கானடா அரசியலமைப்பை ஒருபோதும் மாற்றுவதில்லை. 1871-ஆம் ஆண்டு முதல் இது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகிவிட்டது. கானடாவின் பாராளுமன்றம், இங்கிலாந்தின் அரசியாருக்கு, ஆங்கிலப் பாராளுமன்றம் மாற்றச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டால், பிரிட்டனின் பாராளுமன்றம், உடனே அதை நிறைவேற்றி வைக்கும். அதில் தாமதமேதும் ஏற்படுவதில்லை. இவ்வாறு ஆங்கிலப் பாராளுமன்றம், கானடாப் பாராளுமன்றத்தின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் சாதனமாய் இருக்கிறது.

# அத்தியாயம்—4

## நிருவாகம்

கானடாவின் நிருவாக அதிகாரம் இங்கிலாந்து நாட்டின் முறைப்படி அமைந்திருக்கிறது. தேசத்தின் பொது நிருவாகத் திற்கு அரசர் தலைவராவார். ஆனுல், அரசர் கானடாவில் இல்லா ததால், கவர்னர்-ஜெனரல் அவர் பிரதிநிதியாய் இருக்கிறார். இங் கிலாந்தில் ஆரம்ப முதல் இன்று வரை அரசர் எவ்வாறு நடந்து வந்திருக்கிறாரோ, அவ்வாறே, கவர்னர் ஜெனரல் கானடாவில் நடந்துவருகிறார் எனலாம். இங்கிலாந்தில், அரசர் நடைமுறையில் செலுத்திவந்த அதிகாரங்களை, நாளடைவில், மக்கள் பிரதிநிதிகள் கைப்பற்றிச் செலுத்தலானார்கள். இந்த அதிகார மாற்றத்திற்கு ஆரம்பத்தில் அரசரிடமிருந்தும், அவர் ஆதரவாளர்களிடமிருந்தும் எதிர்ப்பிருந்தாலும், அவையனைத்தும் கதிரவனைக் கண்ட பனி போல, பொதுமக்களின் கருத்தெனும் மாபெருஞ்சத்திமுன் நிற்க முடியாமல் மறைந்தன. இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டுவதென்னவென்றால், நிருவாக அதிகாரம் மக்கள் பிரதிநிதிகள் கையிலிருந்தாலும், அந்த அதிகாரம் அரசரின் பெயராலேயே செலுத் தப்படுகிறது என்பதாகும். இவ்வாறே, கானடாவிலும் கவர்னர்-ஜெனரலிடமிருந்து அதிகாரம், மக்கள் கைக்கு மாறியதெனலாம். என்றாலும், இங்கிலாந்தில் முடிக்கு (Crown) எவ்வளவு மரியாதை, பெருமை, பழமைச் சிறப்பு, கடந்த காலத்தில் ஆற்றிய கடமைக் காகக் கொடுக்கப்படும் உயர்வு இருக்கிறதோ, அவ்வளவு, கவர்னர்-ஜெனரலுக்கும் கானடாவில் கொடுக்கப்படுகிறது. கவர்னர்-ஜென ரல் சகல வல்லமையும் படைத்த சர்வாதிகாரியாய் இருந்த காலம் மலையேறி, இன்று, சுயாட்சியின் சிறப்பு அமிசமான அமைச்சவை யின் ஆலோசனைக்கிணங்கச் செயலாற்றி வருகிறார். குறிப்பாக, 1926ல் நடந்த சாம்ராஜ்ய மாநாட்டிற்குப் பிறகு, கவர்னர்-ஜென ரல் ஒரு கைப்பொம்மையாகவே, கானடாவின் அரசியல் நிரு வாகத் துறைகளிலும், ஏனைய சமூகப் பொருளாதாரப் பிரச்சினை களிலும் இருந்து வருகிறாரெனக் கூறலாம்.

**கவர்னர் ஜெனரல்** (Governor General): கானடாவின் அரசர், அந்நாட்டின் அரியாசனத்திலேதான் அமர்கிறார். ஆனுல், அவரது

நிரந்தர உறைவிடம் இங்கிலாந்திலிருப்பதால், நேராகக் கானடாவை ஆட்சி செய்ய முடியாது. ஆகையால், அவருக்குப் பதிலாக அவருடைய பிரதிநிதியாகக் கவர்னர்-ஜெனரல் அரியாசனத்தில் அமர்கிறுர். இந்தக் கவர்னர்-ஜெனரல், இங்கிலாந்து அரசாங்கத்தின் பிரதிநிதியல்லர். இவர், முடியின் பிரதிநிதியேயாவர். ஆகையால், இவர், ஆங்கில அரசாங்கத்தின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காகவோ, அல்லது ஆங்கிலேயர்களின் விருப்பு வெறுப்புகளுக்குத் தக்கவாறு நடந்துகொள்ள முயற்சி செய்யவோ முடியாது. விளக்கமாகக் கூறவேண்டுமானுல், இங்கிலாந்தில் பதவியிலிருக்கும் அரசரோ, அல்லது அரசியாரோ, தாம் நினைத்தவாறு ஆட்சி செய்ய முடியாது; அமைச்சவையின் ஆலோசனைப்படிதான் எதையும் செய்ய முடியும். அவ்வாறன்றி, அரசர், அதிகாரத்தைக் கைப்பற்றித் தாமே நேரிடையாக ஆள முயற்சி செய்தால், அதற்கு ஆங்கிலேயர்கள் ஒப்பமாட்டார்கள். அங்ஙனமே, கானடாவின் கவர்னர்-ஜெனரலும் நடந்துகொள்ள வேண்டியவராகிறுர். இங்கிலாந்து நாட்டின் இராணியார், இரண்டாம் எலிசபெத்து, கானடாவிற்கும் இராணியாராவார். இங்கிலாந்திற்கு இராணியார் என்பதால் அவர் கானடாவின் இராணியாரல்லர். கானடாவிற்கு அவர் தனிப்பட்டமுறையில் இராணியாராய் இருக்கிறுர். அதாவது, கானடா நாட்டின் சின்னம் அவர்; அவர்கள் போற்றும் வரலாற்றிற்கும், அவர்கள் ஏற்கும் வழிவழி வரும் பண்பாட்டிற்கும் சின்னம். கனடியர்கள் தங்களுக்கென ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்திக்கொள்ள விழைந்த போது, அவர்கள் எண்ணியதெல்லாம், அரசர், அரசருக்கு உதவியாய் இருக்கும் அமைச்சரவை, இரு சபைகளடங்கிய ஒரு பாராளுமன்றம், நீதி மன்றங்கள், பொதுச் சட்டம் ஆகியவைகளே. இந்த அடிப்படையிலேதான். கானடாவின் பல அரசியல் நிறுவனங்களும் அமைந்துள்ளன.

**கவர்னர்-ஜெனரல்:** நாம் முன்னர்க் குறிப்பிட்டபடி இங்கிலாந்தின் அரசர் அல்லது அரசியாரே கானடா நாட்டின் அரசாங்கத்திற்குத் தலைவர். ஆனுல், அவர் கானடாவிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருப்பதால், தாமே நேரிலிருந்து ஆட்சி செய்ய முடியாததால், அவர் தம் பிரதிநிதியாகக் கவர்னர்-ஜெனரல் ஒருவரை நியமித்து அவர் மூலம் ஆட்சி செய்கிறுர்.

இந்தக் கவர்னர்-ஜெனரல், இங்கிலாந்து அரசாங்கத்தின் குடியேற்றநாடுகளின் அமைச்சர் ஆலோசனைக்கிணங்க அரசரால் முதலில் நியமிக்கப்பட்டார். ஆனுல், **1890**-ஆம் ஆண்டு முதல் கவர்னர்-ஜெனரல் ஒருவர் நியமிக்கப்படுமுன், டொமினியன் அரசாங்கத்தின் கருத்தும் முடிவும் அறியப்பட்டன. **1926**-ஆம் வருஷம் நடைபெற்ற சாம்ராஜ்ய மாநாடு, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இதில் சிறிதளவு பங்குகூட இல்லையெனவும், கனடிய அரசாங்கமே

இதற்கு உரிமையுடையதென்றும் தீர்மானித்தது .அதுமுதல் கானடா நாட்டின் பிரதமமந்திரியாரின் ஆலோசனைப்படியே கவர்னர்-ஜெனரல் நியமிக்கப்பட்டார். எனினும், இங்கிலாந்தவரே பெரும்பாலும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டனராதலால், கானடா அரசாங்கத்தால் விரும்பப்படக்கூடிய ஒருவர், அப்பதவியை ஏற்பாரா என்பதுபோன்ற விஷயங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கமே கவனித்து வந்தது. *1952*-ஆம் ஆண்டில் கனடியர் ஒருவரே முதன்முறையாகக் கவர்னர்ஜெனரலாக நியமிக்கப்பட்டார் என்பது இங்கு அறியத்தக்கது. இப்பதவியை முதலில் வகித்தவர் **திரு. வின்சென்ட் மாசி** என்பவராவர். கவர்னர்-ஜெனரலின் பதவிக்காலம் உத்தியோக பூர்வமாக ஆறுண்டுகளென்றுலும், இக்காலம் ஐந்தாண்டாகவோ அல்லது ஏழாண்டாகவோகூட இருக்கலாம். கவர்னர்-ஜெனரலை, அரசர், கானடாவின் மந்திரிசபையின் ஆலோசனையின்பேரில் பதவியிலிருந்து எப்போது வேண்டுமானுலும் விலக்கலாம். அவருடைய ஆண்டுச் சம்பளம், படிகளல்லாமல் *10,000* டாலர்களாகும். அவர் தங்கும் மாளிகையின் பராமரிப்பிற்காகவும் மற்ற வசதிகளுக்காகவும் தனியாக மானியம் அளிக்கப்படுகிறது.

**கவர்னர்ஜெனரலின் அதிகாரங்கள் :** அரசருக்குள்ளவை போல, கவர்னர்ஜெனரலின் அதிகாரங்களும் மிக விரிவானவை என்றுலும், உண்மை அதிகாரம் மந்திரி சபையாலேதான் செலுத்தப்படுகிறது. பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் நிருவாக அதிகாரத்தை அரசரால் நியமிக்கப்படும் கவர்னர்-ஜெனரலுக்குத் தருகிறது. ஆனுல், நிருவாக அதிகாரம், டொமினியன் பாராளுமன்றத்தின் ஆதரவு பெற்ற அதற்குப் பொறுப்புடைய மந்திரிகளால் செலுத்தப்படுகிறது. கொள்கைகளை உருவாக்குவதிலும் அவற்றை நிறைவேற்றுவதிலும் கவர்னர்-ஜெனரலுக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லை. மந்திரிகள் அரசாங்க விஷயங்கள்பற்றி ஒன்றுகூடி ஆலோசிக்கும்போது அவர் கலந்துகொள்வதில்லை. *1878-83*ல் கவர்னர்-ஜெனரலாய் இருந்த **அர்கில் டியூக்கு** (Duke of Argyll) மந்திரி சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் விலகி நின்றுர். அவர் காட்டிய அந்த உதாரணம் அவருக்குப்பின் வந்தவர்களாலும் பின்பற்றப்படுகிறது.

கவர்னர்-ஜெனரல், தரை கடல் ஆகாயவிமானப்படைகளின் தலைமைத் தளபதி. ஐக்கியநாடுகளின் சங்கத்திற்கான கானடாப் பிரதிநிதிகளை அவர் நியமிக்கிருர்; அதிக முக்கியத்துவமில்லாத உடன்படிக்கைகளில் கையெழுத்திடுகிருர்; *1926*-ஆம் வருடம் வரை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்காகச் சில வேலைகளைக் கவனித்து வந்தார். ஆனுல், அதன் பிறகு அவ்வேலைகளைக் கவர்னர்-ஜெனரலுக்குப் பதிலாக, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஹைகமிஷனர் கவனிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு, அதன்படியே நடந்து வருகிறது.

கவர்னர் ஜெனரல், மாகாணங்களுக்கான கவர்னர்களை நியமிக்கவும் விலக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார். ஆனால், இந்நியமனங்கள் எல்லாம் நடைமுறையில் டொமினியன் மந்திரி சபையால் செய்யப்படுகின்றன. அவர், செனட்டின் தலைவர், நீதிபதிகள் முதலியவர்களையும் நியமிக்கிறார்.

பாராளுமன்றத்தைக் கூட்டுவது, ஒத்தி வைப்பது, கலைப்பது முதலிய வேலைகளையும் அவரே புரிகிறார். வேறு பல அதிகாரங்களைப் போலவே இவைகளும் மேலுக்காகச் செய்யப்படுவனவே. பாராளுமன்றத்தைக் கலைக்கக்கோரும் உரிமை பிரதம மந்திரியாருடையது என்பது வெளிப்படை. மசோதாக்களுக்கான சம்மதத்தைக் கவர்னர் ஜெனரல் கொடுக்கவேண்டும்; அவற்றுக்குச் சம்மதந் தாராமலுமிருக்கலாம். ஆனால், கவர்னர்-ஜெனரலோ, அரசியாரோ, தம் சம்மதம் தாராமல் இருப்பதில்லை. சுருங்கச் சொல்லவேண்டுமானால், கவர்னர் ஜெனரல் அதிகாரம் செலுத்த முடியாத துறையெதுவும் கானடா அரசாங்கத்தில் இல்லை என்னலாம்.

பொதுவாக நாம் அறியவேண்டுவதென்னவென்றால், ஜனநாயக அரசாங்கத்தையுடைய நாடுகளில் நாட்டின் தலைவர் ஒரு பொம்மையைப் போன்றவர். பொது நிருவாகம் பற்றித் தாம் என்ன கருத்துடையவராய் இருந்தாலும், அதை ஏற்கும்படி அவர் அரசாங்கத்தை வற்புறுத்த முடியாது. மக்களுக்குப் பொறுப்புடைய மந்திரி சபை விரும்பினால் மாத்திரமே அவர் ஆலோசனை கூறலாம். அல்லாவிட்டால், மந்திரிசபையின் விருப்பப்படியே அவர் நடக்கக் கடமைப்பட்டவர். அங்ஙனம் அவர் நடவாவிட்டால், அந்தப் பதவிக்குள்ள பெருமையும் புகழும் மரியாதையும் மங்கக்கூடும். அடுத்ததாக, எந்தக் குறிப்பிட்ட அரசியற்கட்சியும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பெறாமல், அதனால் அரசாங்கம் அமைப்பதில் தாமதமோ, இடையூறுகளோ ஏற்பட்டால், அப்போது கவர்னர்-ஜெனரல் தம் யோசனைகளையும் சமரசத் திட்டங்களையும், எடுத்துக் கூறலாம். இயலுமானால், நிலையான அரசாங்கம் ஏற்படத் தம்மால் இயலும் உதவிகளைச் செய்யலாம். இம்மாதிரியான சமயங்களிலேதான் அவருடைய சேவை நாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படும். எனவே, அந்தப் பதவியின் பெருமை அல்லது சிறுமை அப்பதவியை வகிப்பவர் நடந்துகொள்வதிலும், நாட்டு மக்கள் அவைகளைப் புரிந்துகொள்வதிலுமே பொதிந்திருக்கிறது.

# அத்தியாயம்—5

## அமைச்சவை

## (The Cabinet)

**பிரிவி கவுன்சில் :** அமைச்சவை அரசியற்காரியங்களுக்கெல்லாம் ஆணி வேர் போன்றது. அது தனக்கிருக்கும் உயரதிகாரத்தால் நிருவாகத்தைத் திறம்பட நடத்திச் சிறந்த பல சட்டங்களை இயற்றச் சட்டமன்றத்திற்கு வழி காட்டுகிறது. ஆயினும், அதற்குச் சட்ட பூர்வமான இயக்கம் இல்லையென்பது வெளிப்படை. அதனுடைய நடவடிக்கைகள் எல்லாம் சட்டசம்மதமுடைய பிரிவி கவுன்சிலின் பெயரால் செய்யப்படுகின்றன. அமைச்சவை முறையின் எல்லா அமைப்புகளும், தொன்றுதொட்டு வரும் மரபுகளையொட்டியனவாகும்.

பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டம் பிரிவி கவுன்சிலின் அமைப்பிற்கு வழி கோலுகிறது. பிரிவி கவுன்சிலின் உறுப்பினர்களைக் கவர்னர்-ஜெனரல் நியமிப்பார். அக்கவுன்சில் அவருக்கு ஆலோசனை கூறும். அவர் விரும்பினால், பிரிவி கவுன்சிலைக் கலைத்துவிடலாம். ஆனால், அக்கவுன்சில் நடைமுறையில் கவர்னர்-ஜெனரலுக்கு ஆலோசனையோ உதவியோ செய்வதில்லை. அதே போன்று கவர்னர்-ஜெனரலும் அதை அடியோடு கலைத்துவிடுவதுமில்லை. கவர்னர் ஜெனரலின் உண்மையான ஆலோசகர்கள் மந்திரி சபையின் உறுப்பினர்களே. மந்திரி சபையின் சகல உறுப்பினர்களும் பிரிவி கவுன்சிலின் அங்கத்தினர்கள். ஆனால், பிரிவி கவுன்சிலின் அங்கத்தினரனைவரும் மந்திரி சபையின் உறுப்பினரல்லர். மந்திரி சபை உறுப்பினர்களைச் சேர்க்காமல் பிரிவி கவுன்சிலில் அறுபது பேர் முதல் தொண்ணூறு பேர் வரை உறுப்பினர் இருப்பர். இவர்களோடு, வேல்ஸ் இளவரசர், பிரிட்டிஷ் பிரதம மந்திரியார், இலண்டனில் கானடாவின் பிரதிநிதியாய் இருக்கும் ஹைகமிஷனர், கானடாவின் தலைமை நீதிபதி, மக்கள் சபை, செனட்டு முதலியவற்றின் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியவர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

இரு தடவைகளில் தவிர, 1867-ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை பிரிவி கவுன்சில் முழுவதும் ஒரு தடவைகூடக் கூடியதில்லை. 1947-ஆம் ஆண்டு முதல்முறையாக, இளவரசியார் எலிசபெத்தின்

திருமணத்திற்கு அரசர் அளித்த சம்மதத்தைக் கேட்கவும், 1952-ஆம் ஆண்டில் ஆறும் ஜார்ஜ் அரசர் இறந்த பொழுது, எலிசபெத்து இளவரசியார் அரசியாராகப் பிரகடனம் செய்யப்பட்டதைக் கேட்கவும் கூடியது. இதிலிருந்து, பிரிவி கவுன்சில் கவர்னர்-ஜெனரலுக்கு ஆலோசனை கூறும் சபையாய் இல்லையென்பதும், மந்திரி சபையே அந்த உரிமையைப் பெற்றிருக்கிறது என்பதும் புலனாகும்.

இனி மந்திரி சபையைப்பற்றிய சில விஷயங்களைக் கவனிப்போம். மந்திரி சபையையும் இரு கூறாகப் பிரித்து, அவற்றின் முக்கியத்துவத்தை வேறுபடுத்துவது இக்காலத்தில் வழக்கமாய் இருக்கிறது. உதாரணமாக, முழு இலாக்காப் பொறுப்புடையவர்கள் அடங்கிய குழுவென்றும், அவர்களுக்கு உதவியாக இலாக்காக்களில் பணியாற்றுபவர்கள் குழுவென்றும் இரண்டு குழுக்களுண்டு. அவற்றுள் முன் குழு உறுப்பினர்கள், கட்சியில் சிறந்த தலைவர்களாகவும், அதிக ஆதரவு உள்ளவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் பிரதம மந்திரியாரின் நெருங்கிய தோழர்களாவார்கள். அவர்கள், அரசாங்கம் சம்பந்தப்பட்ட கொள்கைகளை வகுக்க அடிக்கடி கூடி, கலந்தாலோசித்து, முடிவு செய்வார்கள். பின் குழுவினர், முதற்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளல் இயலாது. அவசியத்தை முன்னிட்டு அவர்கள் கலந்துகொண்டாலும், பிரச்சினைகளின்மேல் எடுக்கப்படும் வாக்கெடுப்பிற் கலந்துகொள்ளல் இயலாது. முதலிற்கூறப்பட்ட குழுவினரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும். உதாரணமாக, இருபது பேர் வரையில் அதிலிருப்பர். பின்னதில் பெருந்தொகையினர் இருப்பர். இவ்வேறுபாடு கானடாவைப் பொறுத்தமட்டில் அவ்வளவு முக்கியமானதாய் இல்லாதிருந்தாலும், அடியோடு இல்லாமலிருந்ததென்று கூறிவிட முடியாது. 1943-ஆம் ஆண்டில் 20 முக்கிய மந்திரிகளும், முக்கியத்தில் குறைந்த 7 மந்திரிகளுமிருந்தார்கள். 1954-ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை முறையே இருபதாகவும் பதினொன்றாகவுமிருந்தன. இப்பாகுபாட்டைத் தவிர, இலாக்காப் பொறுப்பில்லாத மந்திரிமார் பலரும் இருப்பர். கானடாவில், இலாக்காப் பொறுப்பில்லாத மந்திரிமார் குறைந்த பட்சம் மூவர் அல்லது நால்வர் இருப்பர். அவர்கள் மந்திரி சபைக் கூட்டங்களில் கலந்துகொண்டு வாக்களிக்கவும் உரிமை பெற்றவர்கள். அவர்களைத் தவிர, பார்லிமெண்டரிச் செயலாளர் பலருண்டு. அவர்கள் எல்லாரையும் கொண்டதே மந்திரி சபை.

**மந்திரி சபை அமைப்பு :** அமைப்பைப் பொறுத்தமட்டில் கனடிய மந்திரி சபை பிரிட்டிஷ் மந்திரி சபையினும் மாறானது. மற்ற அமிசங்களில் அது பிரிட்டிஷ் மந்திரி சபையைப் போன்றதே. பிரதம மந்திரியாரின் தனித்தன்மை, ஒற்றுமை, கூட்டுப் பொறுப்பு, இரகசியம் முதலியன அந்த ஒற்றுமை அமிசங்களில் முக்கியமானவை. அமைச்

சவை அரசாங்கத்தைக் **'கட்சியரசாங்கம்'** என்னலாம். அரசாங்கம் திறமையாகவும் பொறுப்பாகவுமிருக்கவேண்டுமாளுல், அமைச்சவை உறுப்பினர்களிடையே அரசியற்பிணைப்பும், தலைவரொருவரின் கீழ்ப் பணியாற்றுங் குணமும் இருத்தலவசியம். இங்கிலாந்து மக்களைப் போலவே, கானடா மக்களும் கூட்டு மந்திரி சபையை விழைவதில்லை. 1867-ஆம் ஆண்டு முதல் ஒரே முறைதான்—1917-ஆம் ஆண்டிலே தான்-அங்குக் கூட்டு மந்திரி சபை இருந்திருக்கிறது. இதிலிருந்து, கானடா மக்கள் எவ்வளவு தூரம் அரசியல் ஞானம் உடையவர்களாகவும் கொள்கையில் தாங்கள் கண்ட உண்மை, அதன் பயன் ஆகியவற்றில் பற்றுடையவர்களாகவுமிருக்கிறுர்கள் என்பது புலனுகும்.

மந்திரி சபை அமைப்பைப் பொறுத்த வரையில், பிரிட்டிஷ் பிரதம மந்திரியாருக்கு இருக்கும் அளவு சுதந்தரங்கூடக் கானடாப் பிரதம மந்திரியாருக்கு இல்லை. காரணம், மந்திரி சபையில், நாட்டிலுள்ள பல இனங்களுக்கும், மதங்களுக்கும், பிராந்தியங்களுக்கும் தக்க பிரதிநிதித்துவம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டியிருப்பதே. இதனுல், தம் சகாக்களைப் பொறுக்குவதில் பிரதம மந்திரியாருக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்காமல் போவதோடன்றி, சிறந்த திறமைசாலிகளைக் கூடச் சேர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. முடிந்தால், மந்திரி சபையில், ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதியாவது இருக்கவேண்டும். இது மாற்ற முடியாத மரபாகிவிட்டது. இந்த மரபு, கானடாவிலுள்ள இரண்டு பெரிய மாகாணங்களான கியூபெக்கு, ஒண்டாரியோ என்பவற்றில் ஒவ்வொன்றிற்கும்ஒருவருக்கதிகமானபிரதிநிதிகள்இருக்கவேண்டுமென்ற மரபிற்கு ஆதாரமாகிவிட்டது. இதன்படி, கியூபெக்கு மாகாணத்திற்கு மூவர் அல்லது நால்வர், ஒண்டாரியோவிற்கு நால்வர் அல்லது ஐவர் என்ற விகிதாசாரம் நிலவுகிறது. இத்தொகையில் கத்தோலிக்க மதத்தவருக்கும் ஆங்கில மொழி பேசுபவருக்கும் பிரதிநிதித்துவமிருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டுவதும் முக்கியம். இந்த ஏற்பாடு கூட்டாட்சித் தத்துவத்தை வலியுறுத்துவதாக அமைந்திருப்பதல்லாமல், தேச நிருவாகம் சரிவர நடைபெறவும் வழிகோலுகிறது. மொழி, மத, பிரதேச ஒற்றுமையை வளர்க்க இவ்வேற்பாடு சம வாய்ப்பு அளிப்பதால், வேற்றுமைகள் ஒழிந்து தேசிய ஒற்றுமை ஓங்கி, நாடு முன்னேறுகிறது. "ஏதாவதொரு பிரதேசமோ, மக்களுள் ஒரு பகுதியினரோ, தேசியக் கொள்கைகளை வகுப்பதில் தங்களுக்குப் பங்கில்லை என்று நினைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டாற்கூட, எந்த நோக்கத்திற்காக இந்த நாடுகளின் தொகுதி ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் அழிந்துவிடும்," என்று 1922ல் **திரு. மெக்கன்சி கிங்** என்பார், இந்த ஏற்பாட்டின் அவசியத்தைப்பற்றிக் கூறும்போது குறிப்பிட்டுள்ளார்.

# அத்தியாயம்—6

## பிரதம மந்திரியார்

கானடாவின் பிரதம மந்திரியார் இங்கிலாந்து பிரதமரைப் போலவே அதிக சத்தி வாய்ந்தவர். ஜென்னிங்ஸ் கூறியது போல, ''பிரதமர் அரசியலமைப்பின் அடிக்கல் போன்றவர்.'' அவர் அமைச்ச ரவையை நிறுவுகிருர். அதனுல், அதை மாற்றவும் அழிக்கவும் அவ ருக்கு அதிகாரமுண்டு. கிரீவ்ஸ் என்பார், "அரசாங்கம் நாட்டிற்கு நாயகம். அரசாங்கத்திற்கு நாயகர் பிரதம மந்திரியார்," என்று குறிப்பிட்டது முற்றிலுஞ் சரி. ஆயினும், அரசியல் சட்டத்தில் இந்தப் பிரதம மந்திரியாருக்கு எந்த ஆதாரமும் இல்லே. இதுவும் மரபை யொட்டி எழுந்ததேயாகும். அமைச்சரவை அரசாங்கம் என்று எண்ணும்போதே, அதில் பிரதம மந்திரியாரின் இன்றியமையாத் தலேமை தெள்ளிதின் தோன்றும். பிரதம மந்திரியார் பதவி ஒழிக்கப் பட்டாலோ, அல்லது அப்பதவிக்குரிய அதிகாரங்களைக் குறைத் தாலோ, அந்தக் கணமே நாட்டின் அரசியற்போக்கில் பெருமாறு தல் தோன்றி, அமைப்பே அழிந்துவிடும்.

பாராளு மன்றத்தில் குறிப்பாகப் பொதுமக்கள் சபையில்,பெரும் பான்மைப் பலமுள்ள அரசியற்கட்சியின் தலேவரை, கவர்னர் ஜென ரல் மந்திரி சபை அமைக்குமாறு கேட்டுக்கொள்வார். அத்தலேவரே பிரதம மந்திரியாராவார். எந்தக் கட்சிக்கும் பொது மக்கள் சபை யில் பெரும்பான்மை ஆதரவில்லாவிட்டாலோ யாராவதொரு பிரத மர் திடீரென இறந்துவிட்டாலோ, கவர்னர்-ஜெனரல் தம் விருப்பப் படி யாரை வேண்டுமானுலும் மந்திரி சபை அமைக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். ஆனுல், இப்படியொரு சந்தர்ப்பம் ஏற்படுவது மிகவும் அபூர்வமானதே. 1896-ஆம் ஆண்டு முதல் இன்று வரை அம்மாதிரி யான நிலேமை கானடாவில் ஏற்படவில்லேயென்பது இங்குக் குறிப் பிடத் தக்கது.

**பிரதம மந்திரியாரின் அதிகாரங்கள் :** பிரதம மந்திரியாரின் அதி காரங்கள் அளவற்றவை. அவை முக்கியமானவை என்பதோடு மட்டு மல்லாமல், மிகவும் சிறந்தவையுமாகும். பிரிட்டிஷ் பிரதம மந்திரி யாரின் அதிகாரங்களைப்பற்றி இந்நூற்ருண்டின் தொடக்கத்தில் பிரதம மந்திரியாராயிருந்த **திரு. ஆஸ்குத்**தென்பார் குறிப்பிடும்

போது, ''அந்தப் பதவி, அந்தப் பதவியைப் பெற்றிருப்பவர் எப்படி இருக்கவேண்டுமென்று விரும்புகிருரோ அப்படிப்பட்டது,'' என்ருர். எனவே, பிரதம மந்திரியாரின் அதிகாரம் அப்பதவியை வகிப்பவரின் திறமை, அறிவு முதலியவற்றைப் பொறுத்ததாகும்.

பிரதம மந்திரியார், ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலேயும் புரியும் இறைவன்போல மந்திரி சபையை ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் ஆற்றலுடையவராய் இருப்பதால், அவரை எதிர்ப்போர் தோன்றுவது மிக அரிது. மந்திரி சபை அமைக்கும் வரைதான், அவருக்கிருக்கும் தடைகள் அவரைக் கட்டுப்படுத்த வல்லவையாகும்; அமைத்த பிறகு அவரே தலேவர். மந்திரிகள், தனித்தனியாகவோ, சேர்ந்தோ பதவியிலிருந்து பிரதம மந்திரியாரால் விலக்கப்படலாம் ; அல்லது வேருெரு பதவியை வகிக்கும்படி கோரப்படலாம். மந்திரிகளின் பொறுப்புடைமைபற்றிப் பேராசிரியர் **தாசன்** என்பார், ''கானடாவின் மந்திரிகள், மூன்று வெவ்வேறு பொறுப்புடையவர்களாய் இருக்கிருர்கள். முதலாவதாக, கவர்னர் - ஜெனரலுக்குப் பொறுப்புடையவர்கள் ; ஆனல், அது இப்போது வழக்கிலில்லே. இரண்டாவதாக, பிரதம மந்திரியாருக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டவர்கள். மூன்ருவதாக, ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். மூன்ருவதாகக் கூறப்பட்டது, மந்திரி சபையின் ஒற்றுமை, பலம், தனிப் பொறுப்பு, கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றை வளர்க்கிறது,'' என்று குறிப்பிட்டுள்ளது இங்கு நினேவுபடுத்திக்கொள்ளத் தக்கது.

பிரதம மந்திரியாரே மந்திரி சபையின் தலேவர். இம்முறை **அர்ஜில் பிரபு** காலத்தில் ஏற்பட்டதாகும். மந்திரி சபை கூட்டங்களுக்குத் தலேமை வகிப்பதால், பிரதம மந்திரியாரிடம் இதர மந்திரிகளுக்கு ஒரு தனி விசுவாசம் உண்டாகிறது. கூட்டத்தில் ஏதாவது கருத்து வேற்றுமையுண்டாகி ஒரு முடிவு ஏற்பட முடியாத நிலேயுண்டானல், தலேவரென்ற முறையில் பிரதம மந்திரியார் சமாதான முயற்சிகள் செய்து ஒற்றுமை ஏற்படுத்துகிருர். ஏகமனமான முடிவு சாத்தியமாகிறது. அவர், மந்திரி சபை ஏதாவதொரு விஷயத்தைப் பற்றிய முடிவில் இரு பிரிவாய் இருந்தால், தம் வாக்கை அளித்துத் தீர்மானங்களே நிறைவேற்றுகிருர்.

மந்திரி சபை விவாதிக்கவேண்டிய நிகழ்ச்சி நிரலே அவரே தயாரிப்பதால், அவர் சம்மதமின்றி மந்திரிகள் தாங்கள் விரும்பிய விஷயங்களே மந்திரி சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவோ, விவாதிக்கவோ இயலாது. தலேவர், வழி காட்டி என்ற முறையில் பிரதம மந்திரியாரை ஒவ்வொரு மந்திரியும், எந்த ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றியும் கலந்தாலோசித்து, அவர் சம்மதத்தையும் ஆதரவையும் பெறுவதவசியம். விளக்கமாகக் கூறவேண்டுமானல், பிரதம மந்திரியாரே அரசாங்கத்தின் பல ஆட்சித் துறைகளிலும், அவற்றைப்

பொறுப்பேற்று நடத்தும் மந்திரிகளிடையிலும் சுமுகமான உறவு நிலவப் பாடு படுகிறார் எனலாம்.

பாராளுமன்றத் தலைவரென்ற முறையில் பிரதம மந்திரியார் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகிறார். முக்கியமான கொள்கைகளைப் பாராளுமன்றத்திற்கு அறிவிப்பது, அரசாங்கத்தின் செயல்களை ஆதரித்துப் பேசுவது, இக்கட்டான கேள்விகளுக்குப் பதிலளிப்பது முதலியவற்றைச் செய்பவரும் பிரதம மந்திரியாரே. விவாதங்களின்போது தவறுகள், அல்லது குறைகள் காணப்பட்டால், அவற்றை நீக்குபவரும் பிரதமரேயாவார்.

வெளி நாட்டு அலுவல்களில் அரசாங்கத்திற்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் பிரதம மந்திரியாருக்குப் பெரும்பங்கிருக்கிறது. அவசியமானால், வெளி நாட்டுக் கொள்கையைப் பிரதமரே, இதர அமைச்சர்களைக் கலக்காமலேகூட, உருவாக்கலாம். எது எவ்வாறாயினும், இதர நாடுகளிலுள்ள பிரதமர், தேசத்தலைவர் ஆகிய எல்லோரும் பிரதம மந்திரியாரையே பிரதானமாகக் கருதி அவரிடமே தம் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வார்கள். கவர்னர் ஜெனரலுக்கும் மக்களுக்கும், கவர்னர்-ஜெனரலுக்கும்-பாராளுமன்றத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு பிரதம மந்திரியாரேயாவார். தேசத்தின் முக்கியப் பிரச்சினைகளைக்குறித்துப் பிரதம மந்திரியாரே கவர்னர் ஜெனரலுக்கு அறிவிப்பார். எல்லா முக்கியமான உத்தியோக நியமனங்களும் பிரதம மந்திரியாரின் ஆலோசனையின் பேரிலேதான் கவர்னர்-ஜெனரல் செய்கிறார். பிரதம மந்திரியார், காமன்வெல்து பிரதம மந்திரிகளின் மாநாட்டில், கானடாவின் பிரதிநிதியாகக் கலந்து கொள்கிறார்.

இவ்வாறு பிரதம மந்திரியாரின் அதிகாரங்கள் பல திறத்தனவாதலால் மக்களிடையேயும் மந்திரிகளிடையேயும் இதர நாடுகளிடையேயும் அவரது செல்வாக்கு அபரிமிதமானது. இங்கிலாந்தின் பிரதம மந்திரியாரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "அவர் சம அந்தஸ்துடையவர்களில் முதல்வர்," என்று **ஜென்னிங்ஸ்** என்பார் கூறியுள்ளார். தாசன் என்பார், கானடாப் பிரதமரைப்பற்றி எழுதும்போது, "அவர், சம தகுதியுடையவர்களில் முதல்வராய் இருக்க முடியாது; ஏனென்றால், அவருக்குச் சமமானவர் எவரும் இல்லை," என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து கனடியப் பிரதம மந்திரியாரின் சீருஞ்சிறப்பும் விளங்குகின்றன அல்லவா ?

ஆனால், பிரதம மந்திரியாரின் செல்வாக்கு, அவர், கட்சியின் தலைவராய் இருக்கும் வரையிலேதான் செல்லும். கட்சியில் செல்வாக்குக் குன்றிவிடுமானால், அவருடைய செல்வாக்கு மந்திரிகளிடையேயும் குறைந்துவிடும். எந்த நேரமும் அவருக்கு எதிர்ப்புத் தோன்றலாம். அவருக்குப் பதில் வேறொருவர் அப்பதவிக்கு வரலாம். இம்மாதிரி நிலை வரக்கூடிய சாத்தியக்கூறுகளிருப்பதாலேதான், "சம அந்தஸ்

துடையவர்களில் பிரதமர் முதல்வர்,'' என்பது கூறப்பட்டது. இதைத் **தாசன்** விளக்கும்போது,"மந்திரிகள் பிரதம மந்திரியாரின் பணியாளர்கள் அல்லராகையால், அவருக்குக் கீழ்ப்பட்டவர்களல்லர்,'' என்று கூறுகிருர். மந்திரிகளைத் தமக்குக் கீழானவர்கள் எனக் கருதி அதன்படி நடக்கும் பிரதமர் நாளடைவில் அப்பதவியை இழப்பார் என்பது மட்டும் உறுதி.

எனவே, பிரதம மந்திரியாராய் இருப்பவர், தம் திறமையாலும், குணத்தாலும் தம் பதவியை நிலைநாட்டிக்கொள்ளலாம். அவர் பிறரை அடக்கியாள நினைத்தால், அழிவது திண்ணம். ஜன நாயக நாடுகளில் பிரதம மந்திரியாருக்கும் இதர மந்திரிகளுக்கும் அதிக வேறுபாடு பெரும்பாலுமில்லை.

# அத்தியாயம்—7

# டொமினியன் பாராளுமன்றம்

## (The Dominion Parliament)

கானடாத் தேசத்தின் பொது நிர்வாகம், அந்நாட்டுப் பாராளுமன்றமியற்றும் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டதெனலாம். குடியாட்சி முறை நாடுகளில், பாராளுமன்றங்களே சட்டமியற்றுந் தொழிலைச் செய்கின்றன. இந்நியதியையொட்டியே, கானடாவின் பாராளுமன்றமும் சட்டம் செய்யும் அதிகாரம் பெற்றிருக்கிறது. கானடாவின் பாராளுமன்றம், மூன்று அங்கங்களையுடையது. கவர்னர்-ஜெனரல், செனட்டு, பொது மக்கள் சபை ஆகிய மூன்று உறுப்புகளும் சேர்ந்ததே அங்குப் பாராளுமன்றம். இம்முறை இங்கிலாந்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அமைந்திருப்பதென்று சொல்லத் தேவையில்லையன்றோ! பாராளுமன்றம் இம்மூன்றங்கங்களையுடையதாய் இருந்தாலும், இம்மூன்றினும் உன்னத அதிகாரம் பெற்றிருப்பது பொது மக்கள் சபையே என்பதும் சொல்லத் தேவையில்லை. இதற்கு முக்கியமான முதற்காரணம் செனட்டும் பொது மக்கள் சபையும் இரு வேறு முறைகளில் அமைக்கப்பட்டிருப்பதும், அவற்றின் வேலை முறையில் வித்தியாசமிருப்பதுமாகும். இரண்டாவது காரணம், கவர்னர்-ஜெனரல் பதவியின் தன்மையும் அதிகார எல்லையுமாகும். கவர்னர்-ஜெனரல் சகல அதிகாரங்களையும் கொள்கையளவில் பெற்றிருந்தாலும், நடைமுறையில் அவற்றை அவர் தம்மிச்சையாகச் செலுத்த இயலாது. அமைச்சரவை ஆலோசனைக்கிணங்கவே அவர் நடக்கவேண்டியிருக்கிறது. இத்தன்மை இங்கிலாந்தின் இராணியார் செயலாற்றும் வகையினாலும் விளங்கும். குடியாட்சி முறை நாடுகளில், மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் சபையே உண்மை அதிகாரம் செலுத்தவல்லதென்பதே இங்கு நாம் பொதுவாகக் கூறக் கூடிய சமாதானமாகும். இனி நாம், செனட்டு, பொதுமக்கள் சபை ஆகியவற்றின் அமைப்பு, அவற்றின் தன்மை, வேலை முறை ஆகியவற்றைப்பற்றி முறையே பின் வரும் பக்கங்களில் காண்போம்.

**மேற்சபை** அல்லது **செனட்டு:** 1867ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் ஷரத்துகளின்படி, செனட்டு, பொது மக்கள் சபை இரண்டிற்கும் சம அதிகாரங்கள் உண்டு. செனட்டு, சுதந்தரமாய் இயங்கவல்லது. ஆயினும், கானடாத் தேசத்துச் செனட்டு,

பொது மக்கள் சபை நிறைவேற்றும் மசோதாக்கள், அல்லது தீர்மானங்களை அப்படியே ஏற்று ஆமோதிக்கும் வேலையையே செய்கிறது; ஆனாலும், அத்தி பூத்தாற்போல ஒவ்வொரு சமயத்தில் தன்னிச்சைப் படி மசோதாக்களில் மாற்றங்களைச் செய்யவுந் துணிகிறது. இவ்வாறு அது நடந்துகொள்வதற்குக் கூறப்படும் சமாதானம், "ஜனநாயக ஆட்சியில் மேற்சபை எதையெடுத்தாலும் மறுத்து, தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று நடக்குமானால், அரசாங்கம் சுமுகமாக நடக்கத் துணை புரிவதாகாது. மேற்சபை, பொது மக்கள் கருத்தறிந்து, அவசியமானதெது, அவசியமற்றதெது என்ற அடிப்படையில் தன் முன் வரும் விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, அதற்குத் தக, விடவேண்டிய இடத்தில் விட்டுக்கொடுத்து, விடக்கூடாத இடமறிந்து விடாமல் நடக்கவேண்டுவது இன்றியமையாதது," என்பதே. இதன்படி பார்த்தால், கானடாவின் செனட்டு நடந்துகொள்ளும் விதம் விநோதமானதன்று. **இராபர்ட்டு மாக்கிரகர் தாசன்,** "சட்டரீதிப் படி பார்த்தால் பொது மக்கள் சபைக்கு எவ்வளவதிகாரமுண்டோ, அவ்வளவதிகாரமும் செனட்டிற்குமுண்டு. ஆனால், அது குறைந்த பட்ச அதிகாரமே செலுத்தவேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது," என்று கூறுவது இங்கு நாம் நினைவிற்கொள்ளத்தக்கது. இந் நோக்கம் பின்வரும் சட்ட பூர்வமான ஏற்பாடுகளினாலும் புலனாகும்.

முதலாவதாகப் பொது மக்கள் சபையே, பொது மக்களால் தெரிந்தெடுக்கப்படும். இரண்டாவதாக அந்தச் சபையிலேதான் நிதி திரட்டவோ, செலவழிக்கவோ, வகை செய்யும் மசோதாக்கள் எல்லாம் முதன்முதலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விரண்டு ஏற்பாடுகளும் பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்திலேயே காணப்படுகின்றன. இவையல்லாமல் மூன்றாவதாக, எழுதப்படாமல் வழக்கத்தில் இருப்பதும், ஆனால் முன்னவைபோன்று மிக இன்றியமையாதது மான "அமைச்சரவை கீழ்ச் சபைக்கே பொறுப்புடையது," என்னும் மரபும் மிக முக்கியமானதாகும். இவற்றினால் பொது மக்கள் சபையின் மேம்பாடு தெள்ளிதிற் புலனாவதோடு இந்த ஆதாரப் பிரச்சினைகள் பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டபடியால், இரு சபைகளின் அதிகார எல்லையும் திட்டவட்டமாக, நிரந்தரமாகத் தீர்க்கப் பட்டுவிட்டதென்பதும் விளங்குகிறது. ஆனால், இவ்வேற்பாடு மக்கள் விரும்பினால் மாற்றியமைத்துக்கொள்ளக் கூடியதேயாகும். ஆயினும், பொது மக்கள் சபையால் புறக்கணிக்கப்படக்கூடிய சில குறிப்பிட்ட கடமைகளைச் செனட்டு ஏற்று நடத்தவேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்படுவதையும் நாம் அறிதலவசியம். முதலாவதாக, செனட்டு, மாகாணங்களின் நோக்கங்களையும் நிலைமையையும் பாதுகாக்கிறது. இதற்காக அமெரிக்கச் சமத்துவக் கோட்பாட்டை இவர்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாய் இல்லை. இரண்டு பெரிய மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டது போல, சிறியவைகளுக்கும் ஒரே

அளவு எண்ணிக்கைச் செனட்டர்கள் ஒதுக்கப்படவில்லையென்றாலும், கீழ்ச் சபையில் உள்ள பிரதிநிதித்துவத்தைக்காட்டிலும் அதிக மாகவே, மேற்சபையில் அவற்றின் பிரதிநிதித்துவம் இருக்கிறது. பொதுமக்கள் சபையில், மக்களடிப்படையில் பிரதிநிதித்துவம் நிர்ண யிக்கப்பட்டதற்காக, கியூபெக்கு மாகாணத்திற்குப் பிரத்தியேகமாகச் சில சலுகைகள் பாதுகாப்பை முன்னிட்டுச் செனட்டில் கொடுக்கப் பட்டன. இதுபற்றி **ஜார்ஜ் பிரௌன்** என்பவர் தம் கருத்தைத் தெரி விக்கும்போது, "சட்டமியற்றுவதன்று; கூட்டாட்சியே எங்கள் உடன்படிக்கையின் சாரம். மேற்சபையில் சம அந்தஸ்து தரவேண் டும் என்னும் நிபந்தனையின்பேரில் கீழ்ச்சபையில் எங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம்தர, எங்கள் கீழ்க் கானடா நண்பர்கள் இசைந்தார்கள். இந்நிபந்தனையில்லாது வேறு எவ்வழி யினும் நாங்கள் ஒருபடிகூட முன்னேறியிருக்கமுடியாது," என்று கூறி யுள்ளது உணரத்தக்கது. இந்த நிபந்தனை மீறப்படாமலிருக்க, ஒவ் வொரு பிரதேசத்திலிருந்தும் இருக்க வேண்டிய செனட்டர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. எப்போதாவது செனட்டின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டால், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அதற்குத் தக உயர்த்தப்படவேண்டும். அல்லாமலும், செனட்டின் உறுப்பினர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தேர்ந்தெடுக்கப் படக்கூடாது. ஏனென்றால், செனட்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட் டால், பிறகு அங்கும் மக்கள் தொகை அடிப்படை முறை ஏற்பட்டு விடக்கூடும் என்று கருதப்பட்டது. இதைத்தவிர, கூட்டாட்சி அமைச்சவை, பொதுமக்கள் சபைகளிற்கூடப் பிரதேசங்களின் உரிமை களுக்காகப் பாடு படுவோர் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதும் அறியற்பாலது.

இரண்டாவதாக, செனட்டு நிதானத்தைக் கடைப்பிடித்து, எதையும் மறு பரிசீலனை செய்யும் மன்றமாய் இருக்கவேண்டுமென் பதும் அதனால் கீழ்ச்சபையில் செய்யப்படும் தவறுகள் திருத்தப்படுவ துடன், உணர்ச்சிப் பெருக்கால் என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாதென்று பகுத்தறியவியலாமல், அவசரத்தினாலோ அன்றி ஆத் திரத்தினாலோ எழும் செய்கைகளனைத்தையும் நீக்க முடியும் என்பதும் கருதப்பட்டன.

மூன்றாவதாக, செனட்டுக் கன்சர்வேட்டிவ் கொள்கையைப் போற்றிச் செல்வந்தர்கள் பிரதிநிதியாகச் செயலாற்ற வேண்டுமென் பதும் கருதப்படுகிறது. ஏனெனில், செல்வந்தர்கள் எண்ணிக்கை நாட்டில் குறைவு. அவர்கள் கீழ்ச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படா மற் போகலாம். அவர்களது நியாயமான எந்தக் கோரிக்கைகளையும், மேற்சபை நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் பழக்க வழக்கங் களைப் பிரதிபலிப்பதாய் இருந்தால், கவனித்து ஆவன செய்யும் என் பதும் கருத்தாகும்.

**செனட்டின் அமைப்பும் செனட்டர்களின் பதவிக்காலமும்:** இம் மன்றத்தில் 102 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு பெரும் பிரதேசத்திற்கும் 24 அங்கத்தினர்கள் விகிதம், மொத்தமுள்ள நான்கு பிரதேசங்களுக்குமாக 96 உறுப்பினர்களும், 1949-ஆம் ஆண்டு டொமினியனில் சேர்ந்த நியூ பவுண்டுலாந்து மாகாணத்திற்கு ஆறுபேர்களும் சேர்ந்து ஆக மொத்தம் 102 பேர்கள் இப்போதிருக் கின்றார்கள்.

பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தின் 23-ஆம் பிரிவின்படி, செனட்டர்கள், முப்பத்தைந்து வயதுடையவர்களாகவும், எந்த மாகா ணத்திற்காக நியமிக்கப்படுகிறார்களோ, அந்த மாகாணத்தில் குடி யிருப்பவர்களாகவும், நாலாயிரம் டாலர் பெறுமானமுள்ள சொத் துடையவர்களாகவுமிருக்கவேண்டும். செனட்டர்கள் ஆயுட்காலம் முழுதும் பதவி வகிக்கலாமென்றாலும், சேர்ந்தாற்போலச் சட்ட மன் றத்தின் இரண்டு கூட்டங்களுக்கு வாராமலும், கானடா அல்லாத பிற நாட்டுக்கு விசுவாசமுடையவராகவோ அல்லது குடி மகனு ராகவோ ஆனாலும், சொத்துகளையிழந்து கடன்காரராலும், இழைக்கத் தகாத குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டாலும், இதர மாகாணங்களில் குடியேறினாலும், செனட்டில் தம் பதவியை ராஜி நாமாச் செய்தாலும், தம் பதவியை இழப்பர்.

செனட்டர்களின் இப்போதைய ஆண்டுச் சம்பளம் எண்ணாயிரம் டாலர்கள். இத்துடன் இரண்டாயிரம் டாலர் படியாகவும் கொடுக் கப்படுகிறது. செனட்டின் தலைவர் கவர்னர்-ஜெனரலால் நியமிக்கப் படுகிறார். அவரது சம்பளம் 23,000 டாலர்களாகும். குறைந்த பட்சம் பதினைந்து உறுப்பினர்களாவது இருந்தாற்றான், செனட்டின் கூட்டம் நடைபெறும்.

**செனட்டின் அதிகாரங்கள்:** பட்ஜெட்டு, கீழ்ச்சபையிலேதான் பிரேரேபிக்கப்பட வேண்டுமெனும் ஏற்பாட்டைத் தவிர, வேறு எவ் வழியிலும் செனட்டின் அதிகாரம் வரையறுக்கப்படவில்லை. இதனால் செனட்டிற்குச் சட்டத்துறையில், கீழ்ச்சபைக்கு எவ்வளவதிகார முண்டோ, அவ்வளவுமுண்டென்பது தெரிகிறது. என்றாலும், நாம் முன்னமே குறிப்பிட்டதுபோல, செனட்டு நாம் எதிர்பார்க்கும் அள வுக்குச் சக்தி வாய்ந்ததன்று என்பது, 'மந்திரிகள் கீழ்ச்சபைக்கே பொறுப்பானவர்கள், கீழ்ச் சபையின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் வரையிலேதான் அவர்கள் பதவி வகிக்கிறார்கள். அல்லா மலும் மேற்சபையின் சார்பாக ஒருவரே மந்திரியாராய் இருக்கிறார். அவருக்கு இலாக்காப் பொறுப்பெதுவும் இல்லை,' என்பதிலிருந்து தெள்ளிதிற்புலனாகும். மந்திரிகள் எல்லா மசோதாக்களையும் மக்கள் சபையிலேதான் முதலில் சமர்ப்பிக்கிறார்கள் என்பதும் இங்கு அறியத்தக்கது.

இங்ஙனம் எல்லா மசோதாக்களும் மக்கள் சபையிலேயே, சமர்ப்

பிக்கப்படுவதால், செனட்டிற்குத் தொடங்கும் உரிமை (The right to initiate) மறுக்கப்படுகிறது ; அதிகாரமும் செல்வாக்கும் குறைந்து காணப்படுகின்றன. ஆனாலும், சமீபத்தில் குறிப்பாக 1946—53ஆம் ஆண்டுகளிடையே சுமார் 138 மசோதாக்கள் முதன்முதலில் செனட்டில் கொண்டுவரப்பட்டன. இது 1924—45-ஆம் ஆண்டுகளிடையே செனட்டில் முதலில் தாக்கல் செய்யப்பட்ட முப்பத்தாறு மசோதாக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக அதிகமே. இதற்குக் காரணம், அமைச்சவையேயாகும். அமைச்சவை, 'செனட்டும் இக்கடுமையான வேலையைச் செய்யட்டுமே!' என்று கருதியது. ஆனால், இவ்வழக்கம் காலவரையறையின்றி அச்சபைக்குக் கொடுக்கப்பட இயலாது. திறமையும், ஊக்கமும், விருப்பமுமுடைய செனட்டர்கள், எண்ணிக்கையில் அச்சபையில் குறைவார்களேயாயின், மசோதாக்களும் முதலில் அங்குத் தாக்கல் செய்யப்படுவது குறையும். இக்கருத்தைப் பேராசிரியர் தாசன் என்பாரும் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், மசோதாக்கள் மக்கள் சபையிலிருந்து செனட்டிற்கு வரும்போது, செனட்டுத் தன் விருப்பம்போல, அவற்றின் ஷரத்துகளுக்குத் திருத்தங்கள் கூறலாம். அது விரும்பினால், எந்த மசோதாவையும் நிராகரிக்கலாம். எனினும், தன் முடிவே தீர்மானமானது என்று செனட்டு ஒரு போதும் நினைத்து நடந்ததில்லை ; மக்களின் விருப்பத்திற்குச் செவி சாய்த்து அதற்குத் தகுந்தாற்போலவே நடக்கிறது. உதாரணமாக, 1926-ஆம் ஆண்டில், செனட்டு, "வயது முதிர்ந்தோர் பென்ஷன் மசோதாவை" (Old Age Pensions Bill, 1926) நிராகரித்தது. ஆனால், அதே மசோதாவை, அதற்கடுத்த வருஷமே அது ஆமோதித்தது. காரணம், அம்மசோதாவைக் கொண்டுவந்த அரசாங்கத்தையே, அப்பிரச்சினையையொட்டி நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் திரும்பவும் தேர்ந்தெடுத்ததேயாகும்.

தன்னிடம் அனுப்பப்படும் மசோதாக்களைச் செனட்டு மிகவும் சிறந்த முறையில் பரிசீலனை செய்கிறது ; அவசியமானால், தகுந்த திருத்தங்களையும் எடுத்துக் கூறுகிறது. அத்திருத்தங்கள் அல்லது யோசனைகள் பொது மக்கள் சபையால் எதிர்க்கப்படுவதில்லை. ஏனெனில், மசோதாக்கள் பெரும்பாலும் சரிவரத் தயாரிக்கப்படக் கீழ்ச்சபையில் தகுந்த திறமைசாலிகள் கிடைப்பதில்லை. அப்படியே ஒரு சிலரிருந்தாலும், அவர்கள் தங்களைச் சுற்றியுள்ளோரின் விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டுவிடுவதால், பல குறைபாடுகளுடனேயே மசோதாவைத் தயாரித்துவிடுகின்றனர்கள். ஆனால், மேற்சபையிலோ, அங்கத்தினர்கள் மிகவும் அனுபவம் மிக்கவர்கள். அவர்கள் எந்தத் தேர்வுத் தொகுதிக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களல்லர். அதனால், குறுகிய நோக்கங்கள் அவர்களை எளிதில் வெல்ல முடிவதில்லை. எனவே, செனட்டர்கள், ஆர அமர யோசித்து, ஏற்கத்தக்க மாற்றங்களை எடுத்துக் கூறுகின்றனர்கள். மேற்கூறியவையெல்லாம்

சாதாரண மசோதாக்களைப் பொறுத்தமட்டிலேதான். நிதி மசோதாக்களைப் பொறுத்தவரையில், செனட்டிற்கு, அவைகளைத் திருத்தவோ, மாற்றவோ அதிகாரமுண்டா என்பது இன்றும் விவாதத்திற்குரியதாகவேயுள்ளது. கானடாவின் அரசியலமைப்பைப் பற்றிக் கூறும் சட்டங்கள் இதை விளக்கவில்லை. இங்கிலாந்து நாட்டில் 'பிரபுக்கள் சபைக்கு' எவ்வளவு அதிகாரமுண்டோ, அவ்வளவதிகாரந் தான் இங்கும் செனட்டிற்கிருக்க முடியுமெனப் பொது மக்கள் சபை வாதிக்கிறது. இவ்வடிப்படையில் மக்கள் சபை தன்னுடைய விதி முறைகளிலும் தெளிவாக, "செனட்டிற்கு, வரவு செலவு சம்பந்தமான நிதி மசோதாக்களை முதன்முதலில் விவாதிக்கவோ, திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் செய்யவோ, அல்லது, அடியோடு நிராகரிக்கவோ அதிகாரம் இல்லை. மக்கள் சபையொன்றே, தான் விரும்பியவாறெல்லாம் செய்யத் தகுதியும் உரிமையுமுடையது," என்று கருதிக் கொண்டிருக்கிறது. ஆனல், இக்கருத்தைச் செனட்டு நிராகரித்து, நிதி சம்பந்தமான மசோதாக்களைத்திருத்தத் தனக்கு அதிகாரமுண்டெனக் கூறுகிறது. உண்மையில், செனட்டு, சிற்சில சமயங்களில், நிதி மசோதாக்களை மாற்றியமைத்துமிருக்கிறது. இங்கு நாம் சிறப்பாக அறியவேண்டுவது யாதெனின், செனட்டு நிதி மசோதாக்களை நிராகரித்துக் கீழ்ச் சபையின் விரோதத்தைத் தேடிக்கொள்ளாமல், தான் விரும்பிய திருத்தங்களை மிகச் சாதுரியமாகச் செய்கிறது. அவைகளைக் கீழ்ச்சபை ஏற்றுக்கொண்டால் மசோதாக்கள் நிறைவேறுகின்றன. ஏற்றுக்கொள்ளாவிட்டால், மசோதாக்கள் நிறைவேருமல் தள்ளப்பட்டுவிடுகின்றன. கீழ்ச்சபை மீண்டும் தன் விருப்பப்படி வேறு மசோதாக்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். நிதி, சட்ட சம்பந்தமான காரியங்களோடு, அரசியல் சமூக சம்பந்தமான பல விஷயங்களிலும் செனட்டு ஊக்கங்காட்டித் தேவையான ஆலோசனைகளைக் கூறிவருகிறது. இவ்வகையில் செனட்டின் சேவை ஒப்பற்றதாகும்.

**இதர அமிசங்கள்** : இந்நாட்டிலுள்ள செனட்டைப் பலர் பலவிதமாகக் குறைகூறுகின்றனர். "செனட்டின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், நியமிக்கப்படுவதால், பொது மக்களின் கருத்தை முகம் பார்க்குங் கண்ணுடியெனப் பிரதிபலிக்கும் மக்கள் சபையே, சட்ட சம்பந்தமான துறைகளில் பெரும்பங்கு கொள்கிறது; இது பின்னணிக்குத் தள்ளப்படுகிறது. நிதி மசோதா விஷயங்களிலும் இதற்குச் சம அதிகாரம் இல்லை. மந்திரி சபையும், மக்கள் சபைக்கே பொறுப்புடையதாய் இருக்கிறது. எனவே, இச்சபை ஓர் அழகு சாதனமாய் விளங்குகிறது," என்று ஒரு சாரார் கூறுகின்றனர். மற்ருெரு சாரார், "முன்னுக்குப் பின் முரணான பல கொள்கைகள் அடிப்படையில் இந்தச் செனட்டு அமைக்கப்படுவதால் இதற்கு வாழையடி வாழையாக உறுப்பினர்களைக் கொண்டதும், செல்வச்

சீமான்களையுடையதுமான மேற்சபைகளுக்குரிய புகழோ, மதிப்போ இல்லை; தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செனட்டிற்குள்ள பலம் இல்லை. தேசீயத்திற்கு மாறான கூட்டாட்சித் தத்துவத்தினடிப்படையில் பணியாற்றும் செனட்டால் உண்டாகக் கூடிய பலனேதும் இல்லை. மாகாணங்களுக்குப் பிரதிநிதித்துவம், அவைகளின் நோக்கங்களைப் பிரதிபலிக்கும் கொள்கை என்ற அடிப் படையில் இது அமைக்கப்பட்டிருப்பதால், மத்திய நிருவாகத்தை வலுப்படுத்தும் நிறுவனமாகவே இது விளங்குகிறது,'' என்று கூறுகின்றனர்.

இவர்கள் கூற்று முற்றிலும் உண்மையன்று. பேராசிரியர் தாசன் கூறுவதுபோலச் செனட்டிற்கு மேற்கூறிய வகைகளினால் சில குறை பாடுகளும் தடைகளும் இருந்தாலும், அது, மசோதாக்கள் தன்னிடம் வரும்போது, தனக்குச் சரியெனப்பட்டவைகள், நாட்டின் நன்மைக்கு உகந்தவை என்று கருதினால், மசோதாக்களைத் திருத்தாமல் விடுவ தில்லை. குறிப்பாக, மக்கள் சபையும் அமைச்சவையும், பல அவசர மான — நிருவாகத்திற்கின்றியமையாத—மசோதாக்களைக் கொண்டு வருவதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் தங்களின் பெரும் பகுதிக் காலத்தைச் செலவழித்துவிடுகின்றன. தனி நபர்களாலோ, குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்காகவோ கொண்டுவரப்படும் பிரத்தியேகமான மசோதாக்களைக் கவனிக்க அவற்றுக்கு நேரமிருப்ப தில்லை. ஆனால், செனட்டிற்குக் கீழ்ச்சபையிலிருந்து மசோதாக்கள் வரும் வரை வேலை இல்லாமல் இருப்பதால், அது அப்படிப்பட்ட மசோதாக்களைக் கவனித்துப் பைசல் செய்வதால் கீழ்ச்சபையின் வேலைப்பளுக் குறைகிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அது தொடர்ந்து இப்போதிருக்கும் அமைப்பில் இருக்கவேண்டு மென்று மனப்பூர்வமாகச் சொல்லமுடியாவிட்டாலும், அதனுடைய உபயோகமுடைமையைச் சந்தேகிப்பது விவேகமன்று எனலாம்.

# அத்தியாயம்—8

# பொது மக்கள் சபை

## (The House of Commons)

கானடா அரசாங்கத்தில் பொதுமக்கள் சபை பெரியதோர் ஜனநாயக ஸ்தாபனமாகும்,. இது பொது மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது ; ஆதலின், அரசியல் அதிகாரம் செலுத்துகிறது. இது பாராளு மன்றத்தின் தவிர்க்க முடியாத-இன்றியமையாத-ஓர் அங்கமாகும். ஆட்சிப் பொறுப்பிலிருப்போர், ஆட்சி சம்பந்தமான எல்லாத் துறைகளிலும் செய்யும் காரியங்களை இம்மன்றத்தின் ஒத்துழைப்பு, சம்மதத்தின்படியே செய்கின்றனர்.

இம்மன்றத்தின் அடிப்படை முக்கியத்துவம், இது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளை உடையதாயிருப்பதிலேதான் இருக்கிறது. சாதி மத இன வேறுபாடின்றி, எவரும் இம்மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். இதன் கருத்துகள் நாட்டு மக்களின் கருத்துக்கோவை. இதன் முடிவுகள் நாட்டினரின் நல்ல தீர்ப்பு. சுருங்கச் சொல்லவேண்டுமானுல்,இது தேச மக்கள் துன்பந்துடைத்து, எண்ணத்தை எடுத்துக் காட்டும் ஈடற்ற குழு என்னலாம். இம்மன்றத்தின் கருத்தோடு ஒட்டி, அவ்வழியொழுகும் அமைச்சவை இன்னல் பலவற்றையுங் கடந்து எளிதில் செயற்கரிய பலவற்றையுஞ் செய்து முடிக்கும்; இல்லையேல், மீளாத் துன்பத்திலாழ்ந்து மாண்டொழியும். மேற்கூறிய கருத்தை வலியுறுத்துவதுபோல, **திரு. மெக்கன்சிகிங்** என்பார், 1940-ஆம் ஆண்டில் பேசும்பொழுது, "பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகள் அரசாங்கத்திற்குக் கிடைக்கவும், அரசாங்கம் என்ன செய்கின்றது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவும் வசதியாக இருக்கும்பொருட்டுப் பாராளுமன்றம் நீண்ட இடையீடு இல்லாமல் தொடர்ந்து கூடியிருக்கவேண்டும் ; பாராளுமன்ற உறுப்பினர்களிடையே பேசுவதாலும், அவர்கள் மனப் பூர்வமாக வெளியிடும் கருத்துகளைக் கேட்பதாலும் சாந்தி ஏற்படுகிறது," என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இது மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. மக்களுக்குப் புலப்படாத-அவர்கள் கருதியும் இருக்க முடியாத-மற்றும் பல கொள்கைகள்-பிரச்சினைகள் எல்லாவற்றையும்

விவாதிக்கும்; ஆராயும்; எதிர்க்கும்; முடிவு செய்யும்; அவசியமானால், மக்களிடையே தன் முடிவுகளை விளக்கிச் சாதகமான எண்ணச் சூழ்நிலையை உண்டாக்கும்; தனக்குச் சரியெனப் படாத எவற்றையும் தாற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தள்ளியும் வைக்கும்; தள்ளி வைத்ததற்கான காரணங்களையும் எடுத்துரைக்கும். இதன் செய்கைகளுள் ஒவ்வொன்றையும் மக்கள் சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்க்கின்றார்கள். அதன் விளைவாகத் தள்ளப்பட்டவைகள் சில சமயங்களில் கொள்ளப்படுகின்றன; கொள்ளப்பட்டவற்றுள் சில தள்ளவும் படுகின்றன. **திரு. ஐவார் ஜென்னிங்ஸ்** என்பார், பாராளுமன்றத்தின் நோக்கத்தைப்பற்றி விவரிக்குங்கால், "இதன் நோக்கம் பொது மக்களின் கருத்தை அரசாங்கம் அறியும்படி செய்வதும், அரசாங்கத்தின் பிரச்சினைகளை மக்கள் கவனித்து வரும்படி செய்வதும் ஆகும்," எனக் கூறியுள்ளார். இக்கூற்றினால் கானடாப் பாராளுமன்றம் இத்துறையில் ஆற்றிவரும் சேவை புலப்படும். பொது மக்கள் சபை, அமைச்சவையால் கொண்டுவரப்படும் எல்லாத் தீர்மானங்களையும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளும். உதாரணமாக, சட்டங்களைப்பற்றியும், ராஜ்யக் கொள்கை (State Policy) பற்றியும் அமைச்சவை கொண்டு வரும் எந்தப் பிரேரணையையும் இம்மன்றம் நிறைவேற்றும். இது செய்வதெல்லாம், பிரேரணைகள் சபையின் பரிசீலனைக்கு வைக்கப்படும்போது, அவற்றின் தராதரங்களை ஆய்ந்து புகழுதல் அல்லது இகழுதலேயாம். இடித்துரை பெரும்பாலும் அரசாங்கத்திற்கெதிரான கட்சிகளிடமிருந்தே எழும். ஏனெனில், அரசாங்கக் கட்சி தன் குறைகளை, தான் தனிப்படக் கூடும்போதே எடுத்துரைக்க ஏதுவிருக்கிறது. எதிர்க் கட்சிகள் கூறுங்குறைகளை, அல்லது கண்டனங்களை அரசாங்கம் எக்காலத்திலும் ஏற்றுத்தான் நடக்கவேண்டுமென்பதில்லை. ஏனெனில், அடுத்து வரும் பொதுத்தேர்தல் வரை, எதிர்க் கட்சிகளின் கேலிப் பேச்சுகள், அரசாங்கத்தை ஒன்றும் செய்ய இயலாது. எனினும், அரசாங்கம், தான் செய்யும் காரியங்களால் எதிர்க் கட்சிகளால் தூற்றப்படாமலிருக்கவும், தன் செல்வாக்கை மக்களிடையே நிலைநாட்டிக்கொள்ளவும் கருதுமானால், அக்காரியங்களைக் குறைகள் இல்லாமலே செய்யும்.

அடுத்துப் பொது மக்கள் சபை அரசாங்கம் இடும் கட்டளைகளைக் கண்காணித்து வருகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது. சபை மந்திரிகளைக் கேள்விகள் கேட்கிறது; ஆட்சித் துறைகள் செய்துவரும் பணிகளை அடிக்கடி கவனித்துத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கிறது; வரவு செலவுபற்றி வெளியிடப்படும் அறிக்கைகளைப் பரிசீலனை செய்கிறது; தன் முடிவுகளையோ, சிபாரிசுகளையோ அரசாங்கம் ஏற்க மறுத்தால் தனக்கு அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றவும் செய்யும்.

கடைசியாகப் பொது மக்கள் சபை, நேரிடையாக அல்லாவிட்

டாலும் மறைமுகமாகவாவது அமைச்சவையைப் பொறுக்கியெடுக்கிறது. சரியாகச் சொல்லவேண்டுமானால், இச்சபை பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கிறதென்றே சொல்லவேண்டும். இப்போது, பிரதம மந்திரியாராக வரவேண்டியவரை, பெரும்பான்மைக் கட்சி, தன் கட்சிக் கூட்டத்திலேயே தேர்ந்தெடுக்கிறது. என்றாலும், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரைப் பொது மக்கள் சபை அங்கீகரிக்க வேண்டும். பிரதம மந்திரியாருக்குத் தம் சகாக்களைத் தேர்ந்தெடுக்க உரிமை இருந்தாலும், பொதுமக்கள் சபையில் வேலைத் திறமையாலும் செல்வாக்காலும் ஆதரவு பெறாமல் இருப்பவர்களை நியமிக்க முடியாது. குறிப்பாகக் கூறவேண்டுமானால், மந்திரியாராகிறவர் ஒவ்வொருவரும், பொது மக்கள் சபையின் வாழ்த்தைப் பெற்றிருக்க வேண்டும். இதனால், பெரும்பாலான மந்திரிமார் கண்டிப்பாக முன் அனுபவமும் திறமையும் பெற்றிருக்க வேண்டுமென்பதும், ஒரு சிறு தொகையினரே, அனுபவமில்லாத புதியவர்களாக இருக்கக்கூடுமென்பதும் தெளிவாகின்றன.

**பொது மக்கள் சபையின் அமைப்பு:** இருபத்தொரு வயதான ஆடவர் பெண்டிர் அனைவரும் இந்நாட்டில் வாக்குரிமையுடையவர். மக்கள் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட விரும்புகிற ஒவ்வொருவரும் கானடா நாட்டுக் குடியுரிமை உடையவராகவும், தேர்தலுக்கு முன்னரே பன்னிரண்டு மாதங்கள் அந்நாட்டில் வாழ்பவராகவு மிருக்கவேண்டும். எத்தொகுதிக்கென நிற்கிறாரோ அத்தொகுதியில் இருக்கவேண்டுமென்னும் விதியெதுவுமில்லை. எனினும், அபேட்சகர் தங்கள் தொகுதியில் குடியிருப்பவராய் இருக்கவேண்டுமென்று மக்கள் விரும்புவதில் ஆச்சரியமில்லை. உறுப்பினர் சிலர் தம் தேர்தல் தொகுதியில் வசிக்காததோடு மட்டுமல்லாமல், சில சமயங்களில் மற்ற மாகாணங்களிலுள்ள தொகுதிகளுக்குக் கூடப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னதாகக் குறிப்பிட்ட நிலைமை, ஒரு கட்சியின் தலைவருக்காகவோ, அல்லது ஓரிடத்தில் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட மந்திரியார் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வழி செய்வதற்காகவோ, அல்லது முதன்முதலாகப் பிரதிநிதியாக விரும்புபவருக்கு வசதியாக இருக்கும்பொருட்டோ இருக்கலாம். குடியிருப்புத் தகுதி வற்புறுத்தப்படாவிட்டால், அறிவாற்றலுள்ள ஒருவரைத் தன் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு ஒரு தொகுதிக்குக் கிடைக்கலாம். அல்லாமலும், ஒருவருக்குத் தாம் வசிக்கும் இடத்தில் அரசியல் விஷயங்களில் எதிர்ப்பிருக்கலாம். அவருக்குப் பிறிதோரிடத்தில் நல்ல ஆதரவிருக்குமானால், அங்கிருந்து பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில் தவறில்லையல்லவா ?

பிரதிநிதிகளுக்குரிய தகுதிகள்பற்றி, பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தில் ஒன்றும் கூறப்படவில்லையாயினும், அவை பாராளுமன்றச் சட்டங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. இப்போதுள்ள

சட்ட விதிகள் மிக எளியவை. அவற்றின்படி இருபத்தொரு வயதான கானடாக் குடிமகனுர் எவரும் தேர்தலுக்கு நிற்கலாம். உடைமைத் தகுதி (Property qualification) 1874-ஆம் ஆண்டிற்குப் பிறகு இல்லே.

பொது மக்கள் சபையின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை 263 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், 1952-ஆம் ஆண்டின் பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தின்படி அத்தொகை சிறிதளவு அதிகரிக்கப்படலாம். நான்கு உறுப்பினர்களேத் தவிர ஏனேயோர் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். **ஹாலிபாக்ஸ் (Halifax), குயின்ஸ் (Queens)** என்னும் இரு தொகுதிகளுள் ஒவ்வொன்றும் இரண்டு உறுப்பினர் வீதம் நால்வரைத் தெரிந்தெடுக்கின்றன. பெரும்பாலும் எல்லாத் தொகுதிகளிலுமே, எந்த அபேட்சகர் அதிகமான வாக்குகளேப்பெறுகிருரோ அவரே தேர்ந்தெடுக்கப்படுகிருர். இதனுல் உறுப்பினர்கள், தொகுதியின் பெரும்பான்மை வாக்காளர் பிரதிநிதிகளாய் இல்லாமல், சிறுபான்மையோர் பிரதிநிதிகளாகவே இருக்கிருர்களென்பது இங்கு அறியத்தக்கது. உதாரணமாக, 1935ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் 245 இருக்கைகளுக்கு 892 பேர் போட்டியிட்டனர். அவர்களில் 140 பேர் அல்லது 57 சதவிகிதத்தினர் சிறுபான்மையோரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரேயாவர். 1945ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 965 பேர் போட்டியிட்டனர். தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களுள் 59 சத விகிதத்தினர் சிறுபரன்மையோர் வாக்குரிமையால் வந்தவரேயாவர்.

அங்கத்தினர்களின் உயர்ந்தபட்ச பதவிக்காலம் ஐந்தாண்டுகள். ஆனுல், உண்மைப் பதவிக்காலம் பாராளுமன்றம் நீடிப்பதைப் பொறுத்ததாகும். உதாரணமாக, முதல் உலகப் பெரும்போர் நடைபெற்றபோது பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஆறு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. 1925-26இலோ, பத்து மாத காலமே நீடித்தது. எனவே, சராசரியில் உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகள் பதவியிலிருப்பார்கள் என்னலாம். ஒவ்வோர் உறுப்பினரும் 10,000 டாலர்கள் சம்பளம் பெறுகிருர்கள். இதில் 2000 டாலர்களுக்கு வரி இல்லே. மன்றத்தின் கூட்டத்திற்கு வாராமல் இருக்கும் உறுப்பினர்கள் தண்டிக்கப்படுவார்கள். சாதாரணமாக உறுப்பினரொருவர் 21 நாள்கள் கூட்டத்திற்கு வாராமல் இருக்கலாம். அதற்குமேல் வாராமலிருக்கும் நாள் ஒவ்வொன்றிற்கும் 60 டாலர்கள் வீதம், அவர்கள் மொத்த ஊதியத்திலிருந்து பிடிக்கப்படும். இங்கிலாந்து நாட்டுப் பொது மக்கள் சபை உறுப்பினர்போலல்லாமல், இங்கு உறுப்பினர்கள், தங்கள் ஸ்தானத்தை, எப்போதுவேண்டுமானுலும் ராஜிநாமாச் செய்யலாம்.

கானடாவின் பொதுமக்கள் சபை, தன் அமைப்பு, விதிகள்

நடைமுறையாகியவற்றில் இங்கிலாந்து பொதுமக்கள் சபையின் மறு பதிப்பென்றே கூறுமாறு அமைந்துள்ளது. அங்குள்ள பழக்க வழக்கங்கள் மரபுகள் இங்கும் பின்பற்றப்படுகின்றன. எந்த ஓர் அமிசத்தைப் பற்றியாகிலும் கானடா மன்றம் தன் விதிகளை ஏற்படுத்திக் கொள்ளாமலிருந்தால், இங்கிலாந்தில் பின்பற்றப்படும் முறையே இங்கும் பின்பற்றப்படுகிறது.

பொதுத் தேர்தல் முடிந்ததும் கவர்னர்-ஜெனரல் சட்ட மன்றத்தைக் கூட்டுகிறார். உறுப்பினர்கள், பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டதும், அவர்கள் சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சபாநாயகர் பதவிக்கான அபேட்சகரின் பெயரைப் பிரதம மந்திரியார் முன்மொழிவார்; அதை அமைச்சரொருவர் வழிமொழிவார். எதிர்க் கட்சிகள் பெரும்பாலும் தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கும். சபாநாயகர் தேர்தல் முடிந்துவிடும். ஆனால், சபாநாயகர் தேர்தலைப் பொறுத்த வரை இங்கிலாந்து முறை பின்பற்றப்படவில்லை. இங்கிலாந்தில் ஒரு முறை சபாநாயகராய் இருந்தவரே, திரும்பத் திரும்ப "இனி வேண்டா இப்பதவி," என்று அவர் சொல்கிறவரை — தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவ்வொரு பதவியைப் பொறுத்தமட்டில் கட்சி வேறுபாடோ, கட்சிக்கட்டுப்பாடோ இல்லை. கானடாவில் இது போலல்லாமல், ஒவ்வொரு தடவையும் தேர்தல் முடிந்து பொது மக்கள் சபை கூடும்போதும் புதுச் சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதனால், ஒரு முறை பிரித்தானிய இனத்தைச் சேர்ந்தவர் சபாநாயகராய் இருந்தால், அடுத்த முறை பிரெஞ்சு இனத்தைச் சேர்ந்தவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். சபாநாயகரும் உதவிச் சபாநாயகரும் ஒரே சமயத்தில் ஒரே இனத்தைச் சேர்ந்தவராகவுமிருக்க முடியாது.

சபாநாயகரின் கடமைகள் மிகச்சிரமமானவையும், மிக்க பொறுப்பு வாய்ந்தவையுமாகும். கடமைகளில் இங்கிலாந்து சபாநாயகரைவிட எள்ளளவும் குறைந்தவரல்லர் இவர். சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி, கூட்டங்களைச் சிறப்பாக நடத்தி வைப்பது இவர் தலையாய கடமை. கூட்டங்களை நடத்தும்போது, சபையின் விதி முறைகளை அனுசரித்தே இவர் தம் கடமைகளைச் செய்கிறார். சபையின் கண்ணியத்தைக் காப்பதும் உரிமைகளை நிலை நாட்டுவதும் இவர் பொறுப்பு. எத்தரப்பார்க்கும் வெற்றி தோல்வியில்லாதவாறு ஏதாவதொரு பொருளின்மேல் எடுக்கப்பட்ட வாக்குப் பதிவின் முடிவிருக்குமானால், அப்போதுதான் சபாநாயகர் தம் வாக்குரிமையை உபயோகிக்கிறார்.

சபாநாயகர் தேர்தல் முடிந்ததும், கவர்னர்-ஜெனரலின் விருப்பத்தின்பேரில் பொதுமக்கள் சபை உறுப்பினர்கள், செனட்டு மண்டபத்திற்குச் சென்று, அம்மன்ற உறுப்பினர்களோடு கூட்டாக உட்காருவார்கள். அப்போது கவர்னர்-ஜெனரல் தம் தொடக்க

வுரையை நிகழ்த்துவார். அத்தொடக்க உரையில் கவர்னர்-ஜெனரல் அரசாங்கம் இயற்றவிருக்கும் புதுச்சட்டங்களைப் பற்றிய விவரங்களை அறிவிப்பார். அதன் பின்னர், பொது மக்கள் சபை தனியாகக்கூடி விவாதிக்கும். விவாதத்தின்போது எதிர்க்கட்சியினர், அரசாங்கம் மேற்கொண்ட செய்ல்கள், தீர்மானங்கள் பற்றிய தமது கருத்தை, அவற்றை ஒட்டியோ அல்லது வெட்டியோ எடுத்துரைப்பர். விதண்டாவாதத்தில் ஆர்வம் மிக்கவர்கள் தங்கள் வசைப் புராணத் தைப் பாடத் தவறுவதுமில்லை. விவாதத்திற்குப் பொதுவாகப் பிரதம மந்திரியாரே பதிலிறுப்பது வழக்கம்.

சட்டமியற்றுவதிலும் கானடா, இங்கிலாந்தில் கடைப்பிடிக்கும் முறையையே பின்பற்றுகிறது. இங்கும் அரசாங்கத்தால் கொண்டு வரப்படும் மசோதாக்களென்றும், தனிமசோதாக்களென்றும், தனி யுறுப்பினர் மசோதாக்களென்றும், பல பிரிவுகள் உண்டு. மசோதா ஒவ்வொன்றும் இருசபைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட பிறகு கவர்னர்-ஜெனரலுக்கு அவரது சம்மதத்திற்காக அனுப்பப்படும். கவர்னர்-ஜெனரல் இசைவு தந்ததும் மசோதா சட்டமாகும். எந்த ஒரு மசோதாமீதேனும் இரு சபைகளிடையேயும் அபிப்பிராய பேதமேற் படுமானல், அந்தக் கருத்து வேறுபாட்டையகற்ற, இரு சபைகளின் பிரதிநிதிகளும் அடங்கிய மாநாடு நடைபெறும். அந்த மாநாடு கருத்துவேறுபாட்டிற்கான காரணங்களையறிந்து, அவற்றை விவா தித்துக் கூடுமான வரை வேற்றுமைகளையகற்றி, ஒற்றுமைகாணும். இந்த மாநாட்டாலும் ஒரு சமரசமுடிவு ஏற்படாவிட்டால், மசோதா கைவிடப்படும். கானடாவிலும், இங்கிலாந்திலுள்ளது போலக் குழுக்கள் முறையுண்டு. அவற்றில் முழு மன்றக் குழு (Committee of the whole), பொறுக்குக் குழு (Select committee), நிலைக் குழு (Standing committee) என்பவை முக்கியமானவை.

**பொது மக்கள் சபையின் வேலைகள்:**—கொள்கையளவில், செனட் டும் பொதுமக்கள் சபையும் சம அதிகாரமுள்ளவை. ஆனல், பாராளு மன்ற ஆட்சி முறை வேரூன்றியதும், பொதுமக்கள் சபையே பலம் பொருந்தியதாக உருவாகியிருக்கிறது. சட்ட, நிதித்துறைகளில் கீழ்ச் சபையின் கருத்து, மேல் சபையால் ஒப்புக்கொள்ளப்படுகிறது செனட்டைப்பற்றி எழுதும்போது, அது கீழ்ச் சபையின் பாட்டுக்குத் தக்கவாறு ஆடுவதாக முன்னமே கூறினேம். தவிர்க்க முடியாத சமயங்களிலேதான் செனட்டு, பொது மக்கள் சபையின் முடிவை எதிர்க்கிறது. அப்போதும், பொது மக்கள் சபை விட்டுக்கொடுக்க விரும்பாவிட்டால், அது கலைக்கப்பட்டு, அதே பிரச்சினை அடிப்படை யில் மறுபடியும் தேர்தல் நடைபெறும். அத்தேர்தலில் மக்கள். அப்பிரச்சினையை ஆதரித்தார்களானல், செனட்டு, எதிர்ப்பேதும் காட்டாமல், தன் சம்மதத்தையளித்துவிடும். சுருக்கமாகச் சொல்ல

வேண்டுமானுல், பாராளுமன்றத்தில் மிகச் சிறந்ததும், மேன்மையானதும் பொதுமக்கள் சபையே எனலாம். பெயரளவிலேயே செனட்டு அதிகாரமுடையது. இதர அமிசங்கள் முன்னமே கூறப்பட்டுள்ளபடியால் அவைகளைப் படித்தறிந்துகொள்க.

## அத்தியாயம்—9

# நீதியும் நீதி மன்றங்களும்

நீதித்துறையின் தலைமைப்பணி, நீதிமன்றங்களின் முன் கொண்டு வரப்படும் வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்குதல். வெறுந் தண்டனை விதித்தல் அல்லது தீர்ப்பளித்தலை மட்டுமே நீதிபதிகள் செய்யவில்லை. அத்துடன் சட்டங்களை விளக்கி, ஆழ்ந்த, பதிந்த, உட் பொருளையும் அவர்கள் வழங்குகின்றனர்கள். அவர்கள் சட்ட ஆட்சி (Rule of Law) நிலவும் வண்ணம் செய்கிறார்கள். குறிப்பாக, செய் யப்படும் சட்டங்கள், அடிப்படைச் சட்டத்திற்குப் புறம்பானவை யாயிருந்தால், அவை செல்லத்தக்கன அல்ல என்று கூறுவார்கள். சட்டத்தை மீறிக் குற்றம் புரிவோரையே தண்டிக்கிறார்கள். எனவே, மக்கள், தங்கள் உரிமைகளின் பாதுகாப்பிற்கு நீதி மன்றங்களையே நம்புகிறார்கள். அல்லாமலும், நீதி மன்றம், அரசியலமைப்பிற்கு மாறான எந்தச் சட்டத்தையும், 'செல்லத்தக்கதன்று' (Ultra vires) என்று கூறும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது. இந்த அதிகாரம் கானடாவிலும் உண்டு. கானடா ஒரு கூட்டாட்சியாய் இருப்பதால், மத்திய, மாகாண அரசாங்கங்களின் அதிகார வரம்பு, அவற்றிற் கிடையேயிருக்கும் உறவு பற்றியும் நீதி மன்றம் தீர்மானிக்கிறது.

சட்டங்கள் எழுதப்பட்டோ, எழுதப்படாமலோ இருக்கலாம். எழுதப்பட்ட சட்டம் பல அமிசங்களைத் திட்டவட்டமாகக் கொண் டிருந்தாலும், அவை நீதிமன்றங்களால் விளக்கியுரைக்கப்படுகின்றன. உதாரணமாக, கானடாவின் கிரிமினல் சட்டம் எழுதப்பட்டிருக் கிறது. இருப்பினும், அதை நீதிமன்றங்கள் அவ்வப்போது விளக்கியே வருகின்றன.

எழுதப்படாத சட்டம் பொதுச் சட்டம் (Common Law) என்று வழங்கப்படுகிறது. இச்சட்டம் இங்கிலாந்தில் தோன்றியது என்பது நாமறிந்ததே. இது நாகரிகநாடுகள்-குறிப்பாக ஆங்கில மொழிபேசப் படும் நாடுகள்-எங்கும் பின்பற்றப்படுகிறது. எனவே, கானடாவும் இதைப் பின்பற்றியதென்றால், அதில் வியப்பேதுமில்லை. இனி நாம் கானடா நாட்டிலுள்ள நீதித்துறைபற்றிப் பார்ப்போம்.கானடாவின் நீதி மன்ற அமைப்பு முறை சில விசேஷக் குணங்களையுடையது. கூட் டாட்சித் தன்மையையுடைய டொமினியன்களுக்கே உரிய குணங்கள்

அவை. என்றாலும், கூட்டாட்சியில் நீதி மன்றங்கள், எவ்வாறிருக்க வேண்டுமென்று கூறும் அமெரிக்கத் தத்துவம் இங்கு ஏற்கப்படவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கூட்டாட்சி-ராஜ்ய நீதி மன்றங்களென இருவகையுண்டு. இவ்விரு வகை நீதி மன்றங்களும் கிட்டத்தட்ட இவற்றின் அதிகார எல்லையைப் பொறுத்தவரையில் தனியானவை. ராஜ்ய நீதி மன்றத்திலிருந்து ஒரு வழக்கு, கூட்டாட்சி நீதி மன்றத்திற்கு மாற்றப்படலாமென்றாலும், அது மிக அரிதாக நடப்பதாகும். ஏனென்றால், ஒரு வழக்கு முதலில் ராஜ்ய நீதிமன்றத்திற்குச் சென்றால், அது அங்கேயே பெரும்பாலும் புதைக்கப்பட்டுவிடும். இதனால், கூட்டாட்சி நீதிமன்றங்களும், ராஜ்ய நீதிமன்றங்களும் அவ்வவற்றின் துறையில் சுதந்தரமுடையவை என்பதும், அவற்றின் அமைப்பு,வேலை முறை, கூட்டாட்சி, ராஜ்ய அரசாங்கங்களின் சட்டங்களினடிப்படையில் இயங்குகின்றன என்பதும் புலனாகும். ஆனால், கானடாவில் இம் முறை இல்லை.

பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம், கூட்டாட்சி, மாகாண நீதி மன்றங்கள் அமைப்பிற்கு வழி செய்கிறது. ஆனால், இவை இரண்டிற்கும் இடையே இருக்கும் பிரிவினைக்கோடு செங்குத்தாய் இல்லாமல் சாய்வாய் இருக்கிறது. கானடாவின் சட்டங்களைச் சரிவர அமுல் செய்ய, டொமினியன் அரசாங்கம் பொது அப்பீல் நீதி மன்றங்களை அமைக்கலாம். அவசியமானால், விசேஷ நீதி மன்றங்களைக்கூட ஏற்படுத்தலாம். கிரிமினல் விஷயங்களைப் பொறுத்தமட்டில், பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை டொமினியன் அரசாங்கம் மேற்கொள்கிறது. மத்திய மாகாண நீதி மன்றங்களின் நீதிபதிகள் முதலியவர்களின் நியமனம், ஊதியம், வேலை நீக்கம் முதலியவைகளும் டொமினியனையே சார்ந்தன. வழக்குகளில் பெரும்பாலானவை, மாகாண நீதி மன்றங்களில் விசாரணை செய்யப்பட்டு, பைசல் செய்யப்படுகின்றன. அங்கிருந்து, வழக்குகள் அப்பீல் மூலமாகக் கானடாவின் தலைமை நீதிமன்றத்திற்கும் செல்லலாம். 1929-ஆம் ஆண்டுவரை சில வழக்குகளில், பிரிவி கவுன்சிலின் நியாயக் குழுவுக்குக் (Judicial Committee) கூட அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

# அத்தியாயம்—10

## நீதி மன்றங்களின் அமைப்பும் அவற்றின் அதிகார வரம்பும்

கானடாவிலுள்ள நீதி மன்றங்கள் ஆறு வகை. அவையாவன :

1. பிரிவி கவுன்சிலின் நியாயக்குழு (Judicial Committee of the Privy Council)
2. கானடாத் தலைமை நீதி மன்றம் (Supreme Court of Canada)
3. கானடாவின் எக்ஸ்செக்கர் நீதிமன்றம் (The Exchequer Court of Canada)
4. மாகாணத் தலைமை நீதி மன்றம் (Provincial High Court)
5. கவுண்டி நீதி மன்றங்கள் (County Courts)
6. மாகாணச் சிறு நீதி மன்றங்கள் (Minor Provincial Courts)

1. **நியாயக் குழு :** எல்லா வழக்குகளும், குறிப்பாக எல்லாக் கிரிமினல் வழக்குகளும், இக்குழுவிற்குச் செல்லலாம். இதுவே, இறுதி நீதி மன்றம். இம்மாதிரி வழக்குகளெல்லாம் நியாயக் குழுவிற்குச் செல்வதானது, கானடாத் தேசத்தின் சிறப்புக்கோர் இழுக்கு எனப் பலரும் எண்ணினர் ; அதனால், அதைக் கலைத்துவிடவேண்டும் அல்லது அந்தப் பழக்கத்தைக் கைவிட்டுவிட வேண்டுமென்றனர். அதன்படி 1933-ஆம் ஆண்டிலிருந்து அப்பழக்கம் நிறுத்தப்பட்டது. கானடாவின் தலைமை நீதி மன்றத்தின் முடிவே இப்போது கடைசி முடிவாகும்.

2. **தலைமை நீதி மன்றம் ;** கானடாவின் தலைமை நீதி மன்றம் 1875-ஆம் ஆண்டு பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டது. இது சிவில், கிரிமினல் அப்பீல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரமுடையது. ஆரம்பத்தில் ஒரு தலைமை நீதிபதியும் ஐந்து சாதாரண நீதிபதிகளும் இதில் இருந்தார்கள். பின்னர் இத்தொகை 1927-ஆம் ஆண்டில் ஏழாக உயர்த்தப்பட்டது. இப்போது தலைமை நீதிபதியையுஞ் சேர்த்து ஒன்பது பேர்கள் இருக்கின்றனர்கள். தலைமை நீதி மன்ற நீதிபதிகள், கவர்னர்-ஜெனரலால் நியமிக்கப்படுகிறார்கள். கவர்னர் ஜெனரல், நீதிபதிகளை நியமனம் செய்யும்போது தம் மந்திரி சபையின் ஆலோசனையின் பேரிலேதான்

செய்கிறார். இவர்கள் எழுபத்தைந்து வயதுவரை பதவி வகிக்கலாம். இவர்கள் நன்னெறி தவறுவார்களேயாயின், பதவிக்காலம் முடியு முன்பு கூட, விலக்கப்படலாம். பாராளுமன்றத்தின் இருசபைகளின் வேண்டுகோளுக்கிணங்க, மந்திரி சபையின் சிபாரிசைப் பெற்று, கவர்னர்-ஜெனரல் இவர்களைப் பதவியிலிருந்து விலக்குவார். தலைமை நீதிபதிக்கு 25,000 டாலர்களும் இதர நீதிபதிகளுக்கு 20,000 டாலர்களும் ஆண்டொன்றுக்குச் சம்பளமாகத் தரப்படுகின்றன.

சிவில், கிரிமினல் அப்பீல் வழக்குகளிலும், அரசியலமைப்புச் சம்பந்தப்பட்ட விளக்கங்களிலும், டொமினியன், மாகாணங்களின் சட்டங்களைப்பற்றிய சர்ச்சைகளும் சந்தேகங்களும் செல்லத்தகுந்தவைதாமா என்றெழும் வாதங்கள் ஆகியவற்றில், தலைமை நீதி மன்றத்தின் முடிவே இறுதியானது. எ.ஃ.செக்கர் நீதி மன்றம், போக்குவரத்துக் கமிஷனர்களின் குழு முதலியவற்றிலிருந்து வரும் அப்பீல்களையும், தேர்தல் ஒழுங்கீனம் பற்றி வரும் வழக்குகளையும் தலைமை நீதி மன்றம் விசாரித்துத் தீர்ப்பளிக்கும். இந்தியத் தலைமை நீதி மன்றம் செய்வது போல, இம்மன்றம் அரசியல் சாசனத்தின் ஷரத்துகள், மத்திய மாகாண அரசாங்கங்களால் இயற்றப்படும் சட்டங்களைப்பற்றிய தன் கருத்தை, டொமினியன் அரசாங்கம் விரும்பினால், அளிக்கும். இதை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைமை நீதி மன்றம் செய்வதில்லை என்பதை நாம் இங்கு அறிதலவசியம்.

நியாயக்குழு செயலாற்றி வந்த வரையில், தலைமை நீதி மன்றத்தின் செல்வாக்குக் குன்றியே காணப்பட்டது. ஆனால், கானடாவிலிருந்து வழக்குகளை நியாயக் குழுவிற்கு அப்பீல்மூலம் மாற்றுமுறை கைவிடப்பட்ட பிறகு, இதன் புகழ் இன்று உச்சநிலையிலிருக்கிறது.

**3. எ.ஃ.செக்கர் நீதி மன்றம் :** இந்த நீதி மன்றம் முதலில் தலைமை நீதி மன்றத்தோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருந்தது. ஆனால், 1887-ஆம் ஆண்டில் இது தனியாகப் பிரிக்கப்பட்டது. இப்போது இதில் ஒரு தலைவரும் நான்கு இதர நீதிபதிகளுமிருக்கிறார்கள். இவர்களையும், கவர்னர்-ஜெனரலே, மந்திரி சபையின் சிபாரிசின் மேல் நியமிக்கிறார். இவர்களும், தலைமை நீதி மன்றத்தின் நீதிபதிகளைப்போலவே, 75-ஆம் வயது வரை பணியாற்றுகிறார்கள். இவர்களும், பதவிக்கால முடியுமுன்னரே முன் சொல்லப்பட்ட முறைப்படி பதவியிலிருந்து விலக்கப்படலாம்.

இந்த நீதி மன்றம், அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய ரெவின்யூ சம்பந்தமான வழக்குகளையும், கூட்டாட்சி சம்பந்தமான அலுவல்களில் அரசாங்கத்திற்கெதிராகக் குடிமக்களால் கொண்டு வரப்படும் வழக்குகளையும் விசாரிக்கிறது. தனக்குச் சொந்தமான நிலங்கள், வீடுகள் முதலியவற்றை அரசாங்கம் எடுத்துக்கொண்டு கொடுத்த ஈட்டுத்தொகை நியாயமானதன்று என்பது புலப்படும் எவரும் இம் மன்றத்தில் வழக்குத் தொடரலாம். அரசாங்கத்தின் அஜாக்கிரதை

யால் ஏற்படும் உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஆகியவற்றிற்கான பரிகாரம் தேடிப் பொது மக்கள் தொடரும் வழக்குகளையும் இம்மன்றம் விசாரிக்க அதிகாரமுடையது. இது **அட்மிரால்டி நீதி மன்றமா**கவும் செயலாற்றுகிறது. இத்துறையில், நேரிடையாகவும், அப்பீல் மூலமாகவும் வரும் வழக்குகளையும் இது விசாரிக்க அதிகாரமுடையது.

4. **மாகாணத் தலைமை நீதி மன்றம்** : ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு தலைமை நீதி மன்றம் அல்லது அப்பீல் நீதி மன்றம் இருக்கிறது. இந்த மாகாணத் தலைமை நீதி மன்றம் மாகாணம் சம்பந்தப்பட்ட எல்லா வழக்குகளையும் விசாரிக்க அதிகாரமுடையது. இங்கிருந்து வழக்குகளைத் தலைமை நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்து கொள்ள வசதியிருக்கிறது. இம்மன்றத்தின் நீதிபதிகளும் அமைச்சவை ஆலோசனைப்படி கவர்னர்-ஜெனரலாலேதான் நியமிக்கப்படுகிறார்கள். இந்த நீதிமன்றங்களும் மற்ற நீதிமன்றங்களைப்போலவே, மத்திய மாகாண அரசாங்கங்களின் அதிகார எல்லைக்குட்பட்டவையேயாகும். உதாரணமாக, அமைப்பு, கட்டுப்பாடு, நடைமுறை விதிகள் மாகாண அரசாங்கங்களின் அதிகாரத்திலடங்கும். சம்பளம், நீதிபதிகள் நியமனம், நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கல் முதலிய துறைகளில் டொமினியன் அரசாங்கம் அதிகாரஞ் செலுத்துகிறது.

5. **கவுண்டி நீதி மன்றங்கள்** : ஒவ்வொரு கவுண்டியிலும் ஒவ்வொரு கவுண்டி நீதி மன்றமுண்டு. ஆனால், சில சமயங்களில் ஒரு கவுண்டி நீதிபதி மற்றக் கவுண்டியின் நீதிபதியாகவும் பணியாற்றுவார். இவர்களும் கவனர்-ஜெனரலாலேதான் நியமிக்கப்படுகிறார்கள். தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து வரும் சிறு வழக்குகளை இவைகள் எடுத்துக்கொள்கின்றன. சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் இசைந்தால், பெருந்தொகை சம்பந்தப்பட்ட வழக்குகளையும் இவை விசாரிக்க அதிகாரமுண்டு. சாதாரணக் கிரிமினல் வழக்குகளும் இவற்றிடம் வருகின்றன.

6. **சிறிய மாகாண நீதி மன்றங்கள்** : இவை பல திறப்பட்டவை. இவற்றின் அமைப்பு, நடைமுறை, நீதிபதிகள் நியமனம், அவர்களது பதவிக்காலம், ஊதியம், ஒய்வு எல்லாம் மாகாண அரசாங்கங்களின் சொந்த விவகாரம். இந்த மன்றங்களின் நீதிபதிகளின் பதவி, சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்கத்தின் விருப்பு வெறுப்பை ஒட்டியது. இவை மிகச் சாதாரண குற்றங்களுக்காகக் கொண்டுவரப்படும் வழக்குகளை விசாரிக்கின்றன. உதாரணமாக, ஒப்பந்தமுறிவு, நம்பிக்கைத் துரோகம், கடன் முதலியவை பற்றிய சிறிய வழக்குகள் ஆகியவை இந்நீதி மன்றங்களால் விசாரிக்கப்படுகின்றன.

# அத்தியாயம் — 11

## அரசியற்கட்சிகள்

### (Political Parties)

அரசியற்கட்சிகள், அரசாங்கம் சரிவர இயங்குவதற்கு மிக இன்றியமையாதவை. ஏனென்றால், அரசாங்கம் செய்யும் அலுவல்கள் பற்றிய விவாதம் அரசியற்கட்சிகளின் கூட்டங்களில் நடைபெறுகின்றன. அவ்விவாதங்கள் அடிப்படைக் கொள்கைகளில் காணப்படும் ஒற்றுமை அமிசங்களையும் உண்மை நிலையையும் எடுத்துக்காட்டுவதோடு, அவற்றின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன. குறிப்பாகக் குடியாட்சி நாடுகளில் அரசியற்கட்சிகளின் இயக்கம் மிக முக்கியமானது. ஏனெனில், கட்சிகள் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கின்றன; கொள்கைகளைப் பரப்புகின்றன; அமைதியான முறையில், நாடாளு மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறச் செய்கின்றன; பின்பு அரசாங்கம் அமைக்கின்றன. குடியாட்சிமுறை நாடுகளிலேதான், நல்ல, பலம் பொருந்திய அரசியற்கட்சிகள் வளர்ந்து செயற்படமுடியுமென்பதும், அதிலும் பாராளுமன்றமுறை நாடுகளில் அவற்றின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு என்பதும் நாம் இங்கு அறியவேண்டுபவை. எனவே, கானடாத் தேசத்திற்கும் அரசியற்கட்சிகள் அவசியந்தேவை என்பது உணரப்படும்.

கானடாவிலுள்ள அரசியற்கட்சிகளின் பெயர்கள் இங்கிலாந்தில் காணப்படும் கட்சிகளின் பெயரைப் போன்றவையே. உதாரணமாக, லிபரல், கன்சர்வேட்டிவ் போன்றவற்றைக் கூறலாம். இங்குக் கட்சிமுறையில் சில முக்கியமான குணாதிசயங்களுண்டு. அவைகளில் பின் வருபவை குறிப்பிடத்தக்கவை:—

1. மக்களுக்கு எந்த ஒரு குறிப்பிட்ட கட்சியிடமும் ஆழ்ந்த பற்று இல்லை. கட்சிகளிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அவற்றின் கொள்கை அடிப்படையிலில்லை. அது தற்செயலானதேயாகும்.
2. கட்சிப்பற்று எந்த விதமான மனமாச்சரியங்களையும் ஏற்படுத்துவதில்லை. இரண்டு மூன்று பிரதேசங்களின் ஆதரவு

இருந்தால்தான் தேசியக் கட்சிகள் ஏற்பட முடியும். இரண்டு அல்லது மூன்று பிரதேசங்களின் ஆதரவு ஒரு கட்சிக்கிருந்தால், அக்கட்சி அந்தப் பிரதேசங்களின் வேற்றுமைகளில் ஒற்றுமை காணும் திறமை பெற்றிருக்கிறது என்பதே பொருள். இதை விளக்கிக் கூற வேண்டுமானுல், கட்சியிலுள்ள உறுப்பினர்களிடையே பலதிறப்பட்ட நோக்கங்கள், அவற்றின் அடிப்படையில் எழும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகையால், கட்சிகளுக்கிடையே விரோத மனப்பான்மை ஏற்படுவதில்லை.

3. கானடாவில் கிட்டத்தட்ட ஆரம்ப முதலே இரு கட்சிமுறை வேரூன்றிவிட்டது. உதாரணமாக, லிபரல் கட்சியும் கன்சர் வேட்டிவ் கட்சியும் 1854ஆம் ஆண்டிலிருந்தேதோன்றியவை என்று கூறலாம். மற்றக் கட்சிகளும் இங்கு இந்த நூற்ருண்டில் தோன்றினவாளுலும், இவை மேற்கூறிய இரு கட்சிகளையும் இன்று வரையிலும் அசைக்கக்கூட முடியவில்லை.

இப்போது கானடாவில் **லிபரல் கட்சி, கன்சர்வேட்டிவ் கட்சி, தொழிற்கட்சி, குடியானவர் கட்சி** என்பவை மிக முக்கியமானவை.

**லிபரல் கட்சி :** இக்கட்சியின் தோற்றம் பற்றித் திட்டமாக ஏதும் கூற முடியாதெனினும், பொறுப்புள்ள அரசாங்கம் வேண்டுமெனப் போராடிய சீர்திருத்தக்காரர்கள் காலத்தில் இது தோன்றியதென்று கூறலாம். நாடுகளின் கூட்டம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, உறுதியான சிறந்ததொரு கட்சியை ஏற்படுத்த யாரும் தீவிரமாக முற்படவில்லை. லிபரல் கட்சியினருட்பலர், நாடுகளின் கூட்டமைப்பை எதிர்த்தனர். கன்சர்வேட்டிவ் அரசாங்கம் மத்திய நிருவாகத்தின் அதிகாரங்களை அதிகரித்து, மாகாணங்களின் அதிகாரங்களைக் குறைக்க முயற்சிசெய்தபோது, லிபரல் கட்சி, மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்படவேண்டும் என்று வற்புறுத்தியது. இந்த லிபரல் கட்சியின் நோக்கங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் **ஜெபர்சன்** என்பவரால் உருவாக்கப்பட்ட கூட்டாட்சி எதிர்ப்புக் கட்சியின் நோக்கங்களைப் பெரிதும் ஒத்திருந்தன என்பதைத் துணிந்து கூறலாம். இந்தக் கட்சியில் மத எதிர்ப்பாளர்களுமிருந்தார்கள். அதனுல், கத்தோலிக்க மதத்தினர் இதை விரும்பவில்லை. இவர்களைத் தவிர, சீர்திருத்தவாதிகள், பிரிவினை வாதிகள் பலரும் இக்கட்சியில் இருந்தனர்.

லிபரல் கட்சி 1873ஆம் ஆண்டில் முதன்முதலாக அரசாங்கம் நிறுவியது. இது **திரு. அலெக்ஸாந்தர் மெக்கன்சி** என்பவரின் இடைவிடா உழைப்பாலும், சமரசப் பரந்த நோக்காலுமே சாத்தியமாயிற்று. பின்னர் இக்கட்சிக்குள் தோன்றிய பூசல்கள், அரசாங்கம் அமைக்கப் போதுமான ஆதரவு பெறத் தடையாய் இருந்தன.

ஆனால், 1887ல் **திரு. லாரியர்** இக்கட்சியின் தலைவரான பிறகு, இது மறுவாழ்வு பெற்றது. அவர், மக்கள் ஒற்றுமையாய் இருக்க வேண்டுவதன் அவசியம் பற்றியும், தேசத்தின் ஒருமைப்பாடு பற்றியும் வற்புறுத்தினர்; தேசம் தொழில் துறையில் முன்னேறிச் செல்வஞ் சிறப்பதற்கான பல வழிகளை வகுத்தார். இவற்றையெல்லாம்விட அவர் செய்த பெருஞ்சீர்திருத்தம், லிபரல் கட்சியினரிடையே யிருந்த மத எதிர்ப்பையொழித்து, பிரெஞ்சுக்காரர்கள் அதிகமாய் இருந்தபகுதியின் ஆதரவைப்பெற்றதேயாகும். இதனால், லிபரல் கட்சி பலம்மிக்க கட்சியாய் உருப்பெற்றது. அவருக்குப் பின் தலைவரான **திரு.மெக்கன்சி கிங்** என்பவர், **திரு.லாரியர்** வகுத்தநெறிமுறை தவருது செயலாற்றினர். அதனால், இவரது செல்வாக்கு, கியூபெக்கு மாகாணத்தில் குருவையும் மிஞ்சியதாயிருந்தது. அப்போது லிபரல் கட்சிக்கு அந்த மாகாணத்தில் ஏற்பட்ட அபரிமிதமான ஆதரவு இன்றும் நீடித்து நிற்கிறது; 1887-ஆம் ஆண்டிலிருந்து 1948-ஆம் ஆண்டு வரையில், அதாவது ஏறத்தாழ அறுபத்தோராண்டுகள், நல்ல தொண்டுசெய்து நல்லாதரவைப் பெற்றிருந்தது. 1957இலே தான் இக்கட்சியால் அரசாங்கம் நிறுவ முடியாமற்போயிற்று. இவ்வாறு இக்கட்சி, கானடாவில் சிறந்ததொரு தேசியக் கட்சியாய்த் திகழ்கிறது.

**கன்சர்வேட்டிவ் கட்சி :** இக்கட்சி 1857ஆம் ஆண்டு முதலே இருக்கிறது. இக்கட்சி 1857இல் நிறுவப்பட்ட கூட்டு மந்திரிசபையில் அங்கம் வகித்தது. இக்கூட்டு மந்திரிசபையில் தீவிரவாதிகளான **டோரிகளும்**, மேல் கானடா மிதவாத லிபரல்களும், கீழ்க் கானடா ஆங்கிலம் பேசுபவர்களும் உறுப்பினர்களாயிருந்தார்கள். ஆனால், இந்தக் கூட்டு மந்திரிசபை சீக்கிரமே கவிழ்ந்தது. அதற்குக் காரணம், **மாக்டொனல்டு** என்பவரே. இவர் மாகாணங்களிலிருந்த பல துக்கடாக் கட்சிகளையும் ஒன்று சேர்த்து உருப்படியான ஓர் அரசியற்கட்சியை உருவாக்கி, அதன் வளர்ச்சிக்காகப் பாடு பட்டார். அது இடையில் ஐந்தாண்டுகள் தவிர, 1896 வரை, அரசாங்கம் ஏற்படுத்தும் அளவிற்குப் பலம் பொருந்தியதாய் விளங்கியது.

மாக்டொனல்டின் குணம், அரசியல் நோக்கம், அமெரிக்கத் தலைவரான அலெக்ஸாந்தர் ஹாமில்டனின் நோக்கத்தைப் போன்றதெனலாம். இவ்வுண்மை மாக்டொனல்டும், அவருக்குப் பின் வந்த கட்சித் தலைவர்களும், ஹாமில்டனைப் போற்றியதிலிருந்தே தெளிவாக விளங்கும். அமெரிக்கக் கூட்டாட்சிக் கட்சியினரைப்போலவே, கன்சர்வேட்டிவ்களும், மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை வலுப்படுத்துவதிலும், செல்வந்தர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள் போன்றவர்களின் நலனுக்காகப் பாடு படுவதிலும் ஊக்கங் காட்டினர்கள். பொருளாதாரத் தேசியம் இக்கட்சியின் மூலாதாரக் கொள்கையாய் அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது. இக்

கட்சியின் கொள்கைகளில், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடைசெய்வதும், குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து, அதிகப் பட்ச வேலை நேரத்தைக் குறிப்பிடுதலும் முக்கியமானவை. இப்போது இக்கட்சியைச் சேர்ந்த **திரு. ஜான் டைபென் பேக்கர்,** கானடாவில் அரசாங்கம் அமைத்துள்ளார்.

**குடியானவர் கட்சி :** உதிரிக் கட்சிகள் பல சென்ற நூற்றுண்டின் இறுதி முதல் தோன்றி இரு கட்சிமுறையைத் தீவிரமாகப்பயமுறுத்தி வந்திருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை குடியானவர் கட்சி, தொழிற்கட்சி என்பன. குடியானவர் கட்சிக்கு, விவசாயிகளிடையே நல்ல ஆதரவு கிடைத்தது. இக்கட்சி, மூலப்பொருள்கள், உணவுப் பண்டங்கள் மீது விதிக்கப்படும் வரியை நீக்கவேண்டுமெனவற்புறுத்தி வந்துள்ளது. இந்த இயக்கத்திற்கு ஒண்டாரியோ மாகாணத்தில் பெரும்பலம் கிடைத்தது. 1919-ஆம் ஆண்டு இக்கட்சி, தொழிற் கட்சி ஒத்துழைப்புடன் அரசாங்கம் நிறுவியது குறிப்பிடத்தக்கது. ஆனுல், இப்போது அக்கட்சிக்கு அதிக ஆதரவு இல்லை. அது, மாகாண அளவிலேயே இப்போதிருக்கிறது.

**தொழிற்கட்சி :** இக்கட்சி பொதுவுடைமைத் தத்துவத்தைப் பின்பற்றுகிறது. புரட்சிகரமான பொருளாதார மாற்றங்கள் மூல மாக ஒரு புதிய சமுதாயத்தைச் சமைக்க முடியுமென இக்கட்சி நம்புகிறது. உதாரணமாக, நாட்டிலுள்ள வருவாய்த் துறைகள், போக்கு வரத்துச் சாதனங்கள், செய்திச் சாதனங்கள் முதலியவற்றைத் தேசிய மயமாக்க விரும்புகிறது. முதுமை, நோய், தற்செயலாக ஏற்படும் விபத்துகள், வேலையில்லாமை போன்றவற்றிற்காக இன்ஷி யூரன்ஸ் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதும் இக்கட்சியின் கொள்கை. இக்கட்சி 1939-ஆம் ஆண்டு முதலே, முன்னணியில் இருந்து வருகிறது.

## கானடா அரசியலமைப்பிற்கான புத்தகங்களின் பட்டியல்

(Bibliography for the Canadian Constitution)


1. பேராசிரியர் கென்னடி — கானடாவின் அரசியலமைப்பு
   Professor Kennedy — The Constitution of Canada)
2. கே. சி. வியர் — கூட்டாட்சி அரசாங்கம்
   Wheare. K. C. — Federal Government
3. பால் கெரின் லஜோ — கானடாவில் அரசியலமைப்பில் மாற்றங்கள். (Constitutional Amendment in Canada)
   Paul Gerin Lajoie
4. தாசன் — கானடாவின் அரசாங்கம்
   Dawson — The Government of Canada
5. லெஸ்லி ராபர்ட்ஸ் — பொன் திருப்பம், கானடா
   Leslie Roberts — Canada, the Golden Hinge
6. அலெக்ஸாந்தர் பிராடி — டொமினியங்களில் ஜனநாயகம்
   Alexander Brady — Democracy in the Dominions
7. ஹெச். ஜே. லாஸ்கி — அரசியல் இலக்கணம்
   H. J. Laski — A Grammar of Politics

## மூன்றாம் பிரிவு

# ஜப்பான்

## அத்தியாயம்—1
# அரசியல் திட்டத்தை மாற்றும் விதம்

அரசியல் அமைப்பை மாற்றும் முறை இன்றியமையாதது என்றுணர்ந்த **மாஜி சிறு குழுவாட்சித்** தலைவர்கள் தங்களுடைய அரசியல் தத்துவத்திற்கேற்ப ஒரு முறையை வகுத்திருந்தார்கள். அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு அவசியம் ஏற்படும் பொழுது அதற்காகக் கொண்டுவரப்படும் பிரேரணையை உருவாக்குவது மன்னருடைய பொறுப்பென்பதும், அப்பிரேரணை மீது வாக்களிப்பது **இம்பீரியல் டையட்டின்** கடமை என்பதும் முகப்பில் கூறப்பட்டிருந்தன.

அரசியல் அமைப்பின் 73-ஆம் பிரிவில் மாற்றும் முறை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி மாற்றுவதற்குப் பிரேரணை இம்பீரியல் உத்தரவாகச் சட்ட சபைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும். இரண்டு சபைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் ஆஜராய் இருந்தாற்றான் அப்பிரேரணையை விவாதிக்கலாம். ஒவ்வொரு சபையிலும் பிரேரணை நிறைவேறுவதற்கு ஆஜராகியிருப்பவர்களுள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினர் வாக்கு அளிக்க வேண்டும்.

டையட்டின் இரண்டு சபைகளும் பிரேரணையை ஏற்றுக்கொள்ளவோ, அல்லது நிராகரிக்கவோ செய்யலாமேயன்றி, அதை மாற்றங்களுடன் நிறைவேற்ற முடியாது என்று ஜப்பானியச் சட்ட நிபுணர் சிலர் கருதினர். பேராசிரியர் **மினோபேயும்** அவருடைய மாணவர்களும் இறைமை மன்னரிடமும் டையட்டிலும் இருப்பதால்,டையட்டு மாறுதல்கள் கொண்டுவரலாம் என்று கருதினார்கள். **மாஜி அரசியல் அமைப்பிற்கு** மாற்றம் எதுவும் கொண்டு வரப்படாததால் இச் சர்ச்சைக்கு ஒரு நிச்சயமான முடிவு இல்லை.

ஜப்பானின் புதிய அரசியல் அமைப்பு மாஜி அரசியல் அமைப்பிற்கு மாற்றமாகவே கொண்டு வரப்பட்டது. புதிய திட்டத்தை அரசாங்கம் மக்கள் சபையில் சமர்ப்பித்த பொழுது டையட்டிற்கு மாற்றங்கள் கொண்டு வருவதற்கு அதிகாரம் இருக்கிறதா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. இதற்கு அரசாங்கத்தின் தலைவர்கள் டையட்டு மாற்றங்கள் கொண்டுவரலாம் என்று பதிலளித்தார்கள். இரண்டு சபைகளிலும் சிற்சில மாறுதல்களுடன் புதிய திட்டம்

தேவைக்கு மிஞ்சிய பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேறியது. முறையளவில் புதிய திட்டத்திற்கும் முந்திய அமைப்பிற்கும் சம்பந்தம் இருந்தபோதிலும் (பழைய அமைப்பிற்கு மாற்றமாகக் கொண்டு வரப்பட்டது காரணமாக) உண்மையில் இரண்டிற்கும் ஒரு வித ஒற்றுமையுமில்லை ; 'முந்திய திட்டம் வகுத்திருந்த வழியின் உதவியுடன் முற்றிலும் மாற்றப்பட்டது.

ஜப்பானியப் புதிய அரசியல் திட்டத்தை மாற்றுதற்கு அத்திட்டத்தின் ஜனநாயகத் தத்துவத்திற்கிணங்க ஒரு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. இம்முறை அரசியல் அமைப்பின் 96-ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாஜித் திட்டத்தில் மாற்றங்களைத் தொடங்கும் அதிகாரம் மன்னர் பெயரில் ஆளும் அதிகாரத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்தது. புதிய திட்டத்தில் இவ்வதிகாரம் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இரண்டு சட்டசபைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு சபைகளிலும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும். மக்களின் பிரதிநிதிகளால் விசேஷப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் மாத்திரம் போதாது. ஜப்பானின் புதிய அரசியல் அமைப்பை வகுத்த அமெரிக்கக் கர்த்தர்கள் மக்களுக்கே இறுதியில் மாற்றும் அதிகாரத்தைக் கொடுத்தார்கள். டையட்டில் நிறைவேற்றப்பட்ட மாற்றப் பிரேரணை அச்சபையின் விருப்பப்படி தேர்தல் சமயத்திலாவது அல்லது பொது ஜன வாக்கெடுப்பிலாவது மக்களின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

இம்மாற்ற முறை மக்களாட்சிக்கு உகந்த முறையாய் இருந்தபோதிலும் இதன்படி மாற்றங்கள் கொண்டு வருவது கடினமாகவே இருக்கும் என்று சொல்லலாம். அரசியல் அமைப்பு ஏற்படுத்திச் சுமார் 15 ஆண்டுகள் ஆகியும் இதுவரை மாற்றம் ஒன்றும் கொண்டு வரப்படவில்லை. மாற்றப் பிரேரணைகளைத் தொடங்கும் முறையே மாற்றங்கள் கொண்டுவருவதற்கு இப்பொழுது தடையாக இருக்கின்றது. ஆளும் கட்சியினர் அரசியல் அமைப்பில் படைகள் வைத்துக் கொள்வதை நீக்கும் பிரிவை (9-ஆம் பிரிவு) மாற்றுவதற்கு விரும்பிய போதிலும், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அக்கட்சிக்கு இல்லாததால், அப்பிரேரணையைக் கொண்டுவர இயலவில்லை. மக்களின் ஒப்புதலின் அவசியம் எவ்வளவு தூரம் மாற்றப் பிரேரணைகள் நிறைவேற்றப்படுவதற்குத் தடையாய் இருக்கும் என்பதை இப்பொழுது சொல்வதற்கில்லை. ஏனென்றால், அந்தப் பிரச்சினை இன்னும் எழவில்லை.

# அத்தியாயம்—2

## அடிப்படை உரிமைகள்

அரசியலமைப்பு மாஜிச் சிறு குழுவாட்சித் தலைவர்களால் வகுக்கப்பட்ட போதிலும் அது வெளிப்படையில் மக்களாட்சிச் சின்னங்களை உடையதாய் இருந்தது. 19-ஆம் நூற்றுண்டின் இறுதியில் ஐப்பான் பொருளாதார முன்னேற்றமடைய ஆரம்பித்ததும் அரசியல் உணர்ச்சியும் உதயமாக ஆரம்பித்தது. மாஜி மன்னரும் பட்டத்திற்கு வந்த பிறகு விடுத்த பிரகடனத்தில் அகன்ற ஓர் அடிப்படையில் சட்டசபை அமைக்கப்படுவதாக வாக்களித்தார். அரசியல் திட்டத்தை வகுத்த இளவரசர் **இடோ ஹிரோயுமி**யும் அவருடைய தோழர்களும் சுமார் 20 ஆண்டு வரை அரசியல் அமைப்புத் திட்டத்தை வகுப்பதில் ஈடுபட்டார்கள். அவர் செல்லாத நாடு இல்லை; ஆராயாத அரசியல் திட்டம் இல்லை. இத்தனை ஆராய்ச்சியின் பலன் மாஜி அரசியலமைப்பு. அது மக்களாட்சியின் அடையாளங்களைக் கொண்டிருந்ததில் ஒன்றும் வியப்பில்லை.

மாஜி அரசியல் திட்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்ட குடிகளின் உரிமைகளும் கடமைகளும் அதன் பிரதான ஜனநாயக அமிசமாகும். முதலில் இரண்டு கடமைகளை அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. படைகளில் பணியாற்றுவதற்கும் வரிகளைச் செலுத்துவதற்கும் குடிகள் கடமைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிறகு உரிமைகள் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சட்ட வரம்பிற்குள் நாட்டில் எங்கும் குடியேறவோ வசிக்கவோ உரிமை, காவலில் வைக்கப்படுவது, விசாரணை செய்யப்படுவது, தண்டிக்கப்படுவது—இவை சட்டத்தின்படியன்றி யதேச்சாதிகாரமாகச் செய்யப்படக்கூடாது; சட்டம் நிர்ணயித்த நீதிபதிகளால் விசாரிப்பதைத் தடுக்க இயலாது; சட்டம் அனுமதிக்காமல் வீட்டுக்காரர் சம்மதமின்றி ஒருவர் வீட்டில் நுழையவோ சோதனையிடவோ கூடாது; சட்டம் அனுமதிக்காமல் கடிதப் போக்குவரத்தின் இரகசியத்தைத் தகர்க்கக்கூடாது; பொது நலனுக்காகச் சட்டத்தின்படி ஆர்ஜிதம் செய்யலாம். மற்றப்படி சொத்துரிமையைப் பாதிக்கக்கூடாது; பொது ஒழுங்கு அமைதி போன்ற வரம்புகளுக்

குட்பட்டு, குடிகளின் கடமைகளும் பாதிக்கப்படாமல், மதச் சுதந்த ரத்தை அனுபவிக்கலாம் ; சட்டத்தின் வரம்புகளுக்குள் பேச்சு எழுத் துச் சுதந்தரம், கூட்டம் கூடும் சுதந்தரம், சங்கம் சேரும் உரிமை, மக்கள் விதிகளின்படி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் இவை எல்லாம் எல்லா ஜப்பானியக் குடிகளுக்கும் உண்டு ; ஆனால், இவ்வுரிமைகள் மன்னரின் போர்க்காலம் அல்லது நெருக்கடிக்கால அதிகாரங்களைப் பாதிக்கமாட்டா.

மாஜி அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகள் நமக்குத் தத்துவ ஞானியார் **ஹாப்ஸ்** சுதந்தரத்தைப்பற்றி எழுதியதை நினை வூட்டுகிறது. அவர் சொன்னதாவது : குடிகள் சுதந்தரம் என்பது சட்டத்தின் மௌனத்தைப் பொறுத்தது. (Liberty consists in the silence of the law). சட்டம் மௌனமாய் இருந்தால், குடிக்குச் சுதந்தரம் உண்டு. சட்டம் வரம்புகள் இட்டால் அவ்வரம்புகளுக் குள்ளேதான் சுதந்தரம் இருக்கும். உரிமையைக் கட்டுப்படுத்து வதற்கு அரசியல் திட்டம் ஒரு வரம்பை நிர்ணயிக்காததால் சட்டம் உரிமைகளை முற்றிலும் பிடுங்கிவிடக்கூடும். சுயேச்சையான நீதி மன்றமாய் இருந்தால், இவ்வுரிமைகளுக்குக்கூட அர்த்தம் இருக்கும். ஏனென்றால், ஆட்சி அதிகாரத்தின் யதேச்சாதிகாரத்திலிருந்தாவது பாதுகாப்பளிக்கும். ஆனால், மாஜி அரசியலமைப்பில் நீதி மன்றத் திற்கும் அதிகாரம் இல்லை. சட்ட சபையோ, முற்றிலும் ஆட்சி அதி காரத்தின் கருவியாகவே இருந்தது.

புதிய அரசியல் திட்டம் மக்களின் உரிமைகளும் கடமைகளும் என்ற தலைப்பின்கீழ்ப் பல ஜீவாதார உரிமைகளைக் குறிப்பிடுகிறது. மாஜி அரசியல் அமைப்புக் குறிப்பிட்ட உரிமைகள் எல்லாம் புதிய திட்டத்தில் இடம் பெறுகின்றன ; புதிய உரிமைகள் பல காணப்படு கின்றன. மாஜித் திட்டத்தைப்போல எல்லா உரிமைகளும் சட்ட சபையின் நிர்ணயத்திற்கு உட்பட்டனவல்ல. மேலும், மன்னரின் நெருக்கடி அதிகாரங்களைப்பற்றியும் புதிய திட்டம் குறிப்பிடவில்லை.

புதிய திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஜீவாதார உரிமை களைச் சமூக உரிமைகள், பொருளாதார உரிமைகள், அரசியல் உரிமை கள், செயல்முறை உரிமைகள் என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

**சமூக உரிமைகள் :** பேராசிரியர்கள் **துவிகிலியும் டர்னரும்** அர சியல் திட்டத்தின் 24-ஆம் பிரிவைப் புதிய உரிமைகளின் இருதயம் எனக் கருதலாம் என்று கூறுகின்றனர். ஏனெனில், அது தந்தை வழி முறையின் அடிப்படையிலுள்ள ஜப்பானியக் குடும்ப முறையை ஒழிப்பதற்கு அடி கோலுகிறது.

அப்பிரிவின்படி திருமணம் ஆண் பெண்ணின் பரஸ்பர சம்மதத் தின் மேலேதான் நிச்சயிக்கப்படவேண்டும். மேலும், அது கணவன் மனைவியரின் சம உரிமைகளின் அடிப்படையில் ஒத்துழைப்புடன் காப்பாற்றப்பட வேண்டும். தனி நபரின் கௌரவம், ஆண் பெண்

ணின் சமத்துவம் என்ற கருத்துகளின் அடிப்படையிலே திருமணம், குடும்பம் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

ஜப்பானியச் சட்டங்களிலும் பழக்க வழக்கங்களிலும் ஊன்றி யிருக்கும் பிற்போக்கான குடும்ப முறையைத் தகர்ப்பதே இந்தப் பிரிவின் நோக்கம். சமூகத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கு வேறு உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கண்ணியமான வாழ்க்கைத் தரத்தை வளர்க்க மக்களுக்கு உரிமை இருக்கிறது. மக்களின் சமூகப் பாதுகாப்பை அளிப்பதற்கும் ஆரோக்கியத்தை உயர்த்துவதற்கும் அரசாங்கம் பாடு படவேண்டும் என்பது குறிப்பிடப் படுகிறது. எல்லா மக்களுக்கும் தங்கள் திறமைக்குத் தகுந்தவாறு கல்வி பெறுவதற்கு உரிமை உண்டு. குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். எல்லோருக்கும் மதச் சுதந்தரம் வழங்கப்பட்டிருக்கிறது. சமய ஸ்தாபனங்கள் அரசாங்கத் திடமிருந்து சலுகைகள் பெறக்கூடாதென்பதும், அவை அரசியல் அதிகாரத்தை உபயோகப்படுத்தக் கூடாதென்பதும், அரசாங்கமோ அதன் உறுப்புகளோ சமயக் கல்வி வழங்குவதிலோ அல்லது வேறு சமயச் செயல்களிலோ ஈடுபடக்கூடாது என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எவனும் எவ்வித அடிமைத்தனத்திலும் அமைக்கப்படக் கூடாது; குற்றம் செய்ததற்குத் தண்டனையாகத் தவிர, பலவந்த அடிமைத்தனத்தை அரசாங்கம் தடுக்கும்.

எல்லோருக்கும் வேலை செய்வதற்கு உரிமையும் கடமையும் உண்டு என்பதை அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. ஊதியம், வேலை நேரம், ஓய்வு, மற்றும் வேலை நிலைமைகள் சட்டத்தினல் நிர்ணயிக்கப் படுமென்றும், குழந்தைகளை வேலைகளில் பயன்படுத்தக்கூடாது என்றும் குறிப்பிடுகிறது. வேலைக்காரர்களுக்குக் கழகங்கள் அமைக்கவும் கூட்டுப்பேரம் செய்யவும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

பல அரசியல் உரிமைகளை மிக விரிவாகக் கொடுத்திருக்கிறது. எல்லோரும் சட்டத்தின்கீழ்ச் சமம்; அரசியல், சமூகம் அல்லது பொருளாதார உறவுகளில் இனம், மதம், பால், சமூக அந்தஸ்து அல்லது குடும்ப வழி காரணமாகப் பாரபட்சம் காட்டக்கூடாது. பிரபுத்துவத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளியாது. அரசாங்கம் வழங்கும் கௌரவங்களோ, பதக்கங்களோ, விருதுகளோ எவ்விதச் சலுகை சிறப்புரிமையோ கொடா என்றும், அவை பெறுபவர் வாழ்நாள் வரையிலேதான் செல்லும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

பேச்சு எழுத்துச் சுதந்தரம், கூட்டம் கூடும் உரிமை, சங்கம் சேரும் சுதந்தரம் ஆகிய எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. பொது நலத்திற்கு இடையூறில்லாமல் வசிப்பிடத்தையும் தொழிலையும் மாற்றிக்கொள்ளலாம்.

சொத்துச் சம்பாதிக்கவும் அனுபவிக்கவும் உள்ள உரிமை தகர்க்க முடியாத உரிமையாகும். பொது நலத்திற்கேற்பச் சொத்துரிமை

களை அரசாங்கம் சட்டங்களினால் விவரிக்கலாம்; தனியார் சொத்தைப் பொது நலனுக்காக ஆர்ஜிதம் செய்யலாம். ஆனால், அதற்கு அரசாங்கம் நியாயமான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதும் நீக்குவதும் மக்களுடைய பறிக்க முடியாத உரிமையாகும். வயது வந்தவருக்கு வாக்குரிமையும் இரகசிய வாக்களிப்பு முறையும் பாதுகாக்கப்பட்ட உரிமைகளாகும்.

அரசாங்க அலுவலரின் சட்ட விரோதமான செயலால் ஒருவருக்குத் தீங்கிழைக்கப்பட்டால், அவர் பரிகாரம் தேடி அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடரலாம். ஒவ்வொருவரும் அரசாங்கத்திடம் தம் குறைகளை நிவர்த்தி செய்யவோ அல்லது அலுவலர்களை நீக்கவோ, அல்லது மற்றச் செயல்களுக்காகவோ விண்ணப்பம் செய்யலாம். இவ்வாறு விண்ணப்பத்தைக் கொண்டு வந்ததற்காக அரசாங்கம் அவர்கள் மீது பாரபட்சம் காட்டலாகாது.

சாஸ்திரவாதமான சுதந்தரம் (academic freedom) பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

சட்ட ரீதியான ஆட்சிக்கும் தனி நபரின் சுயேச்சைக்கும் ஜப்பானியத் திட்டம் உத்தரவாதம் அளிக்கிறது. 'சட்ட ரீதியான நடைமுறையில்' (according to procedure established by law) தவிர, மற்றப்படி ஒருவரது சுயேச்சையையோ உயிரையோ பறிக்க இயலாது; தண்டனையும் விதிக்க இயலாது. சட்ட ரீதியான நடைமுறை என்பதை முற்றிலும் சட்ட மன்றத்தால் நிர்ணயிக்கப்பட விட்டுவிடவில்லை. இந்த நடை முறை பின்பற்ற வேண்டிய வழிகளை அரசியல் திட்டம் விவரிக்கிறது. குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரைத் தமக்கு எதிராகவே சாட்சியம் கூறுமாறு நிர்ப்பந்திக்க இயலாது. ஒரே குற்றத்திற்காக ஒருவர்மீது இரு முறை வழக்குத் தொடர்ந்து தண்டிக்க இயலாது. அவர்மீதுள்ள குற்றங்களைத் தெரிவியாமலோ, அல்லது அவருக்கு வழக்கறிஞர் வசதி ஏற்படுத்தாமலோ, அல்லது போதுமளவு காரணமில்லாமலோ அவரைக் காவலில் வைத்தலாகாது. பகிரங்கக் கோர்ட்டில் அவர் முன்னிலையில் அதற்குரிய காரணத்தை விளக்கவேண்டும். 'உரிமைகளும் கடமைகளும்' என்னும் தலைப்பில் குறிப்பிடப்பட்டபோதிலும் கடமைகளைப்பற்றிக் குறிப்பிடும் பிரிவுகள் மிகக் குறைவே. மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் மக்களின் சலிப்பில்லாத முயற்சியினாலேதான் காக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் உரிமைகளைத் தகாத வழிகளில் பயன்படுத்தக்கூடாதென்றும், மக்கள் அவைகளைப் பொதுநலனுக்காகவே பயன்படுத்தக் கடமைப்பட்டவர்கள் என்றும் அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. இந்த ஒரு பிரிவு (Art. 12) உரிமைகளைக் கடமைகளினின்று பிரித்து நினைக்க இயலாது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. மற்றொரு பிரிவு, அரசாங்கத்திற்குச் சட்டத்தால்

நிர்ணயிக்கப்பட்ட வரிகள் கொடுப்பதை மக்களின் பொறுப்பாகக் கருதுகிறது.

ஜப்பானிய அரசியல் திட்டம், அமெரிக்க அரசியல் திட்டம், இந்திய அரசியல் திட்டம் போன்ற நவீன ஜனநாயகத் திட்டங்கள் போல முக்கியமான ஜீவாதார உரிமைகளை மக்களுக்குக் கொடுக்கிறது. ஜப்பானியத் திட்டத்தின் புதுமை என்னவென்றால், அத்திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சில உரிமைகளை, உதாரணமாக வேலை செய்யும் உரிமை, வாழ்க்கைத் தரத்தைக் காப்பதற்கு உள்ள உரிமைகளை அமுலாக்குவது கடினம். 'பரிகாரம் இல்லாமல் உரிமைகளுக்கு அர்த்தமே இல்லை,' (Where there is a right there is a remedy-libi jus ibi remerium.) என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை. ஆனால், பரிகாரம் இல்லாமல் எத்துணையோ உரிமைகள் ஜப்பானியத் திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை இந்திய அரசியல் திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நெறிசெய் நியதிகளை (Direction principles) ஒத்திருக்கின்றன. அவைகளை உரிமைகள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமன்று. அவற்றை நாடு பின்பற்ற வேண்டிய இலட்சியங்களாகக் கருதலாம்.

# அத்தியாயம்—3

## பேரரசர்

ஜப்பானிய ஆட்சி அமைப்பில் (polity) பேரரசர் தொன்றுதொட்டு ஓர் அடிப்படை முக்கியம் வாய்ந்த இடத்தை வகித்து வந்திருக்கிருர். பழம்புராணக் கதைகளின் ஆதாரத்திலிருந்து அரசரின் குடும்பம் சூரியக் கடவுள் வழி வந்ததென்றும், தெய்விகத் தன்மை பொருந்தியதென்றும், எல்லாக் குடும்பங்களைவிட உயர்ந்த அந்தஸ்து உள்ளதென்றும் ஜப்பானிய மக்கள் நம்புகின்ருர்கள்; சூரியக் கடவுளுக்கும் மற்றக் குடும்பங்களின் கடவுளர்களுக்கும் உள்ள உறவிஞல் அரச குடும்பத்துடன் மற்றக் குடும்பங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்றும் நம்புகின்ருர்கள். இது ஜப்பானியரின் பண்டைய மதமான **ஷின்டோவின்** அடிப்படை நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையிலிருந்து பிறந்ததே **கோகுட்டாய்** (Kokutai) என்று வழங்கப்படும் தேசிய ஆட்சி அமைப்புத் தத்துவம். அதாவது, அரசாளும் பரம்பரையும் அரசும் ஒன்றே. இரண்டையும் தனியாகப் பிரிக்க இயலாது என்பது. பேரரசர் குடும்பத் தலைவரும் சமயத் தலைவருமாய் விளங்குவதோடல்லாமல் தேசிய ஆட்சி அமைப்பின் தலைவராயும் விளங்குகிருர். இந்நம்பிக்கைகள் மக்களின் ஒற்றுமைக்கு அடிகோலின. ஏனெனில், ஜப்பானிய மக்கள் தங்களைப் பேரரசர் தலைமையின்கீழ் ஒரு பெரிய குடும்பமாகக் கருதினுர்கள். குடும்பம், சமயம், அரசாங்கம் எல்லாம் பிரிக்க இயலாதபடி இணைக்கப்பட்டிருந்தன.

ஜப்பானிய மக்கள் பேரரசருக்கு அளவற்ற மரியாதையும் கௌரவமும் செலுத்தி வந்தபோதிலும், அன்ருட அரசியல் வாழ்க்கையில் பேரரசர் மேற்கொண்ட பங்கு மிகச்சிறியது. பெயரளவிலேதான் ஆட்சி அதிகாரம் அவர் கையில் இருந்தது. உண்மையில் ஆட்சி அதிகாரம் 11-ஆம் நூற்ருண்டு வரை குலத் தலைவர்களாலும் (Tribal chiefs) 12-ஆம் நூற்ருண்டிலிருந்து இராணுவத் தலைவர்களாலும் செலுத்தப்பட்டு வந்தது. 1867-ஆம் ஆண்டு **டோகுலாவாக்** குலத்தைச் சேர்ந்த **ஷோகுன்** (இராணுலத் தலைவர்) பதவியிலிருந்து விலகி, மாஜி மன்னரிடம் அதிகாரத்தை ஒப்புவித்தபோதிலும், மாஜி மன்னர் அரசாட்சி செய்யவில்லை. இப்புரட்சிக்குக் காரணமாய் இருந்த **சாமுராய்** போர் வீரர் குழுவின் தலைவர்களே பேரரசர் பெயரில் ஆட்சி செய்து

வந்தார்கள். 1889ல் வகுக்கப்பட்ட அரசியலமைப்புத் திட்டம் இதற்குச் சட்ட பூர்வமான ஆதாரம் அளித்தது.

மாஜி அரசியலமைப்பு, பேரரசருக்கு அரசியலமைப்பில் முதலிடத்தைக் கொடுத்தது. முகப்பில் இறைமையின் இருப்பிடம் பேரரசர் என்றும் அரசுரிமை வழி வழி வமிசமாய்த் தம்முடைய முன்ளோர்களிடமிருந்து வருவதாகவும் அரசியல் திட்டத்தின்கீழ் வகிக்கப்படப் போவதாகவும் கூறிவிட்டு, முதல் 17 பிரிவுகளில் பேரரசரின் பதவியையும் அதிகாரத்தையும் விளக்குகிறது. அரசியல் திட்டம் கொடுத்த அதிகாரங்கள் பேரரசரை அரசியல் அமைப்பின் அச்சாக்கியது. பேரரசரைச் சாம்ராஜ்யத்தின் தலைவராக்கி, அரசியல் திட்டத்தின்படி இறைமையின் உரிமைகள் செலுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. அரசியல் திட்டம், ஆட்சி அதிகாரம், சட்ட மன்றம், நீதி மன்றம் என்னும் மூன்று துறைகளை ஏற்படுத்தியிருந்த போதிலும், இவ்வதிகாரங்கள் எல்லாம் பேரரசரிடத்திலேயே குவிக்கப்பட்டிருந்தன. மூன்று இலாக்காக்களும் பேரரசருக்கே பொறுப்பாய் இருந்தன. அரசியல் திட்டத்தின்படி பேரரசரே சட்டமியற்றும் அதிகாரத்தை இம்பீரியல் டையட்டின் ஒப்புதலுடன் செலுத்த வேண்டும். அரசாங்கத்தின் மந்திரிகள் பேரரசருக்கு ஆலோசனை கூறி அவற்றிற்குப் பொறுப்பாக இருக்கவேண்டும்; நீதி மன்றங்களால் பேரரசர் பேரில் நீதி வழங்கப்படவேண்டும். இதிலிருந்து அரசாங்க அதிகாரத்தின் ஆதியும் அந்தமுமாகப் பேரரசரே விளங்கினர் என்பது தெரிகிறது.

மேலே கூறப்பட்ட அதிகாரங்களெல்லாம் நடைமுறையில் பேரரசரால்செலுத்தப்படவில்லை; அவருடையபெயரில் மற்றவர்களாலேயே செலுத்தப்பட்டுவந்தன. அரசர் தம் விருப்பப்படி அரசாங்க அதிகாரத்தைப்பயன்படுத்தவில்லை. அரசாங்கத்தின்முடிவுகளெல்லாம் பேரரசர் பெயரால் செய்யப்பட்டனவே ஒழிய, அம்முடிவுகளைச் செய்வதில் பேரரசரின் பங்கு அதிகமில்லை. அரசாங்கத்தின் கொள்கைகளை நிர்ணயிப்பதற்குப் பேரரசருக்கு உதவியவை என அரசியல் திட்டம் மூன்று நிறுவனங்களைக் குறிப்பிடுகிறது. பிரிவி கவுன்சில் 25 ராஜவிசுவாசமுள்ள ஆலோசகர்களைக் கொண்டது. எல்லாச் சட்டங்களும், உடன்படிக்கைகளும் கவுன்சிலின் சம்மதத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. பிரிவி கவுன்சில் அரசியல் திட்டத்தை விளக்கம் செய்யும் நிறுவனமாகவும் இருந்தது. **சுப்ரீம் கமாண்டு (Supreme Command)** என்னும்நிறுவனம் இராணுவத் தலைவர்களையும் போர்க் கப்பற்படை மந்திரிகளையும் கொண்டது. இது இராணுவ சம்பந்தப்பட்ட விஷயங்களில் பேரரசருக்கு ஆலோசனை கூறும் நிறுவனமாய் இருந்தது. அடுத்தபடியாக அமைச்சரவை கொள்கைகளை வகுப்பதற்கு அரசருக்கு உதவியது. அரசியல் திட்டத்தில் குறிப்பிடப்படாத மற்ற இரண்டு நிறுவனங்கள் உண்மையில் மிகுந்த

அதிகாரம் பொருந்திய நிறுவனங்களாய் இருந்தன. **ஜென்ரோ** அல்லது **முதியவர்கவுன்சில்** ஆரம்பத்தில் பிரதானகுலத்தலைவர்சிலரைக் கொண்டிருந்தது. பேரரசரும் மந்திரிசபையும் இக்கட்டான நிலைமைகளில், இதன் உதவியை நாடினார்கள். இதன் ஆலோசனையைக் கேளாமல் முக்கியமான முடிவுகள் செய்யப்படுவதில்லை. அடுத்தபடியாக **அரண்மனை மந்திரி சபை** (Imperial Household Ministry) ஒரு முக்கியமான ஆலோசனை கூறும் நிறுவனமாய் இருந்தது. இதைக் கலவாமல் பேரரசர் ஒரு முடிவும் செய்வதில்லை.

கொள்கைகளை உருவாக்குவதில் அமைச்சரவை மிகக் குறைந்த செல்வாக்குள்ள நிறுவனமாகவே இருந்தது. அமைச்சரவையை மற்ற ஆலோசனை கூறும் நிறுவனங்களின் ஆலோசனை மீதே பேரரசர் அமைப்பதுண்டு. அமைச்சரவைக்கு மற்ற நிறுவனங்களினால் செய்யப்பட்ட முடிவுகளைச் செயற்படுத்துவதே முக்கிய அலுவலாய் இருந்தது.

மாஜி அமைப்பில் பேரரசர் தம்மிச்சைப்படி ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தாதபோதிலும், ஜப்பானிய மக்கள் தங்கள் பேரரசரின் அதிகாரத்திற்கு எல்லை இல்லை என்று நம்பினார்கள். பிரிட்டிஷ் மன்னரைப்போலப் பெயரளவில் அதிகாரத்தை உடைய கௌரவத் தலைவர் என்று ஜப்பானியர்கள் தங்கள் பேரரசரைக் கருதவில்லை.

இரண்டாவது உலகப்போர் முடிந்த பிறகு மக்களாட்சி அரசியலமைப்பை வகுத்த அமெரிக்க இராணுவத் தலைவர்களுக்குப் புதிய திட்டத்தில் பேரரசரை வைத்துக்கொள்வதா, வைத்துக்கொண்டால் எவ்வாறு வைத்துக்கொள்வது என்பது ஒரு பெரிய பிரச்சினையாய் இருந்தது. இந்நிறுவனத்திற்கு ஜப்பானிய மக்கள் செலுத்தி வந்த ஏகோபித்த மரியாதையை அரசியல் திட்டத்தை வகுத்தவர்கள் அன்னியர்களாய் இருந்த போதிலும், நன்கு புரிந்துகொண்டார்கள். இந்நிறுவனத்தை வைத்துக்கொள்ளாவிட்டால் சென்றகால அரசியல் வாழ்க்கையிலிருந்து மக்களுக்கொவ்வாத புரட்சிகரமான ஒரு மாறுதலை உண்டுபண்ணுவதுபோல ஆகும் என்பதை எண்ணிப் புதிய அரசியல் அமைப்பில் பேரரசருக்கு உரிய இடத்தைக் கொடுக்க முடிவு செய்தனர். குடும்பத் தலைவராய் இருந்த போதிலும், சமயத் தலைவராய் இருந்த போதிலும், தேசத்தின் தலைவராய் இருந்த போதிலும் இதுகாறும் தம் விருப்பம்போலப் பேரரசர் ஒருபொழுதும் அதிகாரம் செலுத்தியதில்லை. பெயரளவில் தேசத்தின் தலைவராக வைத்துக்கொண்டு அதிகாரத்தை மக்களின் பிரதிநிதிகளிடம் கொடுப்பது சிறந்த வழி என்பதை உணர்ந்து அப்படிப்பட்ட ஏற்பாட்டைப் புதிய அரசியல் திட்டத்தில் வகுத்தனர்.

புதிய அரசியல் திட்டத்தில், பேரரசர் சம்பந்தப்பட்ட வகையில், நடைமுறையில் ஒன்றும் மாறுதல் கொண்டுவரப்படவில்லை. முந்திய திட்டத்தில் இருந்தது போலக் கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும்

வேறுபாடு ஏதும் இல்லை. பெயரளவிலும் செயலளவிலும் பேரரசர் நாட்டின் கௌரவத் தலைவராய் விளங்குகிருர்; நாட்டின் சின்னமாயும் மக்களது ஒற்றுமையின் சின்னமாயும் விளங்குகிருர். ஆனுல், முந்தியத் திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் உள்ள அடிப்படையான வித்தியாசம் என்னவென்ருல், புதிய திட்டத்தில் மக்களே இறைமையின் இருப்பிடம் என்பது குறிப்பிடப் பட்டிருக்கிறது. மக்களுடைய விருப்பத்தினுல் பேரரசர் பேரரசராய் இருக்கிருர். இந்த மாற்றத்தினுல் பேரரசரிடம் முன்னுள் இருந்த பயபத்தி இப்பொழுது இல்லை. அவரும் ஒரு சாதாரண மனிதரே என்கிற உண்மையை உணர்வதற்கு இப்பொழுது வாய்ப்பிருக்கிறது. இருந்த போதிலும், மக்கள் பேரரசர் மீது காட்டும் மரியாதைக்குக் குறைவில்லை.

அரசியல் அமைப்பில் பேரரசரின் இடத்தை அரசியல் திட்டம் சந்தேகத்திற்கிடமில்லாமல் தெளிவாக்கியிருக்கிறது. இது வரை ஓர் அரசியல் திட்டமும் இவ்வளவு தூரம் :பெயரளவு ஆட்சி முறைத் தலைவரை (Nominal Executive Head) அரசியல் சூனியமாக்க வில்லை.

அரசியல் திட்டம் பேரரசருக்கு அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரம் ஒன்றும் இல்லை என்பதையும், அவர் செய்யவேண்டிய எல்லாக் கௌரவ அலுவல்களையும் குறிப்பிட்டிருக்கிறது.டையட்டுத் தேர்ந்தெடுக்கும் நபரையே பிரதமராகப் பேரரசர் நியமிக்க, அமைச்சரவையின் ஆலோசனையும் ஒப்புதலும் பேரரசரின் எல்லாச் செயல்களுக்கும் அவசியம். அமைச்சரவை குறிப்பிடும் நபரையே பேரரசர் பிரதம நீதிபதியாக நியமிக்கலாம்.

டையட்டைக் கூட்டுதல், டையட்டைக் கலைத்தல், பதவி நியமனங்கள் போன்ற எல்லாக் கௌரவ அலுவல்களும் மந்திரிசபையின் ஒப்புதலுடனே செய்யப்பட வேண்டும்.

அரண்மனை விஷயங்களைக் கவனிக்க **'இம்பீரியல் குடும்பக் கவுன்சில்'** என்னும் நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. பத்து அங்கத்தினர்களடங்கிய இந்த நிறுவனத்தில் பிரதம மந்திரியும், 2 நீதி மன்ற நீதிபதிகளும், இரண்டு சட்டசபைகளின் தலைவர்களும் உபதலைவர்களும் இடம் பெறுகின்ருர்கள். பேரரசர் அரசியல் திட்டப்படி நடவாவிட்டால், அவரைச் சட்டமன்றத்தினின்றும்நீக்க அதிகாரம் இருக்கிறது. பேரரசர் இந்தக் கவுன்சிலையும் தம் பக்கம் இழுத்துக்கொண்டால், கவுன்சிலைக் கலைப்பதற்கு டையட்டிற்கு அதிகாரம் இருக்கிறது. சிம்மாசனத்திற்கு வாரிசுரிமையை டையட்டினுல் நிறைவேற்றப்பட்ட **இம்பீரியல் குடும்பச் சட்டம்** (Imperial House Law) நிர்ணயிக்கிறது.

புதிய திட்டத்தில் ஜப்பானியப் பேரரசரின் பதவி பிரிட்டிஷ் அரசியல் அமைப்பில் இராணியாரின் பதவியை ஒத்திருக்கிறது.

மன்னர் நாட்டின் தலைவரே அன்றி, ஆட்சி அதிகாரத்தின் தலைவர் அல்லர். ஆட்சி அதிகாரத்தின் இருப்பிடம் அமைச்சரவை என்பதை அரசியல்அமைப்புத்திட்டம்தெளிவாகக்கூறியிருக்கிறது. பேரரசருக்கு அமைச்சரவையின் செயல்களுக்கு அங்கீகார முத்திரை வைப்பதே வேலை. பிரிட்டனில் அரசியாருக்கும் மந்திரிசபைக்கும் உள்ள உறவு முறை சம்பிரதாய பூர்வமாகவே அமைந்திருக்கிறது. ஆனல், ஜப்பானில் பேரரசருக்கும் அமைச்சரவைக்கும் உள்ள உறவு சட்ட பூர்வமாக அரசியல் திட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது அறியத்தக்கது.

# அத்தியாயம்—4

## அமைச்சரவை

மாஜி அரசியலமைப்புத் திட்டம் அரசாங்கத்தின் மந்திரிகள் (Ministers of State) பேரரசருக்கு ஆலோசனை கூற வேண்டுமென்றும் அவர்கள் கூறும் ஆலோசனைகளுக்கு அவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும் என்றும் கூறியது; அமைச்சரவை பற்றி வேறொன்றும் குறிப்பிடப்படவில்லை. அரசியல் திட்டம் அமைச்சரவை பற்றிக் குறிப்பிடாத போதிலும், அரசியல் திட்டம் அமுலுக்கு வருவதற்கு நான்கு வருஷங்களுக்கு முன்னரே, அதாவது 1885லேயே, அமைச்சரவை அமைக்கப்பட்டது. அமைச்சரவை எவ்வாறு இயங்கியது என்பதை அறிய நடைமுறைப் பழக்க வழக்கங்களைக் கவனித்தல் வேண்டும்.

பிரதம மந்திரியாரின் தலைமையின்கீழ் 12 முதல் 15 மந்திரிகள் வரை நிதி, வெளிநாட்டு விவகாரங்களைப்போன்ற தனித்தனி இலாக்காக்களுக்குப் பொறுப்பாய் இருந்து நிறுவாகத்தை நடத்தி வந்தார்கள். இவர்கள் பார்லிமென்டின் அங்கத்தினர்களாய் இருக்க வேண்டும் என்று நிபந்தனை ஒன்றும் இல்லை. சிலர் பார்லிமென்டின் அங்கத்தினராய் இருந்தனர்; சிலர் இல்லை. பிரதம மந்திரியாரைப் பேரரசர் தம் ஆலோசகர்களின் சிபாரிசின் பேரில் தேர்ந்தெடுத்தார். 1920க்குப் பிறகு அரசியற்கட்சிகள் பலமடைந்த பிறகு பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாராக நியமிக்கப்பட்டார். 1930க்குப் பிறகு அரசியற்கட்சிகள் முதன்மையை இழந்த பிறகு முன்போலப் பேரரசரின் ஆலோசகர்களின் விருப்பப்படி நியமிக்கப்பட்டார். காபினட்டு முறை பழக்கத்திலிருந்த 60 வருஷங்களில் பெரும்பான்மைக் கட்சியால் அமைக்கப்பட்ட மந்திரிசபைகள் மிகக் குறைவே.

பிரதம மந்திரியாரே தம் சகாக்களைப் பொறுக்கி எடுத்த போதிலும் அவர் தம் விருப்பப்படி அவர்களை நியமனம் செய்வது இயலாத காரியம். இதிலும் பேரரசரின் ஆலோசனையாளர்கள் முக்கியப் பங்கெடுத்துக்கொண்டார்கள். மேலும், போர் மந்திரியாரையும் கப்பற்படை மந்திரியாரையும் இராணுவத் தலைவர்களின் யோசனையின்பேரில் பேரரசர் நியமித்தார். இதனால் இராணுவத்திற்கு மந்திரி சபையில் நல்ல செல்வாக்கு இருந்தது.

மந்திரிகள் பேரரசருக்கு ஆலோசனை கூறி அதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று அரசியல் திட்டம் சொன்னதேயல்லாமல் யாருக்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. பேரரசருக்குப் பொறுப்பாக இருக்க வேண்டுமா, அல்லது மக்கள் சபைக்குப் பொறுப்பாக இருக்கவேண்டுமா என்பது பற்றி அரசியல் திட்டம் சந்தேகத்தில் விட்டுவிட்டது. நடைமுறையில் அமைச்சரவை பேரரசருக்குப் பொறுப்பாய் இருந்ததேயன்றி மக்கள் சபைக்குப் பொறுப்பாயில்லை. மந்திரி சபை கீழ்ச்சபைக்குப் பொறுப்பாய் இல்லாதிருந்தபோதிலும் மந்திரி சபைக்குத் தொந்தரவு கொடுக்கும் அளவிற்குக் கீழ்ச்சபைக் குப் பலம் இருந்தது. மந்திரி சபையைத் தாக்கிப் பேசுவதற்கும் மந் திரி சபையின் திட்டங்களை நிறைவேற்றாதபடி தடை செய்வதற்கும் டையட்டிற்கு அதிகாரம் இருந்தது. இந்தத் தொந்தரவுகளைப் பொறுக்க முடியாமல், மந்திரி சபைகள் சில சமயங்களில் ராஜிநாமா செய்வதும் உண்டு. அல்லாவிடில் சபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால், இவ்வாறு ராஜி நாமாச் செய்வதற்கோ, சபையைக்கலைப்பதற்கோ ஒரு நிர்ப்பந்தமும் இல்லை.

மாஜி அரசியலமைப்பில் மந்திரி சபை என்று ஒன்றிருந்த போதி லும் காபினட்டு முறை அரசாங்கம் என்று ஒன்றிருந்ததாகச் சொல்ல முடியாது. ஆனால், புதிய அரசியல் திட்டம், சந்தேகத்திற்கிடமின்றிக் காபினட்டு முறை அரசாங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. புதிய அரசியல் திட்டத்தின் 65-ஆம் பிரிவு ஆட்சி அதிகாரத்தின் இருப் பிடம் அமைச்சரவை என்பதைக் குறிப்பிடுகிறது. பிரதம மந்திரியார் இரண்டு சபைகளாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இரண்டு சபை களுக்குள் பிரதம மந்திரியாரைத் தேர்ந்தெடுப்பதில் ஒற்றுமை இல்லாவிடில் கீழ்ச் சபையின் முடிவே டையட்டின் முடிவாகும் என்று அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது.

பிரதம மந்திரியார் தம் சகாக்களைத் தாமே தேர்ந்தெடுக்கிறார். பெரும்பான்மை மந்திரிகள் டையட்டு அங்கத்தினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அரசியல் திட்டம் குறிப்பிடு கிறது. ஒருவரும் இராணுவத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது. பிரதம மந்திரியாரே மந்திரிகளுக்கு இலாக்காக்களைப் பிரித்துக் கொடுக்கிறார். அவர் இச்சைப்படி எந்த மந்திரியையும் நீக்கவும் நீக்கலாம்.

பிரதம மந்திரியார் அமைச்சரவையின் பிரதிநிதியாக டையட்டில் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கிறார். உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங் களைப்பற்றிப் பார்லிமெண்டில் தெரிவிக்கிறார்; எல்லா நிர்வாக இலாக்காக்களையும் மேற்பார்வையிட்டு அதிகாரம் செலுத்துகிறார்.

அமைச்சரவை டையட்டிற்குக் கூட்டுப்பொறுப்பாய் இருக்க

வேண்டும். பிரதிநிதிகள் சபை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினல்,அல்லது நம்பிக்கைத் தீர்மானத்தை நிராகரித்தால், அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டும், அல்லாவிடில் 10 நாள் களுக்குள் பிரதிநிதிகள் சபை கலைக்கப்படவேண்டும். சபை நம்பிக்கை யின்மை தெரிவிக்காதபொழுது சபையைக் கலைப்பதற்குப் பிரதம மந்திரியாருக்கு அதிகாரம் இருக்கிறதா என்பது நிச்சயமாகச் சொல் வதற்கில்லை. சில தடவைகள் பிரதம மந்திரிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இல்லாமலே சபையைக் கலைத்திருக்கின்றனர்கள். முந்திய அரசியலமைப்புத் திட்டத்தில் விரோதமான பார்லிமென்டை விரட்டுவதற்கு இவ்வழி கையாளப்பட்டதால், ஜப்பானிய மக்கள் இவ்வழியைச் சந்தேகத்துடன் நோக்குகின்றனர்கள்.

காபினட்டின் சாதாரண நிருவாக அலுவல்களுடன் மற்றும் சில அலுவல்களை அரசியல் திட்டம் விசேஷமாகக் குறிப்பிடுகிறது. அவை யாவன : நல்லாட்சிக்கான ஒழுங்கு முறை விதிகளை நிருவாகம் செய்தல் ; வெளி நாட்டு விவகாரங்களை நிருவாகம் செய்தல் ; டையட்டின் ஒப்புதலுடன் உடன்படிக்கைகளை முடிவு செய்தல் ; சட்டப்படி சிவில் சர்வீசை நிருவாகம் செய்தல் ; பட்ஜெட்டுத் தயார் செய்து பார்லிமென்டிடம் சமர்ப்பித்தல் ; மன்னிப்பதிகாரத்தை உபயோகித்தல்.

எல்லாச் சட்டங்களும் காபினட்டு உத்தரவுகளும் சம்பந்தப்பட்ட மந்திரியாரால் கையொப்பமிடப்பட்டுப் பிரதம மந்திரியாரால் உறுதிக் கையொப்பமிடப்பட வேண்டும்.

**காபினட்டு அமைப்பு :** ஒவ்வொரு மந்திரியாருக்கும் மூன்று உதவி மந்திரிகள் இருக்கின்றனர்கள். ஒருவர் நிர்வாகத் துறையைச் சேர்ந் தவர். மற்றிருவர் இரண்டு சபைகளிலிருந்தும் நியமிக்கப்படுகின்ற னர். நிருவாக உதவி மந்திரிகள் மந்திரி சபையுடன் ராஜிநாமா செய்கின்றனர்.

மந்திரி சபைக்கு உதவி செய்வதற்கு அமைச்சரவைக் காரியதரிசி காரியாலயம் ஒன்று இயங்குகிறது. இதற்கு ஓர் இயக்குனரும் இரு உதவி இயக்குனர்களும் தலைமை தாங்குகிறனர்கள். இதன் முக்கிய வேலை காபினட்டுக் கூட்டங்களுக்கு நிகழ்ச்சி நிரல் தயார் செய்வதும், மற்றத் தஸ்தாவேஜுகளைத் தயார் செய்வதும் ஆகும். அமைச்ச ரவையின் அலுவல்களை எளியனவாக்குவதே இதன் முக்கிய நோக்கம். காபினட்டுக் காரியாலயத்தின் இயக்குனர் பதவி ஒரு மந்திரியாராலும் வகிக்கப்படலாம்.

பிரதம மந்திரியாரின் அதிகார பூர்வமான வசிப்பிடத்தில் பிரத மர் தலைமையில் காபினட்டுக் கூட்டங்கள் வாரமிருமுறை நடை

பெறும். காபினட்டுக் கூட்டத்திற்குக் கோரம் இல்லை. காபினட்டு விவாதங்கள் எல்லாம் இரகசியமானவை. நிகழ்ச்சிக் குறிப்பு ஒன்றும் வைத்துக்கொள்ளப்படுவதில்லை. எடுக்கப்பட்ட முடிவுகளின் குறிப்பு மந்திரிகளின் கையொப்பத்திற்கு அனுப்பப்படுகிறது.

# அத்தியாயம்—5

## தேசிய டையட்டு

ஜப்பானியப் பார்லிமென்டு முறை அரசாங்கத்தை மாஜிஅரசியல் அமைப்பு ஆரம்பித்து வைத்தது. ஆசிய நாடுகளிடையே முதல் முதல் இவ்வரசாங்க முறையைக் கையாண்ட பெருமை ஜப்பானைச் சேர்ந்த தாகும்.

இம்பீரியல் டையட்டு என்று வழங்கப்பட்ட தேசியப் பார்லி மென்டு இரண்டு சபைகளைக் கொண்டதாய் இருந்தது. மேற்சபை யாகிய பிரபுக்கள் சபை, பல வகைப்பட்ட அங்கத்தினர்களை உடைய தாய் இருந்தது. இளவரசர்களும், மார்க்வீஸுகளும் வமிச பரம்பரை யாக ஆயுட்காலம் வரை அங்கத்தினர்களாய் இருந்து வந்தார்கள். கௌன்டுகளும் வைக்கவுன்டுகளும் பேரன்களும் அவரவர் தரப்பி லிருந்து குறிப்பிட்ட அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இவர்கள் ஏழு வருஷ காலம் பதவி வகித்தார்கள். நாட்டிற்குச் செய்த சேவை காரணமாகச் சிலர் பேரரசரால் மேற்சபைக்கு நியமிக் கப்பட்டனர். அவர்கள் ஆயுட்காலம் வரை பதவி வகித்தார்கள். எல்லாரையும்விட அதிக வரி செலுத்தும் 200 நபர்கள் சில அங்கத் தினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களுக்குரிய பதவிக் காலம் ஒருவருஷம். இம்பீரியல் அக்காடமியின் அங்கத்தினர்களுக்கும் மேற் சபையில் பிரதிநிதித்துவம் இருந்தது. அவர்களது பதவிக் காலமும் 7 வருஷங்களேயாகும்.

400 அங்கத்தினர்களைக் கொண்ட இச்சபையில் பிரபுக்களின் எண்ணிக்கை பாதிக்கும் குறைவே. பலவித அடிப்படைகளில் அமைக் கப்பட்ட இச்சபையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர் களே திறமை மிக்க அங்கத்தினர்களாய் விளங்கினர்கள்.

பிரபுக்கள் சபையின் அமைப்பு அதிகாரம் அரசாங்க அவசரச் சட்டத்தில் (Imperial ordinance) அடங்கியிருந்தது. அதை மாற்றுவ தற்குப் பிரபுக்கள் சபைக்கே அதிகாரம் இருந்தது. கீழ்ச்சபைக்கு இதில் எவ்வித அதிகாரமுமில்லை. பட்ஜட்டு, கீழ்ச்சபையில் முதலில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற ஒரு நிபந்தனையைத் தவிர, மற்றப் படி இரண்டு சபைகளுக்கும் சம அதிகாரம் உண்டு.

பிரதிநிதிகள் சபை என்று வழங்கப்பட்ட கீழ்ச்சபை 300 அங்கத்

தினர்களைக் கொண்டிருந்தது. அவ்வங்கத்தினர்கள் 15 **என்** அல்லது அதற்கு மேல் வரி கொடுத்தவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். சபையின் காலம் நான்கு வருஷம். இந்த வரி நிபந்தனையால் கீழ்ச் சபையில் ஆரம்பத்தில் நிலச்சுவான்கள் அதிகப் பிரதிநிதித்துவம் பெற்றனர்கள். 1925ல் வரி நிபந்தனை முற்றிலும் நீக்கப்பட்டது. வயது வந்த எல்லா ஆடவர்களும் வாக்குரிமை பெற்றனர்கள். உறுப்பினர் எண்ணிக்கை 466ஆக அதிகரிக்கப்பட்டது.

அரசியல் திட்டம் பார்லிமென்டின் வருஷாந்தரக் கூட்டத் தொடர்களை மூன்றுமாத காலத்திற்குள் கட்டுப்படுத்தியது. இரண்டு சபைகளிலும் நிறைவேறிய ஒரு பிரேரணை சட்டமாவதற்குப் பேரரசரின் ஒப்புதல் அவசியம். சட்டங்களைத் தொடங்கும் அதிகாரம் இரண்டு சபைகளுக்கும் இருந்தபோதிலும், சட்டத்தை உருவாக்கும் வேலை நடை முறையில் ஆட்சி அதிகாரத்தின் பொறுப்பாகவே இருந்தது.

மேலும், சபைகளைப் பற்றிய சட்டம் (Law of the Houses) டையட்டின் அதிகாரத்தை மேலும் கட்டுப்படுத்தியது. இச்சட்டம் ஆட்சி அதிகாரத்திற்கு டையட்டுக் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்பதைத் தெளிவாக ஏற்படுத்தியது. இச்சட்டம் அரசாங்கத்தின் சம்மதமின்றிச் சபைகளில் குழுக்கள் அமைத்தலைத் தடுத்தது; பொது மக்களைக் குழுக் கூட்டங்களினின்று விலக்கி வைத்தது. பேரரசர் குடும்பத்தைப்பற்றியோ அல்லது அரசாங்கத்தைப்பற்றியோ அல்லது டையட்டைப்பற்றியோ டையட்டில் குறைவாகப் பேசுவதைத் தடுத்தது; சபைகளுக்கு விசாரணை செய்யும் உரிமையை மறுத்தது. இரண்டு சபைகளின் செலவுத் தொகைகள்கூடச் சபைகளின் நிதி மந்திரியாரின் இஷ்டப்படி நிர்ணயிக்கப்பட்டது.

எல்லாவற்றையும்விட நிதி அதிகாரம் இல்லாததுதான் பார்லிமென்டை முக்கியமில்லாத அங்கமாக்கிவிட்டது. பட்ஜெட்டில் பெரும்பாலான செலவுகள் மாற்றமுடியாத செலவுகளாய் இருந்தன. அவற்றை நிராகரிக்கவும் முடியாது; குறைக்கவும் முடியாது,செலவுத் தொகை பற்றாக்குறையைச் சமாளிக்க ஒரு ரிசர்வ் நிதியும் இருந்தது. டையட்டுக் கூடாதபொழுது அரசாங்கம் அவசியமான நிதி ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம். பட்ஜெட்டை டையட்டு ஆமோதிக்கத் தவறினால், அரசாங்கம் முந்திய வருஷ பட்ஜெட்டின்படி செலவழிக்கலாம்.

மந்திரிகள் கீழ்ச்சபைக்குப் பொறுப்பாக இருப்பது அவசியமில்லாமலிருந்தது, அதற்கு மற்றொரு பெருங்குறையாகும். அரசியல் திட்டம் மந்திரிகள் பேரரசருக்குக் கூறும் ஆலோசனைக்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்று சொல்லியதே ஒழிய, யாருக்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. மந்திரிகள் பொதுவாகப் பேரரசருக்கே பொறுப்பாய் இருந்தார்கள். கீழ்ச்சபை

மந்திரிகளுக்குத் தொந்தரவு கொடுத்தால், சபையைக் கலேத்துவிட்டுப் புதிய தேர்தலுக்கு உத்தரவு கொடுப்பதற்குப் பிரதம மந்திரியாருக்கு அதிகாரம் இருந்தது.

புதிய அரசியல் திட்டம், தேசியப் பார்லிமென்டு அரசாங்க அதிகாரத்தின் உச்ச நிறுவனமாக இருக்கவேண்டுமென்றும் சட்ட மியற்றுவது அதனுடைய தனிப்பொறுப்பாக இருக்கவேண்டு மென்றும் குறிப்பிடுகிறது.

தேசிய டையட்டு இரண்டு சபைகள் கொண்ட நிறுவனமாகும். கவுன்சிலர்கள் சபை (House of Councillors) என்று வழங்கப்படும் மேற்சபை 250 அங்கத்தினர்களைக் கொண்டது. 150 அங்கத்தினர் மாகாணத் தொகுதிகளிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற னர். 100 அங்கத்தினர் தேசியத் தொகுதிகளிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு வாக்காளரும் இரண்டு வாக்குகள் பதிவு செய்யவேண்டும். அவற்றுள் ஒன்று, மாகாணத் தொகுதி அபேட்சகருக்கும்; மற்றொன்று, தேசத் தொகுதி அபேட்ச கருக்குமாகும். மேற்சபை நிரந்தரமான ஒரு நிறுவனம். அங்கத்தினர் களின் பதவிக்காலம் 6 வருஷம். இரண்டில் ஒரு பங்கு இடத்திற்கு மூன்று வருஷத்திற்கொரு முறை தேர்தல் நடைபெறும்.

புதிய திட்டத்தில் மேற்சபை பல வழிகளிலும் கீழ்ச்சபைக்குக் கீழ்ப்பட்டதே. சாதாரணப் பிரேரணைகள் இரண்டு சபைகளிலும் தொடங்கப்படலாம். பொதுவாக இரண்டு சபைகளிலும் நிறை வேறினால்தான் ஒரு பிரேரணை சட்டமாகும். இந்தப் பொது விதிக்கு அரசியல் திட்டம் சில விலக்களை விதித்திருக்கிறது. கீழ்ச்சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைமேற்சபையில் நிராகரிக்கப்பட்டாலோ மாற்றப்பட்டாலோ, கீழ்ச்சபையில் இரண்டாவது தடவையாக ஆஜராகியிருப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பெரும்பான் மையுடன் நிறைவேற்றப்பட்டால் அப்பிரேரணை சட்டமாகும்.

இரண்டு சபைகளுக்கும் ஏற்படும் வித்தியாசங்களைத் தீர்க்க அரசியல் திட்டம் மேற்கூறிய வழியை வகுத்திருந்தபோதிலும் டையட்டுச் சட்டம் (Diet Law) மற்றொரு சாதாரண வழியையும் வகுத்திருக்கிறது. முட்டுக்கட்டைகளைத் தீர்ப்பதற்கென்று 20 அங் கத்தினர்களைக்கொண்ட கூட்டுக்கமிட்டியை ஏற்படுத்தவேண்டும். இரண்டு சபைகளுக்கும் சமப்பிரதிநிதித்துவம் உண்டு. ஒவ்வொரு சபையின் அங்கத்தினர்களிலும் மூன்றில் இரண்டு பங்கினர் ஆஜராய் இருந்தால்தான் வேலையை நடத்த முடியும். அவரவர் தலைவரை இரண்டு பிரிவுகளும் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டு தலைவர்களும் மாறி மாறிக் கூட்டுக் கமிட்டியின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார்கள். கூட்டுக் கமிட்டியில் முடிவு ஏற்படுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர் ஆதரவு அளிக்க வேண்டும். கூட்டுக்கமிட்டியில் ஒப்புக்கொள்ளப்பட்ட சட்டத்தின் நகலை எச்சபை

கூட்டுக்கமிட்டி ஏற்பாட்டைக் கேட்டதோ, அச்சபைக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு நிறைவேற்றப்பட்ட நகலில் இரண்டு சபைகளும் மாற்றம் கொண்டு வர முடியாது.

கூட்டுக் கமிட்டி ஏற்பாட்டிற்கு மேற்சபை வேண்டுகோள் விடுத்தால், கீழ்ச்சபை அதை மறுக்கலாம். ஆனால், மேற்சபை அவ்வாறு செய்ய முடியாது.

கீழ்ச்சபையிலிருந்து நிறைவேற்றப்பட்ட பிரேரணை அனுப்பப்பட்ட 60 நாள்களுக்குள் மேற்சபை ஒன்றும் செய்யாவிட்டால், கீழ்ச்சபை பிரேரணை மேல் சபையில் நிராகரிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.

பட்ஜெட்டு முதலில் கீழ்ச்சபையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். பட்ஜெட்டுப் பிரேரணைகளைப்பற்றி இரண்டு சபைகளுக்கும் வித்தியாசங்கள் ஏற்பட்டு அவை சாதாரணவழிகளில் தீர்க்கப்படலாம். மேற்சபை கீழ்ச்சபையிலிருந்து வந்த 30 நாள்களுக்குள் முடிவுசெய்யாவிட்டால் கீழ்ச்சபையின் முடிவே டையட்டின் முடிவாகும். இம்முறையே டையட்டு உடன்படிக்கைகளின் அங்கீகாரத்திற்கும் பின்பற்றப்பட வேண்டும்.

அரசியல் திட்டத்தை மாற்றுவதில் இரண்டு சபைகளுக்கும் சம அதிகாரமிருக்கிறது. இரண்டு சபைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேறிய பிறகுதான் மக்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்சபைக்கு அரசியல் திட்டம் ஒரு விசேஷமான அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. காபினட்டு நெருக்கடிக் காலத்தில் கவுன்சிலர்கள் சபையைக்கூட்டலாம். அது இக்கூட்டங்களில் நிதி விஷயங்களைத் தவிர மற்றச் சட்டங்களை இயற்றலாம். ஆனால், அவை பிரதிநிதிகள் சபை கூடிய 10 நாள்களில் அங்கீகரிக்காவிட்டால் செல்லமாட்டா.

பிரதிநிதிகள் சபை 467 அங்கத்தினர்களைக் கொண்டது. இது நடுவில் கலைக்கப்பட்டால் ஒழிய, மற்றப்படி நான்கு ஆண்டு காலம் நீடித்திருக்கும். காலத்தவணைக்கு முன் கலைக்கப்பட்டால், 40 நாள்களுக்குள் புதிய தேர்தல் ஏற்படுத்தப்படவேண்டும். தேர்தல் முடிந்த 30 நாள்களுக்குள் புதிய டையட்டுக் கூட்டப்பட வேண்டும்.

அரசியல் திட்டம் கீழ்ச் சபைக்கே சந்தேகத்திற்கிடமின்றி முதன்மையைக் கொடுத்திருக்கிறது. காபினட்டு டையட்டிற்கு, அதாவது இரண்டு சபைகளுக்கும் கூட்டுப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்று அரசியல் திட்டம் கூறிய போதிலும், உண்மையில் கீழ்ச்சபைக்கே பொறுப்புள்ளவர்களாய் இருக்கவேண்டியுள்ளது. ஏனென்றால், கீழ்ச்சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறினால் தான் மந்திரிசபை ராஜிநாமா செய்ய வேண்டும்.

மேலும் மூன்று முக்கியமான விஷயங்களில்—அதாவது பட்

ஜெட்டுப் பிரேரணைகளைச் சட்டமாக்குவது, உடன்படிக்கைகளை அங்கீ கரிப்பது, பிரதம மந்திரியாரைத்தேர்ந்தெடுப்பது ஆகியவற்றில்—இறு தியில் பிரதிநிதிகள் சபையின் விருப்பமே நிலைத்து நிற்கிறது. சாதா ரணச் சட்டமியற்றுதலிற்கூடப் பிரதிநிதிகள் சபைக்கே அதிகாரம் இருக்கிறது. கவுன்சிலர்கள் சபையிலிருந்துவரும் பிரேரணைகளை நிராக ரிக்கும் உரிமை பிரதிநிதிகள் சபைக்கு இருந்தபோதிலும் அவ்வுரிமை மேற்சபைக்கில்லை. ஏனென்றால், அதன் விருப்பத்தை மீறிக் கீழ்ச் சபை விசேஷப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம்.

இரண்டு சபைகளுக்கும் பொதுவாக வேறு சில அதிகாரங்களை அரசியல் திட்டம் கொடுத்திருக்கிறது. அரசாங்கம் சம்பந்தப்பட்ட விசாரணைகளை நடத்துவதற்கு இரண்டு சபைகளுக்கும் அதிகாரம் இருக்கிறது. இவ்வதிகாரத்தை உபயோகப்படுத்துவதற்காகச் சாட்சி களை விசாரிப்பதற்கும் ரிக்கார்டுகளைப் பரிசோதிப்பதற்கும் சபை களுக்கு உரிமை இருக்கிறது. ஆட்சி முறை அதிகாரத்தைக் கட்டுப் படுத்த இது முக்கியமான அதிகாரமாகும்.

நீதிபதிகள்மீது கொண்டு வரப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிக் கும் அதிகாரத்தை டையட்டிற்கு அரசியல் திட்டம் அளித்திருக்கிறது. இரண்டு சபைகளின் அங்கத்தினர்களைக் கொண்ட கோர்ட்டால் குற்றங்கள் விசாரிக்கப்படும்.

ஒவ்வொரு சபைக்கும் தன் அங்கத்தினர்களின் தகுதிகளை ஆராய்ந்து தீர்ப்புக்கூறும் அதிகாரம் உண்டு. ஆஜராயிருப்பவர்களில் மூன்றில் இரண்டுபங்கு அங்கத்தினர்கள் ஆதரவு அளித்தால்தான் தகுதி இல்லை என்று முடிவு செய்யலாம்.

டையட்டு உறுப்பினர்களுக்குச் சில விசேஷ உரிமைகள் உண்டு. அவர்களுக்குப் பேச்சுரிமை உண்டு. டையட்டிலோ, அதன் கமிட்டி களிலோ உறுப்பினர் நிகழ்த்தும் சொற்பொழிவு அல்லது அளிக்கும் வாக்குச் சம்பந்தமாக அவர்கள்மீது கோர்ட்டில் வழக்குத்தொடர முடியாது. சபைகளின் கூட்டத்தொடர் நடக்கும் பொழுது சபை களின் ஒப்புதலின்றிக்காவலில் வைக்கமுடியாது. அங்கத்தினர் சபை கூடுவதற்கு முன் காவலில் வைக்கப்பட்டிருந்தால், சபையின் கோரிக்கை மீது அவரைக் கூட்டம் முடியும் வரை விடுக்க வேண்டும்.

அங்கத்தினருக்கு வருடாந்தர ஊதியம் கொடுக்கப்படுகிறது. அரசாங்கப் போக்குவரத்துச் சாதனங்களில் இலவசப்போக்குவரத்து வசதிகள் அவர்களுக்கு உண்டு. உத்தியோக பூர்வமான கடிதப் போக்கு வரத்திற்குப் **பிரான்கிங்** வசதி உண்டு. ஒவ்வோர் அங்கத் தினரும் காரியாலயம் வைத்துக்கொள்வதற்கும் ஒரு காரியதரிசியை வேலைக்கு அமர்த்திக்கொள்வதற்கும் பாத்தியப்பட்டவராவார். அங் கத்தினர்கள் பதவி ஒய்வுப்படியும் (retirement allowance) அளிக்கப் படுகிறார்கள்.

## அத்தியாயம்—6

# டையட்டின் செயல் முறை

டையட்டின் கூட்டத் தொடர்கள்சாதாரணக் கூட்டத்தொடர், விசேஷக் கூட்டத் தொடர், சிறப்புக் கூட்டத் தொடர் என்று மூவகைப்படும். சாதாரணக் கூட்டத் தொடர் வருடமொரு முறை கூட்டப்பட வேண்டும். இத்தொடர் குறைந்தது 5 மாத காலம் நீடிக்கும். இதற்குமேல் சபைகள் விரும்பினல் நீட்டித்துக்கொள்ளலாம். சாதாரணக் கூட்டங்கள் காபினட்டால் கூட்டப்படலாம். சாதாரணக் கூட்டத்தொடர்களுக்கிடையே கூட்டப்படும் கூட்டங்களே விசேஷக் கூட்டங்களாம். ஏதாவது ஒரு சபையின் நாலில் ஒரு பங்கு அங்கத்தினர் கோரிஞல், விசேஷக் கூட்டம் கூட்டப்படவேண்டும். தேர்தலுக்குப் பிறகு சாதாரணக் கூட்டம் கூடுவதற்கு முன் கூட்டப்படும் கூட்டங்களே சிறப்புக் கூட்டங்களாகும். மூன்று விதக் கூட்டத் தொடர்களும் ஆட்சி அதிகாரத்தின் உத்தரவின்மீதே கூட்டப்படுகின்றன.

கூட்டத்தை நடத்துவதற்கு மூன்றில் ஒருபங்கு அங்கத்தினர்கள் ஆஜராய் இருக்கவேண்டும் என்று அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. கூட்டங்கள் பொதுவாகப் பகிரங்கமாக நடத்தப்பட வேண்டுமென்றும், ஆனல் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர் இரகசியக் கூட்டம் கூட்டுவதற்கு வேண்டிக்கொண்டால் அவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்றும் அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. இரகசியக் கூட்டங்களின் விவரங்களைத்தவிர, மற்றக் கூட்டங்களின் விவரங்கள் பிரசுரிக்கப்பட வேண்டும்.

சபைகளின் அமைப்பும் அவற்றின் செயல் முறைகளும் 1947ல் நிறைவேற்றப்பட்ட டையட்டுச் சட்டத்தில் அடங்கியிருக்கின்றன. தேர்தல் முடிந்த உடன் கூட்டப்படும் சிறப்புக்கூட்டங்களில் இரண்டு சபைகளும் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. பிறகு உப தலைவரையும், 'குழுத்தலைவர்களையும், செக்ரிட்டரி ஜெனரல்களையும் பிரதம மந்திரியாரையும் தேர்ந்தெடுக்கின்றன. சாதாரணமாகக் குழுத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதைச் சபைகள் தங்கள் தலைவர்களிடம் விட்டுவிடுகின்றன. நிரந்தரக்குழுக்களின் அங்கத்தினர்களும் தலைவர்களாலேயே பொறுக்கி எடுக்கப்படுகின்றார்கள். இரண்டு

சபைகளின் தலைவர்களும் ஆரம்ப வைபவத்திற்கு ஒரு மத்திய இடத்தைக் குறிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட நாளில் இரண்டு சபைகளும் சேர்ந்த கூட்டத்தில் பேரரசர் புதிய பார்லிமென்டை ஆரம்பித்து வைத்துச் சுருக்கமான ஓர் அறிக்கையைப் படிப்பார். பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் தலைமை தாங்குவார். அதோடு கூட்டம் கலையும்.

பிறகு சபைகள் தனித்தனியே கூடித் தங்களுடைய வேலைகளைக் கவனிக்கும். அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்கம்செய்து தனித் தனியே இருசபைகளிலும் பிரதமமந்திரியாரும், வெளிவிவகார மந்திரியாரும், நிதி மந்திரியாரும் அறிக்கைகள் விடுப்பார்கள். இவ்வறிக்கைகள் மீது சபைகளில் விவாதம் நடக்கும். இதற்குப் பிறகு சபைகள் தங்களுடைய சட்டமியற்றும் அலுவல்களைக் கவனிக்கும்.

**கமிட்டி முறை :** சட்டமியற்றும் செயல்முறையை நோக்குமுன், புதிய டையட்டுச் சட்டம் வகுத்திருக்கும் நிரந்தரக் கமிட்டி முறைப்படி (Standing Committee System) இம்பீரியல் டையட்டில் நான்கு அல்லது ஐந்து நிரந்தரக் கமிட்டிகளே இருந்தன. பெரும்பாலும் அதனுடைய வேலை முழுச் சபைக் கமிட்டிகளிலேயே நடைபெற்றது. புதிய டையட்டில் ஆரம்பத்தில் 22 நிரந்தரக் கமிட்டிகள் இருந்தன. இப்பொழுது 16 நிரந்தரக் கமிட்டிகளே உள்ளன. ஒவ்வொரு முக்கியத் துறைக்கும் ஒவ்வொரு குழு இரண்டு சபைகளுக்கும் தனித் தனியே அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு டையட்டு அங்கத்தினரும் ஒரு கமிட்டியிலாவது அங்கத்தினராக இருக்க வேண்டும். பெரும்பாலும் பட்ஜெட்டுக் கமிட்டி கீழ்ச்சபையில் 51 அங்கத்தினர்களையும், மேற்சபையில் 45 அங்கத்தினர்களையும் கொண்டது. ஒவ்வொரு கமிட்டியும் 20 முதல் 30 வரை அங்கத்தினர்களைக் கொண்டது. அங்கத்தினர்கள் சபைகளின் தலைவர்களால் நியமிக்கப்படுகின்றார்கள். கட்சிகளின் பலத்திற்குத் தகுந்தவாறு கமிட்டிகளில் கட்சிகள் பிரதிநிதித்துவம் பெறுகின்றன.

இரண்டு சபைகளின் அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு நிரந்தரச் சட்டக் கமிட்டி (Legislative Committee of the Houses) இருக்கிறது. இந்தக் கமிட்டி 18 அங்கத்தினர்களைக் கொண்டது. 10 அங்கத்தினர் கீழ்ச்சபையிலிருந்தும், 8 அங்கத்தினர் மேற்சபையிலிருந்தும் சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு சபையின் பிரதிநிதிகளும் தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். இரண்டு தலைவர்களும் கூட்டத்திற்குக் கூட்டம் மாறி மாறிக் கமிட்டியின் தலைமைப் பதவியை வகிக்கின்றார்கள். கமிட்டியின் சிபாரிசுக்கு மூன்றில் இரண்டுபங்கு வாக்குகள் தேவை. டையட்டின் அதிகாரங்கள் பற்றியும் செயல்முறை பற்றியும் எழும் பிரச்சினைகளை ஆராய்வது இந்தக் கமிட்டியின் முக்கிய வேலை. இரண்டு சபைகளுக்கும், மந்திரி சபைக்கும் புதிய சட்டங்கள் பற்றி அல்லது சட்டங்களைத் திருத்துவதுபற்றிச்

சிபாரிசுகள் செய்வது. இரண்டு சபைகளுக்கும், காபினட்டிற்கும், டையட்டிற்கும் சுமுகமான உறவு ஏற்படுத்துவது இக்கமிட்டியின் பொறுப்புகளுள் ஒன்ருகும். இக்கமிட்டி மசோதாக்களே வரைவ தில்லே. பிரச்சினேகளே ஆராய்ந்து சிபாரிசுகள் செய்வதே இதன் வேலே. மற்றக் கமிட்டிகளேப்போலக் கட்சி ரீதியில் முடிவுகள் செய் யாமல் ஒரு பரந்த நோக்கத்துடன் தனக்குச் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினேகளே ஆராய்கிறது.

தேசிய டையட்டின் முக்கிய அலுவல்கள் கமிட்டிகளிலேயே நடத்தப்படுகின்றன. அவை பிரேரணேகளேத் தொடங்கலாம்; காபி னட்டுச் சமர்ப்பிக்கும் பிரேரணேகளே ஆராய்ந்து அவற்றின்மீது நட வடிக்கை எடுக்கலாம். சட்டங்கள் நிறைவேறுவது கமிட்டிகளின் முடிவைப் பொறுத்தது. அதன் வேலேகளேத் திறம்படச் செய்ய விசாரணேகள் நடத்தலாம்.

ஒவ்வொரு நிருவாக சபைக்கும் ஒவ்வொரு கமிட்டி அமைத் திருப்பதால் கமிட்டிகளுக்கும் நிருவாகஇலாக்காக்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதற்குச் சாத்தியக்கூறு இருக்கிறது. இவ்வாறு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டால், கமிட்டிகள் சுயேச்சையாக இயங்குவது துர்லபம். நிர்வாக இலாக்காக்களின் விருப்பங்களேப் பூர்த்தி செய்வதற்குச் சாதனமாக விடலாம்.

**சட்டமியற்றும் முறை :** சட்டப் பிரேரணேகள் காபினட்டாலும், அங்கத்தினர்களாலும், கமிட்டிகளாலும் தொடங்கப்படலாம். மற்ற 20 அங்கத்தினர்கள் சம்மதம் அளித்தால் ஒரு பிரேரணேயைக் கொண்டு வரலாம். பிரேரணேயால் செலவு ஏற்படுவதாய் இருந்தால், 50 அங்கத்தினர்களின் சம்மதம் வேண்டும். அரசாங்க மசோதாக்கள் ஒரு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 5 நாள்களுக்குள் மற்றச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். சாதாரணமாக எந்தப் பிரேரணேயையும் தகுந்த நிரந்தரக் கமிட்டியின் கவனத்திற்கு விட்டு விடலாம். இந்தக் கட்டத்தில் பிரேரணேகள் நன்ருக ஆராயப்படு கின்றன. கமிட்டித் தலேவர் இஷ்டத்தின்பேரில் தலேவர் பகிரங்க விசா ரணேகள் ஏற்படுத்த அனுமதி அளிப்பார். கமிட்டியின் பரிசீலனே முடிந்த பின் சபைத் தலேவர் அதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவார். சபையில் கமிட்டித் தலேவர் பிரேரணேயை விளக்கிக் கமிட்டி செய்த மாறுதல்களேயும், கமிட்டியின் சிறுபான்மை யினரின் அறிக்கையையும், அதன்மீது தம்முடைய அறிக்கையையும் சமர்ப்பிப்பார். இந்தக் கட்டத்திலே பிரேரணே ஒரு தடவை படிக்கப் படுகிறது. பிறகு சபையில் விவாதம் நடைபெறும். கமிட்டியில் பெரும்பான்மை ஆதரவு பெருவிடில், சபைமுன் கொண்டுவர வேண்டிய அவசியமில்லே. ஆனல், மற்றச் சபையிலிருந்து வந்த பிரேரணேயாய் இருந்தாலும், 20 அங்கத்தினர்கள் கமிட்டியின் அறிக் கையை வேண்டினலும், அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்

டும். சபையின் ஒப்புதலுடன் காபினட்டோ, 20 அங்கத்தினர்களோ மாற்றங்கள் கொண்டு வரலாம். பிறகு மாற்றங்கள்மீதும் பிரேரணை மீதும் வாக்கு எடுக்கப்படும். பிரேரணை பெரும்பான்மை வாக்குப் பெற்றால் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்படும். சபை கமிட்டிப் பரிசீலனை அவசியமில்லை என்று கருதினால், பிரேரணையைக் கொண்டு வருபவர் அதன் அமிசங்களை விளக்குவார். சபை விவாதித்த பிறகு வாக்கு எடுக்கப்படும்.

ஒரு சபையில் நிறைவேற்றப்பட்ட பிறகு பிரேரணை மற்றச் சபைக்கு அனுப்பப்படும். அங்குப் பிரேரணையைக் கொண்டுவந்தவராலோ அல்லது பரிசீலனைக் கமிட்டியின் தலைவராலோ விளக்கப் படலாம்.

இரண்டு சபைகளிலும் பிரேரணை நிறைவேறியபிறகு, அதாவது சட்டமான பிறகு, காபினட்டிற்கு அனுப்பப்படுகிறது. நாட்டின் ஒரே ஒரு பகுதிக்கோ, இடத்திற்கோ மட்டும் சம்பந்தப்பட்டால் அப்பகுதியின் மக்கள் சம்மதம் அளிக்க வேண்டும். அதற்குப்பின்னரே அது சட்டமாகும். காபினட்டிலிருந்து பேரரசரிடம் கையொப்பத் திற்கு அனுப்பப்படுகிறது. பிறகு பிரதம மந்திரியாராலும் சம்பந்தப் பட்ட மந்திரியாராலும் கையொப்பமிடப்படுகிறது. பேரரசர் பிறப் பிக்கும் அறிக்கையுடன் கெஜட்டில் பிரசுரிக்கப்படுவது பிரேரணை சட்ட மாவதில் கடைசிக் கட்டம்.

**விவாதங்கள் :** சபைகளில் இரண்டு விதமான விவாதங்கள் நடைபெறலாம். உறுப்பினர் மந்திரிகளிடம் கேள்விகள் கேட்பது (Interpellation) ஒருமுறை. கேள்வி கேட்பவர் தம் சொந்த அபிப் பிராயங்களைத் தெரிவிக்கக் கூடாது. சபாநாயகர் அவற்றைச் சரியல்ல என்று தள்ளிவிடலாம். மந்திரி சபை கேள்விகளுக்கு ஒரு வாரத்திற் குள் பதிலளிக்க வேண்டும். சபையின் அனுமதியுடன் அவசரக் கேள்வியை வாய்மொழியாகக் கேட்கலாம். பிரதானக் கேள்வியை ஒட்டி எழும் சில கேள்விகளையும் வாய்மொழியாகக் கேட்கலாம். இவ்வாறு கேள்விகள் கேட்டுப் பதில் சொல்வது விவாதத்தைப் பொறுத்திருக்கலாம். ஓர் அங்கத்தினரின் மோஷன்மீது கேள்விகளைத் தொடர்ந்து விவாதமும், அதன்மீது வாக்கு எடுப்பும் நடைபெறலாம். மாஜி அரசியலமைப்பில் டையட்டு அதிகாரமற்றிருந்ததால் விவாதத் திற்கு இடம் இல்லை. புதிய டையட்டிற்கு அதிகாரம் இருந்தபோதி லும், பழையபழக்கத்தினால் கேள்விமுறையேஅங்கத்தினர்களால் அதிக மாக உபயோகப்படுத்தப்படுகிறது. இப்பொழுது மெதுவாகச் சபை களில் விவாதங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. செல்லச் செல்ல அம்முறை முக்கியத்துவத்தைப் பெறும் என்று நம்பப்படுகிறது. விவாதங்களில் பங்கு எடுத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் சபாநாய கருக்குத் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். கமிட்டி அங்கத்தினர்களுக்குப் பேச்சில் முதலிடம் கொடுக்கப்படுகிறது.வாக்கு

வாதத்தை முடிவு கட்டலாம் என்று 20 அங்கத்தினர்கள் மோஷன் கொண்டு வந்தால், அதன்மீது வாக்கெடுத்துப் பெரும்பான்மை கிட்டி ஞல், வாக்குவாதத்தை முடிக்கலாம். சபாநாயகரும் தமது சொந்தப் பொறுப்பில் வாக்குவாதத்தை முடிப்பதற்கு வாக்கு எடுக்கவும் செய்யலாம்.

இரண்டு சபைகளின் செயல்முறையில் தலைவர்கள் மிகுந்த அதி காரம் பொருந்தியவர்களாய் இருக்கிருர்கள். டையட்டுச் சட்டத்தை யும், சபைகளின் விதிகளையும் பாரபட்சமில்லாமல் நிருவகிப்பது அவர்களுடைய சீரியபொறுப்பாகும். அங்கத்தினர்களும் பொதுவாகத் தலைவருக்கு மரியாதை கொடுத்து, சில விஷயங்களில் (உதாரணம்: கமிட்டித் தலைவர்கள் தேர்தல்) தங்களுடைய உரிமைகளை உப யோகப்படுத்தாமல் சபாநாயகரின் பொறுப்பான முடிவுக்கு விட்டு விடுகின்றனர். இது தலைவர்களின் அதிகாரத்தை அதிகரித்திருக்கிறது. இருந்த போதிலும் சபா நாயகர் பிரிட்டிஷ் மக்கள் சபைத் தலைவர் போலக் கட்சிச் சார்பற்றவர் அல்லர். பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்தவர் ஆகையால், கட்சியின் வற்புறுத்தலுக்குட்பட்டவரே. ஜப்பானியச் சட்ட சபைகளில் சில வேளைகளில் அங்கத்தினர்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பார்லிமென்டைச் சண்டை மேடையாக்கி விடுகின்ருர்கள்.

## அத்தியாயம் —7

# தேர்தல் முறை

ஜப்பானில் வாக்குரிமையும் தேர்தல் முறைகளும் 19-ஆம் நூற்றுண்டின் இறுதியில் வளர்ந்தவைகளே. 1880க்குப் பிறகு பிரதிநிதித்துவ முறை அரசாங்கத்திற்காகக் கிளர்ச்சி செய்யக் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனல், குழுவினர் இக்கிளர்ச்சிகளை அனுதாபத்துடன் கவனிக்கவில்லை. மாஜி மன்னர் பட்டத்திற்கு வந்த பிறகு கொடுத்த பிரகடனப்படி பிரதிநிதித்துவ அரசாங்கம் மாஜி அரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. இவ்வரசியலமைப்பில் நடத்தப்பட்ட முதல் தேர்தலில் வயதுவந்த எல்லா மக்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படவில்லை. 15 **என் (yen)** நேர் வரி செலுத்துபவர்களே வாக்குரிமை பெற்றுர்கள். பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்படவில்லை.

வாக்குரிமை வயதுவந்த எல்லா ஆடவர்களுக்கும் 1925ல் இயற்றப்பட்ட சட்டத்திஞல் அளிக்கப்பட்டது. இந்தச் சட்டமே 1945 வரை நடைமுறையில் இருந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, அமெரிக்கச் சைனியத் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் தேர்தல் முறைகளில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 1945ல் இயற்றப்பட்ட சட்டம், பெண்களுக்கு ஓட்டுரிமையை அளித்தது ; வயதுத் தகுதியை 25லிருந்து 20 ஆகக் குறைத்தது. தேசத்தை 53 பெரிய தொகுதிகளாகப் பிரித்து, 1,50,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதியாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. 1947ல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் திட்டம் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வயதுவந்தவர் வாக்குரிமையை அரசியல் திட்டத்தின் அடிப்படைக் கொள்கையாக இயற்றியது. அரசியல் திட்டத்தின் 15-ஆம் பிரிவு வயது வந்தவர் வாக்குரிமையையும் இரகசிய வாக்களிப்பு முறையையும் ஜீவாதார உரிமைகளாக அங்கீகரித்தது. மற்றும் சில பிரிவுகளில் இரண்டு சபைகளுக்கும் அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், வாக்குரிமைத் தகுதிகளில் எவ்விதப் பாரபட்சமும் காட்டப்படலாகாது என்றும், கீழ்ச்சபை கலைக்கப்பட்ட 40 நாள்களுக்குள் தேர்தல்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

புதிய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ்ப் புதிய தேர்தல் சட்

டங்கள் வகுக்கப்பட்டன. 1947ல் இயற்றப்பட்ட சட்டம் கீழ்ச்சபைத் தொகுதிகளை 117 ஜில்லாக்களாகப் பிரித்தது. சட்டப்படி ஒரு வாக்காளர் தம் வாக்கை ஓர் அபேட்சகருக்கே கொடுக்கலாம். சட்டம், தேர்தல்களை மேற்பார்வையிட ஸ்தல ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தலக் கமிட்டிகளையும் ஏற்படுத்தியது. இதற்கு முன் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளே தேர்தல்களை மேர்பார்வையிட்டார்கள். மேற்சபைத் தேர்தல் சட்டம் (ஏப்பிரல் 48) மேல் சபை அபேட்சகர்களுக்கு வயதுத் தகுதியை 30-ஆக நிர்ணயித்தது. ஸ்தல சுயாட்சிச் சட்டம் (ஏப்பிரல் 47) பிரிபெக்சர் கவர்னர்களுக்கு வயதுத் தகுதியை 30 ஆகவும், மேயர்களுக்கு 25 ஆகவும் நிர்ணயித்தது. 1947 டிசம்பரில் எல்லாத் தேர்தல்களையும் கண்காணிக்கத் தேசியத் தேர்தல் நிருவாகக் கமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதற்கு முன் இந்தப் பொறுப்பு உள் நாட்டு மந்திரியைச் சேர்ந்ததாகும். 1948ல் தேர்தல்களில் இலஞ்சத்தை ஒழிப்பதற்காகத் தேர்தல் பிரசாரத்தை நடத்துவதில் அரசாங்கத்திற்கு முக்கியப் பங்கு அளிக்கப்பட்டது. இதற்கு ஏற்படும் செலவுகளில் ஒரு பகுதி தேசியக் கருவூலத்திலிருந்து கொடுக்கப்பட்டது. கட்சிகளுக்குக் கொடுக்கப்படும் நன்கொடைகளைக் கட்டுப்படுத்தவும், தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. தேர்தல்களைப்பற்றிக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு 1950ல் ஒரே சட்டம் இயற்றப்பட்டது.

**தேர்தல் தொகுதிகள் :** கீழ்ச் சபைத்தேர்தலுக்கு ஜப்பான் மூன்று விதத் தேர்தல் தொகுதிகளைப் பயன்படுத்தியிருக்கிறது. முதலில் ஒற்றை உறுப்பினர் தொகுதி முறை கடைப்பிடிக்கப்பட்டது. 1900ல் நாடு பெரிய பல உறுப்பினர் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது; 1919ல் மீண்டும் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. 1925ல் இயற்றப்பட்ட சட்டம், பல உறுப்பினர் தொகுதி முறையைக் கடைப்பிடித்தது. 1945ல் நாடு நான்கிலிருந்து 14 அங்கத்தினர்களைக் கொண்ட பெரிய தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது; 1947ல், மூன்று முதல் ஐந்து அங்கத்தினர் வரை அனுப்பும் 118 நடுத்தரத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. தொகுதி முறைகள் பற்றிக் கட்சித் தலைவர்களிடையே வித்தியாசங்கள் இருப்பதே இவ்வாறு அடிக்கடி மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

மேற்சபைக்கு 100 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேசம் முழுதும் ஒரே தொகுதியாகக் கருதப்படுகிறது. இவ்வேற்பாட்டின் நோக்கம் மேற்சபையில் தகுதியுள்ள முக்கியமான தலைவர்கள் இடம் பெறவேண்டுமென்பதே. மிகுதியுள்ள 150 இடங்களுக்கு 46 பிரிபெக்சர்கள் தேர்வுத் தொதிகளாக இரண்டு முதல் எட்டு அங்கத்தினர் வரை அனுப்புகின்றன.

பிரிபெக்சர் சட்டசபைத் தேர்தல்களுக்கு நகரங்களும், கவுன்டிகளும் தேர்தல் தொகுதிகளாய் விளங்குகின்றன.

**தேர்தல் முறை :** ஒவ்வொரு கீழ்ச்சபைத் தொகுதியும் மூவர் முதல் ஐந்து உறுப்பினர் வரை அனுப்புகின்றன என்பதைப் பார்த்தோம். மேற்சபைக்கும் எல்லாம் பல உறுப்பினரை அனுப்பும் தொகுதிகளே. ஒரு வாக்காளருக்கு ஒரே ஒரு வாக்கே உண்டு. தேர்தல் சீட்டில் ஒரே ஓர் அபேட்சகருக்கே வாக்கை அளிக்கவேண்டும். எந்த அபேட்சகர்கள் முதல் மூன்று அல்லது நான்கு (தொகுதி அனுப்பும் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி) ஸ்தானங்களைப் பெறுகிறார்களோ, அவர்கள் வெற்றி அடைகின்றார்கள். முதல் இடங்களைப் பெறுவதற்கு ஓர் அபேட்சகருக்குத் தொகுதியில் சிறுபான்மை வாக்குகள் கிடைத்தலே போதும். மொத்த வாக்குகளைக் காலி இடங்களின் எண்ணிக்கை கொண்டுவரும் ஈவில் நான்கில் ஒரு பங்கு வாக்குகள் ஓர் அபேட்சகருக்குக் கிடைக்காவிட்டால் அவர் டிபாசிட்டை இழப்பார். மேற்சபைக்குத் தேசியத் தொகுதிக்கு டிபாசிட்டு இழக்காமல் இருக்க எட்டில் ஒரு பங்கு வாக்குகளும், ஸ்தலத் தொகுதிக்கு ஆறில் ஒரு பங்கு வாக்குகளும் தேவை.

**வாக்காளர் பதிவு :** ஜப்பானில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வது தனி நபர்களின் பொறுப்பன்று. அரசாங்க அலுவலர்களே வாக்காளர்களைப் பதிவு செய்வதில் அக்கறை கொள்கின்றனர். வருஷமொரு முறை வாக்காளர் பதிவுக் கார்டுகளை வீடு வீடாக அனுப்பி, உத்தியோகஸ்தர்கள் விவரங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்விவ்ரங்களின் உதவியைக்கொண்டு வாக்காளர் ரிஜிஸ்தர் தயார் செய்யப்படுகிறது.

ஜப்பானில் நடக்கும் தேர்தல்களை மேற்பார்வையிடத் தேசியத் தேர்தல் நிருவாகக் கமிஷன் ஒன்பது அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது. இந்தக் கமிஷனின் அங்கத்தினர்கள் பிரதம மந்திரியாரால் டையட்டின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் டையட்டிற்குப் பொறுப்பாளர்களாய் இருந்தார்கள். 1952ல் தேசியத் தேர்தல் கமிஷன் கலைக்கப்பட்டு, ஸ்தல சுயாட்சி ஏஜென்ஸி (Local Autonomy Agency) யிடம் தேர்தல்களைக் கண்காணிக்கும் பொறுப்பு விடப்பட்டது.

# அத்தியாயம்—8

## அரசியற்கட்சிகள்

அரசியற்கட்சிகள் ஜப்பானில் முதல் முதலாக 1880ல் தோன்ற ஆரம்பித்தன. ஆயினும், சிறு குழுவாட்சித் தலைவர்களுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதே இக்கட்சிகளின் நோக்கம். தேர்தல் ஒன்றும் நடைபெறுததால் இக்கட்சிகளுக்கு நிறுவன அமைப்புகளோ கட்சிக் கோட்பாடுகளோ இல்லை. அரசாங்கத்திற்கு விரோதமாய் இருந்ததால், ஆளும் குழுவினர் இக்கட்சிகளை அடக்கி ஒடுக்கவே முயன்றனர். மாஜி அரசியலமைப்புப் பார்லிமென்டு முறை அரசாங்கத்தை ஏற்படுத்திய பிறகு அரசியற்கட்சிகள் வளர ஆரம்பித்தன. ஆயினும், குழுவினரும் கட்சிகளின் வர்ச்சியை அனுதாபத்துடன் கவனித்தனர். அரசாங்கத்திற்கு டையட்டின் ஆதரவின் அவசியத்தை உணர்ந்த முதற்பிரதம மந்திரியார் அரசியல் நண்பர்கள் சங்கம், (Association of Political Friends Seiyukai) என்னும் கட்சியைத் தொடங்கி வைத்து அதற்குத் தலைமை தாங்கினுர். மக்கள் அரசியற்கட்சி (People's Political Party) மின்சீட்டோ என்னும் மற்றொரு கட்சி 1913ல் அமைக்கப்பட்டது. இரண்டு கட்சிகளுக்கும் அடிப்படையான கொள்கை வித்தியாசம் ஒன்றுமில்லை. இரண்டு கட்சிகளும் தங்களை **'லிபரல் கட்சிகள்'** என்று வழங்கிக்கொண்டன. இரண்டு கட்சிகளும் நிதி உதவிக்குப் பணக்குழுக்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. இரண்டு கட்சிகளுக்கும் உள்ள ஒரு வித்தியாசம் யாதெனில், ஒன்று அதாவது **செய்யூக்காய்,** நிலச்சுவான்களின் ஆதரவை அதிகமாகப் பெற்றிருந்தது. **மின்சீட்டோ,** தொழிலதிபர்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. இரண்டு கட்சிகளுக்கும் மக்களின் ஆதரவு மிகக்குறைவு, மக்கள் ஆதரவு அளிக்கக்கூடிய ஒரு கட்சிக்குத் தேவை இருந்தது.

1920 முதல் 1930 வரை கட்சித் தலைவர்கள் அரசியலில் முன்னணியில் இருந்தார்கள். கீழ்ச்சபைக்கு அதிகாரமில்லாதிருந்த போதிலும் கட்சித் தலைவர்களுக்குக் கேள்விகள் கேட்டு அரசாங்கத்திற்குத் தொந்தரவு கொடுப்பதற்கு அரசியல் திட்டம் சந்தர்ப்பம் அளித்தது. பெரும்பான்மையிலுள்ள கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாராய் நியமிக்கப்பட்டு, மந்திரி சபையை அமைத்தனர். 1925-ஆம் வருஷத்தில் வயது வந்த ஆடவர்களுக்கு வாக்குரிமை அளித்த சட்டம்

மக்கள் கட்சி வளருவதற்கு உண்டான வாய்ப்பை ஏற்படுத்தியது. ஆனுல், தொழிற்சங்கங்களின் பலவீனமும், அரசாங்கத்தின் எதிர்ப்பும், தலைவர்களிடையே இருந்த கொள்கை வித்தியாசங்களும், நிதி இன்மையும் இடசாரிக் கட்சிகளைப் பெரிதும் முன்னேற விடவில்லை. 1937ல் நடந்த தேர்தலில் சமுதாய மக்கள் கட்சி (Social Masses Party) 37 பார்லிமென்டு ஸ்தானங்களைக் கைப்பற்றியதே பெரிய சாதனையாய் இருந்தது.

ஜப்பானியப் பார்லிமென்டரி அமைப்பு டையட்டிற்குப் போதிய அதிகாரம் கொடாதது கட்சித் தலைவர்களிடம் ஒரு பொறுப்பின்மையை உண்டு பண்ணியது. மக்களுக்கும் கட்சித் தலைவர்களிடம் மதிப்பில்லை. அமைச்சரவையில் இராணுவத் தலைவர்கள் முக்கிய இடம் பெற்றிருந்ததால், இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவது எளிதாய் இருந்தது. ஜப்பானிய இராணுவத் தலைவர்கள் தெற்கு மஞ்சூரியாவை ஆக்கிரமித்து, பதவியிலிருந்த மின்சீட்டோ மந்திரி சபைக்குச் சம்பவம் நடந்த பிறகே தெரிந்தது. இராணுவத்தினர் முயற்சியால் மின்சீட்டோ மந்திரி சபை நீக்கப்பட்டுத் தங்களின் இஷ்டப்படி நடக்கக்கூடிய செய்யூக்காய் மந்திரிசபையைப் பதவியில் வைத்தனர். உண்மையில் இராணுவத்தினரே அரசாங்கத்தை நடத்த ஆரம்பித்து விட்டனர்.

இராணுவத்தினர் பார்லிமென்டரி ஸ்தாபனங்களைத் தமது போக்கிற்கு ஓர் இடையூருகக் கருதினர்; அரசாங்க அமைப்பைப் பாசிஸ்டு வழிகளில் மாற்றி அமைக்க முடிவு செய்தனர். இருபிரதான அரசியற்கட்சிகளின் தலைவர்களும் இராணுவத்தினர் போக்கைப் புரிந்துகொண்டு கட்சிகளைத் தாமாகவே கலைத்துக்கொண்டனர். இராணுவ அரசாங்கம் மற்றக் கட்சிகளுக்கும், செல்வாக்குக் குழுக்களுக்கும் தடை விதித்தது. கட்சி முறை அரசாங்கத்திற்கு இவ்வாறு சாவு மணி அடிக்கப்பட்டது. இராணுவ அரசாங்கத்திற்கு மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்குச் சாம்ராஜ்ய ஆட்சி உதவிச்சங்கம் (Imperial Rule Assistance Association) என்று வழங்கப்பட்ட ஒரு பிரசார நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இராணுவத் தலைவர்களுடன் மற்றக் கட்சித் தலைவர்களும் இதில் பங்கெடுத்துக்கொண்டார்கள். அரசாங்கத் தலைவர்கள் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொண்ட போதிலும் மக்கள் இம்முயற்சிகளினுல் உற்சாகப்படவில்லை. போர்க்காலத்தில் சாம்ராஜ்ய ஆட்சி உதவிச்சங்கத்தைப் பலப்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளுள் ஒன்றும் பலனளிக்கவில்லை.

1945ல் சாம்ராஜ்யக் கட்சி உதவிச் சங்கம் கலைக்கப்பட்டது. பழைய அரசியற்கட்சிகள் மீண்டும் அமைக்கப்பட்டன. லிபரல் கட்சி, புரொக்ரெசிவ் கட்சி என்னும் இரு வலசாரிக் கட்சிகளும், கம்யூனிஸ்டு அல்லாத இடசாரிக் கட்சிகளை இணைத்துச் சமூக ஜனநாயகக் கட்சி என்ற பெயருடன் ஓர் இடசாரிக்கட்சியும், கம்யூனிஸ்டு

கட்சியும் இயங்க ஆரம்பித்தன. கம்யூனிஸ்டு கட்சிமீதிருந்த தடை நீக்கப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கை கொண்ட கிராமப் பார்லிமென்டு அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுக்கட்சியும் நிறுவப்பட்டது. அமெரிக்க இராணுவத் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் ஜப்பானிய இராணுவ ஆட்சி ஊக்கமளித்த குற்றத்திற்காகக் கட்சித் தலைவர் சிலர் உட்பட ஆயிரக்கணக்கான நபர்கள் பொதுக் காரியங்களிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

போருக்குப் பிறகு நடந்த பொதுத் தேர்தலில் இரண்டு வல சாரிக் கட்சிகளும் பெரும்பான்மை இடங்களைப் பெற்றன. சமூக ஜனநாயகக் கட்சிக்கு 93 இடங்கள் கிட்டின. அடுத்த தேர்தலில் (1947) சமூக ஜனநாயகக் கட்சி 143 இடங்களைப்பெற்று ஜனநாயகக் கட்சியுடன் கூட்டு மந்திரி சபை அமைத்தது. இந்த முதல் சோஷலிஸக்கூட்டு அரசாங்கம், தீவிரமான சோஷலிஸச் சீர்திருத்தம் ஒன்றும் கொண்டுவர முடியவில்லை. மந்திரிசபை 1943ல் ராஜிநாமா செய்து லிபரல் கட்சி பதவி ஏற்றது. 1948ல் நடந்த தேர்தலில் லிபரல் கட்சி பூரணப் பெரும்பான்மை பெற்று, தனியே அரசாங்கம் அமைத்தது. 1949 முதல் 1955 வரை லிபரல் கட்சி பதவியிலிருந்தது. சோஷலிஸ்டு கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு, வலசாரி இடசாரி என்னும் இரு பிரிவுகள் தோன்றின. லிபரல் கட்சியிலும் பிளவுகள் ஏற்பட்டு, கட்சியின் ஒற்றுமையைப் பாதித்தன. லிபரல் கட்சியிலிருந்து ஒரு பகுதி பிரிந்து, சமூக ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து கொண்டது. 1955ல் நடந்த தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி மற்றக் கட்சிகளைவிட அதிக இடங்களைப் பெற்றது. அதற்கு 185 இடங்களும், லிபரல்களுக்கு 113 இடங்களும்,இடசாரிச் சோஷலிஸ்டுகளுக்கு 66 இடங்களும் கிடைத்தன. இரண்டு கன்சர்வேட்டிவ் கட்சிகளுக்கும் சேர்ந்து பூரணப் பெரும்பான்மை இருந்தது. இரண்டு சோஷலிஸ்டு கட்சிகளுக்கும் மூன்றில் ஒரு பங்குக்குச் சிறிது அதிகமாக இடங்கள் இருந்தன. அரசியல் அமைப்புத் திட்டத்திற்குக் கொண்டுவரும் மாற்றங்களைத் தடுக்குமளவு பலம் பொருந்தியதாய் இருந்தது.

கட்சிமுறை திறம்பட இயங்க வேண்டுமென்றால், இரண்டு கன்சர்வேட்டிவ் கட்சிகளும் இரண்டு சோஷலிஸ்டுக் கட்சிகளும் இரண்டு கட்சிகளாக ஒன்று சேரவேண்டுமென்ற அவசியத்தைக் கட்சித் தலைவர்கள் உணர்ந்தார்கள். முதலில்சோஷலிஸ்டு பிரிவுகள் இரண்டும் 1956ல் ஒன்று சேர்ந்தன. இதைத் தொடர்ந்து லிபரல் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் 1956ல் முடிவில் ஒன்று சேர்ந்தன. இவ்வாறு இரு கட்சி முறைகள் உருவாயின.

இரண்டு கட்சிகளின் கொள்கைகளையும், நிறுவன அமைப்புகளையும் கவனிப்போம் :

கட்சியின் பெயர்கள் கட்சியின் கொள்கைகளை ஒருவாறு தெளிவு

படுத்துகின்றன. ஜன நாயக ஆட்சி அமைப்பிற்கு லிபரல் டெமாக்கிரட்டிக்குக் கட்சி மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. பொருளாதார விஷயங்களில் தனியார் துறைக்குச் சுதந்தரம் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. இருந்தபோதிலும் அரசாங்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதும், ஜப்பானை ஒரு பொதுநலநாடாக்க (Welfare State) வேண்டும் என்பதும் லிபரல் டெமாக்கிரட்டிக்குக் கட்சியின் முக்கியக் கொள்கைகளாகும். வெளி நாட்டுக்கொள்கையில் இக்கட்சி ஜனநாயக நாடுகளுடன் ஒத்துழைப்பு அவசியம் எனக் கருதுகிறது; தற்காப்புப்படை அவசியம் என்றும் இதற்காக அரசியல் திட்டத்தை மாற்ற வேண்டுமென்றும் கருதுகிறது.

சோஷலிஸ்டு டெமாக்கிரட்டிக்குக் கட்சியின் கொள்கைகள் லிபரல் கட்சியின் கொள்கைகளிலிருந்து மிகவும் மாறுபட்டவையாய் இருக்கின்றன. இக்கட்சி தன்னை ஒரு வகுப்புக் கட்சியாகக்கருதுகிறது. தொழிலாளர் நலனுக்குப் பாடு படுவதே இதன் முக்கிய நோக்கம். பொருளாதார விஷயங்களில் சோஷலிஸச் சீர்திருத்தங்களைக்கொண்டு வரவேண்டுமென்பது இக்கட்சியின் நோக்கம். மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதலும் வேலையின்மையை அகற்றுதலும் இக்கட்சியின் மற்றக் கொள்கைகளாகும். சதி வேலைகளைத் தடுக்கும் சட்டம், வேலை நிறுத்தத்தைக் கட்டுப்படுத்தும் சட்டம் போன்றவை பிற்போக்கான சட்டங்கள் என்றும், அரசாங்கம் அவற்றை வாபஸ் பெற வேண்டும் என்றும் இக்கட்சி பிரசாரம் செய்கிறது.

வெளிவிவகாரங்களிலும் சோஷலிஸ்டுக் கட்சியின் கொள்கைகள் மிகவும் மாறுபட்டவைகளே. அயல் நாட்டுத் துருப்புகளும் அயல் நாட்டின் தளங்களும் இருக்கும் வரை ஜப்பான் பெயரளவிலேதான் உரிமையுள்ள நாடாகும் என்று இக்கட்சி கருதுகிறது. ஜப்பானின் இராணுவபலத்தை அதிகரிப்பதற்கும் சோஷலிஸ்டுகட்சி எதிர்ப்பைத் தெரிவிக்கிறது.

லிபரல் கட்சியும் சோஷலிஸ்டு கட்சியும் வெவ்வேறு சமுதாயப் பொருளாதாரக் குழுக்களின் ஆதரவை நாடி நிற்கின்றன. லிபரல் கட்சிக்குக் கிராம வாசிகளிடம் நல்ல ஆதரவுஇருக்கிறது. ஜப்பானின் ஜனத் தொகையில் பாதி கிராமங்களில் வசிப்பதால், கிராம வாசிகளின் ஆதரவு லிபரல் கட்சியின் வெற்றிக்கு முக்கிய காரணமாய் இருக்கிறது. சமீப காலத்தில் சோஷலிஸ்டுகளுக்கும் சில கிராமத் தொகுதிகளில் ஆதரவு இருக்கிறது.

பட்டினங்களில் தொழில் ஆதரவும் வியாபாரிகளின் ஆதரவும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குப் பலத்தைக் கொடுக்கின்றன. லிபரல் கட்சிக்கு அரசாங்கத்தின் உயர் உத்தியோகஸ்தர்களும், கம்பெனிகளின் உயர் உத்தியோகஸ்தர்களும் ஆதரவு கொடுக்கின்றார்கள்.

சோஷலிஸ்டு கட்சிக்கு முக்கிய ஆதரவு தொழிலாளிகளிடமிருந்து

வருகிறது. தொழிற்சங்கங்கள் சோஷலிஸ்டு கட்சிக்கு வெளிப் படையாக ஆதரவு கொடுப்பதோடல்லாமல், கட்சிக்குப்பணவுதவியும் அளிக்கின்றன. கல்வித்துறையிலிருந்தும், முக்கியமாகப் பேராசிரி யர்கள், மாணவர்களிடமிருந்தும், சோஷலிஸ்டுக் கட்சிக்கு ஆதரவு கிடைக்கிறது. சிறிய ஊதியம்பெறும் ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும் சோஷலிஸ்டுக் கட்சிக்கு ஆதரவு அளிக்கின்றார்கள்.

**கட்சிகளின் அமைப்புகள்:** ஜப்பானில் அரசியற்கட்சிகள் மத்திய ஸ்தாபனமே பலம் பொருந்தியதாய் இருக்கின்றது. கட்சிகளின் முக்கிய வேலைகள் தேசிய ஸ்தாபனத்தாலேயே கவனிக்கப்படுகின்றன, லிபரல் டெமாக்கிரட்டிக்குக் கட்சித் தலைவரே முதன்மையானவர். இவர் கீழே கட்சியின் செக்ரிடெரி ஜெனரலும், மூன்று கமிட்டிகளின் (அரசியல் ஆராய்ச்சிக் கமிட்டி, காரியக் கமிட்டி, தேசிய நிறுவனக் கமிட்டி) தலைவர்களும் இருக்கிறார்கள். கட்சிக்கு நிதி வசூலிப்பதும், ஆலோசனை கூறுவதும், கட்சியின் பிரதிநிதியாக மற்றக் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதும் செக்ரிடெரி ஜெனரலின் முக்கிய அலுவல்களாகும். அரசியல் ஆராய்ச்சிக் கமிட்டி, கொள்கைகளை வகுப்பதில் முக்கியப் பங்கு கொள்கிறது. கட்சியின் காரியக் கமிட்டி யின் வேலை கட்சி சம்பந்தப்பட்ட முக்கிய முடிவுகள் எடுப்பதாகும். கட்சியின் நிறுவன அமைப்பைச் சீர்படுத்துவது தேசிய நிறுவனக் கமிட்டியின் முக்கிய வேலையாகும். லிபரல் டெமாக்கிரட்டிக் கட்சி யின் ஸ்தலக் கிளைகள் நன்றாக அமைக்கப்படவில்லை; ஆகையால் பலம் பொருந்தியதாகவும் இல்லை.

சோஷலிஸ்டு டெமாக்கிரட்டிக்குக் கட்சித் தலைவர் மத்திய காரியக் கமிட்டியின் தலைவரே. கட்சியின் செக்ரிடெரி ஜெனரல் மத்திய நிறுவனத்தைக் கண்காணிக்கிறார்; கட்சியில் பலம் பொருந்தியவராக வும் இருக்கிறார். சோஷலிஸ்டுக் கட்சியின் கொள்கை, ஆலோசனைக் கமிட்டிக் கொள்கை விஷயங்களைப்பற்றி முடிவு செய்கிறது. இக்கட்சி யின் ஸ்தலக் கிளைகள் லிபரல் டெமாக்கிரட்டிக்குக் கட்சி ஸ்தலக் கிளை களைவிட நன்றாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு கட்சிகளும் வருஷாந்திரக் கூட்டங்களை ஏற்படுத்திக் கட்சியின் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. அவை கொள்கைகளுக்கு ஒப்புதலும் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் கட்சி முறை ஒழுங்காக வளர்வதற்கு உண்டான சூழ்நிலை சமீப காலத்தில் ஏற்படுத்தப்பட்டதே. ஆகையால், சிறிது கால அனுபவத்திலிருந்து கட்சி முறை இயங்குவது பற்றி எவ்வித முடிவுக்கும் வர இயலாது. கட்சி முறை அரசாங்கம் ஒழுங்காக வளர் வதற்குச் சில நிபந்தனைகள் அவசியம். முதலாவதாக, அரசியலமைப் பில் பார்லிமென்டின் முக்கியத்துவத்தை அதிகாரபீடத்திலிருப்பவர் களும் பொதுமக்களும் உணரவேண்டும். அரசியல் திட்டம் பார்லி மெண்டிற்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. அதை உபயோகப்படுத்த

எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம். கட்சிகளின் தலைமைப் பதவிகளிலிருக்கும் முன்னாள் உத்தியோகஸ்தர்கள், சென்ற காலத்தை மறந்துவிட்டு, அதிகார வர்க்கத்தைச் சமூகத்தின் ஊழியராக்குவதற்குப் பாடு படவேண்டும். இரண்டாவதாக, கட்சிகளுக்குள் ஓரளவு கொள்கைகளில் ஒற்றுமை அவசியம். ஜப்பானில் இரண்டு கட்சிகள் இப்பொழுது இருந்தபோதிலும் அவற்றிற்குள் அடிப்படையான வித்தியாசங்கள் இருப்பதால், கட்சி முறை அரசாங்கம் கூடச் செவ்வனே இயங்குவது துர்லபம். மூன்றாவதாக, எதிர்ப்புக் கட்சி அரசியல் திட்டத்தின் வரம்பிற்குட்பட்ட வழிகளைப் பின்பற்றுவது மாத்திரம் போதாது; பொறுப்புள்ள எதிர்க்கட்சியாயும் இருக்கவேண்டும்; மக்களுடைய அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்க வேண்டும்; அப்பொழுது தான் அரசாங்கப் பொறுப்பு ஏற்பதற்குத் தகுதியாக இருக்க முடியும் ஜப்பானிய ஜனநாயகத்தின் எதிர்காலம் அரசியற்கட்சிகளைப் பொறுத்திருக்கிறது.

# அத்தியாயம்—9

## செல்வாக்குக் குழுக்கள்

19-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஜப்பான் வேகமாகப் பொருளாதார முன்னேற்றமடைந்த பொழுது சிறிய தொழில் நிறுவனங்களெல்லாம் பெரிய தொழில் நிறுவனங்களால் எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ்வாறு வளர்ந்த பெரிய தொழில் நிறுவனங்கள் செல்வாக்கு மிகுந்த பிரபுக்களின் குடும்பங்களால் நிறுவப்பட்டவையாகும். இந்த இணைக்கப்பட்ட தொழிற்குழுக்கள் தலையிடாத தொழில்கள் இல்லை. இவை தொழில் துறையிலுள்ள மிகுந்த செல்வாக்கை வைத்துக்கொண்டு, பணப் பலத்திஞல் அரசியல் துறையில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தன. அரசியற்கட்சிகளும் நிதித் தேவைகளுக்குப் பணக் குழுக்களையே எதிர்பார்த்திருந்தன. இவ்வாறு ஜப்பானின் நவீன அரசியல் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே செல்வாக்குக் குழு விசேஷமானதொரு பங்கு எடுத்துக்கொண்டது.

இரண்டாவது உலகப்போருக்கு முன் தொழிற்குழுக்களே அரசியலில் செல்வாக்குச் செலுத்த முற்பட்டன. இரு நூற்றுண்டின் ஆரம்பத்தில் வாக்குரிமை முதலில் வயது வந்த ஆடவர்களுக்கும், போருக்குப் பிறகு வயது வந்த பெண்களுக்கும் அளிக்கப்பட்டவுடன் ஜப்பானிய ஜனநாயகத்திற்கு அகன்ற ஓர் ஆதாரம் அளிக்கப்பட்டது. இது காரணமாக அரசியற்கட்சிகளும், செல்வாக்குக் குழுக்களும் பரந்த அடிப்படையில் செயற்பட ஆரம்பித்தன. ஜப்பானில் இப்போது செல்வாக்குக் குழுக்கள் அரசாங்கத்திடம் பலவகைப்பட்ட நிறுவனங்கள் மூலம் செல்வாக்குச் செலுத்த முற்படுகின்றன.

மற்றத் தேசங்களைப்போல ஜப்பானிலும் தொழிலதிபர் சங்கங்களும், தொழிலாளர் சங்கங்களும், விவசாயிகள் சங்கங்களும் முக்கியமான செல்வாக்குக் குழுக்களாகும். தொழிலதிபர் சங்கங்களில் மிக முக்கியமானவை பின் வருவன: பொருளாதார நிறுவனங்களின் கூட்டுச் சங்கம் (Federation of Economic Organisation), தொழில் முதலாளிகளின் கூட்டுச் சங்கம் (Japan Federation of Employers' Association), வியாபாரத் தொழில் மன்றம் (Chamber of Commerce and Industry). இவற்றில் பொருளாதார நிறுவனங்களின் கூட்டுச் சங்கமே பேராற்றல் பொருந்திய நிறுவனம். இதில் வியாபார வாணி

கக் கூட்டுச் சங்கங்களும், வாணிபச் சங்கங்களும், தனிப்பட்ட வியாபாரஸ்தலங்களும் இணைக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்வதும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டங்கள் வகுப்பதும் இதன் முக்கிய அலுவல்களாகும்.

தொழில் முதலாளிகள் கூட்டுச் சங்கம் முதலாளிகள் தொழிலாளிகள் உறவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் தனது முழு அக்கறையைச் செலுத்துகிறது. வாணிப வியாபார மன்றங்கள் தனிப்பட்ட தொழில்களின் வளர்ச்சிக்காகப் பாடு படுகின்றன ; வாணிப ஸ்தாபனங்களைக் கண்காணிக்கின்றன ; விற்பனை ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றன ; அரசாங்கத்திற்கும் தொழில் துறைக்கும் தொடர்பு ஏற்படுத்தும் சாதனமாய் விளங்குகின்றன.

மேற்கூறிய எல்லா நிறுவனங்களும் பொருளாதார ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டு, ஆராய்ச்சியின் முடிவுகளைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கின்றன. இவ்வாறு பொதுமக்கள் கருத்துகளை உருவாக்க முயல்கின்றன; அரசியற்கட்சிகளிடம் தங்கள் கொள்கைகளை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றன. அரசாங்க அதிகாரிகளை நேரில் சந்தித்து, சங்கங்களின் உத்தியோகஸ்தர்கள் தங்கள் சங்கங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஏற்பாடு செய்யலாம்.

ஜப்பானில் தொழிலாளர் இயக்கம் இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் வளர ஆரம்பித்தது. அரசாங்கம் விதித்த தடைகளினுல் தொழிற்சங்க இயக்கம் பலத்துடன் வளர வாய்ப்பில்லை. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு மாறுபட்ட சூழ்நிலைகளினுலும் அமெரிக்க இராணுவத் தலைவர்கள் காட்டிய ஊக்கத்தினுலும் தொழிற்சங்க இயக்கம் புத்துயிர் பெற்று வளர ஆரம்பித்தது. இப்போது 60 இலட்சம் அங்கத்தினர்களைக் கொண்ட 30,000 தொழிற்சங்கங்கள் இருக்கின்றன.

ஜப்பானில் பெரும்பான்மையான சங்கங்கள் ஒரு வியாபார ஸ்தலத்திற்கு ஒரு சங்கமாக அமைக்கப்பட்டுள்ளன. ஒரு வியாபார ஸ்தலத்திலுள்ள எல்லாத் தொழிலாளர்களும், (வெள்ளைக்காலர் தொழிலாளிகள் உட்பட) ஒரு சங்கத்தின் அங்கத்தினர்களாகி அச் சங்கத்தின் தலைமையைக் கற்றறிந்த மேற்பதவிகளிலிருக்கும் உத்தியோகஸ்தர்களிடம் விட்டுவிடுகின்றுர்கள். சங்கங்கள் இவ்வாறு அமைக்கப்படுவதால் தொழிற்சங்க மனப்பான்மையும் வகுப்பு வித்தியாச மனப்பான்மையும் வளருவதற்கு வாய்ப்பு இல்லை. இச் சங்கங்கள் தனியாகவும் இயங்கலாம்; மற்றக் கூட்டுச் சங்கங்களிலும் சேரலாம். ஜப்பானியத் தொழிற்சங்கங்களின் பொதுக் குழு (General Council of Trade Unions of Japan) 30 இலட்சம் அங்கத்தினர்களைக் கொண்டது. இது பல வகைப்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட கூட்டுச் சங்கமாய் விளங்குகிறது. அகில ஜப்பான் தொழிற்சங்கக் காங்கிரஸ் 6,70,000 அங்கத்தினர்களைக் கொண்டது.

மற்ற இரு சிறிய கூட்டுச் சங்கங்கள் 40,000 அங்கத்தினர்களேயும், 10,000 அங்கத்தினர்களேயும் கொண்டுள்ளது. தேசியக் கூட்டுச் சங்கங்களில் இணைக்கப்படாமலும் பல சங்கங்கள் இருக்கின்றன.

தனித் தொழிற்சங்கங்கள் பெரும்பாலும் பொருளாதார விஷயங்களில் கவனத்தைச் செலுத்துகின்றன. கூட்டுச் சங்கங்கள் அரசியல் விஷயங்களில் கவனத்தைச் செலுத்துகின்றன. ஸ்தலச் சங்கங்களின் போக்கிற்கும் தேசியக் கூட்டுச் சங்கங்களின் போக்கிற்கும் உள்ள இவ்வித்தியாசத்தினுல் தொழிற்சங்கங்கள் அரசியலில் செலுத்தும் செல்வாக்கு அவ்வளவு விசேஷமானதன்று.

குடியானவரின் நலத்திற்காகப் பாடுபடக் குடியானவர் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன. கிராம, நகர, பிரிபெக்சர்களில் செயலாற்றிவரும் விவசாயச் சங்கங்களின் கூட்டுச் சங்கமாக, சாம்ராஜ்ய விவசாயச் சங்கம் (Imperial Agricultural Association) 1910ல் ஏற்படுத்தப்பட்டது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு உண்டான வழிகளே வகுப்பதும், விவசாய விலேகளேக் காப்பதும், நிலச்சுவான்களுக்கும் குடியானவனுக்கும் உள்ள தகராறுகளேத் தீர்ப்பதும் இதன் முக்கிய அலுவல்களாகும். கீழ்த்தரப்புகளிலே இக்காரியங்களேச் சங்கம் கவனித்து வந்தது. மத்திய ஸ்தாபனம் அரசியல் விஷயங்களிலே அக்கறை காட்டியது. மேலும், இச்சங்கம் நிலச்சுவான்களின் நலனேயே அடிப்படைக் குறிக்கோளாகக் கருதியது என்றும் சொல்லப்படுகிறது.

நிலச்சுவான்களிடமிருந்து பாதுகாப்பதற்காகச் சோஷலிஸ்டுகள் குடியானவர் சங்கங்கள் 1922ல் அமைக்கப்பட்டன. நில வரியைக் குறைக்கப் பாடு பட்டனர். ஒற்றுமைக் குறைவினுல் அவர்களுடைய முயற்சிகள் பயன் கொடுக்கவில்லே. 1952ல் விவசாயக் கூட்டுறவு சங்கம் 80 இலட்சம் அங்கத்தினர் கொண்ட 35,000 ஸ்தலக் கூட்டுறவு சங்கங்கள் சேர்ந்த மத்திய சங்கமாய் விளங்கிற்று. இச்சங்கங்கள் கூட்டுறவுப் பயிற்சித் தொழிலில் ஈடுபடவில்லே. குடியானவனுக்கு வேண்டிய வசதிகளேக் கூட்டுறவு சங்கங்கள் சௌகரியமாகவும் எளிதாகவும் கிடைக்க உதவி செய்தன ; குடியானவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அரசாங்கத்திடம் குடியானவர்களின் பிரதிநிதியாகச் செயலாற்றின.

மற்றச் செல்வாக்குக் குழுக்கள் மாதர் சங்கங்களும், மாஜி இராணுவத்தினர் சங்கங்களுமாகும் (Veterans organisations). பெண்களுக்குப் புதிய அமைப்பில் வாக்குரிமை கொடுக்கப்பட்ட பிறகு அவர்கள் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றுர்கள். நாட்டில் பல இடங்களில் மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டன; குடும்பத் தலேவிகள் கூட்டுச் சங்கம் (Federation of House wives) சுமார் 200 மாதர் சங்கங்களின் தேசியக் கூட்டுச் சங்கமாகும். 1955ல் இச்சங்கம் வெற்றிகரமாகப் பிரசாரம் நடத்தி, பாற்பண்ணேகள்

பால் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்தது. அவசியம் ஏற்பட்ட பொழுது அரசாங்கத் தலைவர்களை நேரிற்சந்தித்துச் சங்கத்தின் பிரதி நிதிகள் தங்கள் குறைகளைத் தீர்க்க ஏற்பாடு செய்யலாம்.

ஜப்பானில் போர் வெறிக்கு 1930ல் உற்சாகமூட்டியதற்கு ஒய்வு பெற்ற இராணுவத்தினர் சங்கங்கள் ஓரளவு காரணமாய் இருந்தன. அப்பொழுது அவை முக்கியமான செல்வாக்குக் குழுக்களாய் இருந்தன. போருக்குப் பிறகு அச்சங்கங்கள் ஒழிக்கப்பட்டன. இப்பொழுது திரும்பவும் மாஜி இராணுவத்தின் சங்கங்கள் மாஜி இராணுவத்தினர் குறைகளைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பென்ஷன்களைத் திரும்பப் பெறுவதற்கென்று ஏற்படுத்தப்பட்ட சங்கம், 1952ல் மாஜி உத்தியோகஸ்தர்களுக்கு உண்டான பென்ஷன்களுக்காகக் கிளர்ச்சி செய்து திரும்பவும் பெற்றது. 1956ல் மாஜி இராணுவத்தினர் சங்கம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டது. இதில் 10 இலட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

செல்வாக்குக் குழுக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பல வழிகளைக் கடைப்பிடிக்கின்றன. அவர்கள் குறைகளைச் சட்ட சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குப் பிரசாரக்கூட்டங்கள் நடத்தித் தீர்மானங்கள் இயற்றி, இத்தீர்மானங்களுடன் பதவியிலிருப்பவர்களைச் சந்தித்துப் பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுவது சாதாரண வழியாகும். துண்டுப் பிரசுரங்களைப் பிரசுரித்து மக்களின் அபிப்பிராயத்தை அவர்களுக்குச் சாதகமாக விருத்தி செய்வது மற்றொரு வழியாகும். அரசாங்கத்தில் உள்ள முக்கிய உத்தியோகஸ்தர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்து அவர்கள் மூலம் காரியங்களைச் சாதிப்பது எல்லாவற்றையும்விடப் பலனளிக்கக் கூடிய வழியாகும். இவையெல்லாம் ஜப்பானியச் செல்வாக்குக் குழுக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன.

# அத்தியாயம்—10

## நீதித்துறை

மாஜி அரசியலமைப்பில் நீதி பரிபாலனம் பேரரசர் பெயரால் நீதி மன்றங்களால் செய்யப்பட்டு வந்தது. நீதி மன்றங்கள் பொது வாகச் சுயேச்சையுடன் இயங்கின; ஆனல், ஆட்சித் துறைக்குக் கீழ் அமைக்கப்பட்டிருந்தன. நீதி மன்றங்கள் பற்றிய இறுதி அதிகாரம் நீதி மந்திரியிடமே இருந்தது. நீதி இலாக்காவிற்கு நீதிமன்றங்களின் தீர்ப்புகளை மாற்றுவதற்கு அதிகாரம் இல்லாதிருந்த போதிலும், நீதி பரிபாலனம் சம்பந்தப்பட்ட சில விஷயங்களின் முக்கிய அதிகாரம் இருந்தது. முதலாவதாக நீதி மன்றங்களின் செயல் முறை பற்றி விதிகள் வகுக்கும் அதிகாரம் அதற்கு இருந்தது. இரண்டாவ தாக நீதிபதிகளை நியமிப்பதும் பதவியில் உயர்த்துவதும் அதன் பொறுப்பாய் இருந்தன. மூன்ருவதாகக் கிரிமினல் வழக்குத்தொடர் வது நீதி இலாக்காவின் பொறுப்பாய் இருந்தது.

நீதி மன்றங்களின் அதிகாரங்களில் குறைபாடுகள் இருந்தன. மாஜி அரசியல் அமைப்பில் பார்லிமெண்டு இயற்றும் சட்டங்களை ஆராய்ந்து அவை அரசியலமைப்புத் திட்டத்திற்கு முரணுய்இருந்தால் அவற்றைச் செல்லாதனவாக்கும் அதிகாரம் நீதி மன்றங்களுக்கு இல்லை. ஆட்சித் துறையால் இயற்றப்படும் அவசரச் சட்டங்களை (ordinance) இவ்வாறு ஆராய்வதற்கு மாத்திரம் அதிகாரம் இருந்தது. மேலும், பிரஜைகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்படும் தகராறுகளில் தீர்ப்புக்கூறும் அதிகாரம் இல்லை. ஆட்சி முறை வியாச்சியங்களை (administrative litigation) விசாரிக்க ஆட்சி முறை நீதி மன்றம் (administrative Court) தனியாய் இருந்தது. இம்மன்றம் அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்கும் ஏற்படும் வரித் தகராறுகள், லைசென்ஸ் பெர்மிட்டு வாங்குவதில் ஏற்படும் தகராறுகள், போலீஸ் நிருவாகத்தில் ஏற்படும் தகராறுகள் போன்ற ஆட்சி முறை வழக்கு களில் தீர்ப்பு அளித்தது. இவ்விஷயங்களில் சாதாரண நீதி மன்றங் களுக்கு அப்பீல் அதிகாரமோ, தீர்ப்புகளை மாற்றும் அதிகாரமோ இல்லை. சாதாரணக் கோர்ட்டுப் பிரஜைகளைச் சட்டமன்றத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் அதிகாரம் இல்லாமலிருந்த

தோடல்லாமல், ஆட்சி முறை அதிகாரத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் அதிகாரமும் இல்லை.

நீதி மன்றங்கள் உச்ச உயர்நீதி மன்றம் (supreme Court), உயர் நீதி மன்றங்கள், ஜில்லாக் கோர்ட்டுகள், ஸ்தல ஸ்தாபன மன்றங்கள், போலீஸ் மன்றங்கள் என்று வரிசைக் கிரமமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. உச்ச உயர்நீதி மன்றம் 45 நீதிபதிகளைக் கொண்டிருந்தது; பிரிவுக்கு 9 நீதிபதிகளுடன் 9 பிரிவுகளாகச் செயலாற்றி வந்தது; கீழ் மன்றங்களிலிருந்து வரும் அப்பீல்களை விசாரணை செய்தது. ராஜத் துரோகம், மற்றும் பேரரசர் குடும்பத்திற்கு விரோதமாகச் செய்யப் படும் குற்றங்களை விசாரணை செய்வதற்குப் பிரத்தியேக அதிகாரம் உச்ச உயர்நீதி மன்றத்திற்கு இருந்தது. உச்சஉயர்நீதி மன்றத்திற்குக் கீழ்ப் பிராந்தியத்திற்கு ஒரு மன்றமாக 7 அப்பீல் மன்றங்கள் இருந்தன. இவை ஜில்லா மன்றங்களில் வரும் அப்பீல்களை விசாரித்தன. ஒவ்வொரு பிரிபெக்சருக்கு (prefecture) ஒன்ருகச் சுமார் 50 ஜில்லா நீதி மன்றங்களிருந்தன. இவை முக்கியமான சிவில் கிரிமினல் வழக்குகளை விசாரித்தன. இவற்றிற்குக் கீழ் இருந்த 300 ஸ்தல ஸ்தாபன நீதிமன்றங்கள் மிகச்சிறிய வழக்குகளை விசாரித்தன.

புதிய அரிசியலமைப்புத் திட்டம் நீதித் துறையில் தீவிரமான மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கிறது. புதிய திட்டத்தின் 76-ஆம் பிரிவின்படி நீதி அதிகாரம் உச்ச உயர்நீதி மன்றத்திற்கும் மற்றக்கீழ் நீதிமன்றங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பிரிவு குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி விசாரணை நடத்த விசேஷ நியாயஸ்தலங்கள் ஏற்படுத்தப்படக் கூடாதென்றும், ஆட்சித்துறையின் உறுப்புஎதற்கும் இறுதி நீதி அதிகாரம் கொடுக்கப்படக்கூடாது என்றும் தெளிவாகக் கூறுகிறது. 81-ஆம் பிரிவு, சட்டங்கள், விதிகள், நிர்வாகத்துறையின் செயல்கள் அரசியல் திட்டத்திற்குட்பட்டனவா என்பதைநிர்ணயிக்க உச்ச உயர்நீதி மன்றத்திற்கு இறுதி அதிகாரம் கொடுத்திருக்கிறது. மேலும், மற்ருெரு பிரிவு, நீதி மன்றங்களின் செயல் முறை விதிகளை வகுத்துக்கொள்வதற்கு முழு அதிகாரத்தையும் உயர்நீதி மன்றத் திற்குக் கொடுத்திருக்கிறது. இம்மூன்று பிரிவுகளும் உச்ச உயர்நீதி மன்றத்திற்கு ஈடற்ற அதிகாரத்தைக் கொடுத்து அதை அரசிய லமைப்பின் காப்புக் கருவி ஆக்கியிருக்கின்றன.

நீதி மன்றங்களின் சுயேச்சையைக் காப்பதற்கு அரசியல் திட்டம் சில வழிகளை வகுத்திருக்கிறது. நீதிபதிகள் மீது ஆட்சித்துறை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கமுடியாது. பிரத்தியேகமாக ஏற்படுத்தப் பட்ட பொதுக்குற்ற விசாரணை மன்றத்தின் முன் குற்றஞ்சாட்டப் பட்டு விசாரணைக்குப் பிறகே பதவியினின்று நீதிபதிகள் நீக்கப் படலாம். நீதிபதிகளின் ஊதியத்தைப் பதவிக் காலத்தில் குறைக்க இயலாது. கீழ் மன்றங்களின் நீதிபதிகளை உச்ச உயர்நீதி மன்றம் கொடுக்கும் ஜாபிதாவிலிருந்தே அமைச்சரவை நியமிக்கலாம். உச்ச

உயர்நீதி மன்ற நீதிபதிகளின் நியமனத்தில் பொது மக்களுக்கும் ஒரு பங்கிருக்கிறது. அவர்களை அமைச்சரவை நியமனம் செய்கிறது. புதிய நீதிபதிகள் பதவி ஏற்ற பிறகு நடக்கும் பொதுத் தேர்தலில் அவர்கள் நியமனம் மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். பெரும் பான்மை வாக்காளர்கள் நீதிபதிகளை நீக்கவேண்டுமென்று வாக்களித் தால், நீதிபதிகள் உடனே நீக்கப்பட வேண்டும். இவ்வாறு ஒரு தடவை மாத்திரம் நியமனத்திற்கு மக்களின் ஒப்புதலைப் பெறுதல் போதாது. 10 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் மக்கள் நீதிபதிகள் மீது தங்கள் நம்பிக்கையைத் தெரிவிக்க வேண்டும். நீதிபதிகள் மக்களுக்குப் பொறுப்புள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டும். மேலும், அரசியல் திட்டம் நீதி மன்றங்களின் செயல் முறை பற்றிக் குறிப்பிடும்பொழுது மக்களுக்கு அவற்றின் பொறுப்பை நன்கு உணர்த்துகிறது. நீதிமன்றங்கள் விசாரணைகளைப் பகிரங்கமாக நடத் தித் தீர்ப்புகளை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். நீதி மன்றம் விசாரணையைப் பகிரங்கமாக நடத்துவது பொதுஜன ஒழுங் கிற்கோ நீதிக்கோ தீங்கிழைக்கும் என்று ஏகமனமாக எண்ணினுல், இரகசியமாக நடத்தலாம். ஆனுல், அரசியல் குற்றங்களையோ அல்லது மக்களின் ஜீவாதார உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் பற்றிய விசாரணைகளையோ எப்பொழுதும் நீதி மன்றங்கள் பகிரங்க மாகவே நடத்த வேண்டும்.

நீதி மன்றங்களின் அமைப்பிலும் சில மாறுதல்கள் காணப்படு கின்றன. உச்ச உயர்நீதி மன்றத்திற்குப் பிரத்தியேகமாக மேல் விசாரணை செய்யும் அதிகாரந்தானிருக்கிறது. உச்ச உயர்நீதி மன்றத்திற்குக் கீழ் நான்கு வகை நீதி மன்றங்கள் இருக்கின்றன. எட்டு உயர்நீதி மன்றங்கள், கீழ் மன்றங்களிலிருந்து வரும் அப்பீல் களை விசாரணை செய்கின்றன. இவற்றிற்குக் கீழ் முக்கியமான கிரிமினல் சிவில் வழக்குகளை விசாரிக்க மூல அதிகாரம் பெற்ற 49 ஜில்லாக் கோர்ட்டுகள் இருக்கின்றன. இவற்றிற்குக் கீழ் உள்ள சுருக்க விசாரணை (summary courts) மன்றங்களிலிருந்து வரும் அப்பீல்களையும் விசாரிக்கின்றன. சுருக்க விசாரணை மன்றங்கள் (சுமார் 570) சிறிய கிரிமினல், சிவில் குற்றங்களை விசாரிக்கின்றன. குடும்ப நீதிமன்றங்கள் (சுமார் 49) குடும்பத் தகராறுகள் பற்றியும் வழிதவறிய இளைஞர்களின் குற்றங்களையும் விசாரிக்கின்றன. இந்தக் கோர்ட்டுகள் குடும்பத் தகராறுகளைச் சமரசம் செய்யவும், இளைஞர் களைச் சீர்திருத்தம் செய்யவும் முயல்கின்றன.

உச்ச நீதி மன்றம் 15 நீதிபதிகளைக் கொண்டது. பிரதம நீதிபதி அமைச்சரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பேரரசரால் நியமிக்கப் படுகிருர். மற்ற நீதிபதிகள் அமைச்சரவையால் நியமிக்கப்படு கின்றனர். நீதி மன்ற அமைப்புச் சட்டம் (court organisation law, 1947) நீதிபதிகள் குறைந்த பட்சம் 40 வயது உள்ளவர்களாய்

இருக்க வேண்டும் என்றும், 10 நீதிபதிகளாவது சட்டத் துறையில் 10 வருஷ அனுபவமுடையவர்களாய் இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடுகிறது. உச்ச உயர்நீதி மன்றச் சுருக்க விசாரணை மன்ற நீதிபதிகளின் பதவி ஓய்வுக்காலம் 70 வயதென்றும், உயர்நீதி மன்ற ஜில்லா நீதி மன்ற நீதிபதிகளின் ஓய்வுக் காலம் 65 வயதென்றும் மேற்கூறிய சட்டம் குறிப்பிடுகிறது. நீதிபதிகளைக் குற்றஞ்சாட்டிப் பதவியிலிருந்து நீக்கும் முறையையும் அச் சட்டம் குறிப்பிடுகிறது. பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுச் சபைக்கு 7 அங்கத்தினர்களாக 14 அங்கத்தினர்கள் கொண்ட குற்ற விசாரணை மன்றத்தினால் முடிவு செய்யப் படுகிறது. எந்தக் காரணங்களுக்காகக் குற்றஞ்சாட்டப்படலாம் என்பதை அச்சட்டம் குறிப்பிடுகிறது.

உச்ச நீதி மன்றம் தன் அதிகாரங்களை மிகவும் ஜாக்கிரதையாகவே செலுத்தி வருகின்றது. இது வரை நீதிப் புனராய்வு அதிகாரத்தை உபயோகப்படுத்தி ஒரே ஒரு தடவைதான் சட்டத்தை அரசியல் திட்டவரம்புக்கு மீறியிருக்கிறது என்று தீர்ப்பளித்திருக்கிறது. ஜப்பானில் ஜனநாயகம் வெளிநாட்டவர்களால் ஸ்தாபிக்கப் பட்ட அரசாங்க முறையாகும். இன்னும் இம்முறை வேரூன்றித் தழைக்கவில்லை ஆதலால், ஜப்பானியத் தலைமை நீதிமன்றம் அரசாங்கம் இயற்றும் சட்டங்களைச் சீர்தூக்கிப்பார்த்து, தவிர்க்க முடியாத சமயங்களிலேயே தனது நீதிப்புனராய்வு அதிகார அடிப்படையில் செல்லத்தக்கவையல்ல என்று அறிவிக்கிறது. இது ஜனநாயகம் மேன்மேலும் வரை உறுதுணையாயிருக்கிறது எனலாம்.

# அத்தியாயம்—11

## நிருவாகத்துறை

நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களால் அரசாங்கத்தின் நிருவாகம் நடத்தப்படுவது என்பது ஜப்பானில் தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கம் என்று சொல்லலாம். அதிகார வர்க்கத்தினரின் செல்வாக்கு அரசியற்கட்சிகளுடைய அல்லது சட்ட சபைகளின் தலையீடில்லாமல் வளர்ந்தது. மாஜி மீட்சிக்குக் காரணமாய் இருந்த சமுராய் என்று வழங்கப்பட்ட போர் வீரர் வகுப்பே மீட்சிக்குப் பிறகு தேசத்தின் நிருவாகத்திலும் முக்கியப் பங்கெடுத்துக்கொண்டது. சாமுராய் வகுப்பிலும் குறிப்பிட்ட சில பகுதிகளைச் (முக்கியமாக மேற்கு ஜப்பான்) சேர்ந்தவர்களுக்கே அரசாங்க உத்தியோகங்கள் கிடைத்தன. அரசாங்கப் பதவிகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்தக் கிளர்ச்சியைச் சமாளிக்கவே முதலில் ஜப்பானியச் சிவில் பணிக்குத் தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றி அமைக்கச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 1885ல் அரசாங்கப் பதவிகளுக்கு நியமனம் செய்யப் பரீட்சைகள் வைத்துத் திறமை மிக்கவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டு 1887ல் இரண்டாம் மூன்றாந்தர உத்தியோகஸ்தர்களுக்குப் பரீட்சைகள் வைக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டது.

மாஜி அரசியலமைப்பில் நிருவாகத் துறை, உயர்தர உத்தியோகஸ்தர்கள் சாதாரண உத்தியோகஸ்தர்கள் என்று இரண்டு முக்கிய வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தது. உயர்தர உத்தியோகஸ்தர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள். காபினட்டு மந்திரிகள், தூதர்கள், உயர்நீதி மன்ற நீதிபதிகள் முதல்தர உத்தியோகஸ்தர்கள் ஆவார்கள். உப மந்திரிகள், இலாக்காத் தலைமை உத்தியோகஸ்தர்கள், கீழ் மன்ற நீதிபதிகள் இரண்டாம்தர உத்தியோகஸ்தர்கள் ஆவார்கள். மற்றக் கீழ்ப் பதவிகளை வகித்தவர்கள் மூன்றாம்தர உத்தியோகஸ்தர்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களில் 5 சதவிகிதமே உயர்தரச் சிவில் பணியைச் சேர்ந்தவர்கள். சாதாரணச் சிவில் பணி நான்காந்தர உத்தியோகஸ்தர்களையும் பாகுபாடு

செய்யப்படாத (unclassified) உத்தியோகஸ்தர்களையும் கொண்டது. உத்தியோகஸ்தர்களில் சுமார் நான்கில் மூன்று பங்கினர் பாகுபாடு செய்யப்படாத பகுதியைச் சேர்ந்தவராவர்.

முதல்தர உத்தியோகஸ்தர்கள் தவிர, மற்ற உயர்தரப் பதவி களுக்குப் போட்டிப் பரீட்சைகள் மூலம் நியமனம் செய்யப்பட்டது. இப்போட்டிப் பரீட்சை பெரும்பாலும் டோக்கியோ சாம்ராஜ்யப் பல்கலைக் கழக (Tokyo Imperial University)ச் சட்டத்துறை அங்கத் தினர்களைக் கொண்ட கமிட்டியால் வருஷா வருஷம் டோக்கியோவில் நடத்தப் பட்டது. இந்தப் பல்கலைக் கழகந்தான் முதலில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பயிற்சி அளித்தது. பெரும்பாலும் சட்டப் பாடங்களில் பரீட்சைகள் வைக்கப்பட்டதால் சாம்ராஜ்யப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தேறுவதற்கு நல்ல வாய்ப்புக் கொடுத்தது. உயர்ந்த பதவிகளில் பெருவாரியாக அவர்களே இடம் பெற்றனர்கள்.

சாதாரணச் சிவில் பணிப் பரீட்சைகளுக்கு உயர்தரப் பள்ளிப் பட்டதாரிகளே போட்டியிட்டார்கள். இவர்களே நிருவாகத் துறை யின் அன்றாட அலுவல்களைக் கவனித்துவந்தார்கள். ஆனால், இவர் களுக்கு உயர்ந்த பதவிகளில் உள்ளஉத்தியோகஸ்தர்களுக்கு இருந்த மரியாதையோ அந்தஸ்தோ இல்லை. இவர்களுக்கு உயர்ந்த உத்தி யோகங்களுக்கு உத்தியோக உயர்வு பெறுவதற்கும் வாய்ப்பில்லை. இதனால், ஜப்பானியச் சிவில் பணியில் உயர்வு தாழ்வு மனப்பான்மை அதிகமாய் இருந்தது. உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்களை ஒரு தனி வகுப்பாகக் கருதினார்கள். உத்தியோகஸ்தர்களுக்குள் பொறுமை உணர்ச்சி இருந்ததோடல்லாமல் இலாக்காக்களுக்குள் பொறுப் புணர்ச்சியும் போட்டி உணர்ச்சியும் மிகுந்திருந்தன. இலாக்காக் களுக்குள் ஒத்துழைப்பு என்பதே இல்லை.

ஜப்பானிய மக்களிடம் அதிகார வர்க்கத்தின் உறவுகள் சுமுக மாக இல்லை. மாஜி அமைப்பில் அதிகாரிகள் பேரரசருக்குப் பொறுப் புள்ளவர்களாய் இருக்கவேண்டுமேயல்லாது, மக்களுக்குப் பொறுப் புள்ளவர்களாய் இருக்கவேண்டுவதில்லை. இது அவர்களுக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்ததோடல்லாமல் அவர்களை யாருக்கும் பொறுப்பற்றவர்களாக்கிவிட்டது. ஜப்பானில் உத்தியோகஸ்தர்கள், 'கர்வம் படைத்தவர்கள், மக்களைத் துச்சமாக எண்ணுகிறவர்கள் என்ற பெயர் வாங்கிவிட்டார்கள். அதிகார வர்க்கத்தினர் பொது ஜன உறவுகளிற் கவனம் செலுத்தாததே இந்த மனப்பான்மைக்குக் காரணம்.

புதிய அரசியல் திட்டத்தில் நிருவாகத் துறைபற்றி ஒன்றும் விசேஷமாகக் குறிப்பிடப்படாத போதிலும் நிருவாகத்துறைக்குச் சில சீரிய குறிக்கோள்களை அரசியல் திட்டம் அளிக்கிறது. அரசியல் திட்டம் ஜீவாதார உரிமைகள்அத்தியாயத்தில் எல்லாஅரசாங்க உத்தி யோகஸ்தர்களும் சமுதாயத்தின் ஊழியர்கள் என்றும், மக்களுக்கு

உத்தியோகஸ்தர்களின்மீது ஏதாவது குறை இருந்தால் அதைநிவர்த்தி செய்ய அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக்கொள்ளலாம் என்றும் குறிப்பிடுகிறது. நிருவாகத் துறையும் மற்றத் துறைகளைப்போல அரசியலமைப்புத் திட்டத்திற்கு உட்பட்டு இயங்கவேண்டும் என்பதை அரசியல் திட்டம் பல இடங்களில் வலியுறுத்தியிருக்கிறது. நீதி மன்றங்களுக்கு நிருவாகத்துறை அரசியல் திட்டத்திற்கு உட்பட்டு இயங்குகிறதா என்பதைக் கவனிக்கவும் இயலாவிட்டால் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் திட்டம் நிருவாகத்துறையின் மனப்பான்மையை மாற்றுவதற்கு முயன்றபோதிலும், அவ்வாறு மாற்றுவது எளிதான காரியமன்று. அதிகார வர்க்கத்தின் ஆதிபத்தியம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. உலக யுத்தத்திற்குப்பிறகு இராணுவத் தலைவர்களும் கட்சித் தலைவர்களும் தலைமைப் பதவிகளினின்று நீக்கப்பட்டதால் அவர்கள் அனுபவம் காரணமாகத் தேசத்திற்குத் தலைமை தாங்குவதற்கு அதிகாரவர்க்கத்தினரே தகுதி உள்ளவராய் இருந்தனர். ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்கள் அரசியற்கட்சிகளின் தலைமைப் பதவிகளைக் கைப்பற்ற ஆரம்பித்தார்கள். அரசியற்கட்சிகளும் அவர்களை எதிர்கொண்டு அழைத்தன. மேலும், அமெரிக்க இராணுவத் தலைவர்களின் தூண்டுதலால் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் அமுலாக்குவதற்கு நிருவாகத்துறையின் உதவி அவசியமாய் இருந்தது. ஆட்சி அமைப்பில் பலமாக ஊன்றியிருந்ததால் மக்களாட்சிப்பாதையில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் அதிகார வர்க்கத்தை விசேஷமாகப் பாதிக்கவில்லை.

இருந்த போதிலும் அமெரிக்க இராணுவத் தலைவர்களின் தூண்டுதலின்பேரில் அதிகாரவர்க்கத்தின் அமைப்பில் சிற்சில மாறுதல்கள் கொண்டுவரப்பட்டன. தேசியப் பொதுப்பணிச் சட்டம் (National Public Service Law) *1948* ஜூலை மாதம் அமுலுக்கு வந்தது. புதுச் சட்டத்தின் நோக்கம் ஜனநாயக அடிப்படையில் திறமை மிக்க நிருவாகத்தை ஏற்படுத்தும்படி புதிய சட்டம் பொதுப்பணியைச் 'சாதாரணப் பணிகள், விசேஷப் பணிகள்' என்று இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கிறது. விசேஷப்பணி என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் பரீட்சையின்றி நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களையும் கொண்டது. அமைச்சரவை, தேசியப் பணியாளர் நிறுவனம், கணக்குத் தணிக்கை போர்டு, அங்கத்தினர்கள் காபினட்டுக் காரியதரிசி காரியாலய டைரக்டர் ஜெனரல், தூதர்கள், நீதிபதிகள் விசேஷப் பணியைச் சேர்ந்தவர்களாவார்கள். தேசியப் பொதுப்பணிச் சட்டம் அவர்களுக்குப் பயன்படுத்தப்பட மாட்டாது.

இந்தச் சட்டத்தை அமுலாக்குவதற்குத் தேசியப் பணியாளர் ஸ்தாபனத்தை (National Personnel Authority) ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ஸ்தாபனம் அமைச்சரவையின் அதிகாரத்தின்

கீழிருக்கிறது; அவ்வப்போது பிரதமமந்திரிக்கும் அமைச்சரவைக்கும் வருஷமொருமுறை டையட்டிற்கும் அறிக்கைகள் சமர்ப்பிக்கிறது. இது மூன்று கமிஷனர்களைக்கொண்டது. அவர்கள் பார்லிமெண்டின் ஒப்புதலுடன், அமைச்சரவையில் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுள் ஒருவரை அமைச்சரவை தலைவராக நியமிக்கிறது. இரண்டு அங்கத்தினர்கள் ஒரேகட்சியின் அங்கத்தினராகவோ, அல்லது ஒரேபல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரே துறையிலிருந்து வந்த பட்டதாரிகளாகவோ இருத்தல் கூடாது. நியமனத்திற்கு 5 வருஷத்திற்கு முன் அரசியற்கட்சியில் முக்கியமான பொறுப்பும் வகித்திருக்கக் கூடாது. தேர்தல் பதவிக்கும் போட்டியிட்டிருக்கக்கூடாது. கமிஷனர்களின் பதவிக்காலம் நான்கு வருஷங்களாகும். மேலும் இரு முறை நீடிக்கலாம். குறிப்பிட்ட சில காரணங்களால் அமைச்சரவையாலும் கமிஷனர்கள் நீக்கப்படலாம். டையட்டால் குற்றஞ்சாட்டப்பட்டு உச்ச உயர்நீதி மன்றத்தின் விசாரணைக்குப் பிறகு அவர்கள் நீக்கப்படலாம்.

தேசியப் பணியாளர் ஸ்தாபனம் ஒரு டைரக்டர் ஜெனரலை நியமிக்கிறது. அவரே அந்த ஸ்தாபனத்தின் நிருவாக உதவியாளர், அதனுடைய வாரக் கூட்டங்களில் அவரும் கலந்துகொள்வார். இலாக்காக்களின் பணியாளர் இயக்குனர்களைக்கொண்ட தேசியப் பணியாளர் கௌன்சிலின் (National Personnel Council) தலைவராகவும் அவர் விளங்கினார். இந்தக் கௌன்சில் தேசியப் பணியாளர் ஸ்தாபனத்திற்கும் அரசாங்க இலாக்காக்களுக்கும் இணைப்பு ஸ்தாபனமாய் விளங்குகிறது.

தேசியப்பணிச்சட்டம் தேசிய ஸ்தாபனத்தின் அலுவல்களை விவரமாக விளக்கியிருக்கிறது. நிருவாகத்துறை பற்றிய பொறுப்புகள் முற்றும் இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தனவே. காபினட்டு, பார்லிமெண்டு, நீதிமன்றங்கள் போலத் தேசியப் பணியாளர் ஸ்தாபனத்தைச் சுயேச்சையுள்ள, அதிகாரம் பொருந்திய ஒரு ஸ்தாபனமாக்க வேண்டுமென்பது இச்சட்டத்தை வகுத்தவர்களின் நோக்கம். அரசியலுக்கு அப்பாற்பட்ட, அரசாங்கத்தின் அன்றாடத் தலையீடுகளில்லாத ஸ்தாபனமாய் இருந்தால்தான் நிருவாகத்திற்குத் தூர திருஷ்டியும், திறமையும், நாணயமும் வாய்ந்த நபர்களைப் பெறுவதற்குச் சாத்தியக்கூறு உண்டு என்பதை உணர்ந்து பொதுப்பணி சம்பந்தமாக எழும் எல்லாப் பிரச்சினைகளையும் கவனிக்கத் தேசியப் பணியாளர் ஸ்தாபனம் நிறுவப்பட்டது.

அரசாங்க உத்தியோகங்களுக்கு நபர்களைத் தேர்ந்தெடுத்தலும் (recruitment), ஊதியம் (Compensation) நிர்ணயித்தலும், வேலை நிலைகளை வகுத்தலும் (Position Classification) உத்தியோக உயர்வு (Promotion) பற்றி விதிகள் வகுத்தலும், உத்தியோக ஓய்வு (Retirement) பற்றி விதிகள் வகுத்தலும், உத்தியோகஸ்தர்களின்

குறைபாடுகளைக் கவனித்தலும், தேசிய ஸ்தாபனத்தின் முக்கிய அலுவல்களாகும்.

சட்டங்களினாலோ அல்லது காபினட்டு உத்தரவுகளினாலோ நீக்கப்படாத எல்லாப் பதவிகளுக்கும் போட்டிப்பரீட்சைகளினாலும் மற்றத் திறமைச் சோதனைகளினாலும், அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கின்றனர். நியமிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு காலி இடத்திற்கு 5 தகுதியானவர் ஜாபிதாவைப் பணியாளர் ஸ்தாபனம் அனுப்புகிறது. இந்த ஜாபிதாவிலிருந்தே காலியிடங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். பதவி உயர்வுக்கும் இவ்வாறே ஜாபிதாக்கள் தயார் செய்யப்பட்டு அனுப்பப்படுகின்றன. தாற்காலிகமாக 12 மாதங்கள் வரை நியமிக்கும் உத்தியோகஸ்தர் தாமாகவே நியமனம் செய்யலாம். நியமிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் இருந்த போதிலும், இறுதி அதிகாரம் தேசியப்பணியாளர் ஸ்தாபனத்திடமே இருக்கிறது. சம்பளங்களைக் கூட்டுவதற்கு அவசியம் ஏற்படும்படி வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கிறது என்று தேசிய ஸ்தாபனம் நினைத்தால், அதுடையட்டிற்கும், அமைச்சரவைக்கும் சம்பளத்தைக் கூட்டும்படி சிபாரிசு செய்யலாம்.

இவ்வளவு அதிகாரங்கள் ஒரு சுயேச்சையான ஸ்தாபனத்திற்கு இருந்த போதிலும் அது வெற்றிகரமாக இயங்குவது அரசாங்கத்தின் மற்ற அரசாங்கங்களின் ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது. இதுகாறும் ஆற்றிவந்த பொறுப்புகளை ஒரு சுயேச்சை ஸ்தாபனத்திடம் விட்டுவிட மந்திரிகள் விரும்பவில்லை. மேலும், அனுபவமிக்க நிருவாக உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு மேல் அதிகாரம் செலுத்தக்கூடிய ஒரு ஸ்தாபனம் வளர்வதை விரும்பவில்லை. ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்களை அதிகமாகக் கொண்டிருக்கும் மேற்சபை இம்முற்போக்கான சீர்திருத்தத்தை அமுலாக்குவதற்குத் தடையாய் இருக்கிறது. தனது அதிகாரத்திற்கு இத்தனை எதிர்ப்புகள் இருப்பதால், தேசியப்பணியாளர் ஸ்தாபனம், பழைய வழிகளைத் திருத்துவதில் மெதுவாகவே இயங்க முடிகிறது.

இனி, ஜப்பானிய அமைப்பில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகளைக் கவனிப்போம்: உத்தியோகஸ்தர்கள் அரசியற்கட்சிகளில் சேரலாம்; தேர்தல்களில் வாக்களிக்கலாம். ஆனால், கட்சிகளின் ஆலோசனையாளர்களாக இருக்கவோ, அலுவலர்களாக இருக்கவோ, அல்லது கட்சி வேலைகளில் பங்கெடுத்துக்கொள்ளவோ கூடாது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தொழிலாளர் சங்கங்களில் சேரலாம். இச்சங்கங்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம். 1948-ஆம் வருஷம் தேசியப் பணிச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்தம்

கூட்டுப்பேரம் செய்வதையும் வேலை நிறுத்தங்களையும் தடை செய்தது. வேலை நிறுத்தத்தைத் தூண்டக்கூடிய செயல்களிலும் பங்கெடுக்கக்கூடாது. அவர்கள் வேலை நிலைகளின் மாற்றங்களை ஏற்படுத்தத் தேசியப் பணியாளர் ஸ்தாபனத்தை, வேண்டிக்கொள்ளலாம்; வேண்டுகோள்களை விசாரித்து ஸ்தாபனத்தின் சிபாரிசை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம். இறுதியான • முடிவு எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பே.

## படித்தற்குரிய சில நூல்கள்


| | |
|---|---|
| லென்பார்ஜர், சூ, பர்கன் | மேல்கிழக்கு நாடுகளின் அரசாங்கங்கள் |
| க்விக்லி, டர்னர் | புதிய ஜப்பான் |
| சிட்டோஷி யனுகா | ஜப்பானிய மக்களும் அரசியலும் |
| காஹின் | ஆசியாவின் பெரிய அரசாங்கங்கள் |

நான்காம் பிரிவு

# ஆஸ்திரேலியா

# அத்தியாயம்—1

## ஆஸ்திரேலியக் கூட்டாட்சி முறை

'கூட்டாட்சி அரசியலமைப்பை ஏற்படுத்துவதற்கு இரண்டு நிபந்தனைகள் அவசியம்,' என்ருர் டைசி என்பார். நாடுகள், இடம் சரித்திரம் அல்லது இனம் காரணமாக நெருங்கிய தொடர் புள்ளனவாய் இருக்கவேண்டும். இத்தொடர்பினுல் மக்கள் மனத் தில் தேசீய மனப்பான்மை ஊன்றியிருக்க வேண்டும். இந்த மனப் பான்மை அவர்களைத் தங்களுக்குள் ஒற்றுமையை விரும்பும்படி செய்யவேண்டும்; ஆனுல், ஒருமையை விரும்பும்படி செய்யக்கூடாது. ஆஸ்திரேலியக் குடியேற்ற நாடுகளிடையே முற்கூறிய நெருங்கிய தொடர்பு இருந்தது. டாஸ்மேனியா, தெற்கு ஆஸ்திரேலியா, விக்டோரியா, குவீன்ஸ்லாந்து என்னும் நான்கு நாடுகளும் நியூ ஸௌத் வேல்ஸிலிருந்து நிர்வாக வசதிக்காகப்பிரிக்கப்பட்டவைகளே. மேற்கு ஆஸ்திரேலியா மாத்திரம் 1829ல் தனியாக ஏற்படுத்தப் பட்ட நாடாகும். ஆரம்பத்தில் ஒன்ருய் இருந்த இந்த நாடுகளின் மக்கள் ஓரினத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரே மொழியைப் பேசினவர் கள். இந்த நிலைமை ஒற்றுமைக்கு அடி கோலியது. இரண்டாவது நிபந்தனையும் பெரும்பாலும் இருந்தது. மேற்கு ஆஸ்திரேலியா நீங்கலாக, மற்ற ஐந்து நாடுகளிலும் சுய ஆட்சி நடந்து வந்தது. ஒரு தலைமுறைக்கு மேலாக ஒவ்வொரு நாடும் குடியேற்ற எல்லையை விரிவடையச்செய்துகொண்டும், தொழிலபிவிருத்தி வேலைகளில் ஈடு பட்டுக்கொண்டும் இருந்தன. இம்முயற்சிகளின் வெற்றி இந்நாடு களிடையே பிரிவுணர்ச்சியை ஏற்படுத்தி அபிவிருத்தி வேலைகளில் தொடர்ந்து முன்னேறுவதற்குச் சுயேச்சையையும் விரும்பச் செய்தது.

குடியேற்ற நாட்டு மக்களிடையே ஊன்றியிருந்த ஒற்றுமை உணர்ச்சி, பல சந்தர்ப்பங்களினுல் புத்துயிர் பெற்றது. நாடுகளில் தொழில்கள் வளர்ந்து பொருளாதார முன்னேற்றம் ஏற்படச் சுங்க வரிச் சுவர்களும் வளர ஆரம்பித்தன. இந்தக் கட்டுப்பாடுகள் மக்களுக்குக் கஷ்டத்தை விளைத்தன. எல்லை வெறியைத் தணிக்க

மக்கள் விரும்பினார்கள். குடியிறக்கம், பாதுகாப்பு, பரவுநோய் தடுப்பு ஆகியவை பற்றிப் பொதுக் கொள்கைகள் வகுக்க வேண்டுவதன் அவசியத்தை மக்கள் உணர்ந்தார்கள். மக்கள் எவ்வளவு ஒற்றுமை ஏற்படுத்த முடியுமோ, அவ்வளவும் ஏற்படுத்த விரும்பினார்கள். எவ்வளவு ஒற்றுமை சாத்தியமானது என்பதை முடிவு செய்வதைத் தேசிய மாநாடுகளுக்கும் கன்வென்ஷன்களுக்கும் அவர்களனுப்பிய பிரதிநிதிகளிடம் விட்டுவிட்டார்கள்.

ஸிட்னியில் 1891ல் கூடிய தேசிய ஆஸ்திரேலியக் கன்வென்ஷனில் எல்லாக் குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். அந்தக் கன்வென்ஷனில் கூட்டாட்சி அமைப்பில் முக்கிய அமிசங்கள் உருவாக்கப்பட்டன. அத்தத்திட்டம் குடியேற்ற நாடுகளால் அங்கீகரிக்கப்படவில்லை. ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இரண்டாவது தேசியக் கன்வென்ஷனில் (1897-98) கூடி முதல் கன்வென்ஷனில் வகுத்த திட்டத்தின் அடிப்படையின்கீழ் மற்றொரு கூட்டாட்சித் திட்டம் வகுத்தார்கள். சில மாறுதல்களுடன் எல்லா நாடுகளிலும் வாக்காளர்களால் அங்கீகரிக்கப்பட்டு ஒரு பிரிட்டிஷ் சட்டம் இயற்றப்பட்டது.

ஆஸ்திரேலியாவின் அரசியலமைப்புத் திட்டத்தை வகுத்தவர்களுக்குத் தேசிய ஐக்கியத்தையும் நாடுகளின் உரிமைகளையும் எவ்வாறு பிணைப்பது என்பதற்கு அமெரிக்க உதாரணம் வழி காட்டியாய் இருந்தது. அமெரிக்க உதாரணத்தைப் பின்பற்றித் தேசியப் பாராளுமன்றத்தின் அதிகாரத்தின் வரம்பு அரசியலமைப்புத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவது, இந்த வரம்பை மீறாமலிருக்கும்படி கண்காணிப்பதற்கு உயர்நீதி மன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மூன்றாவதாக, மேற்சபையைக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பிரதிபலிக்கும்படி அந்நாடுகளுக்குச் சமப்பிரதிநிதித்துவம் கொடுத்து அங்க நாடுகளின் சபையாக்கியது. இறுதியில் அரசியல் திட்டத்தை மாற்றும் அதிகாரத்தில் இராச்சியங்களுக்குப் பங்கு அளிக்கப்பட்டது. மாற்றங்கள் நிறைவேறுவதற்குப் பெரும்பான்மை இராச்சியங்களின் சம்மதம் அவசியம் என்றும், சில குறிப்பிட்ட விஷயங்களை மாற்றுவதற்கு எல்லா நாடுகளும் இசைய வேண்டுமென்றும் அரசியல் திட்டம் கூறியது.

முதலில் ஆஸ்திரேலிய அரசியல் திட்டம் வகுத்த அதிகாரப் பங்கீட்டு முறையைப் பற்றிப் பார்ப்போம்: அமெரிக்கக் காங்கிரஸைப்போல ஆஸ்திரேலியப் பார்லிமென்டுக்குக் குறிப்பிட்ட சட்டமியற்றும் அதிகாரங்களே இருக்கின்றன. அரசியல் திட்டத்தின் 51-ஆம் பிரிவு 39 தலைப்புகளின்கீழ் மத்தியப் பார்லிமென்டின் அதிகாரங்களைக் குறிப்பிடுகிறது. இவற்றில் சிறவற்றைப் பற்றிச் சட்டமியற்றுவதற்கு மத்திய பார்லிமென்டுக்கே தனி அதிகாரம்

(Exclusive Power) இருக்கிறது. அரசியல் திட்டத்தின் சில பிரிவுகள் கூட்டாட்சிப் பார்லிமென்டின் தனி அதிகாரங்களைக் குறிப்பிடுகின்றன. அவை பின் வருமாறு : 1. காமன்வெல்து அரசாங்கத்தின் இருப்பிடம், 2. பொது நலனுக்காக வாங்கப்படும் இடங்கள், 3. கூட்டாட்சிப் பொதுப்பணி, 4. சுங்கம், எக்ஸைஸ் வரி, கொடை, 5. ஒப்புவிக்கப்பட்ட இடங்கள் (Surrendered Territories), 6. தற்காப்பு, 7. நாணயமடித்தல் கரன்சி நோட்டு அச்சிடுதல்.

அரசியல் திட்டத்தின் 107-ஆம் பிரிவின்படி அரசாங்கத்திற்கு மாற்றப்படாத அதிகாரங்கள் அரசியல் திட்டத்தின் 51-ஆம் பகுதியில் குறிப்பிடப்படாத அதிகாரங்கள் ராஜ்யங்களிடமே இருக்கும். அதாவது, எஞ்சியிருக்கும் அதிகாரங்கள் (Residuary Powers) அங்க நாடுகளைச் சேர்ந்தவை.

அரசியலமைப்புத் திட்டம் மத்தியச் சட்டசபைக்குச் சில அதிகார விலக்குகளும் நாடுகளுக்குச் சில அதிகார விலக்குகளும் விதித்திருக்கின்றது. அவ்வாறு குறிப்பிட்ட விஷயங்களில் சட்டமியற்ற இயலாது.

பார்லிமென்டிற்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில் தன் அதிகாரங்க்ள் என அரசியலமைப்புத் திட்டம் குறிப்பிடாத விஷயங்களில் அங்க நாடுகளும் சட்டமியற்றலாம். இவ்விஷயங்களில் அங்க நாடுகளுக்கும் நடு அரசாங்கத்திற்கும் கூட்டதிகாரம் (Concurrent jurisdiction) இருக்கிறது. ஆனால், அங்க நாடுகள் இயற்றுகிற் சட்டங்களுக்கும் நடு அரசாங்கம் இயற்றுகிற சட்டங்களுக்கும் முரண்பாடிருந்தால், முரண்பாடு இருக்கும் அளவுக்கு மத்தியச் சட்டமே நிலைக்கும்; ராஜ்யச் சட்டம் செல்லாமையாகிவிடும். இரண்டிற்கும் முரண்பாடில்லாமலிருந்தால், இரண்டும் ஒருங்கே நிலைத்து நிற்கலாம்.

மேலும் 51-ஆம் பிரிவின் 37-ஆம் பகுதியின்படி ராஜ்யச் சட்டசபைகள் காமன்வெல்துப் பார்லிமெண்டைச் சட்டமியற்றும்படி கேட்டுக்கொள்ளலாம். நடு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லாதிருந்தாலும், ராஜ்யங்களுக்கு நடு அரசாங்கத்தின் உதவி பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக் கொடுப்பதே இந்தப் பகுதியின் நோக்கம்.

நடு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில முக்கியமானவை பின் வருவன: தற்காப்பு, வெளி நாட்டு விவகாரங்கள், வெளி நாட்டு வாணிபம், நாணயமடித்தல், நோட்டு அச்சிடுதல், எக்ஸைஸ் வரி, சுங்கவரி, சுொடைகள் அரசியல் மாற்றங்கள் மூலம் சமூக நலப்பணிகள், கடன்கள் பற்றிய அதிகாரம் ஆகிய இவை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியிருக்கும் அதிகாரங்கள் அங்க நாடுகளைச் சேர்ந்தபோதிலும், நடைமுறையில் அந்நாடுகளால் செலுத்தப்படும் அதிகாரங்கள் பின்வருவன : பொது

நிலங்கள், நீர்ப்பாசனம், நாட்டு மக்கள் உடல் நலம், சுரங்கங்கள், ராஜ்ய எல்லைக்குள் நடக்கும் வாணிபம், இரயில்வேக்கள், கல்வி, போலீஸ், ஸ்தல ஸ்தாபனம், தொழிலாளர் உறவுகள்.

அரசியலமைப்புத்திட்டம் வழங்கியிருக்கும் அதிகாரத்திலிருந்து ஒரு நாட்டின் கூட்டாட்சித் திட்டத்தைப்பற்றி ஒரு முடிவிற்கு வந்துவிட இயலாது. 'அவ்வதிகாரங்கள் எவ்வாறு செலுத்தப்பட்டு வருகின்றன? நாட்டின் உயர்ந்த மன்றம் எவ்வாறு இந்த ஏற்பாட்டைக் காப்பாற்றி வருகிறது?' என்பவற்றை ஆராய்ந்தால் நாம் ஒரு முடிவிற்கு வர இயலும்.

காமன்வெல்து அரசாங்கத்தின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இரண்டு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட போதிலும் பெரும்பாலானவை பொது வாக்கெடுப்பில் மக்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பெரும்பான்மை வாக்காளர்கள் ஆமோதித்த போதிலும், மூன்று சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை ராஜ்யங்களின் ஆதரவு கிடைக்கவில்லை. நிறைவேற்றப்பட்ட நான்கு மாற்றங்களில் இரண்டு மாற்றங்கள் காமன்வெல்தின் அதிகாரத்தை அதிகரித்தன. 1928ல் நிறைவேற்றிய திருத்தம் புதிய நிதி ஏற்பாட்டை அமைத்தது. இவ்வேற்பாட்டினால் ராஜ்யங்களின் விஷயங்களில் நடு அரசாங்கத்திற்குச் செல்வாக்குச் செலுத்த முடிந்தது. 1946ல் சமூக நலன் பற்றிய திருத்தம், காமன்வெல்தின் அதிகாரத்தை விசேஷமாக அதிகரிக்கச் செய்தது.

உயர்நீதிமன்றத்தின் விளக்கங்களே காமன்வெல்து அரசாங்கத்தின் அதிகார அதிகரிப்புக்கு உதவியாய் இருந்தன. முதலில் தற்காப்பு அதிகாரத்தை எடுத்துக்கொள்வோம்: சமாதான காலத்தில் இந்த அதிகாரத்திற்கு நீதி மன்றம் விஷேசமான விளக்கந்தரவில்லை. காமன்வெல்தின் பாதுகாப்பிற்கும், நாடுகளின் பாதுகாப்பிற்கும் படைகள் வைத்துக்கொள்ளலாம் என்று அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. இந்த அதிகாரத்திற்கு நீதி மன்றம் புதுப்புது விளக்கங்களைக் கொடுத்து மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை வரம்பில்லாததாக்கிவிட்டது என்று சொல்வது மிகையாகாது. விலைகளைக் கட்டுப்படுத்தலாம்; தொழிலாளர்களின் வேலையையும் வேலை நிலைகளையும் கட்டுப்படுத்தலாம்; அரசாங்கம் போரில் வெற்றி பெறக் கட்டுப்பாடுகள் அவசியம் என்று நிரூபித்தால், அது எவ்விதக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆஸ்திரேலியா அரசியல் திட்டத்தில் அவசரக்கால அதிகாரம் என்பது ஒன்றும் தனியாக இல்லாத போதிலும், போரினால் ஏற்படும் ஆபத்துகளைச் சமாளிக்கத் தற்காப்பு அதிகாரத்திற்கு மிகத் தாராளமாக நீதி மன்றம் விளக்கங்கூறி நடு அரசாங்கத்தின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறது.

இரண்டாவதாக, சமரச நடுவர் தீர்ப்பு அதிகாரத்தை (Conciliation and Arbitration Power) எடுத்துக்கொள்வோம் : அரசியல் திட்டம் பார்லிமெண்டுக்கு நாட்டின் எல்லைக்கப்பால் ஏற்படும் பூசல்களைத் தீர்த்து வைக்கவும் தடுக்கவும் சமரச நடுவர் தீர்ப்பு ஏற்படுத்துவதற்குச் சட்டமியற்றும் அதிகாரம் கொடுத்தது. இதுபற்றிய பார்லிமெண்டின் பிரத்தியேக அதிகாரமன்று. கூட்டாட்சி அமைப்பு ஏற்படுத்திய பிறகு நாட்டு அரசாங்கங்களும் நடு அரசாங்கமும், சமரச நடுவர் தீர்ப்பு போர்டு களை ஏற்படுத்தின. மத்திய போர்டுகளுக்கும், நாட்டு போர்டுகளுக்கும் அதிகாரத்தைச் செயற்படுத்துவதில் முரண்பாடு நேர்வது இயல்பே. நீதி மன்றத்தின் விளக்கத்தினால் கூட்டாட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆஸ்திரேலியத் தொழிலாளர்கள்மீது அதிகாரம் இருக்கிறது. இதனால், நாடுகளின் அதிகாரம் குறைந்த போதிலும், காமன்வெல்தின் அதிகாரம் அதிகரிக்கவில்லை. ஏனென்றால், நீதி மன்றத்தின் விளக்கப்படி காமன்வெல்து அரசாங்கம் சமரச நடுவர் தீர்ப்பு போர்டுகளை ஏற்படுத்துவதற்கு அதிகாரம் இருக்கிறதே ஒழிய, ஏற்படுத்திய பிறகு அந்த போர்டுகளின் அலுவல்களிலோ அதன் கொள்கைகளிலோ தலையிடவோ ஆதிக்கம் செலுத்தவோ இயலாது. இந்தத் தீர்ப்புகள் மூலம் போர்டுகளின் சுயேச்சை நிலை நிறுத்தப் பட்டது.

அரசியல் திட்டத்தின் 92-ஆம் பிரிவு காமன்வெல்து முழுதிலும் ஒரே சுங்க வரி விதித்த பிறகு ராஜ்யங்களுக்குள் வியாபாரம், வாணிகம், போக்கு வரத்து முற்றிலும் கட்டுப்பாடற்றிருக்க வேண்டும் என்று கூறுகிறது. காமன்வெல்து ஏற்படுவதற்கு முன் குடியேற்ற நாடுகளுக்கிடையே இருந்துவந்த சுங்கவரிக்கட்டுப்பாடுகளைஎடுப்பதே இதன் நோக்கம். ஆனால், கோர்ட்டின் விளக்கம் அந்தப் பிரிவை ஆஸ்திரேலிய அரசியல் திட்டத்தின் அடிப்படை உரிமைச் சாசன மாக்குகிறது. விமானப் போக்குவரத்தைத் தேசிய மயமாக்குவதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டம் 92-ஆம் பிரிவின்கீழ்ச் செல்லாது என்று நீதி மன்றம் கூறியது. வியாபார பாங்குகளைத் தேசிய மயமாக்கக் கொண்டுவரப்பட்ட சட்டம் செல்லாதபடி செய்யப்பட்டது. இந்த விலக்கு, ராஜ்யங்களுக்கும் உண்டு என்று நீதிமன்றம் கூறுகிறபடியால், இப்பொருள்பற்றி அதிகாரம் பார்லிமெண்டுக்கோ, ராஜ்யச் சட்ட சபைகளுக்கோ இல்லை. வரிச்சுவர்களினின்று காப்பாற்ற வகுக்கப் பட்ட இந்தப் பிரிவு, இப்பொழுது இடம் விட்டு இடம் பெயரவும் வாணிகம் போக்கு வரத்து உரிமைகளை நிலைநாட்டுகிறது.

**நடு அரசு - அங்க நாட்டு நிதி உறவு :** நடு அரசிற்கும் அங்க நாடு களுக்கும் இடையே நிதி சம்பந்தமான உறவுகள் பற்றி அரசியல் திட்டம் வழி வகுத்திருக்கிறது. சுங்கவரியும், எக்ஸைஸ் வரியும், பிரத்தியேகமாக நடு அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டன. இவை

தவிர, மற்ற வரிகள் நடு அரசாங்கமும், அங்கநாடுகளும் விதிக்கலாம். அரசியல் திட்டத்தின் 87-ஆம் பிரிவின்படி காமல்வெல்து சுங்க வரியில் முக்காற்பாகத்தை முதற்பத்தாண்டுகளுக்கு நாடுகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பதும், பிறகு காமன்வெல்து நிதி விஷயமாக முடிவு செய்யலாமென்பதும் கூறப்பட்டன. பத்து ஆண்டுகள் கழித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் மக்கள் எண்ணிக்கைப்படி தலைக்கு 25 ஷில்லிங்கு கொடுக்க முடிவு செய்யப்பட்டது. இந்தப் புதுத் திட்டத்தின்கீழ்க் கிடைத்த நிதி முன் கிடைத்ததைவிடக் குறைவாகவும், பண வீக்கத்தினால் கிடைத்ததன் மதிப்பும் குறைவாகவும் இருந்தன. இராச்சியங்களின் வருமானத்தைவிடச் செலவே அதிகமாய் இருந்தது. அபிவிருத்தி வேலைகளில் நாடுகள் அதிகமாகச் செலவு செய்தன. தக்கபடி இலாபம் இல்லை. மேலும், நேரடியான வரி விதிப்பில் இராச்சியங்களோடு போட்டியிட ஆரம்பித்ததால், இராச்சியங்களின்நிதி நிலைமை இன்னும் மோசமடைந்தது. மாகாணப் பிரதமர்கள் இந்த மத்திய வரிகளை நீக்க மேற்கொண்ட முயற்சி பலிக்கவில்லை. காமன்வெல்து, அரசாங்கத்திற்குச் சுங்கவரியில் கொடுத்து வந்த பங்கைச் சுமையாகக் கருதியது; அதை நிறுத்த 1926ல் முடிவு செய்து சட்டத்தை இயற்றியது.

1927-ல் காமன்வெல்து அங்க நாடுகளுக்கு 1926ல் அளித்த தொகையான ஏழு இலட்சம் பவுனை மாமூலாகக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, இந்தத் தொகையை நாட்டுக் கடன்களின் வட்டி நிவாரணம் செய்ய உபயோகப்படுத்த வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டது. மேலும், காமன்வெல்து, நாடுகளின் கடன்களைத் தீர்க்கக் கடன் ஈட்டு நிதிகளை ஆரம்பிக்க ஒப்புக்கொண்டது.

இரண்டாவதாக, வருங்கால மத்திய இராச்சியக் கடன்களை எல்லாம் ஒழுங்குபடுத்தக் 'கடன் கௌன்சில்' என்னும் ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. மொத்தமாகக் கடன் வாங்கினால் சௌகரியமான வட்டிக்குக் கிடைக்கும் என்பதே இதன் நோக்கம். இராச்சியப் பிரதமர்கள் 1927–ஆம் வருடத்துப் பிரதமர் மகா நாட்டில் இதை ஒப்புக்கொண்டார்கள். இந்த ஒப்பந்தம் அரசியல் திட்டத்தின் 105-'A' என்ற புதிய பிரிவாக எழுதப்பட்டது.

அதற்குப் பிறகு ஏற்பட்ட வியாபார மந்தம், நடு அரசாங்கத்தையும் இராச்சிய அரசாங்கங்களையும் இக்கட்டிற்குள்ளாக்கியது. கடன் கவுன்சில் இந்தச் சந்தர்ப்பங்களினால் ஒரு தேசியப் பொருளாதாரக் கொள்கையை உருவாக்கும் ஸ்தாபனமாகி, மத்திய மாகாண அரசாங்கங்களை ஒரு பொதுக்கொள்கையைக் கடைப்பிடிக்கும்படி செய்தது. காமல்வெல்து அரசாங்கம், கடன் கவுன்சில் மூலம் இராச்சியங்களின் முதலீட்டுத் தொகைகளை நிர்ணயிக்கின்றது.

இதற்கிடையில் விவசாய நாடுகளாகிய மேற்கு ஆஸ்திரேலியாவும், தென்னுஸ்திரேலியாவும், குவீன்ஸ்லாந்தும், சுங்கவரி விதிப்புகளால் தங்களுடைய பொருளாதார நிலை பாதிக்கப்படுவதாகவும், இதைச்சமாளிக்க மத்திய அரசாங்கம் பணஉதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டன. மேற்கு ஆஸ்திரேலியா காமன்வெல்தை விட்டு விலகுவதற்குச் சித்தமாகிவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் இராச்சியங்களின் நிதி நிலைமையை ஆராய்வதற்கும் மானியங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கும் காமன்வெல்து மானியங்கள் கமிஷன் 1933ல் ஏற்படுத்தப்பட்டது. இதற்குமுன் மானியங்கள் கொடுக்கப்பட்ட போதிலும், ஒழுங்கான முறை கடைப்பிடிக்கப்படவில்லை. எந்த அடிப்படையில் ஆண்டுதோறும் எவ்வளவு கொடுக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயிப்பதே காமன்வெல்து மானியக் கமிஷனின் வேலை. கமிஷன் இராச்சியங்களின் தேவைகளின் அடிப்படையிலே பண உதவியை நிர்ணயிக்க வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தது. ஒரு கூட்டாட்சி அமைப்பின் அங்கநாடு தன் பொறுப்புகளை நிதிக் கஷ்டத்தினால் நிறைவேற்ற இயலாமலிருந்தால், அந்நாட்டுக்கு விசேஷ மானியங்கள் அவசியமாகும். நியாயமான முயற்சியுடன் மற்ற இராச்சியங்களின் நிலைக்கு அதிகக்குறைவில்லாத நிலைமைக்குக் கொண்டுவர எவ்வளவு உதவி அவசியம் என்பதைப் பொறுத்தது மானியத்தின் தொகை. இவ்வாதாரத்தின்மீது கமிஷன் செய்த சிபாரிசுகளைக் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1934 முதல் மேற்கு ஆஸ்திரேலியா, தென்னுஸ்திரேலியா, குவீன்ஸ்லாந்து ஆகிய மூன்று நாடுகளுக்கு விசேஷமானியங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

வரி விதிப்பதில் இராச்சியங்களுடன் மத்திய அரசாங்கம் போட்டியிட ஆரம்பித்தது என்பதை மேலே பார்த்தோம். காமன்வெல்து அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் தனித்தனியே வருமான வரி விதித்து வந்தன. இரண்டாவது போர் ஆரம்பத்தின் போது மத்திய அரசாங்கமும் நாடுகளும் கிட்டத்தட்டச் சம அளவு பெற்றன. இரண்டாவது போரில் காமன்வெல்து அரசாங்கத்தின் தேவை அதிகரித்துக்கொண்டே போயிற்று. இதைச் சமாளிக்க 1942ல் காமன்வெல்து பிரத்தியேகமாக வரியை விதித்துக்கொண்டு இராச்சியங்களுக்கு அவற்றின் முந்திய இரண்டு ஆண்டு வசூலின் சராசரித் தொகையைக் கொடுத்துவிட வேண்டுமென்று சட்டமியற்றப்பட்டது. நீதி மன்றம் ஒரு தீர்ப்பில் இது செல்லும் என்று கூறியது. நீதி மன்றம் தன் முடிவைக் காமன்வெல்தின் வரிவிதிக்கும் அதிகாரத்தின்கீழ் ஆதாரப்படுத்தியது; தற்காப்பதிகாரத்தைச் சார்ந்தது அன்று என்றும் தெளிவுப்படுத்தியது. ஏனென்றால், அரசியல் திட்டத்தின்படி வரி விதித்தலில் மத்திய அரசாங்கத்திற்கும் நாட்டரசாங்கங்

களுக்கும் கூட்டதிகாரம் இருப்பதால் 109-ஆம் பிரிவின்படி வரி விதித்தலில் காமன் வெல்திற்கே முதன்மை இருக்கிறது. இராச்சிய அரசாங்கமும் வரி விதிக்கலாம். மத்திய அரசாங்கத்தின் முதன்மையினுல் இராச்சியங்களுக்கு வரிவிதிப்பின் மூலம் நிதி கிடைப்பது சந்தேகம். ஆனுல், நிச்சயமாக மத்திய அரசாங்கத்தின் மானியங்கள் கிடைக்க மாட்டா.

1946-ஆம் ஆண்டு பிரதமர் மாநாட்டில் இம்முறையை நீடிப்பதற்கும் வருமான வரியிலிருந்து இராச்சியங்களுக்குக் கொடுக்கப்படும் மானியங்களின் அடிப்படையை மாற்றுவதற்கும் முடிவு செய்யப்பட்டது. 1953ல் கூட்டப்பட்ட விசேஷப் பிரதமர் மகாநாட்டில் வருமான வரி முறையை மாற்றி அமைக்கும் பிரச்சினை ஆராயப்பட்டது. மாற்று முறை ஒன்றும் புலப்படவில்லை. சில இராச்சியங்கள் வருமானவரி விதிக்கும் பொறுப்பை ஏற்கத் தயாராயில்லை. சில இராச்சியங்கள் அவைகள் ஏற்ருல் அவைகளுக்குக் கிடைக்கும் மானியங்களைவிடக் குறைவாகவே கிடைக்கும் என்றெண்ணின. நிதி விஷயங்களில் இராச்சியங்களின் மத்திய அரசாங்கத்தை எப்பொழுதுமே எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

மேலும், மத்திய பாங்காகிய காமன்வெல்து பாங்கு 1930 முதல் இராச்சியங்களின் செலவுக் கொள்கைகளில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஏனென்ருல், இராச்சியங்கள் தங்களுடைய பட்ஜட்டுகளில் துண்டு விழுவதைச் சரி செய்யக் கடன்களுக்கு மத்திய பாங்கை எதிர்பார்க்கின்றன. நிதி சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும் இராச்சியங்கள் எல்லா அதிகாரங்களையும் இழந்துவிட்டன. வருமான வரிகள் மிகக்குறைவாகியதால், மத்திய மானியங்களின் உதவியாலேதான் நிர்வாகத்தை நடத்த முடிகிறது. இந்த நிலைமைக்கு உயர்நீதி மன்றத்தின் விளக்கங்கள் முக்கிய காரணமாய் இருக்கின்றன. கூட்டாட்சி அமைப்பின் செயல் முறையை உயர்நீதி மன்றத்தின் விளக்கங்கள் மாற்றிவிட்டன எனச் சொல்லலாம்.

1902ல் டீக்கின் என்பார் ஓர் ஆஸ்திரேலியப் பத்திரிகைக்கு எழுதிய கடிதம், நடு அரசாங்கத்திற்கும் அங்க நாடுகளுக்கும் உள்ள நிதி உறவு கூட்டாட்சி அமைப்பை எவ்வளவு பாதிக்கும் என்பதை எடுத்துக் காட்டியது. அது பின் வருமாறு :

"எவ்வாறு கிரேட் பிரிட்டனில் நிதி அதிகாரம் படிப்படியாக மக்கள் சபையின் அதிகாரத்தை நிலை நிறுத்தியதோ, அவ்வாறே ஆஸ்திரேலியாவிலும் அது காமன்வெல்தின் அதிகாரத்தை நிலை நிறுத்தும். ராஜ்யங்களின் சுயஆட்சி உரிமைகள் அரசியல்திட்டத்தால் பாதுகாக்கப்படும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படலாம். சட்ட அளவில் அவை சுயேச்சையாக இருந்த போதிலும், நிதி சம்பந்தப்பட்டவரையில் காமன்வெல்துடன் இணைக்கப்பட்டுதானிருக்கின்றன,

இராச்சியங்களின் தேவை காமன்வெல்திற்குத் தன்னைப்பலப்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும். முதலில் ஜனத்தொகை குறைவாய் உள்ள இராச்சியங்கள் கீழ்ப்படியும். பிறகு வறட்சியினாலோ அல்லது வேறு துரதிருஷ்டத்தினாலோ அடிப்பட்டவை பின் செல்லும். இறுதியில் பெரிய நாடுகளும் வேண்டா விருப்பாக..............நமது அரசியலமைப்புத் திட்டத்தில் மாறுதல் ஏற்படாமல் அவ்வாறே இருக்கலாம். ஆனால், இராச்சியங்களுக்கும் காமன்வெல்திற்கும் உள்ள உறவுகளில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கும் காமன்வெல்து இராச்சியங்களின்மீது பெருங்கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கும்.'' இவ்வறிக்கை எவ்வளவு உண்மையாய்விட்டது என்பதை வளர்ச்சி நிரூபிக்கிறது.

**மத்திய அங்க நாட்டு நிர்வாகத் தொடர்புகள்** : கூட்டாட்சி முறை வெற்றிகரமாக இயங்குவதற்கு மத்திய-அங்க நாடுகளுக்கிடையே நிர்வாகக் கூட்டுறவு மிகவும் அவசியம். இதைப்பற்றி அரசியல் திட்டத்தில் ஒன்றும் குறிப்பிடாத போதிலும், மத்திய அரசாங்கத்திற்கும் அங்க நாடுகளுக்கும் ஆஸ்திரேலியாவில் உள்ள கூட்டுறவு விசேஷத் தன்மையை உடையதாகும். ஆஸ்திரேலியக் கூட்டாட்சியைக் கூட்டுறவுக் கூட்டாட்சி (Cooperation Federation) என்று விவரிக்கிறார் பேராசிரியர் **வியர்**. ஆஸ்திரேலியக் கூட்டாட்சியின் இத்தன்மையைப் பற்றிச் சற்று நோக்குவோம் :

கூட்டாட்சித் திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னே குடியேற்ற நாடுகளின் பிரதமர்கள் மகாநாடுகளுக்காகக் கூடுவது வழக்கம். காமன்வெல்தை ஏற்படுத்துவதற்கு இம்மகாநாடுகள் உதவியாய் இருந்தன. காமன்வெல்து அமைக்கப்பட்ட பிறகு நாட்டுப் பிரதமர்களும் காமன்வெல்து மந்திரிகளும் ஆண்டுக்கொருமுறை கூடி, இராச்சியங்களுக்கிடையேயுள்ள பிரச்சினைகளைப்பற்றிக் கவனம் செலுத்துவது வழக்கம். 1920க்குப் பிறகு பெரும்பாலும் நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றியே பேச்சு நடக்கிறது. நாட்டுப் பிரதமர்கள் தங்களுடைய தேவைகளுக்காக வாதாடி எவ்வளவு அதிகப்படி பெற முடியுமோ, அவ்வளவு பெறுவார்கள்.

மற்ற முக்கியமான ஸ்தாபனம் ஆஸ்திரேலியக் கடன் கவுன்சிலாகும். இதன் அலுவலைப்பற்றி மேலே கவனித்தோம். இந்தக் குழுவின் அங்கத்தினர்கள் இராச்சியப் பிரதமர்களும் மத்தியப் பிரதம மந்திரியுமாவார்கள். அரசியல் திட்டத்தின் புதிய பிரிவாகிய 105-Aல் இந்த ஸ்தாபனத்தின் அமைப்பும் இது இயங்கும் முறையும் விளக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கத்திற்கு இரண்டு வாக்குகளும், தலைவருக்கு ஒரு வாக்குமாக மொத்தம் மூன்று வாக்குகள் கூட்டாட்சி அரசாங்கத்திற்கும், இராச்சியங்களுக்கு ஒவ்வொரு வாக்கும் உண்டு. முடிவுகள் எடுப்பதற்கு முழுப்பெரும்பான்மை அவசியம்.

மத்திய அரசாங்கம் இரண்டு இராச்சியங்களைச் சேர்த்துக்கொண்டால் முழுப்பெரும்பான்மை கிடைக்கும். கடன் வாங்குவதில் மத்திய அரசாங்கம் கவுன்சிலுக்கு ஏஜெண்டாய் இருக்கிறது. கவுன்சில் கூட்டங்களில் இராச்சியங்களின் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிய விவாதங்கள் நடைபெறும். நாட்டுப் பிரதமர்களின் விருப்பங்கள் ஓரளவு நிறைவு செய்யப்பட்ட போதிலும், இராச்சியங்கள் எவ்வளவு கண்டிப்பாக இருந்தபோதிலும், கூட்டாட்சி அரசாங்கம் தன் விருப்பத்தை நிலை நிறுத்தும்.

மேலும் பல துறைகளில் காமன்வெல்து அரசாங்கத்திற்கும் நாட்டு அரசாங்கங்களுக்குமிடையே கூட்டுறவு முயற்சிகள் பயனளிக்கக் கூடியனவாய் இருக்கின்றன. காமன்வெல்து அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் இருந்தபோதிலும், திறமையுடன் செயற்படுவதற்காக இராச்சியங்களை நிர்வகிக்கும்படி கேட்டுக்கொள்ளலாம். இம்மாதிரி கூட்டுறவு முயற்சிக்குக் குடியிறக்கம் பற்றிய நிர்வாக ஏற்பாடுகள் நல்ல உதாரணமாகும்.

காமன்வெல்து அரசாங்கத்தின் அதிகாரமும் இராச்சியங்களின் அதிகாரமும் தனியே போதுமளவு இல்லாததால், கூட்டுறவு சில விஷயங்களில் அவசியமாய் இருக்கிறது. இதற்கு உதாரணமாக விவசாயப் பொருள்களின் விற்பனைபற்றிய பொது ஏற்பாடுகளையும் சிவில் விமானப் போக்குவரத்துப் பற்றிய பொது ஏற்பாடுகளையும் காட்டலாம்.

காமன்வெல்திற்கு அதிகாரமில்லாதிருந்த போதிலும், காமன்வெல்தின் உதவி—முக்கியமாக நிதி உதவி—அவசியமாய் இருப்பதால், இராச்சியங்கள் காமன்வெல்தின் நிதி உதவியுடன் சில அபிவிருத்தி வேலைகளில் முற்படலாம். இம்மாதிரிக் கூட்டுறவு முயற்சிகள் ஆஸ்திரேலியாவில் சர்வ சாதாரணமே. **1947**ல் நியூ ஸௌத் வேல்ஸின் அரசாங்கம் காமன்வெல்து ஒத்துழைப்புடன் ஏற்படுத்தப்பட்ட கூட்டு நிலக்கரி போர்டும், மரே நதிக் கமிஷனும், தேசிய உடல் நல மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலும் நல்ல உதாரணங்களாகும்.

அரசியலமைப்புத் திட்டத்தை வகுத்தவர்கள் ஒரு கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்தியபோதிலும் செயல்முறையில் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரம் அதிகரித்துக்கொண்டே சென்று, இப்பொழுது கூட்டாட்சி அரசாங்கத்தின் முதன்மையை அரசியலமைப்பை வகுத்தவர்கள் எதிர்பாராத வழியில் நிலைநிறுத்திவிட்டது. இந்தக் காரணத்தினுல், பேராசிரியர் வியர் ஆஸ்திரேலியக் கூட்டாட்சியை அரைகுறைக் கூட்டாட்சி அமைப்பாகக் கருதுகிறுர். இதனுல், ஆஸ்திரேலியா ஒற்றையாட்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது.

## அத்தியாயம்—2

# அரசியலமைப்பை மாற்றும் விதம்

ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பில் அரசியல் திட்டத்தை மாற்றும் முறை ஒரு தனி முக்கியத்துவம் பெறுகிறது என்பதை அறிவோம். கூட்டாட்சி அமைப்பு, நடு அரசிற்கும் அங்க நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைப்போல உளது. இவ்வொப்பந்தத்தின் நிபந்தனைகளைக் கொண்டது அரசியலமைப்புத்திட்டம். இந்நிபந்தனைகளைக் காலத்திற்குத் தக்கவாறும் சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறும் மாற்றுவதற்கு அவசியம் ஏற்படலாம். ஆனால், ஒரு சாராரின் விருப்பப்படி—அதாவது ஓர் அரசாங்கத்தின் விருப்பிற்கோ அல்லது உறுப்பு நாடுகளின் விருப்பிற்கோ ஏற்றபடி—மாற்றப்படக் கூடாது. அதாவது, அரசியலமைப்பு முறையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தில் நடு அரசாங்கமும்,[1] அங்க நாடுகளும் பங்கு கொள்ளல் வேண்டும்.

ஆஸ்திரேலியக் கூட்டாட்சியின் அரசியல் திட்டத்தில் மாற்றும் முறை 128-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியல் திட்டத்தை மாற்றுவதற்குக் கொண்டுவரப்படும் மசோதா சட்ட சபையின் இரு சபைகளிலும் முழுமைப் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்படவேண்டும். அதன் பின் இரண்டு மாதங்களுக்கு மேல் ஆறு மாதங்களுக்குள் அம்மசோதா ஒவ்வோர் உறுப்பு நாட்டிலுமுள்ள கீழ்ச்சபை வாக்காளர்களின் சம்மதத்தைப்பெற வேண்டும். வாக்குப் பதிவு செய்தவர்களில் பெரும்பான்மையோர் சம்மதிப்பதோடல்லாமல், பெரும்பான்மை உறுப்பு நாடுகளின் (அதாவது நான்கு நாடுகளின்) சம்மதத்தையும் அம்மசோதா பெறுவது அவசியம். பின்னர் இராணியாரின் சம்மதத்தின்பேரில் அது சட்டமாகும்.

அரசியல் திட்டத்தில் கொண்டுவரப்படும் மாற்றம் பற்றி இரு சபைகளிடையே ஒற்றுமை இல்லாவிடில், எச்சபை முதலில் சட்டத்தைக் கொண்டு வருகிறதோ, அச்சபையே மறுபடி மூன்று மாதங்களுக்குப் பின் அத்திருத்தத்தை நிறைவேற்றியும் அடுத்த சபை அதனை ஏற்காவிடில் கவர்னர் ஜெனரல் அம்மசோதாவை ஒவ்வோர் உறுப்பு நாட்டின் வாக்காளர்களது முடிவிற்கு விட்டுவிடலாம்.

ஓர் உறுப்பு நாட்டின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைக் குறைக்கும் திருத்தமோ, அன்றி அதன் எல்லேகளைக் கூட்டுதற்கோ குறைத்தற்கோ ஆய ஒன்ருே, அல்லது அரசியல் திட்டத்திலுள்ள இதுபற்றிய குறிப்பீடுகளை மாற்றுதற்குக் கொண்டு வரப்படும் திருத்தமோ நிறைவேற, அந்நாட்டின் பெரும்பான்மை வாக்காளர்களது சம்மதம் அவசியம்.

ஆஸ்திரேலிய அரசியல் திட்டத்தை வகுத்தவர்கள் திட்டம் மாற்றும் முறையை உருவாக்குமுன் மற்ற அரசியல் திட்டங்களில் வகுக்கப்பட்ட முறைகள் எவ்வகைப்பட்டன என்றும் அவை நடைமுறையில் எவ்வாறு செயற்படுகின்றன என்றும் ஆராய்ந்து, அவற்றில் காணப்படும் குறைபாடுகளின்றி ஒரு முறையை வகுக்க முற்பட்டார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் திட்டம் மாற்றும் முறை அவர்களுக்குத் திருத்தியளிக்கவில்லே. ஏனெனில், திட்டம் அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆண்டில் ஏற்பட்ட முதற்பத்து மாற்றங்களைக் கணக்கிலெடாவிட்டால் *(1791)* ஒரு நூற்ருண்டில் 5 திருத்தங்களே நிறைவேற்றப்பட்டிருந்தன. ஆனல், ஸ்விட்ஸர்லாந்திலோ, 25 ஆண்டுகளில் *(1875-1900)* பத்துத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. இதினின்று ஸ்விஸ் முறையே சிறந்ததென்று எண்ணி, பெரும்பாலும் அதையே அரசியல் திட்டத்தில் எழுதினர்.

அரசியல் திட்டத்தை வகுத்தவர்கள் அதனை எளிதென்று கருதி ஏற்படுத்தியபோதிலும் அனுபவத்தில் அவர்களது எண்ணம் பொய்த்துப் போயிற்று. *1949* வரை அரசியல் திட்டத்தை மாற்றச் செய்யப்பட்ட 77 முயற்சிகளில் 16 மசோதா நிலேயை அடையாது தோல்வியுற்றன; *38* மசோதா நிலேயை அடைந்து தோல்வியுற்றன ; வாக்காளர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 23 பிரேரணைகளில் நான்குக்கே மொத்த வாக்காளர்களின் பெரும்பான்மையும் நாடுகளின் பெரும்பான்மையும் கிட்டின.

வாக்கெடுப்புக் கட்டம் வரை வந்த 23 மசோதாக்களும், அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டவைகளே. அவற்றுள் ஒன்று தவிர, ஏனைய எல்லாம் பிரதிநிதிகள் சபையில் தொடங்கப்பட்டவைகளே. அரசாங்கத்தின் ஆதரவு இருந்தாற்ருன் பார்லிமென்டில் மசோதாக்கள் நிறைவேற்றப்படும் என்பது இதினின்று விளங்குகிறது.

ஸெனட்டு அங்க நாடுகளின் சபையாக இயங்காமல் கட்சி முறையில் இயங்குவதால் பொதுவாக மாற்றுதல் பிரேரணைகளில் இரண்டு சபைகளும் ஒப்புக்கொண்டே இருக்கின்றன. அவ்வாறு ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கவர்னர் ஜெனரல் பிரேரணையை வாக்காளர்களிடம் சமர்ப்பிக்க அரசியல் திட்டம் வழி வகுத்திருக்கிறது.

மாற்ற மசோதா ஒன்று நிறைவேறுவதற்குப் பெரும்பான்மை உறுப்பு நாடுகளில் வாக்காளர்களின் பெரும்பான்மை அவசியம் என்

பது சிறிய நாடுகளைப் பெரிய நாடுகளின் ஆதிக்கத்தினின்று காப்பாற்றுவதே நோக்கம். ராஜ்யங்களின் பெரும்பான்மை இல்லாததால் மூன்று பிரேரணைகள் தோல்வியுற்றன.

மாற்றப் பிரேரணைகளின் தோல்விக்கு முக்கிய காரணம் பொது ஜன வாக்கெடுப்பு முறையே. பொதுவாகத் திட்ட மாற்ற மசோதாக்கள் இரு சபைகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும், அவை தமது வாக்கெடுப்பிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட போது மக்கள் ஆமோதிக்க மறுத்துவிட்டார்கள். ஆகவே, சபைகளின் ஒற்றுமை மக்களின் கருத்தின் முன் இங்குப் பயனற்றதாயுள்ளது.

அரசியல் திட்டத் திருத்தங்கள் தோல்வி அடைவதற்கு ஆஸ்திரேலிய அரசியல் நிபுணர்கள் பல காரணங்களைக் கூறுகின்றார்கள். சிக்கலான விஷயங்களைக் கொண்டுள்ள திருத்தங்களாயின், அவை பற்றி மக்கள் தெளிவான கருத்துகளைத் தெரிவிக்க இயலாதிருக்கின்றார்கள். அத்திருத்தங்களால் ஏற்படும் மாறுதல்களின் விளைவைப் பற்றி நன்கு அறியும் திறன் சாதாரண வாக்காளர்களிடம் எதிர்பார்த்தல் இயலாது. அவர்கள் அத்திருத்தங்களைப் பொதுவாக நடு அரசின் ஆதிக்க அதிகரிப்புத் திட்டங்களாகவே கருதுகின்றார்கள். திருத்தங்களின் விளைவைத் தெளிவாக அறியாத வரை அவர்களுக்கு நிராகரிப்பதே இலகுவானதாய் இருக்கிறது.

நடு அரசின் ஆதிக்கம் அதிகரிப்பதற்கு ஆஸ்திரேலியாவில் எதிர்ப்பு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆஸ்திரேலியா ஒரு பெரிய நாடாகவும் அதன் அங்க நாடுகள் அகன்ற பரப்புடையனவாகவும் இருப்பதால் பெரும்பான்மை மக்கள் நடு அரசு தங்களுடன் தொடர்பற்றது என்று எண்ணி அதனிடம்மிகுந்த பொறுப்புகளைவிட விரும்புவதில்லை. அங்க நாட்டின் சுயேச்சையையும் பலத்தையும் காப்பது தனி மனிதன் தனது விடுதலையைப் போற்றிக் காப்பதாக எண்ணுகிறான். இதனால், இவன் அங்க நாடுகளின் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திற்கு மாற்றுவதற்கு மறுக்கிறான்.

ஆஸ்திரேலிய அரசியலில் அரசியற்கட்சிகளின் பங்கு மிக முக்கியமானது. அரசியல் திட்டத் திருத்தம் பற்றிய வாக்கெடுப்புகளின் முடிவு பெரும்பாலும் கட்சிப் பிரிவுகளின் போக்கைச் சார்ந்திருக்கிறது. சபைகளின் தேர்தல் தினத்தன்றே பொதுவாகத் திருத்த மசோதாவிற்கும் வாக்குப் பதிவு செய்கின்றனர். இவ்வாறு இரு விஷயங்களை ஒன்றுடன் ஒன்று பிணைத்தலால் பெரும்பாலும் மக்கள் தங்களது தெளிவான கருத்தை நிதானமாக ஆலோசித்துத்தெரிவிக்க இயல்வதில்லை.

இந்நாள் வரையிற் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் யாவும் பொதுவாக நடு அரசின் ஆதிக்கம் வலுத்ததற்கு வகை செய்வனவாகவே இருந்துள்ளன, ஆகவே, அவற்றின் தோல்வி, அரசியல் திட்டம்

இயற்றிய கூட்டாட்சி முறையை மாற்றுவதற்கு ஆஸ்திரேலிய மக்கள் அவ்வளவு எளிதில் சித்தமாய் இல்லை என்பதற்குச் சான்ருய் விளங்குகிறது.

அரசியலமைப்புத் திட்டத்தை மாற்றுவதற்கு 128-ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கும் முறை பிரத்தியேகமானதா? - அதாவது, அரசியல் திட்டத்தை மாற்றுவதற்கு வேறு எவ்வழிகளேனும் இருக்கின்றனவா? - என்பதைக் கவனிப்போம்: முதலில் அரசியல் திட்டத்தில் சில பிரிவுகளில் காமன்வெல்து பார்லிமென்டிற்கு அரசியல் திட்டத்தை மாற்ற அதிகாரம் அளித்திருக்கிறது. அரசியல் திட்டத்தின் ஏற்பாடுகள் பெரும்பாலும் தாற்காலிகமான ஏற்பாடுகளே. பார்லிமென்டு அவற்றை மாற்றி அமைத்துக்கொள்ளலாம் என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுமார் 20 பிரிவுகள் 'பார்லிமென்டு மற்றப்படி ஏதாவது மாற்றும்வரை' என்று தொடங்குகின்றன. இந்த மாற்றங்களைக் கொண்டு வரும் முறைக்கும் சட்டமியற்றும் முறைக்கும் ஒரு வேறுபாடு இல்லை.

பார்லிமென்டின் அதிகாரத் தலைப்புகளைக் குறிப்பிடும் 51-ஆம் பகுதியின் 37-ஆம் பிரிவு ஓர் அங்க நாட்டின் அல்லது பல அங்க நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்கப் பார்லிமென்டு சட்டமியற்றலாம் என்று குறிப்பிடுகிறது. அரசியலமைப்பில் அதிகாரப் பிரிவினை அங்க நாடுகளுக்கும் ஒரு நடு அரசாங்கத்திற்கும் இடையே ஒத்துழைப்பிற்குத் தடையாய் இருத்தல் கூடாது என்பது இதன் நோக்கம். அங்க நாடுகள் ஒப்புக்கொண்டால் பொதுஜன வாக்கிற்கு விடாமல் இந்தப் பிரிவின் மூலம் அதிகாரப் பங்கீட்டை மாற்றிக்கொள்ளலாம். ஆனல், அங்க நாடுகள் அவர்களுடைய அதிகாரத்தை விட்டுக்கொடுக்க முன் வரும் என்று எதிர் பார்க்க இயலாது. 1942-44ல் காமன்வெல்து அரசாங்கம் புனருத்தாரண வேலைகளில் ஈடுபடுவதற்குத் தன் அதிகாரத்தை அதிகரிக்க முயன்றபோது அங்க நாடுகள் தங்கள் அதிகாரங்களை மாற்றுவதற்குச் சித்தமாய் இல்லை. இவ்வாறு பின் வாயில் மூலம் அரசியல் திட்டத்தை மாற்ற ஏற்பட்ட இந்த முயற்சியும் கைகூடவில்லை.

அரசியல் திட்டத்தை மாற்றும் முறையை மாற்றுவதற்கும் 128-ஆம் பிரிவில் கொடுக்கப்பட்ட முறையே கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ருலும், மேலே கூறியபடி சில விஷயங்களுக்கு (பிரதிநிதித்துவம் எல்லைகள் சம்பந்தப்பட்டவை) பாதிக்கப்படும் அங்க நாடுகளின் சம்மதமும் வேண்டும். அவற்றை மாற்ற எல்லா அங்க நாடுகளின் சம்மதமும் அவசியம் என்பது தெரிகிறது.

ஆஸ்திரேலிய அரசியலமைப்புத் திட்டம் பிரிட்டிஷ் பார்லிமென்டில் சட்டமாகிய ஆஸ்திரேலிய காமன்வெல்து அரசியலமைப்புச் சட்டத்தில் (Commonwealth of Australia Constitution Act) 9-ஆம்

பகுதியின் கீழ் அடங்கியுள்ளது. ஆஸ்திரேலிய மக்கள் அரசின்கீழ்க் கலேக்க முடியாத கூட்டாட்சிக் காமன்வெல்தை ஏற்படுத்த முற்பட்டிருக்கிருர்கள் என்று முகப்பில் குறிப்பிட்டுவிட்டு, அரசியல் திட்டம் முதல் எட்டுப் பிரிவுகளில் சில விளக்கங்களேயும் தாற்காலிக ஏற்பாடுகளேயும் குறித்திருக்கிறது. 9-ஆம் பகுதி, 'காமன்வெல்து அரசியல் திட்டம் பின்வருமாறு' என்று ஆரம்பித்துப் பின் வரும் 128 பகுதிகளில் அரசியலமைப்பின் விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. முதல் எட்டுப் பகுதிகள் அரசியல் திட்டத்தைச் சேர்ந்தவையல்ல என்றும், அதனுல் அவை அரசியலமைப்பு மாற்றும் முறையின் கீழ் வாரா என்றும், அவற்றை மாற்றுவது பிரிட்டிஷ் பார்லிமென்டு சட்டமியற்றிஞற்றுன் முடியும் என்றும் கருதப்படுகிறது.

முகப்பில் மூன்று முக்கியமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மக்கள் அரசின்கீழ்க் காமன்வெல்தை ஏற்படுத்துகிருர்கள் என்பதும், அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட காமன்வெல்து கலேக்க இயலாததென்பதும், கூட்டாட்சி காமன்வெல்து என்பதும் கூறப்பட்டிருக்கின்றன. ஆஸ்திரேலிய மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் உதவியினுல் காமன்வெல்தைக் கலேக்கவோ, அல்லது அங்க நாடுகளேப் பிரிந்து செல்ல அனுமதிக்கவோ முடியாதென்றும், இதற்கு பிரிட்டிஷ் பார்லிமென்டுதான் அனுமதி அளிக்கலாம் என்றும் கருதப்படுகிறது. 1934ல் மேற்கு ஆஸ்திரேலியா காமன்வெல்தை விட்டு விலகுவதற்கு பிரிட்டிஷ் பார்லிமென்டிடம் அனுமதி கேட்டது. பார்லிமென்டின் கூட்டுக்குழு அதை ஆராய்ந்து பிரிட்டிஷ் பார்லிமென்டுக்குத்தான் சட்டபூர்வமாக அனுமதிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது என்றும், காமன்வெல்து பார்லிமென்டின் வேண்டுகோளுக்கிணங்கவே அவ்வாறு செய்ய இயலும் என்றும் கூறியது. ஆகையால், மேற்கு ஆஸ்திரேலியாவின் கோரிக்கை மறுக்கப்பட்டது.

முகப்பு, கூட்டாட்சி அமைப்பு என்று குறிப்பிட்ட போதிலும், இதற்கு ஒரு தெளிவான பொருள் இல்லாததால், மாற்றும் முறைக்கு இதை ஒரு கட்டுப்பாடாகக் கருத இயலாது என்னும் கருத்தை **ஔவன் டிக்ஸன்** என்பவர் இராயல் கமிஷனிடம் (1929) சமர்ப்பித்தார். இந்தக் கருத்துப் பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

# அத்தியாயம்—3

## அடிப்படை உரிமைகள்

ஆஸ்திரேலிய அரசியலமைப்புத் திட்டத்தில் ஜீவாதார உரிமைகளைப் பற்றிச் சிறப்பாக ஒன்றும் சொல்லப்படவில்லை. தனி ஒருவனது சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின்மீது கட்டுப்பாடுகளை விதிக்க ஆஸ்திரேலியத் திட்டம் வழி வகுக்கவில்லை. இந்த விஷயம் அமெரிக்க உதாரணத்திலிருந்து மிகவும் மாறுபட்டதாய் இருக்கிறது. ஆனால், காமன்வெல்து பார்லிமென்டு தனக்கு அரசியலமைப்புத் திட்டம் கொடுத்திருக்கும் அதிகாரங்களையே உபயோகப்படுத்தலாம். அதற்குப் புறம்பாக ஒன்றும் செய்ய இயலாது. பிரிவு 51ல் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப்பற்றி ஹால்டேன் பிரபு பிரிவி கவுன்சில் தீர்ப்பொன்றில், "காமன்வெல்திற்கு மாற்றப்பட்டுள்ள அதிகாரங்களில் ஒன்றுகூட மக்களின் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்த உரிமை அளிக்கவில்லை. அவ்வாறு மாற்றப்படாததால் காமன்வெல்து பார்லிமென்டிற்கு உரிமைகளைக் கட்டுப்படுத்த அதிகாரம் இல்லை என்பது கருத்து. அரசியல் திட்டத்தை மாற்றினால்தான் அவ்வதிகாரத்தைப் பெற இயலும். இறுதியில் ஜீவாதார உரிமைகளைப்பற்றி ஏற்பாடு செய்வதை ஆஸ்திரேலிய அரசியல் திட்டத்தை வகுத்தவர்கள் பார்லிமென்டிற்கும் மக்களுக்கும் விட்டுவிட்டார்கள் என்று கூறலாம்," என்று கூறினர்.

ஜீவாதார உரிமைகள் என்ற அடிப்படையில் இல்லாவிட்டாலும் அரசியல் திட்டமே சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது :

முதலாவதாக, அரசியல் திட்டம் 116-ஆம் பிரிவில் சமயச் சுதந்தரத்தை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அதன்படி காமன்வெல்து சமயத்தை ஏற்படுத்தவோ, சமயக் கோட்பாடுகளைப் புகுத்தவோ, அல்லது காமன்வெல்தின்கீழ் உத்தியோகத்திற்குரிய மதத் தேர்வுகள் வைத்தோ சட்டங்கள் இயற்றுதல் கூடாது.

இரண்டாவதாக, மத்தியப் பார்லிமென்டிற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் முக்கியமான ஒரு கட்டுப்பாடு காணப்படுகிறது. 51-ஆம் பிரிவில் மத்திய அரசாங்கம் தனி நபரின் சொத்தை அபகரித்தால், அதற்கு நியாயமான நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்பது

குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவு சொத்துரிமையைப் பாது காப்பதாகக் கருதலாம்.

மூன்ருவதாக, அரசியல் திட்டத்தின் 80-ஆம் பிரிவு ஒரு நடை முறை (Procedural) உரிமையை அளிக்கிறது. அதன்படி காமன் வெல்து சட்டத்திற்கு விரோதமாகக் குற்றம் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டால் ஜூரி முறையில் விசாரணை செய்யப்படவேண்டும்.

இராச்சியங்களுக்குள் வியாபாரம் முதலியவற்றிற்குப் போக்கு வரத்துத் தடைகளில்லாமல் இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், அரசியல் திட்டத்தில் 92-ஆம் பிரிவு அதாவது, இராச்சியங்களுக்குள் வியாபாரம் முதலியவை முற்றிலும் கட்டுப்பாடற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவிற்கு ஆஸ்திரே லியத் தலைமை நீதி மன்றமும் பிரிவி கௌன்சிலும் மிக விரிவான விளக்கத்தைக் கொடுத்து வியாபார சுதந்தரம் மட்டுமன்றி மற்ற அரசியல் திட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் இடம் பெயரும் சுதந்தரத்தையும் (freedom of movement) சமமாகச் செய்துவிட் டனர்.

ஆஸ்திரேலியத் திட்டத்தில் ஜீவாதார உரிமைகளைப் பற்றி விரிவான பிரிவுகள் இல்லாதிருந்த போதிலும், அங்குத் தனி நபரின் சுதந்தரம் மற்றக் காமன்வெல்து நாடுகளைப்போல நன்கு காக்கப் பட்டு வருகிறது.

## அத்தியாயம் —4

# கவர்னர் ஜெனரல்

ஆஸ்திரேலியாவிலும், மற்ற டொமினியன்களைப்போல, பிரிட்டிஷ் அரசு நாட்டின் பிரதம சின்னமாய் விளங்குகிறது. பிரிட்டிஷ் அரசியார் ஆஸ்திரேலியாவுக்கும் அரசியாராவார். பெயரளவில் ஆட்சி அதிகாரம் அவரிடந்தானிருக்கிறது. காமன் வெல்தில் கவர்னர் ஜெனரலும் அங்க நாடுகளில் கவர்னர்களும் அரசின் பிரதிநிதிகளாய் விளங்குகின்றார்கள். ஆஸ்திரேலியாவில் அரசியாரின் அதிகாரம் கவர்னர் ஜெனரலாலும் இராச்சியங்களில் கவர்னர்களாலும் செலுத்தப்பட்டு வருகிறது. பொதுவாக ஐக்கிய அரசாங்க அரசியலமைப்பில் இராணியார் என்ன பங்கு கொள்கிறாரோ, அதே பங்கை இப்பொழுது கவர்னர் ஜெனரல்களும் முறையே காமன் வெல்து அரசாங்கத்திலும் உறுப்பு நாட்டு அரசாங்கங்களிலும் கொள்கின்றார்கள்.

பெரும்பாலும் இராணியாரின் அலுவல்களும் கவர்னர் ஜெனரலின் அலுவல்களும் ஒரே மாதிரி இருந்த போதிலும், இருவருடைய நிலைமையிலும் பதவியிலும் முக்கிய வேற்றுமைகள் காணப்படுகின்றன. பிரிட்டிஷ் அரசர் பதவி வமிசபரம்பரையானது. அதனால், அது ஒரு தனிச் சிறப்பும் பீடும் உடையது. ஆனால், கவர்னர் ஜெனரலோ, குறிப்பிட்ட ஒரு காலத்திற்குச்—சாதாரணமாக 5 ஆண்டு காலத்திற்கு—நியமிக்கப்படுகிறார். முதலில் கவர்னர் ஜெனரல் குடியேற்ற நாடுகள் காரியதரிசியின் ஆலோசனையின்படி பிரிட்டிஷ் பிரதமர் ஒப்புதலுடன் அரசரால் நியமிக்கப்பட்டு வந்தார். அவ்வாலோசனையின்படியே அவர் திருப்பி அழைக்கவும் படலாம். 1930ல் நடைபெற்ற சாம்ராஜ்ய மகாநாடு (Imperial Conference) ஒரு நாட்டுக் கவர்னர் ஜெனரலின் நியமனம் அந்நாட்டு மந்திரி சபையின் ஆலோசனையின்படி செய்யப்படவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியது. மந்திரி சபை விரும்பினால் ஒரு கவர்னர் ஜெனரலின் நியமன காலம் முடிவதற்குள் அவரைத் திருப்பி அழைக்கவும் ஏற்பாடு செய்யலாம்.

கவர்னர் ஜெனரலின் முக்கியமான அதிகாரங்களும் அலுவல்களும் அரசியல் திட்டத்தின் சில பகுதிகளிற் கூறப்படுகின்றன.

அரசியல் திட்டத்தின் 61-ஆம் பிரிவு செயலதிகாரத்தை இராணியாரிடம் கொடுத்து அவ்வதிகாரத்தை இராணியாரின் பிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரல் செயற்படுத்தவேண்டும் என்று கூறுகிறது. அடுத்த பிரிவின்படி கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறக் கூட்டாட்சிச் செயற்குழு ஒன்று இருக்கவேண்டுமென்றும், அக்குழுவின் அங்கத்தினர்கள் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்டு அவரது விருப்பக்காலம் வரை பதவியிலிருந்து செயல் புரிய வேண்டுமென்றும் குறிப்பிடுகின்றது. அடுத்த பிரிவு, கவர்னர் ஜெனரல் கூட்டாட்சிக் குழுவைக் கலந்து ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தவேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. கவர்னர் ஜெனரலே நாட்டின் படைகளின் பிரதம தளபதியாராவார். காமன்வெல்து அரசாங்கத்தின் அலுவலர்களை நியமிக்கும் பொறுப்பு அவருடையதே. நீதிபதிகளை நியமிக்கும் பொறுப்பும், இரண்டு சபைகளின் வேண்டுகோளின் பேரில் அவர்களை நீக்கும் பொறுப்பும் கவர்னர் ஜெனரலைச் சேர்ந்தனவே.

மேலும், அரசியலமைப்புத்திட்டம் சட்டமியற்றுதல் பற்றிய சில அதிகாரங்களைக் கவர்னர் ஜெனரலுக்குக் கொடுத்திருக்கிறது. சட்டசபையின் கூட்டத் தொடர்களைக் கூட்டுதல், தள்ளி வைத்தல், கலைத்தல் ஆகிய பொறுப்புகள் அவருடையவை. இரு சபைகளிலும் நிறைவேறிய ஒரு மசோதா இராணியாரின் சம்மதத்திற்காகக் கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும். இராணியாரின் பெயரில் அவர் சம்மதம் அளிக்கலாம்; அல்லது, அளிக்காமலுமிருக்கலாம்; அல்லது, இராணியாரின் முடிவிற்காக நிறுத்தியும் வைக்கலாம். இராணியாரின் விருப்பத்திற்காக நிறுத்தி வைத்தால் ஈராண்டுகளுக்குள் தமது சம்மதத்தைக் கவர்னர் ஜெனரல் மூலம் தெரிவிக்க வேண்டும். அது வரை அம்மசோதா சட்டமாக இயங்க இயலாது. கவர்னர் ஜெனரல் பிரிவி கவுன்சிலின் அப்பீல் அதிகாரத்தைக் குறைக்கும் எந்த மசோதாவையும் இராணியாரின் சம்மதத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டும். கவர்னர் ஜெனரல் சம்மதம் அளித்த ஓராண்டிற்குள் இராணியார் எச்சட்டத்திற்கும் மறுப்பாணை விதிக்கலாம். அன்று முதல் அச்சட்டம் முற்றிலும் செல்லாது. (58,59, 60)

இரு சபைகளுக்கும் ஒற்றுமையில்லாமல் சட்டமியற்றுதலில் முட்டுக்கட்டை ஏற்பட்டால், கவர்னர் ஜெனரல் இரு சபைகளையும் கலைக்க உத்தரவிடலாம். புதிய சபைகளிலும் ஒற்றுமையில்லாவிட்டால், கவர்னர் ஜெனரல் இரண்டு சபைகளையும் சேர்த்துக் கூட்டி, கூட்டுச்சபையின் பெரும்பான்மை முடிவுக்கு விடலாம். அரசியலமைப்புத் திட்டத்தை மாற்றுவதற்கான பிரேரணைகளை இரண்டு சபைகளும் ஒப்புக்கொள்ளாவிட்டால், கவர்னர் ஜெனரல் அவற்றை மக்களது முடிவிற்கு விடலாம்.

மேற்கூறப்பட்ட அதிகாரங்கள் அரசியல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. வழக்காறுகளும் கவர்னர் ஜெனரலுக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கின்றன. இவை அமைச்சரவை முறை அரசாங்கம் சம்பந்தப்பட்டவைகளே. முதலாவதாக, பிரதம மந்திரியாரை நியமிக்கும் முக்கியமான பொறுப்பு, கவர்னர் ஜெனரலுடையதாகும். கீழ்ச்சபையில் தோல்வியுற்ற மந்திரிசபை, சபையைக் கலைக்கும்படி கவர்னர் ஜெனரலை வேண்டிக்கொள்ளலாம். சபையைக் கலைக்க உத்தரவிடுவது கவர்னர் ஜெனரலின் பொறுப்பாகும்.

அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்ட ஆரம்ப ஆண்டுகளில் கவர்னர் ஜெனரலுக்குத் தம் அதிகாரங்களைச் சில சந்தர்ப்பங்களில் தம் விருப்பப்படி இயக்க இயன்றது. அரசியலமைப்புத் திட்டமே [ரத்து செய்யுமதிகாரத்தினாலும், நிறுத்தி வைக்கும் அதிகாரத்தினாலும்] இதற்குச் சிறிதளவு இடம் கொடுத்தது. இவ்வதிகாரங்கள் மூலமாகச் சாம்ராச்சிய அரசாங்கத்திற்கு டொமினியன் விவகாரங்களில் ஓரளவு தலையிட முடிந்தது. ஆனால், **1926**ல் நடந்த சாம்ராஜ்ய மகாநாடு கவர்னர் ஜெனரல் அரசின் பிரதிநிதிதான் என்றும், அரசாங்கத்தின் பிரதிநிதியல்ல என்றும், ஆகையால் அந்நாட்டு மந்திரிகளின் விருப்பத்திற்கிணங்க இயங்க வேண்டுமென்றும் தெளிவு படுத்தியது. **1930**ல் நடந்த சாம்ராச்சிய மகாநாடும் **1931**ல் நிறைவேற்றப்பட்ட வெஸ்ட்மின்ஸ்டர் சட்டமும் மேலும் பொறுப்பாட்சியைத் தெளிவு படுத்தின. இவற்றின் விளைவால் அரசியற்சட்டத்தின் பிரிவுகள் பல [58, 59, 60] இப்பொழுது உயிரற்றனவாயுள்ளன. கவர்னர் ஜெனரல் தம் அதிகாரங்களைத் தம்முடைய அமைச்சர்களது ஆலோசனைப்படியே செலுத்த வேண்டும்.

அரசியலமைப்பின் வழக்காறுகள் கவர்னர் ஜெனரலுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரங்களை எவ்வாறு அவர் செலுத்துகிறார் என்பதைப் பார்ப்போம்: பிரதம மந்திரியார் நியமனம் சம்பந்தப்பட்ட வரையில் கவர்னர் ஜெனரல் கீழ்ச்சபையில் எந்தக்கட்சிக்குத் தெளிவான பெரும்பான்மை இருக்கிறதோ, அந்தக்கட்சியின் தலைவரை அழைத்து மந்திரிசபை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், எந்த ஒரு கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மைச் சார்பு இல்லாவிட்டால், கவர்னர் ஜெனரல் தம் விருப்பப்படி முடிவு செய்ய முடியும். அவர் எந்தக் கட்சிக்குக் கீழ்ச்சபையின் ஆதரவு இருக்கலாம் என்று நினைக்கிறாரோ, அந்தக் கட்சியின் தலைவரை மந்திரி சபை அமைக்கஅழைக்கலாம். காமன்வெல்து ஏற்படுத்தப்பட்ட முதற்பத்து ஆண்டுகளில், கீழ்ச்சபையில் மூன்று கட்சிகள் இருந்தன. ஒரு கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மைச் சார்பில்லை. இந்த நிலைமையில் கவர்னர் ஜெனரலுக்குத் தம் விருப்பப்படி தீர்மானஞ் செய்ய

வாய்ப்புக் கிடைத்தது. இரட்டைக் கட்சி முறையின் வளர்ச்சிக்குப் பிறகு இத்தகைய சந்தர்ப்பத்திற்கு இடமில்லை.

கவர்னர் ஜெனரலுக்குச் சட்டசபையைக் கலைப்பதற்கு அதிகாரம் உள்ளது என்பதைப் பார்த்தோம். பொதுவாக இந்த அதிகாரம் மற்ற அதிகாரங்களைப்போல அமைச்சரவையின் ஆலோசனையின் பேரிலேதான் செயற்படுத்தப்படும். ஏதாவதொரு முக்கியப் பிரச்சினையில் பிரதம மந்திரியாரின் கட்சி கீழ்ச்சபையில் தோல்வியுற்ருலோ, அல்லது கீழ்ச்சபையின் நம்பிக்கையை இழக்க நேர்ந்தாலோ, மந்திரி சபை இராஜிநாமாச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யாது மக்கள் சபையின் போக்கு மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லையென்று கருதிச் சபையைக் கலைத்துப் புதிய தேர்வு வைக்கும்படி கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறலாம். சபையில் தோல்வியுற்ற மந்திரிசபையின் வேண்டுகோளைக் கவர்னர் ஜெனரல் ஏற்பதா இல்லையா என்பது ஆய்தற்குரிய பொருள். இது வரை கவர்னர் ஜெனரல் மூன்று சந்தர்ப்பங்களில் இம்மாதிரியான வேண்டுகோள்களை ஏற்க மறுத்துவிட்டார். கட்சிப் பிரிவுகள் உறுதிப்படாமலிருந்த முதற்பத்து ஆண்டுகளிலேயே இச்சந்தர்ப்பங்களேற்பட்டன. மூன்று பிரதம மந்திரிகளும் சபையின் பெரும்பான்மைச் சார்பை இழந்தார்கள். ஆனால், சபையில் மூன்று கட்சிகள் போட்டியிட்டுக் கொண்டிருந்ததால், ஒரு கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை இல்லை. இவ்வாருன நிலைமையில் கவர்னர் ஜெனரல் தோல்வியுற்ற பிரதமர்களின் வேண்டுகோளை நிராகரிக்க மாற்று மந்திரி சபை ஏற்படுத்த முற்பட்டதற்குச் சரியான காரணம் இருந்தது என்று சொல்லலாம். இரட்டைக் கட்சி முறை வளர்ந்த பிறகு ஆஸ்திரேலியாவிலும் பெரும்பாலும் பிரிட்டிஷ் வழக்கம் பின்பற்றப்படுகிறது எனக் கருதலாம். (பிரிட்டிஷ் மன்னர் 1784-ஆம் வருஷத்திற்குப் பிறகு கலைப்பு வேண்டுகோள்களை நிராகரிக்கவில்லை) மேற்சபையின் முட்டுக்கட்டையைத் தவிர்க்க இரண்டு தடவைகள் மந்திரிசபையின் விருப்பத்திற்கிணங்க இரண்டு சபைகளும் கலைக்கப்பட்டன. 1914ல் கவர்னர் ஜெனரல் முதல்தடவையாக இரண்டு சபைகளையும் கலைக்க உத்தரவிட்ட பொழுது மேற்சபை தன் மறுப்பைத் தெரிவித்தது. இந்த மறுப்புக்குப் பதிலளிக்கையில் கவர்னர் ஜெனரல் பொறுப்பாட்சித் தத்துவப்படி மந்திரி சபையின் ஆலோசனைக்கு இணங்குவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதைத் தெளிவாகக் கூறினர்.

இரட்டைக் கட்சி முறையின் வளர்ச்சியும், சாம்ராச்சிய மகாநாடுகளின் தீர்மானங்களும் கவர்னர் ஜெனரலின் பதவியை ஒரு கௌரவப் பதவியாக்கிவிட்டன. ஆனல், கவர்னர் ஜெனரலும் பிரிட்டிஷ் அரசரைப் போல அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்தல், அவர்களை உற்சாகப்படுத்தல், சில சமயங்களில் எச்சரிக்கை செய்தல்

ஆகிய உரிமைகளைப் பெற்றிருக்கிறார். கட்சிப் பூசல்களினின்று தனித்து நின்று தேசத்தின் ஒற்றுமைக்கு அவர் ஒரு சீரிய சின்னமாய் விளங்குகிறார்; தேசத்துக்கும் அரசாங்கத்திற்கும் மதிப்பும் கண்ணியமும் பொருந்திய ஒரு தலைவராய் விளங்குகிறார். அவருக்கு அதிகாரம் இல்லை ; ஆனால், மிகுந்த செல்வாக்கு உண்டு.

# அத்தியாயம்—5

## அமைச்சரவை

ஆஸ்திரேலிய அரசியலமைப்புத் திட்டத்தில் அமைச்சரவையைப் பற்றியோ, பிரதம மந்திரியாரைப் பற்றியோ, ஒரு வார்த்தையும் கூறப்படவில்லை. ஆனால், கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறக் கூட்டாட்சிச் செயற்குழு (Federal Executive Council) என்னும் ஸ்தாபனத்தை அரசியலமைப்புத் திட்டம் குறிப்பிடுகிறது. மேலும், கவர்னர் ஜெனரல் நாட்டின் நிர்வாக இலாக்காக்களுக்கு ஆளும் அதிகாரிகளை நியமிக்கலாமென்றும் குறிப்பிடுகிறது. இவர்கள் கூட்டாட்சிச் செயற்குழுவில் அங்கத்தினர்களாகவும் பார்லிமென்டில் அங்கத்தினர்களாகவும் இருக்கவேண்டும். நியமிக்கப்படும் பொழுது இவர்கள் பார்லிமென்டில் அங்கத்தினர்களாய் இல்லாவிட்டால், மூன்று மாதத்திற்குள் அங்கத்தினராகவேண்டும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நாட்டின் மந்திரிகள் (Ministers of State) ஆவார்கள். இப்போது அமைச்சரவை என்று வழங்கப்படும் நிறுவனம் இம்முறையில் வளர்ந்ததேயாகும். சட்டபூர்வமான ஆதாரமில்லாத இந்நிறுவனம், அரசியலமைப்பின் வழக்காறுகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆயினும், இதுவே செயலதிகாரத்தின் உண்மையான இருப்பிடமாகும். இதன் முடிவுகளே (பெயரளவில்) கவர்னர் ஜெனரலின் செயற்குழுவின் முடிவுகளாக வெளியிடப்படும்.

பிரிட்டிஷ் அமைச்சரவை வழக்காறுகளே பெரும்பாலும் ஆஸ்திரேலியாவிலும் பின்பற்றப்படுகின்றன. அமைச்சரவை அங்கத்தினர்கள் சட்டசபையின் அங்கத்தினர்களாய் இருப்பதோடல்லாமல், அதற்கு, முக்கியமாகக் கீழ்ச்சபைக்குப் பொறுப்புள்ளவர்களாயும் இருக்கவேண்டும். பார்லிமென்டு முறை அரசாங்கத்தின் அடிப்படையான தத்துவம் இது. கவர்னர் ஜெனரல் கீழ்ச்சபையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை அழைத்து மந்திரி சபை அமைக்கச் செய்வார். மந்திரிமாரனைவரும் சாதாரணமாக ஒரே கட்சியைச் சேர்ந்தவராகவே இருப்பர். சட்டசபையில் எந்தக் கட்சியும் தனியாக ஆட்சி நடத்தப் போதுமான பெரும்பான்மைச் சார்பு பெறுதிருக்கு

மாளுல், சபையின் செல்வாக்கை எவர்பெற இயலும் என்று கவர்னர் ஜெனரல் கருதுகின்ருரோ, அவரை அழைத்து, மந்திரி சபையை அமைக்கச் சொல்லுவார். அதன் விளைவாக ஒரு கூட்டு மந்திரி சபை ஏற்படுத்தப்படலாம்.

மந்திரி சபையின் பொறுப்பு இரு வகைப்படும். முதலாவதாக, மந்திரி சபை கவர்னர் ஜெனரலுக்குப் பொறுப்புள்ளதாய் இருக்க வேண்டும். இது அரசியல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனுல், பொறுப்பாட்சியில் இது பெயரளவினதே.

இரண்டாவதாக, மந்திரி சபை கீழ்ச்சபைக்குப் பொறுப்புள்ள தாய் இருக்க வேண்டும். பார்லிமென்டு ஆட்சி முறையில் இது முதலிடம் வகிக்கிறது. கீழ்ச்சபையின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மந்திரி சபையே பதவியிலிருக்க இயலும். இப்பொறுப்பின் சிறந்த அமிசம் என்னவென்ருல், இப்பொறுப்புக் கூட்டுப் பொறுப்பாயிருப் பதே. மந்திரிமார் யாவரும் தனி நபர்களாய் மட்டுமன்றி, ஒரே குழு வாயும், கீழ்ச்சபைக்குக் கூட்டுப்பொறுப்புள்ளவர்களாயும் இருக் கின்றனர். மந்திரி சபை ஓர் அங்கமாக இயங்கவேண்டும். ஒவ்வொரு மந்திரியாரின் ஆலோசனைக்கும் நடப்புக்கும் மந்திரிசபையே பொறுப் புள்ளதாய் இருக்கவேண்டும். மந்திரி சபை உருவாக்கிய கொள்கையி னின்று ஒரு மந்திரியாருக்கு அபிப்பிராய பேதம் இருந்தால், அவரது கடமை இராஜிநாமா செய்வதேயாகும். மந்திரிசபை சட்ட சபையின் ஒப்புதலையும் நம்பிக்கையையும் இழக்குமாயின், அது பதவியினின்றும் விலக நேரிடும்.

ஆஸ்திரேலிய அரசியற்சூழ்நிலை அமைச்சரவையாட்சியில் சில குறிப்பிடத்தக்க வழக்காறுகளைப் புகுத்தியிருக்கின்றது. ஆஸ்தி ரேலிய அரசியலில் அரசியற்கட்சிகள் மிகத் திண்ணிய பங்கு கொள்ளு கின்றன. சட்டசபை அரசியற்கட்சி மிகவும் பலம் பொருந்தியதாய் இருக்கிறது. முதலில் தொழிற்கட்சி மந்திரி சபை அமைக்கும் முறையைப் பார்ப்போம்: தொழிற்கட்சிப் பிரதம மந்திரி யாருக்குத் தம் விருப்பப்படி தம் சகாக்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் அதிகாரம் இல்லை. கவர்னர் ஜெனரலால் மந்திரி சபை அமைக்க அழைக்கப்பட்ட பிறகு, கட்சித் தலைவர், கட்சிக்குழு (**Caucus**) என்று வழங்கப்படும் சட்டசபைக் கட்சியிடம் தமக்கு இத் தனை நபர் கொண்ட மந்திரி சபை வேண்டுமென்று கேட்டுக்கொள் வார். கட்சிக்குழு பூரணவோட்டு முறைப்படி மந்திரி சபையைத் தேர்ந்தெடுக்கும். இந்த முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு வருக்கும் தேர்ந்தெடுப்பவர்களின் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கும். சாதாரணமாகக் கட்சித் தலைவர் தமக்கு வேண்டிய நபர்களைத் தேர்ந்தெடுக்கும்படி செய்யலாம். சில சந்தர்ப்பங்களில் அவர் விரும்பாதவர்களையும் கட்சிக்குழு தேர்ந்தெடுக்கலாம்.

அவ்வாறு நேர்ந்தால், அமைச்சரவைக் கூட்டங்களில் பலத்த விவாதங்கள் ஏற்படுவது இயற்கை. ஒற்றுமையான முடிவுகள் ஏற்படாவிட்டால், முடிவுகளில் திருத்தியடையாதவர் கட்சிக்குழுவின் கூட்டங்களில் அவற்றை மாற்ற முயலலாம். கட்சிக்குழு மந்திரி சபையைத் தேர்ந்தெடுத்த பிறகு கட்சித் தலைவர் தம் விருப்பப்படி இலாக்காக்களை ஒதுக்குவார். அதற்கப்புறம் அமைச்சரவை சாதாரணமாக இயங்கிய போதிலும் அமைச்சரவைக்கும் கட்சிக்குழுவிற்கும் நெருங்கிய தொடர்பு எப்பொழுதும் உண்டு. பிரேரணைகள் சட்டசபையில் சமர்ப்பிக்கப்படுமுன் கட்சிக்குழுவின் சம்மதத்தைப் பெறுவது வழக்கம். கட்சிக்குழுவிற்கும் அமைச்சரவைக்கும் பொதுவாகச் சுமுகமான உறவு இருந்த போதிலும் சச்சரவுகளும் ஏற்படலாம். இவற்றைத் தீர்க்கச் சில சமயங்களில் கட்சியின் உதவி தேவையாயிருக்கலாம்.

தொழிற்கட்சி எதிர்க்கட்சியாய் இருந்தால், லிபரல் கண்ட்ரிக் கட்சிகள் கூட்டு மந்திரி சபை அமைக்கும். லிபரல் கட்சி கண்ட்ரிக் கட்சியைவிடப் பெரிய கட்சியாய் இருப்பதால், அதன் தலைவரே மந்திரிசபையை அமைக்கக் கவர்னர் ஜெனரலால் அழைக்கப்படுவார். கூட்டு மந்திரிசபையில் கண்ட்ரிக் கட்சியின் பங்கு அதன் சட்டசபைப் பலத்தைப் பொறுத்தது. கட்சியின் மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பது கட்சித் தலைவரின் பொறுப்பாகும். லிபரல் கட்சித் தலைவரும் தம் கட்சி மந்திரிமார்களைத் தாமே தேர்ந்தெடுக்கிறுர். இப்போது இந்தக் கட்சிகளிலும் தொழிற்கட்சி முறையைக் கடைப்பிடிப்பதற்கு மிகுந்த ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கட்சியின் பெரும்பான்மையிலுள்ள சில இராச்சிய சட்டசபைகளில் கட்சிக்குழுவே மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கிறது.

மந்திரிசபை எவ்வாறு அமைக்கப்பட்ட போதிலும் மாறுபட்ட முறைகளினுல் சபையின் தோற்றத்தில் அதிக வேறுபாடுகள் இருக்கும் என்று சொல்ல இயலாது. எப்படித் தேர்ந்தெடுத்தாலும், அச்சபை கட்சித் தலைவர்களைப் பெற்றிருக்க வேண்டும். கட்சியிலுள்ள முதன்மையான கருத்துகளுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். நகர்ப்புற நாட்டுப்புறக் கருத்துகள் அங்குச் சமநிலைபடுத்தப்படவேண்டும். கூடுமான வரை ஒவ்வோர் உறுப்பு நாட்டிற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். ஆகையால், ஒரு தனி நபரின் விருப்பப்படியோ, அல்லது குழுவின் விருப்பப்படியோ, மந்திரி சபையை அமைக்க அதிக இடமில்லை.

ஆயினும், இரண்டு கட்சிகளும் அமைக்கும் மந்திரி சபை ஒரு பிரிட்டிஷ் மந்திரிசபையைப்போல ஒருமைப்பாடுள்ள மந்திரிசபையாய் இருத்தல் இயலாது. மேலே குறிப்பிட்டபடி மந்திரி சபை அமைப்பதில் பல விஷயங்கள் கவனிக்க வேண்டியிருக்கின்றன. இரண்

டாவதாக, லிபரல் கண்ட்ரி மந்திரிசபை கூட்டு மந்திரிசபையாகை யால், ஒருமைப்பாட்டை எதிர்பார்க்க இயலாது. தொழிற்கட்சி மந்திரிசபை அமைக்கும் விதம் ஒருமைப்பாட்டிற்கு ஓரளவு பங்கம் விளைத்தே தீரும். இக்காரணத்தினலேயே ஆஸ்திரேலிய அரசியலில் கொள்கை வேறுபாடுகள் காரணமாகப் பதவியினின்றும் விலகும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இல்லை. மந்திரி சபை பெரும்பாலும் தன் வழியை விட்டு விலகிச்செல்லும் மந்திரிகளைக் கூடியவரை பொறுத்துக் கொள்வதோடல்லாமல், அமைச்சர்களது வெளிப்படையான வேற்றுமைகளையும் பொறுத்துக்கொள்கின்றது. இதன் மூலம் ஆஸ்திரேலியாவில் கூட்டுப்பொறுப்பு, மாற்றமின்றிக் கடைப்பிடிக்கப்படும் கொள்கை அன்று என்பது விளங்குகின்றது.

எவ்வாருயினும், மேற்கூறிய ஆஸ்திரேலிய வழக்காறுகளும் செயல் முறைகளும் அமைச்சரவை அரசியல் தத்துவத்தின் அடிப்படையை மாற்றவில்லை. கட்சிக்குழுவின் ஆதிக்கம் பலமாய் இருப்பினும், அரசியல் முடிவுகள் யாவும் இறுதியில் அமைச்சரவையாலேயே செய்யப்படவேண்டும். அவையாவற்றிற்கும் அமைச்சரவையே சட்டசபைமுன் பொறுப்பாளி. மேலும், சட்டசபையைக் கலைக்கும் அதிகாரம் மந்திரிசபையிடம் இருப்பதால், அக்கருவியை உபயோகிப்பதால் உண்டாகும் விளைவுகளினின்றும் தப்பக் கட்சிக்குழு அவையின் போக்கை அறிந்து நடந்துகொள்ளும். ஆயினும், கட்சிக்குழு மந்திரி சபை மீது ஆதிக்கம் செலுத்த முயல்வது ஓரளவு மந்திரி சபை நிலையில்லாமைக்குக் காரணமாய் இருக்கிறது.

ஆஸ்திரேலியப் பிரதம மந்திரியாருக்கு பிரிட்டிஷ் பிரதம மந்திரியாரைப் போலத் தனிச்சிறப்பு இல்லாதிருந்த போதிலும், அவருடைய தலைமையும் முதன்மையும் பாதிக்கப்படவில்லை. அமைச்சரவையின் தலைவராக, அதன் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதோடல்லாமல் கூட்டங்களின் நிகழ்ச்சி முறையையும் நிர்ணயிக்கிருர். பொதுவாக வெளிநாட்டு விவகாரங்களிலும் பாதுகாப்பு விஷயங்களிலும் தனி அக்கறை எடுத்துக்கொண்டபோதிலும்,மற்ற இலாக்காக்களையும் கண் காணித்துக்கொள்கிருர். அமைச்சரவை வேலைகளை இணைப்பது பிரதம மந்திரியாரின் முக்கியப் பொறுப்பாகும்.

சட்டசபையைக் கலைப்பது பிரதம மந்திரியாரின் தனிப்பட்ட பொறுப்பாய் இருந்த போதிலும் ஆஸ்திரேலியாவில் பிரதம மந்திரியார் மந்திரி சபையைக் கலந்துகொண்ட பிறகுதான் முடிவு எடுப்பது வழக்கமாய் இருக்கிறது.

அடுத்து அமைச்சரவையின் அலுவல்களைப்பற்றிப் பார்ப்போம்: அமைச்சரவையின் முக்கிய அலுவல்கள் மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதலாவது, சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டிய கொள்கைகளைத் தீர்மானித்தல்; அடுத்தது தேசிய ஆட்சி அதிகாரத்தைப் பார்லி

மென்டின் விருப்பப்படி செலுத்துதல்; மூன்றுவது, பல்வேறு துறைகளேயும் இலாக்காக்களேயும் இடையருது இணைத்தலும் அவற்றின் அலுவல்களின் எல்லேயை நிர்ணயித்தலுமாகும். அமைச்சரவையின் தலேயாய கடமை, நாட்டின் தலேமைப் பொறுப்பைத் தாங்குதலும் கொள்கையை உருவாக்குதலுமாகும். மிக்க முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாய் இல்லாவிடில், அது அவ்விஷயம் செயற்படுத்தும் இலாக்காவிலேயே முடிவு செய்யப்படும். பிரச்சினே முக்கியம் வாய்ந்ததாய் இருப்பின், மந்திரிகள் அவை கூட்டி ஆராய்ந்து முடிவு செய்வார்கள். இவ்வாறு வகுக்கப்படும் கொள்கைகளே உருவாக்குதலில் அரசாங்க அலுவலர்கள் முக்கியப் பங்கு கொள்கின்றுர்கள். அவர்கள் அளிக்கும் மூலப் பொருள்களே இக்கொள்கைகளே உருவாக்குவதற்கு ஆதாரமாய் உள்ளன.

மந்திரிசபையில் ஒவ்வொரு மந்திரியாரும் தமது இலாக்காவிற்குப் பொறுப்புள்ளவராயிருக்கிருர். இச்சபை திட்டமிடும் ஒரு நிறுவனமாக மட்டுமன்றி, ஓர் இணேப்பு ஸ்தாபனமாயும் இயங்குகின்றது. இலாக்காக்கள் அனேத்தையும் அலுவல் முறைகளில் இணேப்பது மந்திரி சபையின் மிகச் சீரிய பணிகளுள் ஒன்றுகும்.

மேலும், இச்சபை கூட்டாகச் சில முக்கியச் செயலதிகார அலுவல்களேக் கவர்னர் ஜெனரலின் பெயராற் செயற்படுத்துகின்றது. நீதிபதிகள், தூதர்கள், பிரதமக் கணக்குத் தணிக்கையாளர் (Auditor General), சிவில் அலுவலர் ஆணேக்குழு (Public Service Board) அங்கத்தினர் போன்ற முக்கிய நியமனங்களேச் செய்யும் பொறுப்பு இதன் ஆட்சியிலிருக்கின்றது.

சட்டசபையைக் கூட்டுதல், தள்ளி வைத்தல், கலேத்தல், ஆகிய அதிகாரங்களும் இதனுடையவையே. பார்லிமென்டு முறை அரசியலமைப்பில் செயலதிகாரியான அமைச்சரவைக்கும் சட்டசபைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பது தெளிவு. சட்டசபையின் அலுவல்கள் யாவற்றிலும் பிரதம மந்திரியாரும் மற்ற மந்திரியாருமே வழி காட்டிகளாய் விளங்குகின்றனர்.

**அமைப்பு :** அமைச்சரவையின் அமைப்பை நோக்குவோம் : பிரிட்டனில் காபினட்டுக்கும் மந்திரி சபைக்கும் உள்ள வேறுபாட்டைப் போல ஆஸ்திரேலியாவில் ஒரு வேறுபாடுமில்லாதிருந்தது. ஆரம்பத்தில் 7 மந்திரிகள் கொண்ட ஒரு சிறிய கச்சிதமான ஸ்தாபனமாய் இருந்ததால் பிரிட்டிஷ் வழக்கத்தைப் பின்பற்ற அவசியமில்லே. உலகப் போர்களும் வியாபார மந்தங்களும் அரசாங்கத்தின் பொறுப்புகளே அதிகரித்ததால், புதிய இலாக்காக்கள் ஏற்படுத்தப்பட்டன. அமைச்சரவையும் வளர்ந்துகொண்டே வந்தது. அது இப்பொழுது 22 அமைச்சர்கள் கொண்ட சபையாய் இருக்கிறது. இவ்வளவு பெரிய சபை கலந்து ஆலோசனே செய்து ஒரு முடிவுக்கு வருவது

என்பது கடினமானதே. அமைச்சரவை திறம்பட இயங்குவதற்குப் பாதுகாப்பு, பொருளாதாரம் போன்ற முக்கியமான விஷயங்களைக் கவனிக்க மந்திரிமார் சிலரைக் கொண்ட நிலைக்குழுக்கள் அமைக்கப் பட்டன. இவை வெற்றிகரமாக இயங்கவில்லை. 1954ல் பிரதம மந்திரியார் மென்சிஸ் காலத்தில் மந்திரி சபை இரண்டாகப் பிரிக்கப் பட்டது. ஒன்று, கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களையும், மற்றொன்று, நிர்வாக விஷயங்களையும் கவனித்தன. 1956ல் பிரிட்டிஷ் வழக்கம் கையாளப்பட்டது. இப்பொழுது ஆஸ்திரேலிய மந்திரிசபை, 'அமைச்சர் குழு (Cabinet), அமைச்சரவை (Ministry)' என்னும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஆஸ்திரேலியா வில் பிரிட்டனைப் போலல்லாமல், அமைச்சர் குழு அமைச்சரவையை விடப் பெரிய நிறுவனம். அமைச்சர் குழு 12 மந்திரிகளைக் கொண் டது; அமைச்சரவை 10 மந்திரிகளைக் கொண்டது.

மந்திரிகளுக்கு உதவுவதற்கு 1956ல் முதல் முதலாகச் சட்ட சபைச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். போர்க்காலங்களில் இரண்டொரு மந்திரிகளுக்கு உதவுவதற்காக உதவி மந்திரிகள் நியமிக் கப்பட்ட போதிலும், அந்தப்பழக்கம் ஒழுங்காக்கப்படவில்லை. இவ்வாறு நியமிக்கப்படும் சட்டசபைச் செயலாளர்கள் பின்னர் மந்திரி பதவி ஏற்பதற்கு நல்ல பயிற்சி பெறுகின்றார்கள்.

பிரிட்டனில் 1916ல் அமைக்கப்பட்ட காபினட்டு செக்ரிடேரி யட்டு, காபினட்டு ஒழுங்காக இயங்குவதற்கு மிக உதவியாய் இருக் கிறது. ஆஸ்திரேலியாவில் இதை ஏற்படுத்த (1932ல் பிரதம மந்திரி யார் லையான்ஸ் காலத்தில்) செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. ஆஸ்திரேலியாவில் காபினட்டு செக்ரிடேரியட்டே பிரத்தியேகமாகச் செயல் முறைகளைக் கவனிக்கிறது. காபினட்டுக் கூட்டத்திற்குப் பிரதம மந்திரியாரின் உதவியுடன் நிகழ்ச்சிநிரல் தயாரிப்பது அதன் முக்கிய அலுவலாகும்.. மந்திரி சபை கூடுவதற்கு முன்னால், மந்திரி சபைக்கு நிகழ்ச்சி நிரலிலுள்ள விஷயங்களைப்பற்றி விளக்கங்கள் கொடுக்க வேண்டும். இறுதியில் காபினட்டு முடிவுகள் பற்றிக் குறிப்பு வைப்பது அதன் பொறுப்பாகும். நிகழ்ச்சி நிரலில் உள்ள விவரங்களின் முடிவுகள் பற்றிச் சுருக்கமாக ஏதாவது ஒரு மந்திரி காபினட்டு செக்ரிடேரியட்டிற்குத் தெரிவித்த பிறகு அது முடிவுகளின் விவரங்களைத் தயார் செய்து வந்தது. 1939லிருந்து பிரதம மந்திரி யாரின் இலாக்காவின் முதல்வர் காபினட்டின் செயலாளராய்க் காபி னட்டுக் கூட்டங்களில் கலந்துகொண்டார். இப்பொழுது காபினட்டுக் கூட்டங்களின் முடிவுகளைத் தயாரிப்பது அவர் பொறுப்பாகும்.

## அத்தியாயம்—6

# பாராளுமன்றம் - மக்கள் சபை

ஆஸ்திரேலிய காமன்வெல்தின் பாராளுமன்றம், அரசியாரின் பிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரல், செனட்டு, பிரதிநிதிகள் சபை என்னும் மூன்று உறுப்புகளைக் கொண்டதாய் உள்ளது.

பிரதிநிதிகள் சபை மக்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் அதன் அங்கத்தினர் தொகை செனட்டின் அங்கத்தினர் தொகையைப்போல இருமடங்கு இருக்க வேண்டுமென்றும் அரசியலமைப்புத் திட்டம் குறிப்பிடுகிறது. மேலும், அங்க நாடுகளின் பிரதிநிதித்துவம் அவற்றின் ஜனத்தொகைக்குத் தகுந்தவாறு இருக்க வேண்டுமென்றும், ஆனால் முதன்முதலில் காமன்வெல்தை ஒன்றுகூடி நிறுவிய அங்க நாடுகளுக்குச் சபையில் 5 உறுப்பினருக்குக் குறையாது பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

பிரதிநிதிகள் சபைக்கு மூன்று ஆண்டிற்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும், மூன்று ஆண்டு காலம் முடிவதற்கு முன் கவர்னர் ஜெனரல் அதைக் கலைக்கலாம் என்றும் அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. 1949 வரை சபையின் எண்ணிக்கை 74ஆய் இருந்தது; அதன் பின் 121 ஆகக் கூட்டப்பட்டது. தலைநகரின் பகுதிக்கும் (Capital territory) நாட்டின் வடபகுதிக்கும் (Northern Territory) தலைக்கொரு பிரதிநிதி சபையில் உண்டு. ஆனால், அவர்களுக்குச் சபையில் இருக்கை இருப்பினும், வாக்குரிமை இல்லை.

ஆஸ்திரேலியப் பாராளுமன்றம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைப் போலச் சர்வ சுதந்தரமுள்ள சட்டமன்றமன்று. ஏனெனில், அதன் அதிகாரம் எழுதப்பட்ட கூட்டாட்சி அரசியலமைப்புத் திட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசியல் திட்டத்தின் 51-ஆம் பகுதியின் 39 தலைப்புகளின் கீழ்ப் பாராளுமன்றத்தின் அதிகாரங்களாகும். பிரதிநிதிகள் சபையின் முக்கிய அலுவலாகிய சட்டமியற்றுதலுக்கு ஆதாரம் மேற்சொன்ன பிரிவின் தலைப்புகளே. குறிப்பிடப்படாத அதிகாரங்கள் அங்கு நாட்டுச் சட்டசபைகளைச் சேர்ந்தனவாகும். இந்த அதிகாரப் பிரிவினையைக் காப்பது நீதித்துறையின் பொறுப்

பாகும். இவ்வதிகாரம் பாராளுமன்றத்தை நீதித்துறையின் கட்டுப் பாட்டிற்குள்ளாக்கிவிடுகிறது. மேலும், அரசியலமைப்புத் திட்டத்தை மாற்றக் கொண்டு வரும் பிரேரணைகளைத் தொடங்கும் அதிகாரம் பாராளுமன்றத்தினிடம் இருந்தபோதிலும் அவற்றை நிறைவேற்றுவது அதன் கையில் இல்லை.

மற்ற டொமினியன் பாராளுமன்றங்களைப்போல ஆஸ்திரேலியப் பாராளுமன்றத்திற்குத் தன் நடவடிக்கைகளை நடத்துவதற்குக்கூட முழு அதிகாரம் இல்லை. ஏனெனில், அரசியல் திட்டத்தின் 55-ஆம் பிரிவின்படி வரி விதிப்புச் சட்டத்தில் வரி விதிப்பைத் தவிர வேறு விஷயங்களைக் குறிப்பிடக்கூடாது. ஒரு மசோதா வரி மசோதா வென்று நிர்ணயிப்பது ஆஸ்திரேலியாவில் சபாநாயகரின் அதிகாரம் அன்று. இந்த விஷயத்திற்கூட நீதிமன்றம் தலையிடலாம். அவ்வாறு ஒரு தீர்ப்பில் தலையிட்டுமிருக்கிறது.

**சட்டமியற்றுதல் :** உலகிலுள்ள மற்ற நாட்டுக் கீழ்ச்சபைகளைப் போலப் பிரதிநிதிகள் சபையும் சட்டமியற்றுதலில் முதன்மையைச் சபையின் சில அங்கத்தினர்களுக்கு விட்டுக்கொடுத்துவிட்டது. ஆஸ்திரேலியாவிலும் மற்றப் பார்லிமெண்டு முறை நாடுகளில் உள்ளது போல அமைச்சரவையே சட்டமியற்றுதலில் தனது அதிகாரத்தை நிறுவிக்கொண்டது எனக் கூறின், அது மிகையாகாது.

இப்போது சட்டமியற்றுதல் என்பது ஒரு சிக்கலான செயல். ஒரு சட்டசபையே சட்டமியற்றுதலின் முழுப்பொறுப்பையும் ஏற்பதென்பது இயலாததாகும். அதனால், சட்டப் பிரேரணைகளெல்லாம் அமைச்சரவையினால், ஆட்சி முறை அலுவலர்களது உதவியுடன் ஆராயப்பட்டு, சட்டசபையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆகையால், சட்டசபையின் வேலை சட்டமியற்றுதலைப் பொறுத்த வரை இரண்டாந்தரமானதே. அமைச்சரவையிலிருந்து வரும் பிரேரணைகளைப் பரிசீலனை செய்வதும் அவற்றில் குறை கண்டு மாற்றம் செய்வதும் கீழ்ச்சபையின் முக்கிய வேலைகளாய் இருக்கின்றன.

திரு. டேவிஸ் என்பார், தாம் எழுதியிருக்கும் 'ஆஸ்திரேலிய ஜனநாயகம்' என்ற நூலில் ஆஸ்திரேலியப் பாராளுமன்றம் சட்டமியற்றுதலில் கொள்ளும் பங்கை நன்றாக விளக்கியிருக்கிறார். அவர் எடுத்துக்கொள்ளும் மாதிரி ஆண்டு, 1950-ஆம் ஆண்டு. அவ்வாண்டில் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களின் விவரம் பின் வருமாறு :

| | |
|---|---|
| கொள்கை. (Policy) | 13 |
| ஆட்சி முறை | 40 |
| 1. இலாக்காக்கள் | 24 |
| 2. செல்வாக்குக் குழு | 16 |
| தாற்காலிகச் சட்டம் | 3 |

ஆண்டு நிதிச் சட்டம் $\frac{24}{80}$

கொள்கை மசோதாக்களே ஓர் ஆண்டு சட்ட நிரலின் உயிர்நாடியாகும். அவை கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட கொள்கைகளாகவும், எதிர்பாராத சவால்களைச் சமாளித்தற்கான கொள்கைகளாகவும் இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட ஆண்டில் கம்யூனிஸ்டு கட்சிக்குத் தடைவிதித்தல், இளைஞர்களைப் பாதுகாப்புப் படையில் கட்டாயமாய்ச் சேர்த்தல், பள்ளி மாணவருக்கு இலவசப் பால் வழங்குதல் பற்றிய மசோதாக்கள், முதல் வகையைச் சேர்ந்த மசோதாக்களாகும். ஸெனட்டு முட்டுக் கட்டைகளைத் தடுத்தல், விற்பனை வரி, அஞ்சற்கட்டண அதிகரிப்பு, உலக பாங்கிடம் கடன் வாங்குதல் பற்றிய மசோதாக்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை. இந்த மசோதாக்களைத்தான் எதிர்க்கட்சி அரசாங்கம் விரும்பாத வழிகளில் மாற்ற முற்படும். இந்தச் சந்தர்ப்பங்களில் விவாதம் நீடித்துச் சிறப்புடையதாய் இருப்பினும், பயனற்ற விவாதமாகவே இருக்கும்.

பெரும்பான்மை மசோதாக்கள் சச்சரவில்லாதவையாயிருக்கின்றன. அவை செல்வாக்குக் குழுக்களின் தூண்டுதலின் பேரில் நிர்வாகத்துறை கொண்டு வரும் மசோதாக்களும் அலுவலர்கள் தங்கள் முயற்சியினாலேயே கொண்டு வரும் மசோதாக்களுமாகும்.

இப்பட்டியலில் தனி நபர் மசோதா இடம் பெறவில்லை என்பது தெரிகிறது. ஆஸ்திரேலியாவில் தனி நபர் மசோதாக்கள் பெரும்பாலும் மசோதாவின் உருவில் அவர்களால் கொண்டுவரப்படுவதில்லை. அவர்களால் கொண்டுவரப்படும் மோஷன்களுக்குச் சட்ட உருக் கொடுக்கும் வேலையை அரசாங்கத்திடமே விட்டுவிடுகிறார்கள். இவ்வாறு நிறைவேற்றப்படும் மசோதாக்கள் மிகக்குறைவே. இதற்குச் சட்டசபையின் அவைகள் சிறியனவாயிருத்தலும், அமைச்சரவைக்கும் கட்சிக் குழுவுக்கும் இருக்கும் நெருங்கிய தொடர்பும், தனி நபரின் ஊக்கத்தைப் பாதிக்கும் கட்சிக் கட்டுப்பாடும் காரணங்களாக இருக்கலாம்.

சட்டமியற்றுதலில் பார்லிமென்டின் பங்கு இரண்டாந்தரந்தினதாக மட்டும் இருப்பதோடல்லாமல், இப்பொழுது சட்டசபைக்கு வெளியே மிகுதியாகச் சட்டங்கள் மந்திரிகளாலும் நிர்வாகத்துறை அலுவலர்களாலும் செய்யப்படுகின்றன. இது சட்டங்களால் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விதி வகுக்கும் அதிகாரத்தினால் சாத்தியக்கூறாகிறது. கூட்டாட்சிச் சட்டங்களில் இரண்டில் ஒரு பகுதி விதிகள் வகுக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்குவதாய் இருக்

கின்றது. இதுவே இப்போது புகழ் பெற்ற 'தரப்பெருஞ்சட்டம் செய்யுரிமை' என்பதாகும். சட்டத்தாற் குறிப்பிடப்பட்ட கோட் பாடுகளடங்கிய செயல்முறை விவகாரங்களை அதிகார வர்க்கத்தினர் விதிகள் மூலம் ஏற்படுத்துகின்றனர். இதனுல் இப்போதைத் தேவைக் குத் தகுந்தபடி பாராளுமன்றம் மிகுதியான சட்டங்களை இயற்ற இயலுகிறது. இவ்வேற்பாடு இடத்திற்கேற்பவும் சந்தர்ப்பத்திற் கேற்பவும் விதி முறைகளை இயற்றவும் இயற்றிய விதிகளை மாற்றவும் நிர்வாகத்துறைக்கு வசதியளிக்கிறது. சட்டங்கள் விளக்கச் சட்டம் நிர்வாகத்துறை வகுக்கும் விதிகளைப் பார்லிமென்டின் ஆராய்விற் குட்படுத்தும் விதிகளை வகுத்திருக்கிறது. அதன்படி நிர்வாகத்துறை விதிகள் யாவும் கெஜட்டில் குறிப்பிடப்பட்டுச் சட்டசபை கூடிய 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்பு அதே அளவு காலத்திற்குள் சபையால் ஒப்புக்கொள்ளப்படவோ நிராகரிக்கப் படவோ வேண்டும். சட்டசபைக்கு நிராகரிக்க அதிகாரம் இருப்பி னும், நேரமின்மையால் யாவற்றையும் தீர ஆராய்வது என்பது இயலாத செயல். ஆகவே, தேர்ந்தெடுத்த சிலவற்றையே சட்டசபை ஆராய்கின்றது. இவ்வாறு குறிப்பிட்ட சிலவற்றை ஆராய்வது உறுப்பினர்களுக்கு அவற்றிலுள்ள அக்கறையைப் பொறுத்தது.

**நிதி அதிகாரம் :** ஆளும் அதிகாரத்தின் செலவுகளுக்குப் பணம் வழங்குதல் பாராளுமன்றத்தின் தொன்றுதொட்ட அலுவலாய் இருந்தபோதிலும், இப்பொழுது அது தனது முதன்மையை இழந்து விட்டது. அதிலும் அமைச்சரவைக்கே எல்லா அதிகாரமும் சென்று விட்டது. பார்லிமென்டின் கட்டுப்பாடு பெயரளவினதே. வரி மசோதாக்கள் அடங்கிய பட்ஜட்டு அறிக்கை பற்றிய விவாதம் பெரும்பாலும் புதிய வரிப்பிரேரணைகளைப் பற்றியும் மாற்றங்களைப் பற்றியுமே இருக்கும். ஆனுல், எஸ்டிமேட்டுகள் பற்றிய விவாதம் சபை கவனித்துக்கொண்டிருக்கும் விஷயங்களுக்கு உகந்ததாய் இராது; பொதுவாக, அரசாங்கத்தின் குறைகளையோ சாதனை களையோ பற்றிப் பேசுவதற்கே உபயோகப்படுத்தப்படுகிறது. சுருங்கச் சொல்லுமிடத்து உறுப்பினர் இவ்விவாதத்தைத் தமது கருத்துகளுக்குப் போக்கீடாகச் செய்துகொள்கின்றனர் எனலாம். இவ்விவாதங்கள் பொதுவாக அரசாங்கத்தின் திட்டங்களை மாற்ற வல்லன அல்ல.

வழங்கப்பட்ட பொருள் எவ்வாறு செலவழிக்கப்பட்டது என்பது பற்றிய விவாதம் சற்றுப் பயன் தரக்கூடியதாகும். கருவூலகமும் ஆடிட்டர் ஜெனரலும் நன்கு பயின்ற அலுவலர்களுடன் விசாரித்த போதிலும், இவற்றைத் தொடர்ந்து விசாரித்துப் பரிசீலனை செய்யப் பார்லிமென்டின் பொது மக்கள் கணக்கு ஆராய்வுக்குழு (Public Accounts Committee) தகுதியான ஸ்தாபனமாய் இருக்கிறது. பொது

மக்கள் கணக்கு ஆராய்வுக்குழு 1913ல் அமைக்கப்பட்டு, 1932ல் அரசாங்கச் செலவில் சிக்கனத்தின் அவசியத்தினுல் இரத்துச் செய்யப் பட்டது. அது 1951ல் மறுபடியும் ஏற்படுத்தப்பட்டு இப்பொழுது தன் வேலையைச் செவ்வனே செய்து வருகிறது.

# அத்தியாயம்—7

## பாராளுமன்றம் - மேற்சபை

**ஸெனட்டு :** ஆஸ்திரேலிய அரசியலமைப்புத் திட்டத்தை வகுத்த தேசியக் கன்வென்ஷன்களின் ஸெனட்டின் அமைப்பு, அதிகாரம் பற்றி நீண்ட தீவிரமான விவாதம் நடைபெற்றது ; ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஸெனட்டு, பிரித்தானிய பிரபுக்கள் சபைபோன்ற மேற்சபைகளின் அனுபவத்திலிருந்து மேற்சபையின் அவசியத்தை நன்குணர்ந்தது. எப்படிச் சபையைத் தேர்ந்தெடுப்பது, எவ்வளவு தூரம் அதற்கு அதிகாரம் கொடுப்பது என்பவற்றைப் பற்றியதே விவாதம். சில குடியேற்ற நாடுகளின் சொத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்சபைகளுக்கும் மக்கள் சபைகளுக்கும் தகராறுகள் இருந்து வந்ததால் தேசியப் பார்லிமென்டில் இத்தகைய தகராறுகளுக்கு வழி இருக்கக்கூடாது என்பது சிலருடைய நோக்கம். இதைத் தடுப்பதற்கே ஸெனட்டு அங்கத்தினர்களையும் மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முடிவு செய்யப்பட்டது. இவ் விஷயத்தில் அமெரிக்க உதாரணத்தைவிட முற்போக்கான வழியை வகுத்தனர். மேற்சபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முடிவு செய்த பிறகு அதில் இராச்சியங்களுக்குச் சமப்பிரதி நிதித்துவம் கொடுத்து அதை இராச்சியங்களின் சபையாக்கி விசேஷ அதிகாரங்கள் கொடுப்பதற்கு எதிர்ப்பில்லை. கன்வென்ஷன்களுக்கு வந்திருந்த மிதவாதிகளுக்கும் பழமை வாதிகளுக்கும் ஸெனட்டு அமைப்பு அதிகாரம் பற்றி ஓர் ஒற்றுமையான முடிவு காண முடிந்தது.

இனி, ஸெனட்டின் அமைப்பை நோக்குவோம் : (அரசியல் திட்டம் 7-23, 41-51, 53-57) அரசியல் திட்டத்தில் 8-ஆம் பிரிவின் படி கீழ்ச்சபையின் வாக்காளர்களே மேற்சபைக்கும் அங்கத்தினர் களைத் தேர்ந்தெடுக்கின்றனர்கள். ஒவ்வோர் உறுப்பு நாட்டிலுமுள்ள வாக்காளர்களும் ஒரே தொகுதியாக அதன் ஸெனட்டர்களைத் தேர்ந் தெடுக்கிறார்கள். 1948 வரை ஒவ்வோர் உறுப்பு நாடும் 6 பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுத்தன. 1949ல் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 10 ஆகக் கூட்டப்பட்டது. தேர்வு முறையும் அவ்வாண்டிலேயே மாற்றப்பட்டது. 1913 வரை சாதாரணப் பெரும்பான்மை முறை

யும் அதற்குப் பிறகு விருப்பு வரிசை முறையும் இரண்டு சபைகளின் தேர்தலுக்கும் கையாளப்பட்டன. 1949லிருந்து ஸெனட்டுத் தேர்தலுக்கு விகிதப் பிரதிநிதித்துவ முறை பின் பற்றப்பட்டது. உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். சபையில் பாதி உறுப்பினர் 3 ஆண்டுகளுக்கொருமுறை புதுப்பிக்கப்படுகின்றனர்.

ஸெனட்டின் அமைப்பில் ஜனநாயகத் தத்துவமும், கூட்டாட்சித் தத்துவமும் இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால் ஸெனட்டு, மக்கள் சபையைப்போல மக்களாட்சித் தத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. மேற் சபைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது ஒரு புதுமை என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், ஸ்விட்ஸர்லாந்திற்கூட எல்லாக் கான்டன்களும் மக்கள் தேர்வு முறையைக் கடைப்பிடிக்கவில்லை. அமெரிக்காவிலே 1913லிருந்துதான் ஸெனட்டுக்கு மக்கள் தேர்வு முறை பின் பற்றப்பட்டது.

கூட்டாட்சித் தத்துவத்திற்கிணங்க ஸெனட்டில் இராச்சியங்களுக்கும் சமப்பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இதில் அமெரிக்க ஸ்விஸ் வழக்கத்தை ஆஸ்திரேலியாவும் பின் பற்றியது. சமப்பிரதிநிதித்துவத்தை மாற்றுவதற்கு இராச்சியத்தில் ஒப்புதல் வேண்டுமென்பதை அரசியல் திட்டம் குறிப்பிட்டது.

இனி, ஸெனட்டின் அதிகாரத்தை நோக்குவோம். சாதாரணச் சட்டங்கள் இயற்றுவதில் ஸெனட்டிற்கும் கீழ்ச்சபைக்கும் சம அதிகாரம் இருக்கிறது. இரண்டு சபைகளிலும் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தாற்றான் மசோதா சட்டமாகும். நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களில் மேற்சபைக்குத் தொடங்கும் அதிகாரம் இல்லை. கீழ்ச் சபையிலிருந்து வரும் நிதி சம்பந்தப்பட்ட பிரேரணைகளை மாற்றவும் அதிகாரம் இல்லை; ஆனால், நிராகரிக்கலாம்.

இரண்டு சபைகளுக்கும் ஒற்றுமை ஏற்படாவிட்டால், இம்முடிவின்மையை நீக்க அரசியல் திட்டத்தில் 57-ஆம் பிரிவு வழி வகுத்திருக்கிறது. கீழ்ச்சபையில் ஒரு மசோதா மூன்று மாத இடையீட்டுடன் இருமுறை தேறி மேல் சபையில் இரு முறையும் தேருவிடிலோ, நிராகரிக்கப்பட்டாலோ, மாற்றியமைக்கப்பட்டாலோ, கவர்னர் ஜெனரல் இரண்டு சபைகளையும் கலைக்கலாம். புதுச்சபைகளிலும் ஒற்றுமை ஏற்படாவிட்டால், இரண்டு சபைகளும் சேர்ந்த கூட்டத்தில் சட்டம் இயற்றப்படும். கீழ்ச்சபையில் பெரும்பான்மை அங்கத்தினர்கள் இருப்பதால், முடிவில் கீழ்ச்சபையின் நோக்கப்படி சட்டம் இயற்றப்படும்.

மக்கள் சபையில் தொடங்கப்படும் மசோதாக்கள் நிறைவேறுவதற்கே மேலே குறிப்பிட்ட முறை வழி வகுத்திருக்கிறது. ஸெனட்

டில் தொடங்கப்பட்ட மசோதாக்கள் மக்கள் சபை ஒப்புக்கொண்டாற்ருன் நிறைவேற்றப்படலாம்.

நிதி சம்பந்தப்பட்ட பிரேரணைகளை மாற்றுவதற்கு ஸெனட்டிற்கு அதிகாரம் இல்லாத போதிலும் அச்சபை நிராகரித்தால் இரண்டு சபைகளையும் கலைப்பதைத் தவிர வேறு வழியில்லை. மேற்சபை கீழ்ச்சபையைச் சில மாறுதல்களுக்கிணங்கும்படி கேட்டுக் கொள்ளலாம். சபைகள் கலைப்பையும் புதிய வாக்கெடுப்பையும் அதனுல் ஏற்படும் இக்கட்டுகளையும் தவிர்க்க, மக்கள் சபை வழக்கமாக இம்மாறுதல்களுக்கிணங்கும். இதனுல், நடை முறையில் சாதாரணச் சட்டப் பிரேரணைகளை மாற்றுவதற்கு அதிகாரம் இருப்பதுபோல, நிதி சம்பந்தப்பட்ட பிரேரணைகளை மாற்றவும் அதிகாரம் உள்ளது என்றும் கூறலாம்.

அரசியலமைப்பு மாற்றத்தைத் தொடங்குவதற்கு இரண்டு சபைகளுக்கும் சம அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், நடைமுறையில் கீழ்ச்சபையின் அதிகாரம் விசேஷமானது; பிரேரணை எந்தச் சபையில் தொடங்கப்பட்டதோ, அந்தச் சபையில் மூன்று மாத இடைவேளைக்குப் பிறகு திரும்பவும் நிறைவேற்றப்பட்டால், மற்றச் சபை ஒப்புக்கொள்ளாவிடினும், கவர்னர் மக்களிடம் சமர்ப்பிக்கலாம் என்று அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. ஆனுல், வழக்கத்தில் ஸெனட்டின் பிரேரணைகளுக்கு மக்கள் சபை சம்மதிக்காவிட்டால், அவை மக்களிடம் சமர்ப்பிக்கப்படுவதில்லை.' ஆனுல், மக்கள் சபையில் இருமுறை தேறி ஸெனட்டில் தேருவிடில், கவர்னர் ஜெனரல் அமைச்சரவை விருப்பத்திற்கிணங்க மக்களிடம் சமர்ப்பிக்கலாம். இது மந்திரி சபை பிரதிநிதிகள் சபைக்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்பதினின்று எழுகிறது.

இனி, நடைமுறையில் எவ்வாறு ஸெனட்டில் அதிகாரம் உபயோகிக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம்: அரசியல் திட்டம் வன்மையான ஒரு மேற்சபையை நிறுவிய போதிலும், காபினெட்டு முறை அரசாங்கத்தில் அத்தகைய மேற்சபைக்கு இடம் இல்லை என்பதற்கு ஆஸ்திரேலிய ஸெனட்டுத் தெளிவான எடுத்துக்காட்டாகும். அமைச்சரவை மேற்சபைக்குப் பொறுப்பானதன்று. ஸெனட்டின் ஒப்புதல் சட்டமியற்றுவதற்கும் தேவையாயிருந்த போதிலும், அச்சபை, அமைச்சரவையைத் தனக்குப் பொறுப்புள்ளதாக்கிக்கொள்ள இயலாது. ஒரு மசோதாவின் தோல்வியோ, அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானமோ, அமைச்சரவையைப் பதவி துறக்கச் செய்ய இயலாது. பிரதிநிதியின் சபையே ஓர் அரசாங்கத்தைப் பதவியில் கொள்ளவோ அல்லது பதவியினின்றும் துரத்தவோ முடியும். ஆகவே, பிரதிநிதிகள் சபையைப் போலவே மக்கள் சபை பொறுக்கியெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட போதிலும், சிறப்போ,

அதிகாரமோ இல்லை. அரசியலமைப்பை வகுத்தவர்களின் நோக்கம் மேற்சபையை அமெரிக்க ஸெனட்டுப்போல இராச்சியங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவல்ல சபை வேண்டுமென்று இராச்சியங்களுக்குச் சமப்பிரதிநிதித்துவம் அளித்தபோதிலும், ஆஸ்திரேலிய அரசியலில் கட்சிகளின் முக்கியத்துவத்திலும் மேற்சபைக்கும் கட்சி அடிப்படை மீதே தேர்தல்கள் நடக்கின்றன. மேற்சபையில் அலுவல்களும் கட்சி அடிப்படை மீதே நடக்கின்றனவேயன்றி, இராச்சியங்களின் சபை என்ற அடிப்படையில் நடக்கவில்லை. மேலும், மேற்சபைக்கு நாடு முழுதும் ஒரே தொகுதியாய் இருப்பதால், கட்சிகளின் ஆதரவின்றி எவரும் தேர்தலில் வெற்றி பெறுவது சாத்தியமாகாது.

இதுகாறும் ஆஸ்திரேலிய ஸெனட்டு இரண்டாவது சபையின் அலுவல்களை எவ்வாறு செய்து வருகிறதென்பது, ஸெனட்டில் சர்க்கார் கட்சி பெரும்பான்மைச் சார்பு பெற்றதா, அல்லது எதிர்க் கட்சி பெரும்பான்மைச் செல்வாக்குடையதா என்பதைப் பொறுத்தது. ஸெனட்டில் பாதி இடங்களுக்கே தேர்தல் மூன்று ஆண்டிற்கு ஒரு முறை மக்கள் சபைத் தேர்தலுடன் நடப்பதால், இரண்டு சபைகளுக்கும் கட்சிச் சார்புகளில் வித்தியாசம் இருக்கக்கூடும். இது வரை நான்கு மந்திரி சபைகளுக்கு ஸெனட்டில் எதிர்க்கட்சிக்குப் பெரும்பான்மை இருந்தது.

சர்க்கார் கட்சி பெரும்பான்மையிலிருந்தால், சில மந்திரிகள் ஸெனட்டிலிருந்து வருகின்றார்கள். 1941 வரை மூன்று மந்திரிகளும் அதற்குப் பிறகு 5 மந்திரிகளும் ஸெனட்டிலிருந்து வந்துள்ளார்கள். மேலும், சட்டசபைக் குழு வேலையிலும் ஸெனட்டர்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

ஒரு சில முக்கிய மசோதாக்களே ஸெனட்டால் தொடங்கப்படுகின்றன. கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் கீழ்ச்சபையிலிருந்து தமது ஆமோதிப்பிற்கு வரவேண்டும் மசோதாக்களை எதிர்பார்த்துக் கொண்டும், அவைகள் கீழ்ச்சபையிலிருந்து வந்த பின் நேரமின்மையால் மிக அவசரமாகவும், அதன் விளைவால் திருத்தி அற்ற முறையிலும் அம்மசோதாக்கள் பரிசீலனை செய்யப்படும்.

எதிர்க் கட்சி ஸெனட்டில் பெரும்பான்மையிலிருந்தால், தன் ஆதிக்கத்தை அக்கட்சி செலுத்த முயலும். கீழ்ச்சபைக்கும் மேற்சபைக்கும் மிக்க வேறுபாடு யாதும் எழவில்லை. அந்த ஆண்டில் நடந்த தேர்தலில் பிரதிநிதிகள் சபையில் தொழிற்கட்சியின் பலம் குன்றி, சிறுபான்மைச் சார்பே பெற்றது. ஆனால், மேற்சபையிலோ, அதற்கு மிகையான பெரும்பான்மையிருந்தது. அரசாங்கத்தின் மசோதாக்கள் தன் கொள்கைகளுக்கு ஒத்துப்போனால்தான் அது மேல் சபையின் ஒப்புதல் பெறும் என்று தொழிற்கட்சி ஆரம்பத்திலேயே தெளிவாக்கியது. பலனுள்ள செயல் ஒன்றும் செய்தல்

இயலாது என்பதை உணர்ந்து அரசாங்கம் அரசியல் திட்டத்தின் 57-ஆம் பிரிவின்படி இரண்டு சபைகளையும் கலைத்துப் புதுத்தேர்தல் நடத்தியது. அதில் அரசாங்கக் கட்சி படுதோல்வியடைந்து, இரண்டு சபைகளிலும் தொழிற்கட்சியே பெரும்பான்மையைப் பெற்றது.

1929ல் நடந்த தேர்தலில் கீழ்ச்சபையில் தொழிற்கட்சி வெற்றி பெற்று மந்திரி சபை அமைத்தது. ஆனால், மேற்சபையில் அதற்கு 7 உறுப்பினரே இருந்தனர். அடுத்தடுத்து மூன்று பார்லிமென்டு கூட்டத் தொடர்களில் ஸெனட்டும் பல அரசாங்க மசோதாக்களை நிறைவேற்ற மறுத்தது. அவ்வாறாயினும், அரசாங்கம் புதுத்தேர்தலின் முடிவைப்பற்றி நிச்சயமாகாமலிருந்ததால், இரு சபைகளையும் கலைக்க முன் வரவில்லை.

1941ல் தொழிற்கட்சி அரசாங்கம் அமைத்தபொழுது மறுபடியும் ஸெனட்டில் எதிர்க்கட்சிகள் பலம் பெற்றன. இரண்டாவது உலகப் போரில் தேசம் ஈடுபட்டிருந்ததால், சச்சரவுக்குச் சந்தர்ப்பம் இல்லை.

1949-51ல் லிபரல் கண்ட்ரிக் கட்சிக்குக் கீழ்ச்சபையில் 78-47 பெரும்பான்மையிலும், மேற்சபையில் 26-34 சிறுபான்மையிலும் இருந்தது. காமன்வெல்து பாங்கு மசோதாவை ஸெனட்டு மறுத்த போது இரண்டு சபைகளும் கலைக்கப்பட்டு நடந்த தேர்தலில் லிபரல் கண்ட்ரி கூட்டு இரண்டு சபைகளையும் கைப்பற்றியது.

இது வரை இரண்டு சபைகளிடையே தோன்றிய முட்டுக்கட்டைகளையும் சமாளிக்க வகுத்த திட்டம் இரண்டு தடவை பயன்பட்டது. புதிய தேர்தலுக்குப் பிறகு இரண்டு சபைகளும் சேர்ந்து ஒரு முறை கூடக் கூட்டப்படவில்லை.

சுருங்கச் சொல்லுமிடத்து, அரசியல் திட்டத்தை வகுத்தவர்களின் எண்ணத்திற்கு மாறாக அது செல்வாக்கில்லாத, உபயோகமற்ற மேற்சபையாய் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. அவ்வாறு விளங்குவதற்கு முக்கிய காரணம், அரசியற்கட்சி முறையும், பாராளுமன்ற முறை அரசாங்கமுமேயாகும்.

## அத்தியாயம்—8

# தேர்தல் முறை

ஆஸ்திரேலிய ஜனநாயகம் மிகச் சீரிய வாக்கெடுப்பு முறையை நிறுவியுள்ளது. இந்நாடு பல துணிகரமான வாக்கெடுப்பு முறைகளில் திருத்தங்களைப் புகுத்தியும், உள்ள குறைபாடுகளை நீக்கியும், தேவைகளுக்கேற்ப மாற்றி அமைத்துக்கொண்டு, மக்களாட்சி நாடுகளுள் முன்னணியில் இலங்குகிறது. **பிரைஸ் பிரபு** இம்முறைகளால் ஆஸ்திரேலிய நாடு மக்களாட்சிப் பாதையில் துரிதமாக நெடுந்தூரம் முன்னேறிவிட்டது என்றார். இவ்வாராய்ச்சிகளின் வெற்றி ஆஸ்திரேலியரது நெஞ்சத்தில் கிளர்ந்தெழுந்த நாட்டுப் பற்றையும் தேசிய உணர்ச்சியையும் ஊக்கி வளர்த்தது.

ஆஸ்திரேலியா காமன்வெல்து ஆகும் முன்னரே குடியேற்ற நாடுகளில் சில வாக்கெடுப்பு முறைகள் புகுத்தப்பட்டன. தென்னுஸ்திரேலியாவில் 1856ல் இரகசிய வாக்கெடுப்பு முறை (Secret Ballot) கையாளப்பட்டது; மற்றக் குடியேற்ற நாடுகளில் 1860லிருந்து வழக்கிலுள்ளது. இப்பொழுது புகழ் பெற்று இலங்கும் இம்முறை ஆஸ்திரேலிய வாக்கெடுப்பு முறை அல்லது '**கங்காரு வாக்கெடுப்பு முறை**' என்றும், ருற்றவாளிகள் குடியேற்ற நாட்டுச் சீர்திருத்தம் என்றும் ஏளனமாக வழங்கப்பட்டு வந்தது. இம்முறை ஆஸ்திரேலியக் குடியேற்ற நாடுகளில் வளர்ந்து வந்தது. காமன்வெல்து ஏற்பட்ட பின்னரும் இவ்வாக்கெடுப்பு முறை அகற்றப்படவில்லை. இதனைக் குடியேற்ற நாடுகளிடமிருந்து வழிமுறைச் சொத்தாகக் காமன்வெல்து பெற்றுக்கொண்டது. ஏனெனில், இது மக்கள் கருத்தை அறிய வல்லதொரு சீரிய ஏற்பாடாகும்.

ஆஸ்திரேலிய அரசியலமைப்புத் திட்டம் கூட்டாட்சித் தேர்தல்களுக்குப் பன்மை வாக்குக் கூடாதென்று மாத்திரம் குறிப்பிட்டு, வாக்குரிமை பற்றிய மற்ற விவரங்களைப் பாராளுமன்றத்திடமே விட்டுவிட்டது. நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பின்பற்றப்பட்ட வாக்குரிமைகளில் வேறுபாடுகள் காணப்பட்டன. அவற்றுள் முக்கியமானது பெண்களுக்கு மேற்கு ஆஸ்திரேலியாவிலும் தென்னுஸ்தி

ரேலியாவிலும் வாக்குரிமை இருந்தபோதிலும், நாட்டின் கிழக்குப் பகுதிகளில் இல்லை. ஆகவே, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே படித்தான வாக்குரிமை வழங்குதற்பொருட்டு முதற்காமன்வெல்து சட்டம் பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது. இதுவே காமன் வெல்து வாக்குரிமைச் சட்டமாகும். இதன்படி ஆஸ்திரேலியாவில் ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக வசித்த 21 வயதிற்கு மேற்பட்ட பிறப்புரிமை அல்லது குடி உரிமைப் பேறுபெற்ற அரசியாரின் குடிகள் யாவர்க்கும் வாக்குரிமை அளிக்கப்படுகிறது. நாட்டில் 5 ஆண்டுகளாவது வசித்து வந்தோரே குடி உரிமைப் பேறு பெறுகின்றனர். புத்தி மயக்குற்றவர்களும், ஒரு வருடத்திற்கு மேல் சிறையிலிருந்தோரும், தேசத் துரோகிகள் என்று கருதப்படுபவர்களும், ஆஸ்திரேலிய ஆசிய, ஆப்பிரிக்க, பசிபிக்குத் தீவுகளின் பூர்விகக் குடிகளும் வாக்குரிமையற்றவர்களாவார்கள்.

1902 முதல் இந்நாள் வரை வாக்குரிமை பற்றிச் சொல்லத் தக்க மாறுதல் ஏதுமில்லை. போரிற் கலந்துகொண்ட ஆஸ்திரேலியப் பூர்விகக் குடிகளுக்கு மாத்திரம் வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்தியர்கள்மீதிருந்த தடை 1925ல் நீக்கப்பட்டது. 1949ல் மேலும் சில ஆதிவாசிகளுக்கு இவ்வுரிமை அளிக்கப்பட்டது.

அரசியல் அமைப்புத் திட்டம் வாக்குரிமை பற்றி விவரியாவிடினும், தேர்தலுக்கு நிற்கும் தகுதிகளை விரிவாக விவரித்துள்ளது. வாக்குரிமை இருப்பதுடன் மூன்று ஆண்டுகள் காமன்வெல்தில் வசித்திருந்தால், தேர்தலில் போட்டியிடலாம் என்று அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. மேலும், 1902-ஆம் ஆண்டு சட்டம், திவாலானவர்கள், கன்டிராக்டர்கள், அரசாங்க ஊதியம் பெறுபவர்கள் என்னும் மூன்று வகுப்பினரையும் தேர்தலில் நிற்கத் தகுதியற்றவர்களாக்குகிறது. அரசாங்க அலுவலர் தேர்தலுக்கு நிற்பதினின்றும் தடை செய்யப்பட்டார்கள்.

**தேர்வுத் தொகுதிகள்:** தொகுதிகளை ஏற்படுத்தும் வழி முறைகள் அரசியலமைப்புத் திட்டத்திலேயே காணப்படுகின்றன. முதலில் நாடுகளுக்கிடையே பிரதிநிதித்துவம் ஜனத்தொகைக்குத் தகுந்தவாறு பிரிக்கப்பட்டுப் பிறகு ஒவ்வொரு நாட்டின் வாக்காளர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு பிரிக்கப்படுகிறது. ஆனால், மூல நாடு ஒன்றிற்கு 5 பிரதிநிதிகளுக்குக் குறைவில்லாமலிருக்க வேண்டும். இவ்வடிப்படையில் அரசியலமைப்புத் திட்டமே நாடுகளின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையைக் குறிப்பிட்டது. ஜனத்தொகை அதிகரிப்புக்குத் தகுந்தபடி பிரதிநிதித்துவமும் அதிகரிக்கப்பட்டது. 1948ல் தொகுதிகள் சிறியனவாக்கப்பட்டு, நாடுகளின் பிரதிநிதித்துவம் இரண்டு பங்காக்கப்பட்டது. இராச்சியவாரிப் பிரதிநிதித்துவம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| நியூஸெலித் வேல்ஸ் | 28 | 46 | 3·4 |
| விக்டோரியா | 23 | 33 | 2·5 |
| குவீன்ஸ்லாந்து | 9 | 18 | 1·3 |
| தென்ஆஸ்திரேலியா | 7 | 11 | ·8 |
| மேற்கு ஆஸ்திரேலியா | 5 | 9 | ·6 |
| டாஸ்மேனியா | 5 | 5 | ·3 |
| | 77 | 122 | 8·9 |

தொகுதிகளின் எல்லை நிர்ணயிப்பிற்கு 1902-ஆம் ஆண்டு சட்டம் விரிவான வழிகளை வகுத்துள்ளது. ஒவ்வோர் உறுப்பு நாட்டிலும் பிரதமத் தேர்வு அதிகாரியுடன் மூவர் கொண்ட ஓர் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு வாக்காளர்கள் தொகையின் அடிப் படையில் தொகுதிகளைப் பிரிக்கும். மேலும், அவ்வாறு பிரிக்கும் போது குழுவினர் ஏற்கெனவே இருக்கும் தொகுதி ஏற்பாட்டையும், போக்குவரத்து வசதிகளையும், புவியியல் குணநலன்களையும் மனத்தி லிருத்திச் செயற்பட வேண்டும் என்றும் சட்டம் கூறுகிறது.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட ஒற்றை உறுப்பினர் தொகுதிகள் சமூக ஒட்டுறவிற்கு அதிக வாய்ப்பு அளித்தன. இரு கட்சி முறை இலகுவாக இயங்க ஏதுவளிக்கிறது. பல்வேறு பகுதிகளில் சிதறிக் கிடக்கும் விவசாயிகள் நாடு போன்றநாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த குழுக்களுக்கும் இம்முறை மிகவும் வசதியாயுள்ளது.

ஸெனட்டுத் தேர்தல் தொகுதிகள் ஜனத்தொகை அடிப்படை யில் பிரிக்கப்படவில்லை. அரசியல்திட்டம் அங்க நாடுகளுக்கு ஸெனட். டில் சமப் பிரதிநிதித்துவம் கொடுக்கிறது. 1948 வரை ஒவ்வொரு நாட்டுக்கும் 6 ஸெனட்டர்களும் அதற்குப் பிறகு 10 ஸெனட்டர் களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்கள். ஸெனட்டுத் தேர்தலுக்கு நாடு முழுதும் ஒரே தொகுதியாக 10 ஸெனட்டர்களையும் தேர்ந்தெடுக் கிறது.

**தேர்தல் முறை :** ஆஸ்திரேலிய மக்கள் சலிப்பின்றிப் பல்வேறு தேர்தல் முறைகளையும் அலசி ஆராய்ந்து நடைமுறையில் புகுத்திப் பார்த்து மிக்க பலனுள்ள ஒன்றைக் கொள்ள விழைகின்றனர்கள். முதல் 18 ஆண்டுகளில் இரண்டு சபைகளுக்கும் சாதாரணப் பெரும் பான்மை (Simple Majority) முறையைக் கொண்டனர். தேர்தலில் போட்டியிடுபவர் இருவருக்கு மேலிருந்தால், வெற்றி பெறுபவர் சிறுபான்மை வாக்குகள் பெற்றே வெற்றி பெறலாம். வெற்றி பெற்ற கட்சிக்கு மக்கள் தொகையின்படி சிறுபான்மை ஆதரவே கிடைப்பினும், சட்டசபையில் பெரும்பான்மை இடங்கள் பெறலாம்,

சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. சிறு கட்சிகள் தழைத்தற்குக் குந்தகம் விளைக்கின்றன.

1919ல் இரண்டு சபைகளுக்கு விரிப்பு வரிசை வாக்கெடுப்பு முறை கையாளப்பட்டது, வன்மை மிக்க இரு சிறு கட்சிகளின் வளர்ச்சிக்கு உரமிட்டது. கண்டிரிக் கட்சியும் ஐக்கியத் தேசியக் கட்சியும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் விளைவே இவ்வேற்பாடாகும். இந்த வாக்கெடுப்பு முறை கண்டிரிக் கட்சியை பலமிக்க ஒரு சிறுபான்மைக் கட்சியாக்கிற்று. லிபரல் கண்டிரிக் கட்சிகளின் ஒத்துழைப்பு, தொழிற்கட்சியின் வளத்தைப் பாதிக்கின்றது. ஆயினும், விரிப்பு வரிசை வாக்கெடுப்பு முறை மக்கள் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கு இருக்கைப் பெரும்பான்மையும் அளித்தற்கு வழி வகுக்கின்றது. ஒற்றை உறுப்பினர் தொகுதிகளில் இம்முறை பொதுவாக திருத்தியாய் இயங்குகிறது.

பல உறுப்பினர் தொகுதிகள்கொண்ட ஸெனட்டுத்தேர்வுகளுக்கு மக்கள் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கு அல்லது கட்சிக் கூட்டுக்கு அளவுக்கு மிகுதியாக இருக்கைப் பெரும்பான்மை கொடுத்தது. இந்தக் காரணத்தினுல் ஸெனட்டுத் தேர்வுகளுக்கு விகிதப் பிரதிநிதித்துவ முறை 1948ல் கடைப்பிடிக்கப்பட்டது. விகிதப் பிரதிநிதித்துவ முறையின் ஒரு கட்சிக்கு ஸெனட்டில் வசதியான பெரும்பான்மை பெறுவது மிகுதியான வாக்குப் பெரும்பான்மை கிட்டினுற்றான் சாத்தியமாகும். விரிப்பு வரிசை வாக்கு முறையின் கீழ் ஸெனட்டில் ஒரு கட்சிக்கு அபரிமிதப் பெரும்பான்மை இருந்தது. இப்பொழுது இரண்டு கட்சிகளும் சமபலமுடையனவாய் இருக்கின்றன.

இவை யாவற்றையும்விட ஆஸ்திரேலியத் தேர்தல் முறையில் கண்ட ஒரு புதுமை யாதெனின்,கட்டாய முறைப்படி'வாக்காளர்களைச் சேர்த்தலும் கட்டாய வாக்குப் பதிவுமாம். வாக்காளர் வாக்குரிமைத் தகுதி பெற்ற 21 நாள்களுக்குள் தமது பெயரை, அப்பிரிவிலுள்ள தேர்தல் குறிப்பேடுகளில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அல்லாவிடில் அவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். கட்டாய வாக்குப் பதிவு குவின்ஸ்லாந்து எனப்படும் ஓர் உறுப்பு நாட்டில் இயற்றப்பட்டது. இம்முறை காமன்வெல்தில் 1924ல் அமுலுக்கு வந்தது; இப்பொழுது எல்லாப் பகுதிகளிலும் வழக்கிலிருக்கிறது. வாக்காளர்கள் தாங்கள் வாக்களிக்காதற்குத் தக்க காரணம் காட்டாவிடில், சட்டப்படி தண்டனைக்குள்ளாவார்கள். இதன் விளைவாக இந்நாட்டில் 90%க்கு மேல் வாக்குப்பதிவு செய்யப்படுகிறது.

## அத்தியாயம்—9

# அரசியற்கட்சிகள்

**ஆஸ்திரேலியப்பாராளுமன்ற முறை:** அரசியலில் அரசியற்கட்சிகள் மிகச் சிறப்பானதொரு பங்கு கொள்ளுகின்றன. அவற்றிற்கும் அரசாங்கத்திற்கும் உள்ள நெருங்கியதொடர்பினுல் அரசாங்கத்தை அரசியற்கட்சிகளினின்று பிரித்து நினைக்க இயலாது. எத்தனையோ கட்சிகள் அமைக்கப்பட்ட போதிலும் மூன்று கட்சிகளே நிலைத்து, பலம் பொருந்தியனவாய் இருக்கின்றன. இக்கட்சிகளின் வளர்ச்சி, அமைப்பு முதலியவற்றை நோக்குவோம்.

காமன்வெல்து ஏற்படுத்தப்பட்ட முதற்சில ஆண்டுகளில் அரசியற்கட்சிகள் மெதுவாக வளர ஆரம்பித்தன. முதற்பார்லி மென்டில் மூன்று பிரிவுகளிருந்தன. நாட்டின் புதிய தொழில்கள் வளர்வதற்கு உதவி செய்யச் சுங்கவரி விதிக்க வேண்டுமென்பது ஒரு பிரிவினரின் கருத்து. மற்ருெரு பிரிவினர் சுங்க வரிகள் விதித்தால் நாட்டின் விவசாயத் தொழில்களாகிய கம்பள நெசவும், சர்க்கரைத் தொழில்களும் பாதிக்கப்படும் என்று கருதினர். இந்த இரண்டு பிரிவினர்களுக்கும் வேறு கொள்கை வித்தியாசங்களோ, அல்லது நிறுவன அமைப்புகளோ இல்லை. மூன்ருவதாக, நன்ருக அமைக்கப் பட்ட தெளிவான கொள்கையுடன் ஒருமைப்பாடுள்ள கட்சியாகத் தொழிற்கட்சி விளங்கியது. இக்கட்சிக்கு அரசாங்க அனுபவம் இல்லாதிருந்தபோதிலும், சட்டசபை அனுபவம் இருந்தது. ஆனுல், சுங்க வரி விதிப்பு விஷயத்தில் தொழிற்கட்சியில் ஒற்றுமையில்லை. சட்டசபையில் இவ்வாறு மாறுபட்ட பிரிவுகள் இருந்தது, அமைச் சவையின் ஸ்திரமின்மைக்குக் காரணமாய் இருந்தது. 'முதல் ஒன்பது ஆண்டுகளில் (1901-10) 7 மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன. இந்தச் சங்கடமான நிலைமையிலிருந்து தப்பக் கட்சித்தலைவர்கள் இரு கட்சி முறையை உருவாக்க முற்பட்டார்கள். எல்லாக் கட்சிப் பிரிவுகளும் தொழில்களுக்குப் பாதுகாப்பளிப்பதன் அவசியத்தை ஒப்புக்கொண்டதால், பலம் பொருந்திய இரண்டு கட்சிகளை அமைப் பதற்கு வாய்ப்பு இருந்தது. 1910ல் **ஆல்பிரட் டீக்கின்** என்பவர்,

தொழிற்கட்சிக்கு விரோதமாய் இருந்த கட்சிகளைப் பிணைத்து லிபரல் கட்சியை ஏற்படுத்தினர்.

**தொழிற்கட்சி:** ஆஸ்திரேலிய அரசியலில் கட்சி என்று உருவாகிய பெருமை தொழிற்கட்சியைச் சேர்ந்ததாகும். இதனால், தொழிற் கட்சி தொடக்கத்திலிருந்தே முதன்மை இடம் பெற்று வந்திருக்கின்றது. மற்றக் கட்சிகளெல்லாம் தொழிற்கட்சிக்கு எதிர்ப்புக் கட்சிகளாகவே தோன்றியவையாகும்.

குடியேற்ற நாடுகளில் தொழில் வளர்ச்சியடையத் தொழிற்சங்கங்களும் வளர ஆரம்பித்தன. தொழிற்சங்கங்கள் ஆரம்பத்தில் முதலாளிகளிடமிருந்து சலுகைகளைப் போராட்டமின்றிப் பெற்றுக் கொண்டு வந்தன. ஆனால், 1890-91ல் ஏற்பட்ட வியாபார மந்தம், அதுகாறும் இருந்து வந்த செழிப்பைக் குறைத்ததோடல்லாமல் தொழிற்சங்கங்களின் பலத்தையும் சோதித்தது. முதல் முதலாகப் பெரிய வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. இவ்வேலை நிறுத்தங்களின் படுதோல்வி தொழிற்சங்க இயக்கத்தின் பலவீனத்தை எடுத்துக் காட்டியது. அரசாங்கம் தொழிலதிபர்களுக்குக் கொடுத்த ஆதரவு தொழிற்சங்கங்களுக்கு ஒரு பாடம் கற்பித்தது. தொழிற்சங்கங்கள் செல்வாக்குக் குழுக்களாய் இருத்தல் மாத்திரம் போதாது; சட்ட சபைகளைக் கைப்பற்றினாற்றான் தொழில் நிலைமைகளில் சீர்திருத்தம் ஏற்படுத்த இயலும் என்று எண்ணித் தேர்தல்களில் போட்டியிட ஆரம்பித்தன. இந்த முயற்சி வெகு சீக்கிரத்தில் வெற்றியைக் கொடுத்தது. 1891ல் நியூஸௌத் வேல்ஸ் சட்டசபையில் நான்கில் ஒரு பங்கு இடங்களைத் தொழிற்கட்சி கைப்பற்றியது. 1899ல் குவீன்ஸ் லாந்தில் அரசாங்கம் அமைத்து மந்திரிசபை ஒரு வாரம் பதவியிலிருந்தது. இந்நிலையில் காமன்வெல்து ஏற்படுத்தப்பட்டபொழுது தொழிற் கட்சி ஒன்றுதான் அரசியற்கட்சியொன்றிற்கு உண்டான இலக்கணத்தைப் பெற்றிருந்தது. இது அதன் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாய் இருந்தது. 1910ல் நீயூஸௌத் வேல்ஸில் மந்திரி சபை அமைந்து ஆறாண்டுகள் தொடர்ச்சியாகப் பதவியிலிருந்தது. காமன்வெல்து முதல் தடவையாக 1904ல் நான்குமாத காலம் பதவியிலிருந்தது; 1910ல் மூன்றாண்டுகள் இடைவிடாது பதவியிலிருந்தது; 1939க்குள் எல்லா இராச்சியங்களிலும் பதவி ஏற்றது.

தொழிற்கட்சி பிரதானமாகத் தொழிற்சங்கங்களின் கட்சியாகும். தொழிற்சங்கங்களே தொழிற்கட்சியை உருவாக்கின; கட்சிக்கு நிதி உதவி பெரும்பாலும் தொழிற்சங்கங்களிடமிருந்தே வருகிறது; கட்சியின் நிச்சயமான தொகுதிகள் எல்லாம் தொழிற்சங்கங்களின் கோட்டைகளே. தொழிற்சங்கங்களின் கட்சியாய் இருப்பதால், தொழிற்கட்சி ஒரு வகுப்பு வாதக் கட்சி எனக் கருதப்படுகிறது.

ஆஸ்திரேலியத் தொழிற்கட்சி ஒரு சோஷலிஸ்டு கட்சி. 1921ல் தொழிற்சங்கங்களின் வற்புறுத்தலால், சோஷலிஸக்குறிக்கோள், கட்சியின் கொள்கையாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனுல் பெறப்படுவது, 'கட்சியின் நோக்கம் தனிப்பட்டவர் சொத்துரிமையைப் புறக்கணித்து எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்குவதன்று; சமுதாயத்தின் நலனே ஆஸ்திரேலியத் தொழிற்கட்சியின் முக்கிய குறிக்கோள்,' என்பது.

ஆஸ்திரேலியத் தொழிற்கட்சி ஆஸ்திரேலிய-தேசியத்தை மற்றக் கட்சிகளைவிட முக்கியமாகக் கருதுகிறது; இதனுல், வெள்ளை ஆஸ்திரேலியக் கொள்கைக்குப் பூரண ஆதரவு கொடுக்கிறது; ஆஸ்திரேலியத் தொழிலபிவிருத்திக்குப் பாதுகாப்பு அவசியம் என்று நம்புகிறது. தொழிற்கட்சியே இது வரை இரண்டு ஆஸ்திரேலியர்களைக் கவர்னர் ஜெனரல்களாக நியமிக்க ஏற்பாடு செய்தது.

தொழில் முயற்சிகளில் தொழிற்கட்சி சிறிய தொழிலதிபர்கள் மீது மிகுந்த அக்கறை காட்டுகிறது. சிறிய குடியானவர்களுக்கும் சிறிய தொழில் முதலாளிகளுக்கும் தொழிற்கட்சி ஆதரவு கொடுக்கிறது.

ஆஸ்திரேலியாவில் தொழிற்சங்க இயக்கம் ஒற்றுமையான ஓர் இயக்கம் என்று சொல்ல முடியாது. தொழிற்சங்கங்களுக்குள் பல கொள்கை வித்தியாசங்களிருப்பது சாதாரணம். இது கட்சி ஒற்றுமையை ஒருவாறு பாதிக்கிறது. எவ்வாறெனில், தொழிற்கட்சிக்குக் குறிப்பிட்ட தொழிற்சங்கக் கொள்கை என்று ஒன்று இல்லாததால், பல கொள்கைகளும் கட்சியின் அங்கீகாரத்திற்குப் போட்டியிடும்பொழுது கட்சியின் ஒற்றுமை சீர்குலைகிறது. இதுவே கட்சியின் ஒற்றுமையின்மைக்கும் அடிக்கடி கட்சியில் பிளவுகள் ஏற்படுவதற்கும் காரணமாய் இருக்கிறது.

முக்கியமான சிறுபான்மையினராகிய கத்தோலிக்கர்கள் பெரும்பாலும் தொழிலாளிகளே. அதனுல், அவர்கள் சாதாரணமாகவே தொழிற்கட்சிக்கு ஆதரவு கொடுத்து வந்தார்கள். கத்தோலிக்கர்களின் செல்வாக்குத் தொழிற்கட்சியின் மிதமான சோஷலிஸப் போக்கிற்கு ஒரு காரணம் என்று சொல்லலாம். தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டு செல்வாக்கைத் தடுக்கக் கத்தோலிக்கர்களின் தீவிர முயற்சிகள் தொழிற்கட்சிக்குள் பிளவை உண்டு பண்ணி, **'ஜனநாயகத் தொழிற்கட்சி'** என்னும் புதுக்கட்சி தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தது. இந்தக் கட்சி பெரும்பாலும் கத்தோலிக்கர்களைக் கொண்டது. இதுகாறும் தொழிற்கட்சிக்குக் கிடைத்து வந்த கத்தோலிக்கர்கள் ஆதரவு குறைந்துவிட்டதால், தொழிற்கட்சியின் பலமும் குறைந்துவிட்டது.

இனித் தொழிற்கட்சியின் அமைப்பை நோக்குவோம். ஒவ்வோர் இராச்சியத்திலும் ஆண்டுதோறும் கூடும் இராச்சிய மாநாடுதான் முக்கியமான ஸ்தாபனம். இதற்கு ஸ்தலக் கிளைகளும் இணைக்கப் பட்ட சங்கங்களும் தங்கள் தொகைக்குத் தகுந்தபடி பிரதிநிதிகளை அனுப்புகின்றன. ஆனால், நிர்ணயிக்கப்பட்டுள்ள ஓர் உச்ச வரம்பிற்கு மேல் பெரிய ஸ்தாபனங்கள் பிரதிநிதிகளை அனுப்ப முடியாது. இதனால், தொழில் வளர்ச்சி மிகுந்த தொகுதிகள் தங்கள் பலத்திற்குத் தகுந்தபடி ஆதிக்கம் செலுத்த முடிவதில்லை. எந்தக்குழு மாநாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறதோ, அது கட்சியைக் கட்டுப்படுத்த லாம். மாநாடுதான் இராச்சியச் செயற்குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; கட்சியின் கூட்டாட்சி மாநாட்டிற்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறது. செயற்குழு கட்சியின் விவகாரங்களைக் கவனிக் கிறது. கட்சியின் நிதிகள் அதனுடைய ஆளுகையிலிருக்கும். கிளை களைக் கலைக்க அதிகாரமிருக்கிறது; கிளைகள் தேர்தலுக்குப் பொறுக் கும் அபேட்சகர்களை அதுதான் ஆமோதிக்கிறது. சிலசந்தர்ப்பங்களில் அதே அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கிறது. செயற்குழுவில் பெரும் பாலும் தொழிற்சங்க அலுவலர்களே இடம் பெறுகிறார்கள். சட்ட சபைக் கட்சி தொழிற்சங்க இயக்கத்தின் விருப்பப்படி இயங்குமாறு பார்ப்பது செயற்குழுவின் கடமையாகும். இவ்வாறு செய்ய முயலும் போது கட்சிக்குள் தகராறுகள் ஏற்படுவது சகஜம்.

தேசிய மாநாடு மூன்றாண்டிற்கு ஒரு முறை கூடும். எல்லா இராச்சியங்களுக்கும் சமப் பிரதிநிதித்துவம் உண்டு. இதன் முக்கிய வேலை கட்சியின் தேர்தல் விண்ணப்பத்தை வகுப்பதே, மத்தியக் குழுவிற்கு இராச்சியக் குழுவிற்கிருப்பதைப் போல அதிகாரம் இல்லை; ஆனால், ஒரு விசேஷ அதிகாரம் உண்டு; அதாவது, இராச்சிய ஸ்தாப னங்கள் கட்சிக்குத் தீங்கிழைக்கும்படி நடந்துகொள்கின்றன என் றெண்ணினால், மத்தியக்குழு இராச்சியக் குழுக்களை மாற்றி அமைக்க லாம். மத்தியக் குழுவிற்குத் தனி நிதிகள் இல்லை.

மத்திய அமைப்பில் மற்றொரு முக்கிய ஸ்தாபனம் கட்சிக்குழு. அது தலைவரையும் மற்ற மந்திரிகளையும் தேர்ந்தெடுக்கிறது; கவன மாக மந்திரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகிறது. முக்கியமான பிரச்சினைகளில் கட்சிக்குழுவின் பெரும்பான்மையின் முடிவுப்படி ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டும் என்று வற் புறுத்தலாம்.

இம்மாதிரி அமைப்பினால் மத்திய ஸ்தாபனத்திற்கும் இராச்சிய ஸ்தாபனங்களுக்கும், அரசாங்கத்திற்கும் கட்சிக்குழுவிற்கும், கட்சிக் கும் தகராறுகள் வருவது சாதாரணம். இவ்வமைப்பின் முக்கியக் குறைபாடு இதன் நெகிழாத் தன்மையே. கட்சியின் பிரதிநிதிகள்

கட்சி ஸ்தாபனங்களின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிதல் அவசியம் என்னும் கொள்கை கட்சியில் பிளவுகளுக்குக் காரணமாய் இருக்கிறது.

**லிபரல் கட்சி :** ஆல்பிரட் டீக்கின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட இக்கட்சி, எத்தனையோ தடவை தன் பெயரை மாற்றிக்கொண்ட போதிலும், இயல்பு மாறாமலே இருக்கிறது. கட்சியினர் இக்கட்சி தொழிற்கட்சியைப் போல வகுப்புவாதக் கட்சியன்று என்று சொல்லிக்கொண்ட போதிலும், இது பெரும்பாலும் தொழிலதிபர் ஆதரவை நாடியே நிற்கிறது. பொருளாதாரக் கொள்கைகள் சம்பந்தப்பட்ட வரை, இந்தக்கட்சி தொழிற்கட்சியின் சோஷலிஸக் கொள்கைக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. குறைந்த வரி விதிப்பும், தனியார் துறை வளர்ச்சிக்கு உதவுவதும் இதன் முக்கியக் கொள்கைகளாகும். இது தொழிற்பாதுகாப்பிற்கு ஒப்புக்கொண்ட போதிலும், தொழிற்கட்சியைப் போல அவ்வளவு உறுதியுடன் அக்கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை. ஏனெனில், பாதுகாப்பில் ஊக்கமில்லாத வணிகர்களும் வியாபாரிகளும் அதற்கு ஆதரவு கொடுப்பவர்களாய் இருக்கிறார்கள். இதனால், தொழில் உற்பத்தியாளர் முழு மனத்துடன் லிபரல் கட்சியை ஆதரிப்பதில்லை. அவர்கள் லிபரல் கட்சிக்கு அளிக்கும் ஆதரவு தொழிற்கட்சியின் போக்கைப் பொறுத்திருக்கிறது. லிபரல் கட்சியின் பொருளாதாரக் கொள்கையினால் அதற்கு ஆதரவு கொடுப்பவர்களுடன் சிலர் அதனுடைய கன்சர்வேட்டிவ் கொள்கைக்காகவும் ஆதரவு அளிக்கிறார்கள்.

லிபரல் கட்சியின் அமைப்புப் பெரும்பாலும் தொழிற்கட்சியின் அமைப்பு மாதிரியேதானிருக்கிறது. இராச்சிய ஸ்தாபனங்களே பலம் பொருந்தியனவாய் இருக்கின்றன. ஆனால், தொழிற்கட்சிகளைப் போல இராச்சிய மாநாடு பலம் பொருந்தியதன்று. இராச்சியச் செயற்குழுவே கட்சி விஷயங்களில் முழு அதிகாரம் செலுத்துகிறது. ஆயினும், பார்லிமெண்டு கட்சி மீது நேரடியாக அதிகாரம் செலுத்த முடியாது. பார்லிமெண்டு கட்சித் தலைவரிடமும் கட்சியின் தலைமையை விட்டுவிடுவதில்லை. பார்லிமெண்டு விவகாரங்களில் கட்சிக் குழுவிற்கு அதிகாரம் இருந்தபோதிலும், மந்திரிகளை நியமிப்பதற்கு அதிகாரம் இல்லை. கட்சித் தலைவரே மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கிறார். தொழிற்கட்சியைப் போலப் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்தாமல் பிரதிநிதிகளுக்குச் சுதந்தரம் கொடுக்கிறது என்று கட்சியினர் பெருமைப்படுகின்றனர்.

**கண்டிரிக் கட்சி :** 1914ல் மேற்கு ஆஸ்திரேலியக் குடியானவர் கழகங்களால் ஆரம்பிக்கப்பட்ட கண்டிரிக் கட்சி, 1923ல் மத்தியப் பார்லிமெண்டில் லிபரல் கட்சி அதன் உதவியை நாடுமளவிற்குப் பலம் பொருந்திய கட்சியாகிவிட்டது. தனிப்பட்ட முறையில் பதவி ஏற்கப் பலம் இல்லாமலிருந்த போதிலும், லிபரல் கட்சியுடன் கூட்டு

மந்திரிசபை அமைவதற்குப் போதிய பலம் பொருந்தியதாய் இருந்து வருகிறது.

கண்டிரிக் கட்சி ஆதரவு சிறு விவசாயிகளிடமிருந்தும், கிராம மக்களிடமிருந்துமே வருகிறது. இவர்களின் ஆதரவிற்குத் தொழிற் கட்சியுடன் போட்டியிடுகிறது. பட்டினங்களில் கண்டிரிக் கட்சிக்கு ஆதரவு இல்லை. தொழிற்கட்சியுடன் இரண்டு கட்சிகளும் போட்டி யிடுவதைத் தவிர்க்கத் தேர்தல் கூட்டுகள் செய்துகொள்ளுவது வழக்கம். தொழிற்கட்சியின் சோஷலிஸக் கொள்கைக்கு எதிர்ப்புக் கட்சியாய் இருந்த போதிலும் குடியானவர்களுக்கு வேண்டிய உதவி கள் செய்வது அரசாங்கத்தின் கடமை என்பது கண்டிரிக் கட்சியின் முக்கியமான கொள்கை.

கண்டிரிக் கட்சியின் அமைப்பும் பெரும்பாலும் மற்றக் கட்சி களின் அமைப்பைப் போலவே இருக்கின்றது. இராச்சியக் காரியக் குழுவே மிகவும் முக்கியமான ஸ்தாபனம். இதனுடைய சம்மதமிருந் தாற்றான் கூட்டு மந்திரி சபையில் கண்டிரிக் கட்சி சேர முடியும். முக்கியமாக விக்டோரியா நியூ ஸௌத்வேல்ஸ் இராச்சியச் செயற் குழுக்களே தேசியத் தரப்பில்கூட முக்கியம் வாய்ந்தனவாய் இருக் கின்றன. கண்டிரிக் கட்சியின் தேசிய அமைப்புப் பெயரளவிலே தானிருக்கிறது. தேசியத் தலைவர்கள் இரண்டு இராச்சியச் செயற் குழுக்களுடனே நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது; கட்சி அமைப்பில் தொழிற்கட்சி அமைப்பையே பின் பற்றுகிறது. சட்டசபைக் கட்சிக்குழுவே தலைவரையும் மற்ற மந்திரி களையும் தேர்ந்தெடுக்கிறது.

**ஆஸ்திரேலியக் கம்யூனிஸ்டு கட்சி :** ஆஸ்திரேலிய அரசியலில் கம்யூனிஸ்டுக் கட்சி சமீபத்தில் தோன்றியதே. 1930க்குப் பிறகு சில தொழிற்சங்கங்களைக் கைப்பற்றியதே கம்யூனிஸ்டு கட்சியின் செல் வாக்கிற்குக் காரணம். 1940 முதல் 1942 வரை இக்கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டிருந்தது. பிறகு கட்சி மீதிருந்த தடை நீக்கப் பட்டது. ஆனாலும், 1950ல் கட்சியைச் சட்ட விரோதமாக்கக் கொண்டுவரப்பட்ட சட்டம் நிதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டு விட்டது. தனக்குத் தொழிற்சங்கங்களிடம் செல்வாக்கிருந்த போதிலும், பார்லிமென்டு தேர்தல்களிலே இக்கட்சி ஓர் இடங்கூட இது வரை கைப்பற்றியதில்லை. ஆயினும், ஆஸ்திரேலிய அரசியலின் போக்கை ஒருவாறு இக்கட்சி தீர்மானிக்கிறது. தொழில் தகராறு களைத் தூண்டி விடுவதற்குக் காரணமாகவும், தொழிற்சங்கத்தின ரைத் தொழிற்கட்சியினின்று பிரிப்பதுமே இதன் முக்கியமான அலுவல்களெனக் கருதலாம். கம்யூனிஸ்டு கட்சிக்குத் தொழிற் சங்கங்களிடம் இருக்கும் செல்வாக்கினால் தொழிற்கட்சியைக் கட்டுப் படுத்தும் நிலைமையிருக்கிறது என்றும், அதனால் தொழிற்கட்சிக்குப் பதவி அளிப்பதனால் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு மறைமுகமாக

அதிகரிக்கும் என்றும் மக்களிடம் எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்வது வழக்கம்.

ஆஸ்திரேலியக் கட்சி முறையின் சில விசேஷமான குணாதிசயங்களை இங்குக் கவனிப்போம்: முதல் முதலாக மூன்று கட்சிகளும் இராச்சியத் தரப்பிலே தொன்மையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. தேசியத் தரப்பில் அவற்றின் முக்கியத்துவம் இரண்டாம் பட்சமே. இரண்டாவதாக, மூன்று கட்சிகளும் வெவ்வேறு செல்வாக்குக் குழுக்களின் நிரந்தரமான ஆதரவைப் பெற்றிருக்கின்றன. கட்சிகளுக்கும் செல்வாக்குக் குழுவுக்கும் உள்ள தொடர்பு மிக நெருங்கியது. மூன்றாவதாக, மூன்று கட்சிகளும் பதவி ஏற்று அரசாங்கப் பொறுப்பை வகித்து வந்திருக்கின்றன. இது அம்மூன்றையும் பொறுப்பின் அரசியற்கட்சிகளாக்குகிறது. மூன்று கட்சிகளுக்கும் கொள்கைகளில் வித்தியாசங்கள் இருந்தபோதிலும், பல முக்கியமான விஷயங்களில் அவை ஒரே வழியையே கடைப்பிடிக்கின்றன. உதாரணமாக, வெளிநாட்டுக் கொள்கை, உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளில் (தேசியப் பொருளாதார அபிவிருத்தி, கட்டாயத் தீர்ப்பு, சமூக நலன் பணிகளில்) மிகுந்த ஒற்றுமை காணப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் மூன்று முக்கியமான கட்சிகளிலிருந்த போதிலும் ஆஸ்திரேலியக் கட்சிமுறையை இருகட்சி முறை என்றே கருத வேண்டும். ஏனெனில், லிபரல் கட்சிக்கும், கண்டிரிக் கட்சிக்கும் கொள்கை வேறுபாடுகள் இருந்த போதிலும், தனிக்கட்சிகளாய் இருந்த போதிலும், தொழிற்கட்சியை அரசாங்கம் அமைக்கவிடாதபடி செய்வதில் ஒற்றுமை இருக்கிறது. இந்த ஒற்றுமையே தொழிற்கட்சியைப் பலவீனப்படுத்திவிடுகிறது. இவ்வொற்றுமை இருந்த போதிலும், இரண்டு கட்சிகளும் தங்களின் கொள்கைகளையோ தனி அமைப்பையோ விட்டுக் கொடுக்கத் தயாராய் இல்லை. இதனால், கூட்டு மந்திரி சபைகளைத்தான் அமைக்க முடிகிறது. ஒருமைப்பாடுள்ள மந்திரிசபை அமைக்க முடியாததால், லிபரல் கட்சி கண்டிரிக் கட்சி அரசாங்கம், பலம் பொருந்திய அரசாங்கமாக இருக்க இயலுவதில்லை.

# அத்தியாயம்—10

## செல்வாக்குக் குழுக்கள்

பேராசிரியர் மில்லர், ஆஸ்திரேலிய அரசியல் பெரும்பாலும் பொருளாதார அரசியலே என்கிறார். ஏனெனில், ஆஸ்திரேலியாவில், அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே பொருளாதார விஷயங்களாகிய நிலம், குடியிறக்கம், வரிவிதித்தல், தொழில் தகராறுகள், சமூக நலன் போன்றவற்றிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வந்திருக்கிறது. ஆஸ்திரேலியாவின் பூகோள இயல்புகளினால், பொருளாதார வளர்ச்சியில் அரசாங்கம் பிரதானமான பங்கு எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பொருளியல் வளர்ச்சிக்கு ஆஸ்திரேலிய மக்கள் பெரும்பாலும் அரசாங்கத்தின் உதவியையே எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால், தங்கள் தேவைகளை அரசாங்கத்திற்குத் தெளிவுபட எடுத்துச் சொல்வதற்கும் பலம் பொருந்திய ஸ்தாபனங்களை அமைத்துக்கொண்டு அவை மூலமாகச் செல்வாக்குச் செலுத்தவும் முற்படுகின்றார்கள். சமூக, பொருளாதார முன்னேற்றத்துடன் ஆஸ்திரேலியாவில் செல்வாக்குக் குழுக்கள் வளர்ந்துகொண்டும், பலம் பொருந்தியனவாகப் பலனளிக்கும் முறையில் செல்வாக்கைச் செலுத்த வழிகளை வகுத்துக்கொண்டும் வருகின்றன.

அரசியற்கட்சிகளைப் போல அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டை ஆளுவது செல்வாக்குக் குழுக்களின் நோக்கம் அன்று. அதிகாரப் பீடத்திலிருப்பவர்களிடமிருந்து தங்களுக்கு வேண்டிய அனுகூலங்களைப் பெறுவதற்கு இடையறாது பாடு படுவது அவற்றின் முக்கிய வேலையாகும். தேர்தல் சமயங்களில் செல்வாக்குக் குழுக்கள் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய கட்சிக்கு ஆதரவு அளித்து வெற்றி பெறச் செய்ய வேலை செய்கின்றன.

ஆஸ்திரேலியாவில் அரசியற்கட்சிகளுக்கும் செல்வாக்குக் குழுக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. மூன்று பிரதான அரசியற்கட்சிகளும் வெவ்வேறு செல்வாக்குக் குழுக்களின் ஆதரவைப் பெற்றிருக்கின்றன. முறையே தொழிற்கட்சி தொழிற்சங்கங்களின் ஆதரவையும், லிபரல் கட்சித் தொழிலதிபர் சங்கங்களின் ஆதரவையும், கண்டிரிக் கட்சி விவசாயச் சங்கங்களின் ஆதரவையும் நாடியிருக்

கின்றன. ஆனுல், தேர்தலில் வெற்றிபெற ஒரு கட்சியின் செல்வாக்குக் குழுக்களின் ஆதரவு மாத்திரம் இருத்தல் போதாது. ஏனெனில், பெரும்பான்மை ஆஸ்திரேலிய வாக்காளர்கள் குழு வழியைப் பின்பற்றிய போதிலும், சிலர் பின்பற்ருமலிருக்கின்றனர். சிலர் தொழிற் சம்பந்தப்பட்ட வரையில், தம்முடைய குழுக்கள் வகுக்கும் வழியைப் பின்பற்றிய போதிலும், அரசியல் விஷயங்களில் குழுக்களின் போக்கைக் கடைப்பிடிப்பதில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் தேர்தலில் போட்டியிடும் ஒரு கட்சி, தனக்குப் பிரத்தியேகமாக ஆதரவு கொடுக்கும் குழுக்களைத் தவிர மற்றக் குழுக்களின் ஆதரவைப் பெறவும் முயற்சி செய்யலாம். அதிகாரத்திற்கு வந்த பிறகு ஒரு கட்சி குறுகிய குழு மனப்பான்மையிலேயே பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சிறப்பன்று. பரந்த தேசிய நோக்குடன் சகல பிரச்சினைகளையும் ஆராய்ந்து முடிவு எடுப்பது அரசாங்கத்தின் கடமை. ஆனுல், ஆஸ்திரேலிய அரசியற்கட்சிகளுக்கு ஒரு வகுப்பு அடிப்படை இருப்பதால், அவ்வாறு நடந்துகொள்வது எளிதான காரியமன்று.

செல்வாக்குக் குழுக்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். சில, பொதுஜன சேவையில் ஈடுபடுபவை. உதாரணமாக, சிவில் லிபர்ட்டீஸ் யூனியன், எஸ். பி. ஸி. ஏ. முதலியவை மக்களின் நலனே அவற்றின் குறிக்கோளாய் இருந்த போதிலும், சில குழுக்கள் அரசாங்கத்திடமிருந்து சலுகைகளை எதிர்பார்க்கின்றன. உதாரணமாக, சர்ச்சுகள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் அரசாங்கத்திடமிருந்து பணவுதவியை எதிர்பார்க்கின்றன; மற்றவை முற்றிலும் பொருளாதார விஷயங்களில் ஈடுபடும் செல்வாக்குக் குழுக்களாகும்.

செல்வாக்குக் குழுக்களில் பொருளாதாரச் செல்வாக்குக் குழுக்களே அதிக முக்கியம் வாய்ந்தவை. அவற்றில் மிக்க பலம் பொருந்தியவை தொழிற்சங்கங்களே. சுமார் 70% ஊதியம் பெறும் ஆடவர்களும், 45% ஊதியம் பெறும் பெண்டிரும் தொழிற்சங்கங்களின் அங்கத்தினராய் இருக்கின்றனர். மொத்தம் 375 தனிச்சங்கங்களும் அவற்றில் 140 அகில ஆஸ்திரேலியச் சங்கங்களும் இருக்கின்றன. மொத்த அங்கத்தினர்களில் 90% இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்கள். ஆஸ்திரேலியத் தொழிலாளர் சங்கமும், ஆஸ்திரேலிய ரெயில்வேத் தொழிலாளர் சங்கமும் மிகவும் முக்கியமான தொழிற்சங்கங்களாகும். ஆஸ்திரேலியத் தொழிலாளர் சங்கத்தைத் தவிர மற்ற எல்லா முக்கிய சங்கங்களையும் இணைக்கும் ஸ்தாபனமாக ஆஸ்திரேலியத் தொழிற்சங்கங்களின் குழு விளங்குகிறது. அதனுடைய காரியக் கமிட்டி தொழில் விஷயங்களில் மிக்க பலம் பொருந்திய ஸ்தாபனமாய் விளங்குகிறது.

தொழிற்சங்கங்கள் பலம் பொருந்தியனவாய் இருந்த போதிலும், தொழிற்சங்க இயக்கம் ஓர் ஒற்றுமையான இயக்கம் என்று சொல்வ

தற்கில்லை. 1920 முதல் கம்யூனிஸ்டு கட்சி தொழிற்சங்கங்களைக் கைப்பற்ற முயன்று வருகிறது. ஒவ்வொரு சங்கத்திலும் கம்யூனிஸ்டு களுக்கும், கம்யூனிஸ்டு அல்லாதவர்களுக்கும் விரோதம் இருந்து கொண்டே வருகிறது. கம்யூனிஸ்டு அல்லாதவர்களுக்குள்ளேயே கத்தோலிக்கர்கள்,கத்தோலிக்கரல்லாதவர்கள் என்று இரண்டு பிளவுகள் இருந்து வருகின்றன. இப்பிளவுகள் தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்தைக் குலைக்கின்றன.

தொழில் முதலாளிகள் சங்கங்கள் அடுத்தபடி முக்கியம் வாய்ந்த செல்வாக்குக் குழுக்களாகும். சர்க்கரைத் தொழில், இரும்பு எ∴குத் தொழில் சுரங்கத் தொழில், எண்ணெய்த் தொழில் முதலாளிகளும் பாங்கி அதிபர்களும் தனித்தனியே மிகுந்த செல்வாக்குள்ளவர்களாய் இருக்கிறார்கள். மேலும், வாணிப மன்றங்களும், தொழிலதிபர்கள் கவுன்ஸில்களும், முக்கியமான செல்வாக்குக் குழுக்களாய் இருக்கின்றன.

விவசாயிகள் சங்கம், கோதுமை உற்பத்தி செய்வோர் சங்கம், மேய்ப்பவர் சங்கம் என்பவை விவசாயத் தொழில் அபிவிருத்திக்காக முனைந்திருக்கும் செல்வாக்குக் குழுக்களாகும்.

அங்க நாடுகள் தங்கள் தொழிலபிவிருத்திக்காகவும் மற்றத் துறைகளில் வளர்ச்சிக்காகவும் தேவைப்படும் நிதி உதவிக்காக மத்திய அரசாங்கத்திடம் செல்வாக்குக் குழுக்களைப் போலச் செல்வாக்குச் செலுத்த முயல்கின்றன.

செல்வாக்குக் குழுக்களிடையே உள்ள அன்றாடச் சச்சரவுகளைத் தீர்த்துவைக்க அரசாங்கம் சில ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றின் அலுவல்களில் அரசாங்கம் தலையிட முடியாது. அவை சுயேச்சையாய் இயங்குகின்றன. காமன்வெல்து தொழில் நீதி மன்றம் முதலாளிகள் தொழிலாளிகளிடையே உள்ள சட்ட ரீதியான சச்சரவுகளைத் தீர்க்க அமைக்கப்பட்டிருக்கிறது. காமன்வெல்து சமரச நடுவர் தீர்ப்புக் கமிஷன் வேலை நேரம், அடிப்படை ஊதியம், விடுமுறை முதலிய விஷயங்கள் பற்றிச் சமரசம் செய்யவும், அல்லா விட்டால் தீர்ப்புக் கூறவும், ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவில், கடைப்பிடிக்கப்பட்டுவரும் கட்டாயச் சமரச நடுவர் தீர்ப்பு ஏற்பாடு தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணம். ஏனென்றால், தொழிற்சங்கங்களில் சேர்ந்தாற்றான் தொழிற்கோர்ட்டுகளின் மூலம் பரிகாரம் பெறமுடியும். ஆரம்பத்தில் தொழிலதிபர்கள் இந்த முறையை ஓர் இடையூறாகக் கருதிய போதிலும், இது ஒரு தொழிலில் ஒரே ஊதியத்தை ஏற்படுத்துவதால் தொழிலதிபர்களுக்குள் போட்டியைத் தடுத்து ஒருமை மனப்பான்மை ஏற்படுதற்குக் காரணமாய் இருக்கிறது.

விவசாயிகள் நலனுக்காக விவசாச விற்பனே போர்டுகள் அமைத்து, பயிர் செய்வோருக்குச் சரியான விலையைப்பெற ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த ஏற்பாடு தரகர்களின் இலாபத்தைத் துண்டித்துவிடுகிறது. .விற்பனே போர்டுகளில் பயிர் செய்வோர் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளும் அரசாங்க அலுவலர் ஒருவரும் இடம் வகிக்கிறார்கள்.

தொழில்களுக்குப் பாதுகாப்பு அவசியமா என்பதை ஆராய்வதற்கு டாரிப் போர்டு (Tariff Board) அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள். நீண்ட கால அனுபவமுள்ள ஓர் அரசாங்க அதிகாரி தலைவராகச் செயலாற்றுகிறார்.

மேலே கூறப்பட்ட ஸ்தாபனங்கள் கவனிக்க முடியாத விஷயங்களை அதாவது முக்கியமான கொள்கை விஷயங்களைப்பற்றி—அரசாங்கமும் பார்லிமென்டும் முடிவு செய்கின்றன. அரசாங்கமும், பார்லிமென்டும் கொள்கை விஷயங்கள் பற்றி முடிவு எடுப்பதற்குச் செல்வாக்குக் குழுக்கள் உதவியாய் இருக்கின்றன. முடிவுகள் எடுப்பதற்கு வேண்டிய கச்சாப் பொருள்களைக் கொடுக்கின்றன.

# அத்தியாயம்—11

## நிர்வாகத் துறை

ஆஸ்திரேலியாவில் மற்றப் பார்லிமென்டு முறை அரசாங்கங்களைவிடக் கொள்கைகளை உருவாக்குவதில் நிர்வாகத்துறை முக்கியப் பங்கெடுத்துக்கொள்கிறது. முக்கியமாக நிர்வாகத் துறையின் நிரந்தரமும் தனித்திறனுமே இதற்குக் காரணம். ஆஸ்திரேலிய அரசியற்சூழ்நிலையில் நிர்வாகத்துறையின் நிரந்தரத்தன்மை ஒரு விசேஷமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. பொதுவாக மந்திரி சபை மாறுதல்கள் அதிகம். குடியேற்றக் காலந் தொடங்கியே இருந்துவந்த இந்த இயல்பு காமன்வெல்தின் முதல் 20 ஆண்டுகளில் அதிகமாய் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் கொள்கைகளை உருவாக்குவதில் நிர்வாகத்துறையின் செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டது. மேலும், ஆஸ்திரேலியாவில் அரசாங்கம் பெரும்பாலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், மற்ற நிர்மாண வேலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் நிர்வாகத்துறையின் அலுவல்களுக்குப் பிரத்தியேகத்திறன் அவசியமாய் இருந்தது. அலுவலர் அரசியல் வாதிக்குத் திட்டங்களை உருவாக்குவதற்குப் பேருதவி புரிந்தனர். ஆனல், அதைவிட முக்கியமான பொறுப்பு அவர்கள் திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்குவதே.

**நியமன முறை :** குடியேற்ற நாடுகளில் அலுவலர் நியமனம் பற்றியோ அவர்களது கண்காணிப்பைப்பற்றியோ திட்டவட்டமான பழக்க வழக்கங்கள் இல்லை. மந்திரிகளின் விருப்பப்படியும் பார்லிமென்டு உறுப்பினர்களின் விருப்பப்படியும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். பொதுவாக, அரசாங்கத்தின் வேலை அரசியலில் ஒத்துழைப்புக்கு வெகுமதியாய் இருந்தது. அரசாங்கப் பணிகளின் நிலை, முறையின்மையினுல் பாதிக்கப்பட்டுச் சீர்திருத்தத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டியது.

இந்தக் குழப்பநிலையை ஒழிக்க 1862 முதல் முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும், 1883லேதான் வெற்றி கண்ணுக்கெட்டியது. அவ்வாண்டில் விக்டோரியா மூன்று உறுப்பினரைக் கொண்ட ஒரு போர்டை ஏற்படுத்தித் திறமைப்படி நியமனம் செய்ய ஏற்பாடு செய்தது. 1895ல் நியூசௌத் வேல்ஸும், மூன்று கமிஷனர்

களடங்கியபோர்டை ஏற்படுத்திநிர்வாகத்துறையின்கட்டுப்பாட்டை அவர்களிடம் ஒப்படைத்தது. சட்டசபைக்கே போர்டு பொறுப் பாளியாய் இருந்தது. வெளிப்படைப் போட்டித் தத்துவத்தை ஏற்படுத்தி போர்டு உறுப்பினர்களின் சுயேச்சையை நிலைநாட்டப் பல விதிகளையும் வகுத்தது.

காமன்வெல்து ஏற்படுத்தப்பட்ட பொழுது சில இராச்சிய இலாக்காக்களின் (முக்கியமாக, சுங்கவரி, அஞ்சல்) அலுவலர்கள் மத்திய அரசரசாங்க அலுவலர்களாக ஏற்றுக்கொள்ளப்பட் டார்கள். புதிய இலாக்காக்களுக்கு மந்திரிகள் தங்களுடைய இராச் சியங்களிலுள்ள நிறமையான அலுவலர்களை ஏற்றுக்கொண்டார்கள். 1902-ஆம் ஆண்டு நியூஸௌத்வேல்ஸ் விக்டோரியாச் சட்டங்களின் அடிப்படையில் காமன்வெல்து பொதுப்பணிச் சட்டம் உருவாக்கப் பட்டது. பொதுப்பணி சம்பந்தப்பட்ட முழு அதிகாரமும் கவர்னர் ஜெனரலால் ஏழாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன ரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# அத்தியாயம் — 12

## நீதித்துறை

ஆஸ்திரேலிய அரசியலமைப்புத் திட்டம் நீதித்துறை பற்றி விரிவான விதிகளை வகுத்திருக்கிறது. பெரும்பாலும் இவை அமெரிக்க உதாரணத்தைப் பின்பற்றுகின்றன. ஒரு கூட்டாட்சித் திட்டத்தை ஏற்படுத்தி அதிகாரத்தைக் கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் அங்க நாடுகளுக்கும் இடையே பகிர்ந்துவிடுவது மட்டும் போதாது. அந்த ஏற்பாடு நிலைத்து வளம்பெற அது ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுவது மிகவும் அவசியம். கூட்டாட்சி முறையில் இந்த வேலை பொதுவாக நீதித்துறையைச் சார்ந்தது. நீதித்துறை அதனுடைய சாதாரண அலுவலாகிய நீதி பரிபாலனத்துடன் கூட்டாட்சி நீதி மன்றமாகவும் அரசியலமைப்புத் திட்டத்தின் பாதுகாப்பாகவும் விளங்குகிறது. கூட்டாட்சி நீதி மன்றமான உயர்நீதி மன்றத்தின் அலுவல் நடு அரசாங்கத்திற்கும் அங்க நாடுகளுக்கும் உள்ள தகராறுகளைத் தீர்த்து வைத்தலும் அரசியல் திட்டத்தின் வரம்புகளைச் சட்டங்கள் மீறுமலிருக்கின்றனவா என்பதைக் கண்காணிப்பதுமாம்.

அரசியல் திட்டத்தின் 71-80 பிரிவுகள் உயர்நீதி மன்றத்தின் அமைப்பையும் அலுவல்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. உயர்நீதி மன்றம் ஒரு பிரதம நீதிபதியையும் மற்ற நீதிபதிகளையும் கொண்டுள்ளது. அவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு ஆயுட்காலம் வரை பதவி வகிக்கிறார்கள். ஆனால், அவர்கள் விரும்பினால் இராஜிநாமாச் செய்யலாம். இரண்டு சபைகளுடைய வேண்டுகோளின் பேரில் அரசாங்கம் அவர்களைப் பதவியினின்று நீக்கலாம். இவ்விதிகள் நீதி மன்றம் சுதந்தரமாக இயங்க உதவுகின்றன.

அரசியல் திட்டம் ஏற்படுவதற்கு முன்னிருந்த நாடுகளின் உச்ச உயர்நீதி மன்றங்களைப் புதிய திட்டம் பாதிக்கவில்லை. அமெரிக்காவைப் போல இரண்டு வகையான நீதி மன்றங்களை அரசியல் திட்டம் அனுமதித்த போதிலும், மாகாண நீதிமன்றங்களுக்குக் கூட்டாட்சி விவகாரங்களில் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதால், அமெரிக்காவிலுள்ளது போன்ற தெளிவான பாகுபாடு இங்குக் காணப்படவில்லை.

அரசியல் திட்டத்தின் 75-ஆம் பிரிவு உச்சநீதி மன்றத்தின் அசல் அதிகாரங்களைக் குறிப்பிடுகிறது. அவையாவன: 1. உடன்படிக்கைகளைப் பொறுத்த விஷயங்கள், 2. அயல் நாட்டுத் தூதர்களைப் பற்றிய விஷயங்கள், 3. நடு அரசாங்கம் ஒரு கட்சியாக உள்ள வழக்குகள், 4. இராச்சியங்களிடையிலோ இராச்சியங்களில் வசிக்கும் மக்களிடையிலோ, ஓர் இராச்சியத்திற்கும் மற்றோர் இராச்சியத்தின் மக்களுக்குமிடையில் ஏற்படும் வழக்குகள், 5. ஒரு நடு அரசாங்க அலுவலருக்கு விரோதமாகக் கோரப்படும் மண்டேமஸ் அல்லது பிரொஹிபிஷன் அல்லது இஞ்சங்ஷன் ரிட் மனு வழக்குகள் என்பன.

மேலும், சில குறிப்பிட்ட பொருள்களைப் பற்றி உயர்நீதிமன்றத்திற்கு அசல் அதிகாரம் பார்லிமெண்டு கொடுக்கலாம் என்று அரசியல் திட்டம் குறிப்பிடுகிறது. இவற்றில் அரசியலமைப்பின்கீழ் எழும் விஷயங்கள் அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் விளக்கம் பற்றிய விஷயங்கள் மிக முக்கியமானவை. இந்த அதிகாரத்தின்கீழ், பார்லிமெண்டு, 1903ல் இயற்றிய நீதி மன்றச் சட்டத்தின்படி, நீதி மன்றத்திற்கு அவை பற்றியஅசலதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. மேலும், 1907ன் திருத்தச் சட்டத்தின்படி பார்லிமெண்டு நாட்டு உயர்நீதி மன்றங்களின் வீச்சிலிருந்து அரசியலமைப்புப் பற்றிய வழக்குகளை எடுத்துவிட்டது.

அரசியல் திட்டம் உச்சநீதி மன்றத்திற்குக் கொடுத்திருக்கும் அப்பீல் அதிகாரத்தைப் பற்றிப் பார்ப்போம்: உயர்நீதி மன்றம் மிக்க வன்மையுள்ள அப்பீல் நீதி மன்றமாகும். ஆனால், அங்க நாடுகளின் சட்டங்களால் எழும் பிரச்சினைகளுக்கு வழக்குத் தொடர்பவர் அந்நாட்டு உயர்நீதி மன்றத்திலிருந்து தேசிய உச்சநீதி மன்றத்திற்காவது, அல்லாவிடில் பிரிவிகௌன்சிலுக்காவது அப்பீல் செய்யலாம். மாகாணங்களுக்கும் நடு அரசாங்கத்திற்கும் உள்ள அதிகாரப் பிரிவினை சம்பந்தமாக உச்சநீதி மன்றத்தின் முடிவிலிருந்து பிரிவிகௌன்சிலுக்கு அப்பீல், உயர்நீதிமன்றம் பிரிவிகௌன்சிலால் முடிவு செய்யப்படுவது அவசியம் என்று சர்ட்டிபிகேட்டுக் கொடுத்தாற்றான் செய்யலாம். ஆனால், பிரிவுகௌன்சில் அப்பீல் செய்வதற்கு விசேஷ அனுமதி அளிக்கலாம். காமன்வெல்து பார்லிமெண்டு சட்டங்கள் மூலம் பிரிவிகௌன்சிலிடம் சிறப்பு அனுமதி கோரும் விஷயங்களைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், இத்தகைய சட்டங்கள் இராணியாரின் அனுமதிக்குக் கவர்னர் ஜெனரலால் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

மேற்கூறியபடி 1903ல் இயற்றிய சட்டத்தின்படி அரசியலமைப்பின் விளக்கம் பற்றிய விஷயங்களைப் பற்றி உச்சநீதி மன்றத்திற்கு அசல் அதிகாரம் கொடுத்ததோடல்லாமல், பார்லிமெண்டு 1907ல்

16

இயற்றிய திருத்தச் சட்டத்தின்படி நாட்டு உயர்நீதி மன்றங்களின் வீச்சிலிருந்து அரசியலமைப்பு வழக்குகளேயும் எடுத்துவிட்டது. இவ்வாறு அரசியலமைப்பு விஷயங்களேப் பற்றிப் பிரிவிகௌன்சிலுக்கு அவற்றினின்று நேரடியாக அப்பீல் செய்வது தடுக்கப்பட்டது. இது அரசியல் திட்டத்தை விளக்கும் மன்றமாக உயர்நீதி மன்றத்தின் நிலேயைப் பலப்படுத்தியது.

பிரிவிகௌன்சிலின் அப்பீல் அதிகாரத்தை மற்ற டொமினியன் களேப் போல ஆஸ்திரேலியா நீக்காவிட்டாலும், பிரிவிகௌன்சிலின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தப் பார்லிமென்டுக்கு அதிகாரமிருப்பதால் உண்மையில் ஆஸ்திரேலிய உயர்நீதி மன்றமே அரசியற்சட்டத்தைப் பற்றி இறுதி மொழி கூறும் நிறுவனமாய் இருக்கிறது.

அரசியலமைப்புச் சட்டத்தை விளக்கும் அதிகாரமும், அதைச் சார்ந்த 'அரசியற்சட்டத்திற்கு ஒவ்வாதது' என்று சொல்லும் அதிகாரமும் உயர்நீதி மன்றத்திற்கு அரசியல் திட்டத்தின் 5-ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். அப்பிரிவு அரசியற்சட்டத்தின் முதன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது; அதிகாரங்கள் யாவும் அரசியல் திட்டத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டே இயங்கும் என்பதைக் குறிப்பிடுகிறது.

பார்லிமென்டின் சட்டமியற்றும் அதிகாரம் எல்லேயற்றதன்று. அரசியல் திட்டம் என்ன கொடுத்திருக்கிறதோ, என்ன வரம்புகளிட்டிருக்கிறதோ அதன்படிதான் இயங்கலாம். அரசியற்சட்டத்தை மாற்றினுலொழிய, அதன் கீட்டுப்பாடுகளிலிருந்து 'விடுவித்துக் கொள்ள இயலாது. அது செலுத்தும் அதிகாரம் சரியா என்பதை அதுவே முடிவு செய்ய இயலாது. அது தன் விஷயத்தில் தானே நீதிபதியாய் இருப்பதாக முடியும். ஆகவே, 'அது இயற்றும் ஒரு சட்டம் சரியா? அப்படியாளுல் அதனுடைய சட்டபூர்வமான பலன் என்ன?' என்பதைத் தீர்மானிப்பது நீதி மன்றத்தைச் சார்ந்ததே.

அரசியல் திட்டம் நீதி மன்றத்தின் புனராய்வு அதிகாரத்தை வார்த்தைகளினுல் விவரியாத போதிலும், அவ்வதிகாரத்தை யூகிப்பதில் இடர்ப்பாடோ, சிக்கலோ இல்லே. ஏனென்ருல், அது அமெரிக்க உயர்நீதி மன்றத்தையே அறிவுறுத்தும் எடுத்துக்காட்டாகப் பின்பற்றியது. பார்லிமென்டு அரசியல் திட்டத்தின்கீழ் இயற்றிய சட்டங்கள் உயர்நீதி மன்றத்திற்கு அரசியலமைப்புத் திட்டத்தை விளக்குவதற்கு முழு அதிகாரத்தையும் கொடுத்தன.

ஆஸ்திரேலிய உயர்நீதி மன்றம் 1890ல் எழுதப்பட்ட அரசியலமைப்புத் திட்டத்தை மாறும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு விளக்கம் செய்யும் பொறுப்பான அலுவலேப் பொதுவாகத் திருத்திகரமாகவே செய்துள்ளது. அரசியலமைப்பை வகுத்தவர்களுக்கு அமெரிக்க

அரசியலமைப்பை மாற்றும் முறையைவிட, ஆஸ்திரேலிய முறை எளிதாகத் தோன்றிய போதிலும் அது நடைமுறையில் எளிதானது அன்று என்பது நிரூபிக்கப்பட்டது. இவ்வறுபது ஆண்டுகளில் நான்கு மாற்றங்களே செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, நீதிப்புனராய்வு மூலமாகவே அரசியலமைப்புக்கு நெகிழும் தன்மை அளிக்க இயலும் என்ற நிலைமை ஏற்பட்டது.

ஆஸ்திரேலியாவில் நீதிப்புனராய்வின் சாதனைகளைச் சுருக்கமாகச் சொல்லலாம். 1920-ஆம் ஆண்டு வரை நீதி மன்றத்தின் பெரும்பான்மையான நீதிபதிகள் கூட்டாட்சிச் சமநிலையைக் காப்பதையே தலையாய கடன் என எண்ணினார்கள். நடு அரசாங்கம் தனது அதிகார வரம்புகளை மீறுதிருக்கும்படியும், அங்க நாடுகள் மத்திய அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகார எல்லைக்குள் புகாதிருக்கும்படியும் நீதிபதிகள் விளக்கம் செய்தார்கள். ஆனால், சிறுபான்மையிலுள்ள நீதிபதிகள், அரசியல் திட்டத்தை முதலில் நிர்ணயித்த வரம்புகளுக்குள் அடக்க முடியாதென்றும், அரசியல் திட்டமே அவ்வரம்புகளைத் தெளிவாக நிர்ணயிக்கவில்லை என்றும், ஆகவே அந்த அதிகாரங்களுக்குப் பரந்த விரிவான விளக்கம் தரவேண்டுமென்றும் கருதினார்கள். சிறுபான்மையிலிருந்த நீதிபதிகள் 1920க்குப் பிறகு பெரும்பான்மை நீதிபதிகளானார்கள். இதிலிருந்து நீதிப்புனராய்வின் இரண்டாவது சகாத்தம் தொடங்கலாயிற்று. நீதி மன்றம் அரசியலமைப்புத் திட்டத்துக்கு விரிவான விளக்கம் கொடுத்தது. காமன்வெல்தின் பாதுகாப்பதிகாரத்திற்கு நீதிமன்றம் கொடுத்த விளக்கத்தினால் காமன்வெல்து அரசாங்கத்திற்குத் தேசத்தின் பொருளாதாரத்தை முற்றிலும் கட்டுப்படுத்த முடிந்தது. காமன்வெல்தின் வரிவிதிக்கும் அதிகாரத்திற்குக் கொடுத்த விளக்கமே காமன்வெல்து அதிகாரம் ஓங்குவதற்கும், இராச்சியங்களின் அதிகாரம் குன்றி அவற்றை நடு அரசாங்கத்திடம் கை கட்டி உதவி கோரும் ஸ்தல ஸ்தாபன அங்கங்கள் போலாக்கிவிட்டது. உயர்நீதி மன்றம் அரசியல் திட்டத்தின் 92-ஆம் பிரிவுக்குக் கொடுத்துவரும் விளக்கம் காமன்வெல்தின் அதிகாரம் இன்னும் கூடுவதற்கு ஒரு முட்டுக்கட்டையாய் இருக்கிறது. மேலும், இப்பொழுது உயர்நீதி மன்றம் மத்திய அரசாங்கத்தின் வளர்ச்சியின் வேகத்தைக் குறைப்பதில் முனைந்திருக்கிறது எனலாம்.

---

# இந்நூலாக்கத்திற்கு உதவிய நூல்கள்


H. S. நிக்கோலாஸ் — ஆஸ்திரேலிய அரசியல் திட்டம், 1952

W. A. வைன்ஸ் — ஆஸ்திரேலியாவில் சட்ட ஆட்சிமுறை அதிகாரங்கள்

L. F. கிறிப்ஸ் — ஆஸ்திரேலியக் காமன்வெல்தில் பார்லிமென்டு முறை அரசாங்கம், 1954

J. D. B. மில்லர் — ஆஸ்திரேலியாவில் அரசாங்கமும் அரசியலும், 1959

A. F. டேவிஸ் — ஆஸ்திரேலிய ஜனநாயகம், 1958

G. சாயர் — ஆஸ்திரேலிய அரசாங்கம்

H. A. ஸ்காரோ — ஆஸ்திரேலியக் காமன்வெல்தில் உயர் பொதுப்பணி


—

## கலைச்சொற்களின் அகராதி

அங்கநாடுகள் - Federated States Units.

அசல் அதிகாரம்-Original power

அடிப்படை உரிமை - Fundamental Rights.

அதிகாரப் பங்கீடு - Division of powers.

அதிகார விலக்குகள் - Prohibited powers.

அப்பீல் அதிகாரம் - Appellate power.

அமிசங்கள் - Characteristics.

அமைச்சவை ஆட்சி } C. govt.
அமைச்சரவை

அமைச்சரவைக் காரியதரிசி காரியாலயம்-Cabinet Secretariat

அரசியலமைப்பு நீதி மன்றங்கள்-Constitutional courts.

அரைகுறைக் கூட்டாட்சி-Quasi-Federation.

அவசர அதிகாரங்கள் - Emergency powers.

ஆட்சி அமைப்பு - Polity

ஆட்சித்துறை - Administrative department.

ஆட்சி முறை வியாச்சியங்கள் - Administrative litigation.

ஆய்வு - Criticism.

இயக்குநர் - Director.

இரு கட்சி முறை - Two party system.

இலத்தீன் குழு நாடுகள் - Latin American Countries.

இறைமை - Sovereignty.

இறை விசுவாசம் - Loyalty.

இனநாடுகளின் தொகுதி - Confederation.

உச்சநீதிமன்றம்-Supreme Court

உயர்நீதி மன்றம் - High Court.

உரிமைச்சாசனம் - Bill of rights-

எஞ்சிய அதிகாரங்கள் - Residuary powers.

எழுதப்பட்ட அரசியலமைப்பு - Written Constitution.

எஸ்டிமேட்டுகள் - Estimates.

ஒத்திப்போடுதல் - Adjourn.

ஒப்புவிக்கப்பட்ட இடங்கள் - Surrendered Territories.

ஒருமை - Unity.

ஒற்றுமை - Union.

ஒற்றை உறுப்பினர் தொகுதி - Single member constituency.

கட்சி அரசாங்கம் Party government.

கட்சிக்குழு - Caucus.

கருவூலம் - Treasury.

கலைத்தல் - Dissolution, Dissolve

குடியிரக்கம் - Immigration.

குடியேற்றநாடு - Colony.

குறிப்பதிகாரக் கொள்கை - Implied powers.

குறிப்பிட்ட சட்டமியற்றும் அதிகாரம் - Enumerated power.

கூட்டதிகாரம் - Concurrent jurisdiction.

கூட்டாட்சிஅமைப்பு, கூட்டாட்சி Federation.

கூட்டாட்சிச் செயற்குழு-Federal Executive Council.

கூட்டாட்சிச் சம நிலை - Federal balance.

கூட்டுக்குழு - Joint Committee.

கூட்டுப் பொறுப்பு - Collective Responsibility

சட்ட ஆக்கம் - Law making.

சட்ட ஆட்சி - Rule of law.

சட்டக்குழு - Legislative Committee.

சட்ட நீதி மன்றங்கள் - Legislative Courts.

சட்டரீதியான உரிமைகள் - Procedural Rights.

சமநிலைத் தடையீடுகள் - Chelks and balances.

சமய சுதந்தரம்-Religious Freedom.

சமரச நடுவர் தீர்ப்பு அதிகாரம்-Conciliation and arbitration power.

சாதாரணப் பெரும்பான்மை - Simple majority.

சாம்ராஜ்ய மகாநாடு - Imperial Conference.

சாஸ்திரவாதமான சுதந்தரம் - Academic Freedom.

சிவில் அலுவலர் ஆணைக்குழு - Civil Service Board.

சிறு குழுவாட்சி - Oligarchy.

சுங்கம் - Customs.

சுதந்தரப் பிரகடனம் - Declaration of Independence.

சுயாட்சி - Self Government.

சுருக்க விசாரணை மன்றங்கள் - Summary Courts.

செயற்குழு- Working Committe.

செயற்குழு - Executive.

செல்லாமை - Nill and void.

செல்வாக்குக் குழுக்கள்-Pressure groups.

செனட்டர்கள் மரியாதை - Senatorial Courtesy.

சேர்க்கை - Union.

தரப்பெருஞ்சட்டஞ் செய்யுரிமை Delegated Legislation.

தலைவரமைச்சவை - Presidential Cabinet.

தனி நபர் மசோதா - Private member's bill.

தனி மசோதா - Private Bill

தன்னுரிமைச் சட்டம் - Prerogative Law.

தாற்காலிக மறுப்பாணை - Suspensive veto.

திருத்தம் செய்யும் முறை - Method of Amendment.

தேர்தல் மன்றம் - Electorai College.

தொழிலாளர் உறவு - Industrial relation.

நாடு - State

நியாயக்குழு-JudicialCommittee.

நிலைக்குழு-Standing Committee.

நிறுவனம் - Institution.

நீதிப்புனராய்வு-Judicial Review

நெகிழா - Rigid.

நெகிழுதல் - Flexible.

நெறி செய் நியதிகள் - Directive Principles.

பகிரங்கக் கோர்ட்டு-Open Court

படி - Copy, Allowance.

பட்ஜெட் - Budget.

பணவீக்கம் - Inflation.

பல உறுப்பினர் தொகுதி-Multimember Constituency.

பியூரித்தானியர் - Puritans.

பிரதமக் கணக்குத் தணிக்கையாளர் - Auditor General.

பிரதி நிதிகள் சட்ட மன்றம் - House of representatives

பிரிக்கப்படாத துறைப்பணி

பிரிக்கப்பட்ட துறைப்பணி

பெயரளவு ஆட்சிமுறைத்தலைவர் Nominal Executive.

பொதுக் கணக்கு ஆய்வுக் குழு - Public Accounts Committee.

பொதுச்சட்டம் - Common Law

பொதுநல நாடு - Welfare State.

பொது நிர்வாகம் - General Administration.

பொது மசோதா - Public Bill.

பொதுஜன வாக்கெடுப்பு-Referendum.

பொருளாதார மந்தம் - The Economic Depression.

பொறுக்குக் குழு - Select Committee.

பொதுப்பணி - Public Service.

போலிக் கூட்டாட்சி - Quasi - Federation.